# வள்ளலார் வாழ்கிறார்

மு. பாலசுப்ரமணியன்

This e-book can be downloaded for free from
http://www.vallalar.org

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
98 நேரு தெரு
ஆழ்வார் திருநகர், சென்னை-600 087
தொலைபேசி (91) 044-24862835

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருவருட் பிரகாச வள்ளலார் திருவடிகளே சரணம்

# முன்னுரை

திருவருட் பிரகாச வள்ளலார் என்று வழங்கப்படும் வடலூர் இராமலிங்க அடிகளாரின் வாழ்க்கைச் சரித்திரத்தை அவரது முதல் மாணவராகிய தொழுவூர் வேலாயுத முதலியாரோ அல்லது அவரது பால்ய நண்பராகிய இரத்ன முதலியாரோ எழுதி வைக்காமல் விட்டு விட்டனர். அவர் திருக்காப்பிட்டுக் கொண்டபின் 24 ஆண்டுகள் கழித்தே அவரது வாழ்க்கைச் சரித்திரச் சுருக்கம் வெளிப்படுத்தப்பட்டது. பின்னர் அவரது சரித்திரத்தை எழுதியவர்கள் எவ்வாறெல்லாம் எழுதினால் வள்ளலாருக்குச் சிறப்பு என்று எண்ணினார்களோ அவ்வாறெல்லாம் எழுதி விட்டனர். சிவனடியார் ஒருவர் வந்து திருநீறு அளித்தார், ஐந்து மாதக் குழந்தையாய் இருந்தபோதே நடராசரைப் பார்த்துக் கலகலவென்று சிரித்தார், ஐந்து வயதிலே கண்ணாடியிலே முருகனைத் தரிசனம் செய்தார். திருமணமான அன்றே மனைவியிடம் திருவாசகம் கொடுத்து விட்டு வெளியேறினார், என்றெல்லாம் எழுதியிருக்கிறார்கள். இராமலிங்க அடிகளார் தாம் எழுதிய அருட்பாவில் பலபாக்களில் தன்னைப் பற்றியே எழுதியிருக்கிறார். அந்தப் பாடல்கள் எல்லாம் அவரைப் பற்றிய அகச் சான்றுகளேஎன்பதும் அவைகளைப் பொதுவான பாடல்களாகவோ மற்றவர்கட்காக எழுதப்பட்ட பாடல்களாகவோ கொள்ள முடியாது. அருட்பாவிலுள்ள அகச் சான்றுகளைக் கொண்டு வள்ளலாரது சரித்திரம் எழுதப்படுகிறது.

இதுவரை வந்த அருளாளர்களில் வள்ளலாரும் ஒருவர் என்று எண்ணிவிட முடியாது. மரணமிலாப் பெருவாழ்வு என்ற தொடரைக் கையாண்டு அந்தப் பெரு வாழ்வை அனைத்து மக்களும் பெற வேண்டும் என ஏங்கியவர் வள்ளலார்.

அவர் தமது 51 வயதில் மேட்டுக்குப்பம் கிராமத்தில் பலரறிய ஓர் அறைக்குள் சென்று உள்ளே கதவைத் தாளிட்டுக் கொண்டார். பின்னர் திறந்து பார்த்த போது அவர் கூறியவாறே அந்த அறை வெறும் அறையாக இருந்தது. அவரது உடம்பை மண்ணில்சமாதி வைத்ததாகவோ நெருப்பிலிட்டுத் தகனம் செய்யததாகவோ வரலாறு இல்லை. சுத்த

தேகம், பிரணவ தேகம், ஞான தேகம் ஆகிய முத்தேக சித்தி பெற்று வாழ்பவர். சுத்த தேகம் நிழல் விழாது. வள்ளலாரின் நிழற்படம் (போட்டோ) இல்லை. அவரது உருவப் படங்கள் எல்லாம் எழுதப் பெற்றவையே ஆகும். ஞான தேகம் பெற்றால் அந்த தேகம் தோன்றியும் தோன்றாமலும் இருக்கும்.வள்ளலார் ஞான தேகம் பெற்று விட்டதால் அவர் அடிக்கடி மறைந்து போனார். மீண்டும் தோன்றினார். அழியாத தேகம் அவர் பெற்றதனால்தான் வள்ளலார் வாழ்கிறார் என்ற தலைப்புடன் இந்தப் புத்தகம் வெளி வருகின்றது.

இதில் அவர் செய்த சமய சீர்திருத்தம் சமுதாய சீர்திருத்தம் முதலியவையும் கூறப்பட்டுள்ளன. கூடுமான வரை ஆதார பூர்வமான செய்திகளே தரப்பட்டுள்ளன.

தவத்திரு ஊரன் அடிகள் எழுதிய இராமலிங்க அடிகளாரின் வரலாறு, அன்புச் சகோதரர் திரு. சரவணன் அவர்களின் அருட்பா X மருட்பா புத்தகமும் பெரிதும் உதவின. அவர்கட்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரவும் பகலுமாக நகல் எடுத்துக் கொஞ்சங்கூடச் சலிக்காமல் இதை D.T.P. செய்து கொடுத்த சுகந்தராஜன் அவர்கட்குச் செய்யக் கூடிய கைம்மாறு ஏதுமில்லை. முகமலர்ச்சியுடன் அவர் ஒவ்வொரு முறையும் வீட்டிற்கு வந்து சரிபார்த்த நகல்களைப் பெற்றுச் சென்று மீண்டும் சுத்த நகல் எடுத்து வீட்டிற்கே கொண்டு வந்து தருவார். வள்ளலாருக்குச் செய்யும் தொண்டாகவே இவ்வேலையை இனிதே முடித்துத் தந்த அன்னாரை வாழ்க வாழ்க தாங்கள் அனைவரும் சீரோடும் சிறப்போடும் வாழ்க என வாழ்த்துகிறேன்.

வழக்கம் போல எனக்குப் புத்தகங்கள் அச்சடித்துச் சிறந்த முறையில் புத்தகத்தை உருவாக்கிக் குறித்த நேரத்தில் தரும் வழக்கமுடைய "**சிவா பிரிண்டர்ஸ்**" உரிமையாளர் திரு. தட்சிணாமூர்த்தி அவர்கட்கும் வந்தனம் நன்றி..

இப்புத்தகம் அச்சாகி வெளி வரத் தேவையான அளவிற்குப் பொருளுதவி செய்த அன்பர்கள் அனைவர்க்கும் எனது மனமார்ந்த நன்றியும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

வந்தனம் நன்றி

அன்புடன்,

மு. பாலு

## இராமலிங்க அபயம் துணை

மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், ஆகிய பஞ்ச பூதங்களில் ஆகாயத்திற்கான வழிபடு தலமாக சிதம்பரம் விளங்குகிறது. வழிபடு தலங்களை நம் முன்னோர் அமைத்தனர்.

மண் - காஞ்சிபுரம்
நீர் - திருவானைக்கா
நெருப்பு - திரு அண்ணாமலை
காற்று - திருக்காளத்தி
ஆகாயம் - சிதம்பரம்

(தில்லைவனம் என்பதே ஊரின் பெயர். ஆனால் ஆலயத்தின் பெயராகிய சிதம்பரமே ஊரின் பெயராக வழங்கப்பட்டு வருகிறது.) அந்தச் சிதம்பரத்திற்கு வடக்கே 15 கி.மீ. தூரத்தில் மருதூர் என்ற ஒரு சிறிய கிராமம் உள்ளது. அந்தக் கிராமத்தில் இராமையா பிள்ளை என்பவர் வாழ்ந்து வந்தார். கிராமக் கணக்கு எழுதுவதே அவருடைய தொழில். ஒருவர் பின் ஒருவராக அவர் மணந்த மனைவிமார் ஐவரும் இறந்து போயினர்.

இறுதியாகச் சென்னை பொன்னேரிக்கடுத்த சின்னகாவணம் என்ற கிராமத்தைச் சேர்ந்த சின்னம்மையார் என்பவரை ஆறாவது மனைவியாக மணந்தார். அவர்கள் வாழ்விலே சபாபதி, பரசுராமன் என்ற இரண்டு ஆண் மக்களும், சுந்தரம்மாள், உண்ணாமுலை என்ற இரண்டு பெண் மக்களும் பிறந்தனர்.

## வள்ளலார் வந்தார்

1823ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5ம் நாள் சுபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் 21ம் நாள் ஞாயிற்றுக் கிழமை (சித்திரை நட்சத்திரம் மாலை 5 மணி 54 நிமிடம்) அன்று ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு அவர்கள் (இராமையா பிள்ளை சின்னம்மை தம்பதியர்) இராமலிங்கம் என்று பெயர் சூட்டினார்கள்.

முதலில் பிறந்த ஆண் குழந்தைக்கு சைவ சமயப் பெயராகிய சபாபதி என்ற பெயரிட்டார்கள். அடுத்துப் பிறந்த ஆண் குழந்தைக்கு வைணவ சமயம் சார்ந்த பரசுராமன் என்ற பெயர் வைக்கப்பட்டது. அதே போல முதல் பெண் குழந்தைக்கு சுந்தரம்மாள் என்ற வைணவப் பெயரும் அடுத்துப் பிறந்த பெண் குழந்தைக்கு உண்ணாமுலை என்ற சைவப் பெயரும் இடப்பட்டது.

ஒரு ஆண் ஒரு பெண் - சைவப் பெயர்
ஒரு ஆண் ஒரு பெண் - வைணவப் பெயர்

சைவமும், வைணவமும் சமமாக நின்று விட்டது. ஐந்தாவது குழந்தைக்கு என்ன பெயர் வைப்பது? சைவம், வைணவம் இரண்டும் சேர்ந்து சமரசமாக

இராமலிங்கம் என்று பெயரிட்டார்கள். பெயர் வைப்பதில்கூட அவர்கள் எந்த அளவு சிந்தித்து இருக்கிறார்கள் என நாம் உணர வேண்டும்.

## அவர் பிறப்பு பற்றி இதுவரை வந்த கருத்து

"இராமையா பிள்ளையும் சின்னம்மையாரும் தம் மக்களுடன் வாழ்வாங்கு வாழ்ந்து இனிதாக இல்லறம் நடத்தி வருநாளில் ஒரு நாள் உச்சிப்போதில் சிவபெருமானே மானிடத் திருக்கோலங் கொண்டு, சிவ வேடம் முற்றப்பூண்ட சிவனடியாராக எழுந்தருளிப் பசியால் களைத்த தோற்றத்துடன் இராமையா பிள்ளை வீட்டிற்கு வந்து வாயிலில் நின்று "அம்மையே அடியார்க்கு அமுது செய்விக்க வேண்டும்" என்றார். அச்சிவ வொலி கேட்ட சின்னம்மையார் விரைந்து வந்து அடியாரின் அடிகளில் முடியுற வணங்கி உள்ளே அழைத்துச் சென்று முறைப்படி அமுது படைத்தார். அமுதுண்ட அடியவர் அக மிக மகிழ்ந்தவராகிச் சின்னம்மையாரை நோக்கி "அம்மையே நம் பசி போக்கினை நானிலத்தின் பசியையெல்லாம் போக்கவல்ல ஒருவன் பிறப்பான்....அவன் திருவரவை உணர்த்தவே யாம் வந்தோம். வாழ்க வாழ்க" என வலக்கரமெடுத்து வாழ்த்தி "கருநீறு காணும் திருநீறு காண் இது. இதனை நீயும் அணிதி நின் கணவற்கும் அளித்தி" எனக் கூறித் திருநீறு அளித்து வாயிற்புறம் நோக்கினர். வாயில் வரை உடன் சென்று சின்னம்மையார் வழியனுப்பினார். வாயிலைத் தாண்டி தெருவிலே அடிவைத்த சித்தர் சில அடிகளே நடந்தார். அப்பால் அவர்கட் புலனாக வில்லை. திடீரென மறைந்தருளினார்.

அம்மையார் அச்சமும் வியப்புமுற்றார். கணவர் வந்தவுடன் நிகழ்ந்ததைக் கூறினார். அவரோ சிவனடியார் வந்தபோது யானில்லாது போனேனே! சித்தரைக் காணும்பேறு பெற்றிலேனே என வருந்தினார். சின்னாளில் சின்னம்மையார் கருவுற்றார்.

5-10-1823 சுபாநு ஆண்டு புரட்டாசித் திங்கள் இருபத்தோராம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் ஐந்தாவது மகனாக அடிகள் பிறந்தருளினார்கள்.

("இராமலிங்க அடிகள் வரலாறு - ஆசிரியர் சன்மார்க்க தேசிகன் என்னும் ஊரன் அடிகள் - முதற் பதிப்பு 9-2-1971 - பக்கம் 6-7)

## இந்த வரலாறு பற்றிய ஆய்வு

வள்ளலார் தோன்றியது 1823ம் ஆண்டாகும். அவர் திருக்காப்பிட்டுக் கொண்டதோ 1874ம் ஆண்டாகும். அதற்குப் பிறகு 22 ஆண்டுகள் கழிந்த பின்னர் 1896ம் ஆண்டில் பிருங்கி மாநகரம் இராமசாமி முதலியார் அவர்கள் இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் குறிப்பு எழுதினார்.

நம் வள்ளலாரின் தந்தையாரின் தகப்பனார் இராமையா பிள்ளையின் குடும்பம் மிக மிகச் சாதாரண குடும்பம். அந்த வீட்டிற்குச் சிவனடியார் வந்தார்

- அமுது உண்டார் - திருநீறு அளித்தார். அதன் மகிமையினால் வள்ளலார் பிறந்தார் என்று எழுதுவதற்கு எந்த ஆதாரமும் கிடைக்க வாய்ப்பில்லை.

1867ம் ஆண்டு முதன் முதலாக திருவருட்பா நான்கு திருமுறைகள் வெளியிடப்பட்டபோது வள்ளலாரின் முதல் மாணவராகிய தொழுவூர் வேலாயுத முதலியாரவர்கள் திருவருட்பா வரலாறு என்ற ஒரு நூல் செய்து அதனையும் முதல் நான்கு திருமுறைகளின் பின் இணைப்பாக அச்சிட்டார். அதில் வள்ளலார் பிறந்த தேதி, பெற்றோர் பெயர் முதலியன குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் சிவனடியார் வந்ததும், அமுது உண்டதும், திருநீறு அளித்ததும் அதில் குறிப்பிடப்பட வில்லை. 1867ம் ஆண்டு தொழுவூர் வேலாயுத முதலியார்க்குத் தெரியாத உண்மை 1896ம் ஆண்டு அதுவும் வள்ளலார் தோன்றிய 73 ஆண்டுகள் கழித்து மற்றவர்கட்குத் தெரிய வாய்ப்பிருந்திருக்க முடியாது.

மேலும் தன் பிறவி எவ்வாறு வாய்த்தது என்பதை சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பத்தில் தன் கைப்படவே வள்ளலார் எழுதி இருக்கிறார். அதில் அவர் கூறியுள்ளது இதுதான்.

**"எல்லாம் வல்ல இயற்கை உண்மைக் கடவுளே! உபசாரத்தாற் பெற்ற தந்தையென்பான் ஒருவனது சுக்கிலத் துளியின்கண் என்னையோர் பகுதிப் பேரணுவுருவிற் பெருகி வெளிப்படயிருத்திய காலத்திலும், எனக்குள் உள்ளொளியாகியிருந்து அப்பகுதிப் பேரணு உருவைச் சிருட்டித்தருளினீர். அன்றிப் புறத்தில் யாவராலும் சகிக்கப்படாத அதன் அருவருப்பையும், அசுத்தத்தையும், தீ நாற்றத்தையும் சகித்து, அச் சுக்கிலத் துளியினிடத்து ஓர் ஆவியுருவாகியிருந்து, அத்துளியின் கண்ணுள்ள பல்வகை விரோத தத்துவங்களாற் சிறிதுந் தடைபடாமல் என் உருவையும் காத்தருளினீர். அன்றி அங்ஙனம் அரும்பிய ஆன்ம சக்திக் கலைகள் வெளிப்பட விளக்கி வளர்த்தும் அருளினீர்.**

**உபசாரத்தாற் பெற்ற தாயென்பாள் ஒருத்தியின் சோணிதத் திரளில் என் உருவைச் சேர்க்கும் வரையில் அவ்வப்போது என் உருவைச் சிதைப்பதற்கு எதிரிட்ட துரிசுகள் எல்லாவற்றையும் நிக்கிரகஞ் செய்தருளினீர். இங்ஙனம் புரிந்த தேவரீரது திருவருட் பெருங்கருணைத் திறத்தை எங்ஙனமறிவேன். எவ்வாறு கருதுவேன்! என்னென்று சொல்வேன்.**

**எல்லாம் உடைய இயற்கைக் கடவுளே! தாய் கருப்பையிற் சோணிதத் திரளிற் சேர்த்து என்னை ஓர் பூதப் பேரணு உருவிற் பெருகி வெளிப்பட இருத்திய காலத்திலும் எனக்குள் உள்ளொளியாகியிருந்து அப்பூதப் பேரணு உருவைச் சிருட்டித்தருளினீர். அன்றிப் புறத்தில் எவராலும் சகிக்கப்படாத அதன் அசுத்தம், அருவருப்பு, துற்கந்தம் முதலியவற்றைப் பொறுத்து, அச்சோணிதத் திரளில் ஓர் ஆவி உருவாகியிருந்து அத்திரளிலுள்ள பல்வகை விரோத தத்துவங்களால் சிறிதுந் தடைபடாமல் என்னுருவைக் காத்தருளினீர்."**

சிவனடியார் வருகையையும் திருநீற்று மகிமையையும் வள்ளலார் தன் பிறப்புக்குக் காரணமாக எடுத்துக்காட்டவில்லை. இவ்வாறு எழுதினால் சிறப்பாக இருக்கும் என்று கருதி எழுதப்பட்ட ஆதாரமில்லாத கற்பனையே சிவனடியாரின் வருகையும் திருநீற்று மகிமையும் ஆகும். வரலாறு எழுதியவர்கள் இதை உண்மைச் சம்பவம்போல எழுதி வருகிறார்கள். வள்ளலார் வரலாற்றில் சிவபெருமானே சிவனடியார் உருவில் வந்து சின்னம்மையார் இட்ட உணவை உண்டு தெருவில் சில அடி தூரம் நடந்து மறைந்து விட்டார் என எழுதிவிட்டார்கள். "சிவபெருமான் என்ற கடவுள் உண்மையிலே உண்டா - அந்தச் சிவபெருமான் உணவு உண்பாரா - சமயத் தெய்வங்கள் அனைத்தும் கற்பனையே" என்ற வள்ளலார் கருத்துக்கு என்ன பதில்? வள்ளலாரின் உண்மையான புகழே அளவிட்டுக் கூற முடியாத அளவு உள்ளது. அவருக்கு மேலும் புகழ் சேர்ப்பதாக எண்ணி கற்பனையை வரலாறாக்கி மக்களைக் குழப்ப வேண்டாம். வள்ளலாரின் வாழ்வையும் ஒரு தத்துவம் என ஆக்கி விடக்கூடாது.

1823ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5ம் நாள் ஞாயிற்றுக் கிழமை மாலை சரியாக 5-54க்கு இராமையா பிள்ளை சின்னம்மையார் என்ற தம்பதிகட்கு ஐந்தாவது குழந்தையாய்ப் பிறந்தார் என்று எழுதினால் போதுமே!

இறைவனால் வருவிக்கவுற்றேன் என்று வள்ளலார் கூறியது உண்மைதான். அதற்காகச் சிவனடியாராக வந்து திருநீறு அளித்தால்தான் இறைவனால் வருவிக்கவுற்றார் என்று ஆகுமா என்ன?

இந்த ஆய்வு தேவைதானா எனச் சிலர் வினவலாம். ஆம் தேவைதான் :-

வள்ளலார் நம்மைப் போலப் பிறக்கவில்லை. இறைவனால் வருவிக்கவுற்ற அருளாளர். அதனால் தான் உயர்ந்த நிலையை அவரால் அடைய முடிந்தது. எவ்வளவு பிரயாசை எடுத்துக் கொண்டாலும் நம்மால் அவரடைந்த நிலையை அடைய முடியாது என்று சிலர் வாதிட்டு ஒவ்வொருவரும் இந்தப் பெருநிலையை அடைய முடியும் எனப் போதித்த வள்ளலார் வாக்கைப் பொய்யாக்க முனைகின்றார்கள். வள்ளலாரால் மட்டும்தான் அடைய முடியும். நம்மால் முடியவே முடியாது என்றால் சன்மார்க்கத்தை நாம் ஏன் பின்பற்ற வேண்டும்?

உங்களில் ஒருவனாக என்னை எண்ணுங்கள் என்று ஏன் வள்ளலார் கூறினார்? நம்மில் ஒருவர் இந்த நிலையை அடைய முடியும் என்றால் நாம் ஏன் அடைய முடியாது என்ற உத்வேகத்தை நம்முள் எழுப்புவதற்கே அவ்வாறு கூறினார். நம்முள் ஒருவர் அவர் எனக் கூறியதின் உண்மைக் காரணம் நாமும் அவர் போல் முயற்சி செய்து கடவுள் நிலை அறிந்து அம் மயமாகும் நிலையைப் பெற வேண்டும் என்பதற்காகவே என்று உணர்வோம். முயற்சி செய்வோம். அவர் பெற்ற பெருநிலையைப் பெறுவோம்.

குழந்தை இராமலிங்கம் பிறந்த ஆறாவது மாதம் தந்தை இராமையா பிள்ளை காலமானார். இரண்டு மாதங்கள் கழித்து குழந்தையின் எட்டாவது மாதத்தில் தாயார் சின்னம்மையார் மருதூரிலிருந்து தனது தாய் வீடான சின்னகாவணம் கிராமத்திற்குத் தனது ஐந்து குழந்தைகளையும் அழைத்துச் சென்றார். அந்தக் கிராமத்தில் இரண்டு ஆண்டுகள் தங்கிவிட்டுச் சென்னைக்குக் குடியேறினார்.

# சென்னை வாழ்க்கை

மூத்த பிள்ளையாகிய சபாபதி, காஞ்சிபுரம் மகாவித்வான் சபாபதி முதலியாரிடம் கல்வி பயின்று புராணப் பிரசங்கம் செய்வதில் வல்லவராகி அத்தொழிலில் வந்த சிறிய வருமானத்தைக் கொண்டு தனது குடும்பத்தைக் காத்து வந்தார். தக்க தருணத்தில் பாப்பாத்தி அம்மையார் என்ற நல்ல குணவதியை மணந்து கொண்டார்.

தனது தம்பி இராமலிங்கத்திற்கு ஐந்து ஆண்டுகள் நிறைவு எய்தியது. தான் கல்வி பயின்ற காஞ்சிபுரம் மகா வித்வான் சபாபதி முதலியாரிடமே கல்வி பயிலத் தனது தம்பி இராமலிங்கத்தை அனுப்பி வைத்தார்.

பள்ளிப் படிப்பில் வள்ளலாருக்குச் சிறிதும் நாட்டமில்லை என்று கண்ட மகாவித்வான் சபாபதி முதலியார் குழந்தைக்குத் தன்னால் கற்பிக்க இயலாது என்று கூறித் திருப்பி அனுப்பிவிட்டார். சபாபதி பிள்ளைக்கோ வருத்தம் தாளவில்லை. தந்தை இல்லாத பிள்ளையைச் சரியாகப் படிக்க வைக்கவில்லை எனத் தன் மீது பழிவருமே என்று துக்கப்பட்டார். என் செய்வது? பிள்ளைப் பெருமானார் பள்ளிக்கூடம் செல்லாமல் உறுதியாய் இருந்தார்.

இராமலிங்கர் ஒழுங்காகப் பள்ளிக்குச் சென்று படிக்காததைக் கண்ட சபாபதிப் பிள்ளை கோபங்கொண்டார். தம்பியை அடித்தார். தனது மனைவியை அழைத்து இனி இவனுக்குச் சோறு போட வேண்டாம் என்றும் கூறினார். இராமலிங்கரை நோக்கி இனி இந்த வீட்டில் உனக்கு இடமில்லை என்றார்.

இராமலிங்கரும் ஒன்றும் பேசாமல் வீட்டை விட்டு வெளியேறினார். அண்ணியார் பாப்பாத்தி அம்மையாரின் வேண்டுகோளுக்கு இணங்கி மாலை ஒரு வேளை மட்டும் வீட்டின் பின்பக்கமாக வந்து அண்ணியின் கையால் அன்னம் உண்டுச் சென்று விடுவார்.

இராமையா பிள்ளையின் திதி வந்தது. அனைவரும் தக்க சமயத்தில் சூடான உணவை உண்டு பசியாறி வெளியேறினர். அன்றும் வழக்கம் போலத் தம்பி இராமலிங்கம் வீட்டின் பின்புற வழியாக மாலை வந்தார். ஆறிப்போன சாதத்தை அண்ணியார் இலையில் இட்டார். எல்லோரும் சூடாக நன்றாகச் சாப்பிட்டார்களே. இந்த வீட்டுக் குழந்தை மட்டும் இப்படி ஆறிப்போன சோற்றை உண்ண வேண்டுமா என்று எண்ணினார். அவரது கண்கள் கலங்கிக் கண்ணீரைப் பெருக்கின. அவரது கண்ணீரைக் கண்ட பெருமான் ஏன் அண்ணி அழுகின்றீர்கள் என்று வினவினார்.

அண்ணன் உன்னைப் படிக்கத் தானே சொல்கிறார். அது உனது நன்மைக்குத் தானே. நீ வீட்டில் தங்கிப் படித்திருந்தால் இந்த ஆறிப்போன சோற்றைத் தின்ன வேண்டியிருக்குமா என்றார்.

மனம் இளகிய இராமலிங்கரும் நான் வீட்டில் தங்கி விடுகிறேன் எனக்கு மாடியில் ஓர் அறை தர வேண்டும் என்று கேட்டாராம். அவ்வாறே அண்ணியும் மாடியில் ஓர் அறையை அவருக்கு அளித்தாராம்.

இராமலிங்கரும் அந்த மாடி அறையில் கண்ணாடி ஒன்றின் முன் நின்று கொண்டு அறுமுகனை வணங்கினாராம். திருத்தணி முருகன் கண்ணாடியில் நம் இராமலிங்கருக்குக் காட்சி அளித்தாராம். அதற்குச் சான்றாக இந்தப் பாடல்.

**"சீர் கொண்ட தெய்வ வதனங்களாறும் திகழ் கடப்பந்**
**தார் கொண்ட பன்னிரு தோள்களும் தாமரைத் தாள்களும் ஓர்**
**கூர் கொண்ட நெட்டிலைக் கதிர்வேலும் மயிலும் நற்கோழிக் கொடியும் அருட்**
**கார் கொண்ட வண்மைத் தணிகாசலமும் என் கண் உற்றதே"**

என்று வள்ளலாரே பாடியுள்ளார். வீராசாமிப் பிள்ளைத் தெருவில் வள்ளலார் குடியிருந்த வீட்டு மாடியில் "வள்ளலார் முருகனைக் கண்ட கண்ணாடி" என்று எழுதப் பெற்ற முகம் பார்க்கும் கண்ணாடி இதற்குச் சான்றாக இன்றும் உள்ளது.

இரண்டாவதாகத் தண்டையார்பேட்டையில் கடிகாசலம் என்பவரும் ஒரு கண்ணாடி வைத்திருக்கிறார். அதிலும் வள்ளலார் முருகனைக் கண்ட கண்ணாடி என்று எழுதியுள்ளது.

மூன்றாவதாக திருஒற்றியூர் இராமலிங்கசாமி மடத்தில் ஒரு கண்ணாடி உள்ளது. அதிலும் வள்ளலார் முருகனைக் கண்ட கண்ணாடி என்று எழுதியிருக்கிறது.

## <u>இது பற்றி ஓர் ஆய்வு :</u>

1) இராமலிங்கர் பாடல்களை எழுதிய நோட்டில் ஏடுகள் எண்களால் குறிக்கப்பட்டுள்ளன. அதில் 1 முதல் 231 வரை உள்ள பாடல்கள் மூன்றாம் திருமுறை இரண்டாம் திருமுறைப் பாடல்கள் என்றும் இவை அனைத்தும் திருஒற்றியூர் தியாகராசப் பெருமானார் மீது பாடிய பாக்கள் என்றும் 232ல் தான் திருத்தணிகைப் பதிகம் ஆரம்பிக்கின்றது என்றும் வெளி வந்துள்ளன. எனவே முதலில் முருகனைப் பற்றிய பாடல்களே இல்லை. சிவனையே பாடியுள்ளார்.

2) பாக்கள் எழுதத் தொடங்கியதே 9 வயதிற்கு மேல்தான். எனவே 5 வயதில் முருகனைக் கண்ணாடியில் கண்டு பாடிய பாடல் அல்ல இது.

3) பண்ணேறும் மொழியடியர் பரவி வாழ்த்தும் என்று தொடங்கும் பாடலில் உன் பாத மலரழகைக் கனவிலேனும் காட்டமாட்டாயா என ஏங்குகிறார். நேரில் கண்ணாடியில் கண்டவர் கனவிலேனும் காட்ட மாட்டாயா என ஏங்குவாரா?

4) மூன்று கண்ணாடிகளில் எந்தக் கண்ணாடி முருகனைக் காட்டிய கண்ணாடி?

5) இது ஆதாரமற்றது - பெருமானுக்குப் புகழ் சேர்ப்பதாக எண்ணிக் கற்பனையாகச் சேர்க்கப்பட்டது.

ஆண்டுகள் கழிந்தன. குழந்தை இராமலிங்கத்திற்கு 9 வயது ஆயிற்று. தனது முயற்சியில் தோல்வி கண்ட அண்ணன் சபாபதிப் பிள்ளை தன் தாய் முதலானாரோடு தம்பியையும் அழைத்துக் கொண்டு தங்கள் குலதெய்வமாகிய சிதம்பரம் நடராசரைப் பிரார்த்தனை செய்து பார்ப்பது என்ற முடிவுடன் சிதம்பரம் சென்றார்.

## சிதம்பர தரிசனம்

சிதம்பரம் நடராசருக்குக் கற்பூர ஆராதனை நடந்தது. எல்லோரும் பக்தி பரவசத்துடன் நடராசரைத் தரிசித்தனர். இராமலிங்கர் நடராசரைக் காணவில்லை. நடராச தத்துவத்தைக் கண்டார். அதனுள் ஒளிக்கப்பட்டிருந்த உண்மையைக் கண்டார்.

(இதுவரை வெளிவந்த இராமலிங்கரின் சரித்திரத்தில் கூறப்பட்டதாவது :-

2. **வள்ளலார் ஐந்து மாதக் குழந்தையாய் இருந்த போதே நடராச தரிசனம் கண்டு சிரித்தார் :**

"இராமையா பிள்ளை மனைவி மக்களுடன் சிதம்பர தரிசனத்திற்குச் சென்றார். அப்போது அடிகட்கு அகவை ஐந்து திங்கள் என்பர் ச.மு. கந்தசாமிப் பிள்ளை. சிற்சபையில் நடராசப் பெருமானை வழிபட்டபின் சிதம்பர ரகசியம் தரிசனத்திற்காக அனைவரும் அதன் முன்னர் வந்து நின்றனர். பாலுண் குழவியாகிய பிள்ளைப் பெருமான் தாயின் கையிலிருந்தார். தீட்சிதர் திரை தூக்கச் சிதம்பர ரகசியம் தரிசனமாயிற்று. அனைவரும் தரிசித்தனர். ஐந்து திங்கட் கைக் குழந்தையாகிய அடிகட்குச் சிதம்பர ரகசியம் ரகசியமாயிருக் கவில்லை. வெட்ட வெளியாகப் புலப்பட்டது. இறைவன் ரகசியத்தை வெளிப்படையாகக் காட்டி அருளினான், குழவிப் பருவத்தே இறைவன் இங்ஙனம் அருள்செய்த நிகழ்ச்சியை அடிகள் தமது பாடலொன்றில் அழகாகக் குறித்துள்ளார்.

**தாய் முதலோரொடு சிறிய பருவமதில் தில்லைத்**
**தலத்திடையே திரை தூக்கத் தரிசித்தபோது**
**வேய் வகை மேல் காட்டாதே என்றனக்கே எல்லாம்**
**வெளியாகக் காட்டிய என் மெய்யுறவாம் பொருளே**
**காய் வகை இல்லாதுளத்தே கனிந்த நறுங்கனியே**
**கனவிடத்தும் நனவிடத்தும் எனைப் பிரியாக் களிப்பே**
**தூய் வகையோர் போற்ற மணிமன்றில் நடம் புரியும்**
**சோதி நடத்தரசே என் சொல்லும்அணிந்தருளே**

(அருள் விளக்கமாலை 44)

(ஆதாரம்)

இராமலிங்க அடிகள் வரலாறு - ஆசிரியர் ஊரன் அடிகள் (பக்கம் 10)

## இந்தச் சம்பவம் குறித்த ஆய்வு :

தான் தில்லைக்குச் சென்றது சிறு பருவத்தே எனவும் தாய் முதலோரொடு சென்றேன் எனவும் இப்பாடலில் வள்ளலார் தெரிவிக்கின்றார்.

ஆண், பெண் பருவம் பற்றி வள்ளலார் கூறுவது இதுதான் :

**ஆண் பிள்ளைப் பருவம் 5**

| | | |
|---|---|---|
| 1. சை சவம் | 5 | வரையில் |
| 2. வாலிபம் | 15 | " |
| 3. கௌமாரம் | 30 | " |
| 4. யௌவனம் | 40 | " |
| 5. வார்த்திகம் | 40க்கு | மேல் |

**பெண் பிள்ளைப் பருவம் 8**

| | | |
|---|---|---|
| 1) பேதை | 7 | வரையில் |
| 2) பெதும்பை | 9 | " |
| 3) மங்கை | 12 | " |
| 4) மடந்தை | 15 | " |
| 5) அரிவை | 25 | " |
| 6) தெரிவை | 30 | " |
| 7) பேரிளம்பெண் | 40 | " |
| 8) விருத்தை | 40 | க்கு மேல் |

(ஆதாரம் : பக்கம் 417, திருஅருட்பா உரைநடைப் பகுதி வர்த்தமானன் பதிப்பகம் - முதற் பதிப்பு அக்டோபர் 1997.)

இதில் "சிறு பருவம்" என்று வள்ளலார் குறிப்பிடவில்லை. அப்படியாயின் சிறு பருவம் என்பது எது? அக்காலத்தில் புலவர்கள் பருவங்களை வரையறை செய்து "சிறு தேருருட்டல்" "அம்மானை" போன்ற பருவங்கட்குரிய பாடல்களைச் செய்திருக்கின்றார்கள். அவர்கள் கணக்கிட்டபடி 5 வயது வரை "பால பருவம்" 9வயது வரை "சிறு பருவம்" ஆகும்.

எனவே வள்ளலார் தான் தில்லைக்குச் சென்றது சிறு பருவத்தே என்று அறிவித்திருப்பதால் 5 வயதிற்கு மேல் 9 வயதிற்குள் அவர்கள் தில்லைக்குச் சென்றிருக்கின்றார்கள் என்பது திட்டவட்டமாகப் புரிகின்றது. 9 வயது வரை சிறு பருவம் என்றால் தில்லைக்கு வள்ளலார் சென்ற சரியான வயது என்ன? அவரே தெரிவிக்கின்றார்.

**வேண்டாருளரோ நின்னருளை மேலோரன்றிக் கீழோரும்**
**ஈண்டார்வதற்கு வேண்டினரால் இன்று புதிதோ யான் வேண்டல்**
**துண்டா விளக்கே திருப்பொதுவில் ஜோதி மணியே ஆறொரு மூன்**
**றாண்டாவதிலே முன்னென்னை யாண்டாய் கருணை அளித்தருளே.**

இந்தப் பாடலில் இறைவன் தன்னை ஆட்கொண்டது தனது 9ம் வயதில்தான் என்று அறிவிக்கின்றார். எனவே சிறு பருவத்தே என்று பாடியது தனது ஒன்பதாம் வயதிலே தில்லைக்குச் சென்றதையே வள்ளலார் குறிப்பிடுகின்றார்.

ஒரு பாடலில் "பால் மறுத்து விளையாடும் சிறு பருவத்திடையே பகரும் உலகிச்சை ஒன்றும் பதியாது" என்றும்,

அறிவிலாச் "சிறிய பருவத்திற்றானே அருந்தலில் எனக்குள வெறுப்பைப் பிறிவிலா தென்னுட் கலந்த நீ அறிதி" என்றும்,

"செறிவதில் மனத்தேன் காசிலே ஆசை செய்திலேன் இந்த நாளன்றி அறிவதில்லாத சிறு பருவத்தும் அடுத்தவர் கொடுத்த காசு அவர் மேல் எறிந்ததும் மேட்டில் எறிந்ததும்" என்றும் பாடுகின்றார். அந்த மூன்று பாடல்களையும் நன்கு சிந்திக்க வேண்டும்.

**பால் மறுத்து விளையாடும் சிறு பருவத்திடையே**
**பகரும் உலகிச்சை ஒன்றும் பதியாதென் உளத்தே**
**மான் மறுத்து விளங்கு திரு ஐந்தெழுத்தே பதிய**
**வைத்த பெரு வாழ்வே என் வாழ்வில் உறும் சுகமே**
**மீன் மறுத்துச் சுடர் மயமாய் விளங்கியதோர் விண்ணே**
**விண் அனந்தம் உள்ளடங்க விரிந்த பெரு வெளியே**
**ஊன் மறுத்த பெருந்தவருக்கொளி வடிவம் கொடுத்தே**
**ஓங்கு நடத்தரசே என் உரையும் அணிந்தருளே**

**அறிவிலாச் சிறிய பருவத்திற்றானே அருந்தலில் எனக்குள வெறுப்பைப்**
**பிறிவிலா தென்னுட் கலந்த நீ அறிதி இன்று நான் பேசுவதென்னே**
**செறிவிலாக் கடையேன் என்னினும் அடியேன் திருவருளமுதமே விழைந்தேன்**
**எறிவிலாச் சுவை வேறெவற்றினும் விழைவோர் எட்டுணையேனும் இன்றெந்தாய்**

(4167)

**செறிவதில் மனத்தேன் காசிலே ஆசை செய்திலேன் இந்த நாள் அன்றி**
**அறிவதில்லாத சிறு பருவத்தும் அடுத்தவர் கொடுத்த காசு அவர்மேல்**
**எறிவதும் மேட்டில் எறிந்ததும் எனக்குள் இருக்கின்ற நீ அறிந்ததுவே**
**பிறிவதில்லா நின் அருட்பெரும் பொருளைப் பெற்றனன் பேசுவதென்னே**

(3395)

பால் மறுத்து விளையாடும் சிறு பருவம், உலகிச்சை பதியத் தொடங்கும் பருவம் நிச்சயமாக ஐந்து மாதக் குழந்தைப் பருவமல்ல. அதேபோல சுவை மிகுந்த உணவிலே வெறுப்பு இருந்ததும், அடுத்தவர் கொடுத்த காசிலே வெறுப்படைந்து அவர் மேலேயே எறிவதும் மேட்டிலே எறிவதும் ஐந்து மாதப் பருவமல்ல. சிறு பருவம் என்ற சொற்றொடரை வள்ளலார் தெருவிலே விளையாடித் திரியக்கூடிய ஐந்து முதல் ஒன்பது வயது வரை உள்ள பருவத்தைத்தான் சிறு பருவம் எனப்பாடியிருப்பதை உணர முடியம்.

இன்னொரு முக்கியமான செய்தியும் ஆராய வேண்டியுள்ளது. 1896ம் ஆண்டு பிருங்கி மாநகரம் இராமசாமி முதலியரவர்கள், சமரச வேத சன்மார்க்க சங்கத்தில் ஒருவராய் இருந்தவர். அவர் வெளியிட்ட ஆறு திருமுறையில் எழுதப்பட்டுள்ள வள்ளலாரின் சரித்திரச் சுருக்கத்திலும் ஐந்தாம் மாதம் செய்த நடராச தரிசனம் குறிப்பிடப்படவில்லை.

மேலும் தாயைவிடத் தந்தை மூத்தவர். வள்ளலார் குடும்பத்தில் அவரது தந்தை, தாய், தமக்கைமார் இருவர், தமையன்மார் இருவர் ஆக அவருடன் சேர்த்து எழுவர் இருந்துள்ளனர். எல்லோரும் சென்றிருந்தால் மூத்தவராகிய தந்தையைக் கூறாது தாயைக் கூற மாட்டார். வள்ளலாரது ஒன்பதாம் வயதில் அவரது தந்தையார் இல்லாத காரணத்தால்தான் தாய் முதலோரொடு என்று பாடியிருக்கிறார். எனவே இதனாலும் ஐந்து மாதக் குழந்தையாயிருந்தபோது வள்ளலார் தில்லை செல்லவில்லை. மாறாகத் தனது ஒன்பதாம் வயதில் தான் சென்றார் என்பது உறுதிப்படுகின்றது.

தனது தம்பி பள்ளி சென்று ஆசிரியரிடம் கல்வி பயிலவில்லையே என்று அண்ணன் சபாபதி வருத்தப்பட்டார். அது தம்பியின் மீது கொண்ட அளவற்ற பாசத்தின் அடையாளம். தனது தம்பியின் எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற கவலை. பிறக்கும் போதே தனது தம்பி ஞானத்துடன் வந்தவர் என்பதும் எல்லாக் கலைகளையும் ஓதாமலே உணர்ந்தவர் என்பதும் சபாபதி பிள்ளை அறிந்தார் இல்லை.

சபாபதிப் பிள்ளை மட்டுமா! இக்காலத்திலும் பலர் அவ்வாறு தான் கூறுகின்றார்கள். ஞானத்துடன் பிறப்பது என்பது நடக்க முடியாத ஒன்று. ஓதாமல் உணர்வது சாத்தியமே இல்லை. வள்ளலார் கல்வி பயின்றார் என்று வாதிடுகின் றார்கள். எல்லோரும் உண்மையை உணர வேண்டும்.

## ஞானத்துடன் பிறப்பது சாத்தியமே

"ஆண்டவன் எப்படி அனாதியோ அவ்வாறே ஆண்டவனிடத்து அருட்சக்தியும் அநாதியாய் இருக்கிறது. அந்த அநாதியான அருட்சக்தியானது தன் சமூகத்தில் விளங்கும் ஆன்மாக்களை பக்குவம் - பக்குவா பக்குவம் - அபக்குவம் என மூன்றாய்ப் பிரிக்கின்றது.

இதன்படி ஆன்மாவானது முதற் பிறவியாகிய ஓர் அறிவுள்ள தாவரமாக வரும்போதே மேற்கூறிய மூன்று விதங்களாகவே பிறவியெடுத்து ஒவ்வொரு பிறவியிலும் அவ்வாறே வளர்ந்து, இறந்து முடிவில் ஆறாவது அறிவுள்ள மனித தேகம் எடுக்கிறது.

மனிதப் பிறவியிலும் பக்குவ ஆன்மாக்கள் ஞானிகளாகவும் நல்லவர்களாகவும் பக்குவா பக்குவ ஆன்மாக்கள் நன்மையும் தீமையும் கலந்த குணமுடைய சாதாரண மனிதர்களாகவும், அபக்குவ ஆன்மாக்கள் தீமையே உருவான கயவர்களாகவும் சண்டாளர்களாகவும் பிறந்து வளர்கின்றார்கள்.

சாதாரண ஜீவர்கள் சந்திர கலையில் பிறப்பதும் இறப்பதும் இயற்கை. பக்குவர்கள் சூரிய கலையில் பிறப்பதும் இறப்பதும் இயற்கை. சூரிய கலை அனுபவம் கிடைப்பது கஷ்டம் என்பது வள்ளலார் வாக்கு.

எனவே பக்குவம் அபக்குவம் என்ற பேதம் ஒவ்வொரு பிறவியிலும் உண்டென்பது தெளிவாகின்றது.

வள்ளலாரின் ஆன்மா பக்குவமானது என்பது மறுக்க முடியாத ஒன்று ஆகும்.

## ஓதாதுணர்தல்

ஜீவனானது மனம் முதலிய அந்தக் கரணங்களின் மத்தியில் இருக்கும். மனிதர்கள் கற்கும், மருத்துவம், பொறியியல், சட்டம், போன்ற கல்வி எல்லாம் மனம் படிக்கின்ற படிப்பே ஆகும். உடம்பு அழியும் போது மனமும் உடம்புடன் அழிந்து விடுவதால் அந்தப் படிப்பும் அழிந்து விடுகின்றது. இவையெல்லாம் சாகும் கல்வி.

மனம் அடங்கியபின் படிக்கும் படிப்போ ஜீவனுடன் இணையும். இதனை ஜீவ அறிவு என்பர் ஆன்றோர். அந்தப் படிப்பு ஜீவனுடன் வரும்.

இதனையே பொய்யா மொழிப்புலவர் திருவள்ளுவரும்

**"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து"**

என்றார்.

ஒரு பிறப்பில் படித்த படிப்பு மனம் ஒருமைப் பாட்டிற்குப் பின் படித்ததாயிருந்தால் ஏழு பிறப்பிற்கும் தொடர்ந்து வருமாம். இது சாகாக் கல்வி.

அட்டமா சித்திகளில் கூடு விட்டுக் கூடு பாயும் சித்து (பரகாயப் பிரவேசம்) என்பது ஒன்று. ஒரு ஞானி தன் உயிரை இறந்துபோன மற்றொரு உடம்பில் செலுத்தி அந்த உடம்புடன் நடமாடினாலும் முந்தைய உடம்பில் பெற்ற அறிவு இந்த உடம்பிற்கும் வருகிறது. உதாரணமாக வட நாட்டிலிருந்து வந்த ஞானி மூலன் என்ற மாடு மேய்ப்பவன் உடலிலே தன் உயிரைச் செலுத்தி இறந்து போன மூலன் உடலுடனே வாழ்ந்து திருமந்திரம் என்று போற்றப்படும் அந்நூலை எழுதியுள்ளார். திருமந்திரம் பாடல் எழுதும் அளவு மாடு மேய்த்த மூலனுக்கு அறிவு விளக்கம் இல்லை. வட நாட்டு ஞானியின் உயிர் ஜீவ அறிவுடன் மூலன் உடம்பில் புகுந்ததால் மூலனால் திருமந்திரம் எழுத முடிந்தது. அவர்தான் திருமூலர் என்றழைக்கப்பட்டார்.

இவ்வாறே வள்ளற் பெருமானார் முற்பிறவிகளில் கற்ற அனைத்தும் அவருடைய ஜீவனில் பதிந்திருந்ததால் இப்பிறவியில் அப்படிப்பெல்லாம் அந்த ஜீவனுடனே தொடர்ந்து வந்து விட்டது.

வள்ளலார் இந்தப் பிறவியில் ஞானத்துடன் வந்தார் என்பது உண்மை. அகச் சான்றும் உண்டு.

வள்ளலாருடைய முதல் மாணாக்கராகிய தொழுவூர் வேலாயுத முதலியார் வள்ளலாரைப் பற்றிக் கூறியுள்ளதாவது :-

"சித்தர்களில் ஒருவராக எண்ணப்படும் இராமலிங்கர் சிறு வயது முதலே இறையருள் பெற்றவராய்க் காணப்படுகின்றார். எல்லாக் கலை நூல்களையும் ஓதாமலேயே உணரப் பெற்றவராக இராமலிங்கர் விளங்கினார். எந்த ஆசிரியரிடத்தும் இராமலிங்கர் கல்வி பயின்றாரில்லை. தொல்காப்பியம், பாணி நீயம் போன்ற இலக்கண நூல்களைச் சிறு வயதிலேயே மனப் பாடமாகச் சொல்லக்கூடிய நாவளத்தைப் பெற்றிருந்தார்."

தன்னைப் பற்றி வள்ளலாரே கூறியுள்ள அகச் சான்று :-

**ஓதாதுணர்ந்திட ஒளி அளித்து எனக்கே**
**ஆதாரம் ஆகிய அருட்பெருஞ்ஜோதி.** (அகவல் வரி 23-24)

**உள்ளும் புறத்தும் கருணை அமுதமூட்டும் அன்னையே**
**ஓதாதுணர உணர்வும் உணர்வை உதவும் அன்னையே**
**தெள்ளுங் கருணைச் செங்கோல் செலுத்தச் செய்த அப்பனே**
**செல்வப் பிள்ளையாக்கி என்னுள் சேர்ந்த அப்பனே** (5046)

ஓதாது உணர முடியுமா என்ற ஐயப்பாட்டிற்குச் சரியான விடை இது தான். முற்பிறப்பில் கற்ற கல்வியறிவை ஜீவ அறிவுடன் கொண்டு வந்தவர்கள் இப்பிறப்பில் ஓதாமலே உணர்ந்திருப்பர். ஞானிகள் கல்வி ஞானத்துடனும் முன் அனுபவ ஞானத்துடன் பிறவியெடுப்பதால் அவர்களைப் பிறந்தார்கள் என்று

கூறாமல் இறங்கி வந்தார்கள் என்ற பொருள்படும்படி அவதாரம் செய்தார்கள் என்று கூறுகின்றோம்.

வள்ளலார் பக்குவ ஆன்மாவாக முற்பிறவிகளில் கற்ற அறிவுடன் ஜீவ அறிவுடன் இப்பிறவி எடுத்ததால் இப்பிறப்பில் அவர் யாரிடமும் கல்வி கற்க வேண்டிய அவசியம் இல்லாது போயிற்று. மேலும் பக்குவ ஆன்மாக்கள் பலப்பல நூல்களைப் படித்துத்தான் அறிவு விளக்கம் பெற முடியும் என்பதும் சரியல்ல. வள்ளலார் கூறுவதைக் காணுங்கள் :-

"பத்து ஆள் சுமை (நூல்கள்) ஒரு வண்டி பாரம், நானூறு வண்டிச் சுமை ஒரு சூல் வண்டி பாரம். சூல் வண்டி ஆயிரங்கொண்ட நூல்களை ஒரு ஜென்மத்தில் ஒருவன் அதி தீவிர ஜீவ முயற்சியால் படிக்கச் சிறிய உபாசனை சகாயத்தால் முடியும். அப்படிப்பட்டவன் ஆயிரம் ஜென்மம் எடுத்துப் படிக்கும் கலை அறிவை ஒருவன் அருள் முன்னிடமாகச் சுத்த சிவ நோக்கத்தால் அறியத் தொடங்கினால் ஒரு கணத்தில் படித்துக் கொள்ளலாம்."

(உரைநடைப் பகுதி பக்கம் 298, கலை அறிவும் அருள் அறிவும்)

உரை நடையில் கூறிய மேற்படி கருத்தைத் தனது பாடலிலும் கூறுகின்றார்.

**காரணமிது புரிகாரியம் இது மேல்**
**காரணக் காரியக் கருவிது பலவாம்**
**ஆரணம் ஆகமம் இவை விரித்துரைத்தே**
**அளந்திடும் நீ அவை அடைந்திடன் மகனே**
**பூரண நிலை அனுபவம் உறில் கணமாம்**
**பொழுதினில் அறிதி எப்பொருள் நிலைகளுமே**
**தாரணிதனில் என்ற தயவுடையரசே**
**தனிநடராச என் சற்குருமணியே** (3695)

நூல்களைப் படித்துத்தான் அறிவு விளக்கம் பெற முடியும் என்ற கருத்தை வள்ளலார் திடமாக மறுப்பதுடன் அருள் முன்னிலையில் அறிய முடியும் என்று வழியும் காட்டுகின்றார்.

அவ்வாறே வள்ளலாரும் பள்ளியிலோ எந்த ஆசிரியரிடமோ கல்வி கற்கவில்லை. இறைவனே அவருள்ளத்திலிருந்து உணர்த்தினான்.

**சுற்றது மற்றவ்வழி மாசுதது என்று எண்ணாத்**
**தொண்டரெலாம் கற்கின்றார் பண்டுமின்றும் காணார்**
**எற்றதும்பு மணி மன்றில் இன்ப நடம் புரியும்**
**என்னுடைய துரையே நான் நின்னருளால்**
**கற்றது நின்னிடத்தே பின் கேட்டது நின்னிடத்தே**
**கண்டது நின்னிடத்தே உட்கொண்டது நின்னிடத்தே**
**பெற்றது நின்னிடத்தே இன்புற்றது நின்னிடத்தே**
**பெரியதவம் புரிந்தேன் என்பெற்றி அதிசயமே** (3044)

பள்ளியில் கற்காது தான் ஞானம் பெற்றது எவ்வாறு என்பதனை நன்கு சுட்டிக் காட்டி விளக்கியுள்ளார் வள்ளலார். எந்த ஆசிரியரும் இன்றி ஞான அறிவு பெற்றதும் பள்ளியில் படிக்காமலேயே பல்லாயிரக் கணக்கான அருட்பாக்களைப் பாடியிருப்பதும் ஓதாது உணர்தல் சாத்தியமே என நிரூபிக்கின்றது. தான் ஓதாதுணர்ந்ததை பல பாக்களில் அவரே கூறியிருக்கிறார்.

**நாதா பொன்னம்பலத்தே அறிவானந்த நாடகம் செய்**
**பாதா துரும்பினும் பற்றாத என்னைப் பணி கொண்டெல்லாம்**
**ஓதாதுணர உணர்த்தி உள்ளே நின்று உளவு சொன்ன**
**நீதா நினை மறந்தென் நினைக்கேன் இந்த நீணிலத்தே.**

வள்ளலார் இப்பிறவியில் ஓதாமல் அனைத்தையும் உணர்ந்தவர்தான்.

## திரு அருட்பா உதயம்

வள்ளலாரை ஆட்கொண்ட இறைவன் தன்னைப் பாடும்படி அவருள்ளிருந்து ஆணையிட்டான். உன்னைப் பாடுகிறேன். உன்னைத் தவிர வேறு யாரையும் பாடாத உறுதியும் குணப் பொருளும் பாடல் அமைவதற்கேற்ற இலக்கியமும் கொடுத்து அருள்வாயாக என்று வேண்டினார்.

**"நாடு கலந்து ஆள்கின்றோர் எல்லோரும் வியப்ப**
**நண்ணி எனை மாலையிட்ட நாயகனே நாட்டில்**
**ஈடுகரைந்திடற்கரிதாம் திருச்சிற்றம்பலத்தே**
**இன்ப நடம் புரிகின்ற இறையவனே எனை நீ**
**பாடுக என்னோடு கலந்து ஆடுக என்றெனக்கே**
**பணியிட்டாய் நான் செய்பெரும் பாக்கியம் என்று உவந்தேன்**
**கோடுதவறாதுனைப் பாடுதற்கிங்கேற்ற**
**குணப்பொருளும் இலக்கியமும் கொடுத்து மகிழ்ந்தருளே** (5470)

சிறு பிள்ளையாய் இருந்த வள்ளலார் இனிய தமிழில் பாமர மக்களும் நன்கு புரிந்து கொள்ளக் கூடிய எளிய ஆனால் பொருளாழம் மிக்க சொன் மாலைகளைத் தொடுக்கத் தலைப்பட்டார். அவருடைய பாடல்கள் அமிழ்தினும் இனிதாய், மனதை உருக்க வல்லதாய், இறை பக்தியில் திளைக்கச் செய்விப்பதாய், அருளை வாரித்தரும் மாண்புடையதாய் விளங்கியதால் அவரது புகழ் வெகு வேகமாகப் பரவியது. இவ்வாறு மூன்று ஆண்டுகள் கழிந்தன.

# இராமலிங்கர் உலகிற்கு அறிமுகம்

வள்ளலாருக்குத் தற்போது வயது 12. அவரை உலகறியச் செய்ய இறைவன் எண்ணினான். சபாபதி பிள்ளைக்குத் தாள முடியாத தலைவலியும் காய்ச்சலும் கண்டது. சோமு செட்டியார் வீட்டில் பிரசங்கம் செய்ய அவரால் போக முடியவில்லை. வருகின்ற சொற்ப வருமானமும் போய்விடுமே என்று வருந்தினார். அவரது துணைவியார் பாப்பாத்தி அம்மையார் தன் கணவரிடம் வருத்தப்பட வேண்டாம். நம் தம்பியை அனுப்பிச் சோமு செட்டியாரிடம் தங்கள் உடல் நலக்குறைவைச் சொல்லிவிட்டு வரச் சொல்லுங்கள் என்று கூறினார். வேறு வழியின்றி அண்ணன் சபாபதிப் பிள்ளை தம்பியை அழைத்து நீ போய் விளக்கேற்றி வைத்து விட்டு இரண்டொரு பாடல் பாடிவிட்டு என் உடல்நலக் குறைவைச் சொல்லி விட்டுவா? என்று சொல்லி அனுப்பினார் நம் வள்ளலாரும் அண்ணன் சொல் தவறாது சோமு செட்டியார் வீட்டிற்குச் சென்றார். அங்கு சென்று தன் கையால் திருவிளக்கு ஏற்றினார். தன் அண்ணன் வர முடியாத நிலையைக் கூறினார். அங்கிருந்த மக்கள் முகத்தையும் வள்ளலார் கண்டார். இன்று பிரசங்கம் நடைபெறாது போய் விட்டதே என்று அவர்கள் வருந்தியதைக் கண்டார். அவர் மனம் இளகியது. தானே பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். இரவு ஒன்பது மணிக்கு முடிய வேண்டிய பிரசங்கம் நடுநிசி வரை நீண்டது. சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது என்பார்கள். நமது வள்ளலாரின் பிரசங்கம் அதைவிட மிக மிக அருமையாயும், இனிமையாயும் இருந்ததால் சோமு செட்டியாரும் மற்றும் அங்கு வந்திருந்த மக்களும் கள்ளுண்ட ஈக்கள் போல மயங்கி நேரம் போனதே தெரியாமல் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். வள்ளலாரே பிரசங்கத்தை நிறுத்தினார்.

வெகு நேரமாகியும் தம்பி வீடு திரும்பாததால் குழம்பிய சபாபதிப் பிள்ளை அயர்ந்து உறங்கி விட்டார். மறுநாள் காலை சோமு செட்டியாரும் இன்னும் சிலரும் தன் வீடு தேடி வருவதைக் கண்ட சபாபதிப் பிள்ளை நேற்று என்ன நடந்ததோ - இவர்கள் என்ன சொல்ல வருகின்றார்களோ என்றெல்லாம் எண்ணி எண்ணிப் பயந்தே போனார். வந்தவர்களை வரவேற்கக் கூட அவரால் முடியவில்லை.

சோமு செட்டியாரே தொடர்ந்தார். இனி நீங்கள் பிரசங்கம் செய்ய வர வேண்டாம். எங்கள் வீட்டிற்குத் தம்பியே வந்து பிரசங்கம் செய்யட்டும். நீங்கள் வேறு இடத்திற்குச் சென்றால் வருமானமும் இரட்டிப்பாகுமே என்று நயமாகச் சொன்னார். சபாபதிப் பிள்ளைக்குத் தன்னை இனி வர வேண்டாம் என்று சொன்னது சரி. தம்பி வரட்டும் என்று சொன்னது தான் புரியாமல் தவித்தார். வேறு வழியின்றி அப்படியே ஆகட்டும் என்றார்.

என்ன சொல்லியும் படிக்காத தம்பி, அப்படி என்ன பேசியிருக்கக்கூடும்? அவனுக்குத்தான் போதிய கல்வி அறிவு இருக்காதே இது என்ன புதுமை என்றெல்லாம் புரியாமல் ஒரு பக்கம் வருத்தத்துடனும் மறுபக்கம் மகிழ்ச்சியுடனும் தவித்தார். சோமு செட்டியார் வீட்டிற்குச் சென்று, மறைவாக நின்று, தம்பியின் பிரசங்கத்தைக் கேட்டு விடுவது என்று முடிவு செய்தார். அவ்வாறே அன்று இரவே சோமு செட்டியார் வீட்டில் தம்பி ஆற்றிய பிரசங்கத்தை மறைவாக நின்று கேட்டார்.

## அண்ணன் உண்மை உணர்தல்

இராமலிங்கரின் சொல்லாற்றல், அறிவாற்றல், பூரண ஞானம், எளிமையான விளக்கம், தத்துவங்களின் உண்மை விளக்கம் அனைத்தினையும் சபாபதிப் பிள்ளை அன்று நேரில் கண்டார். பிரமித்துப் போனார். இன்பக் கடலில் மூழ்கிப்போனார். வீட்டிற்கு ஓடினார். வாசலிலே வரும்போதே தனது மனைவியைக் கூவி அழைத்தார். அவரது மகிழ்ச்சிக் குரலைக் கேட்ட பாப்பாத்தி அம்மையார் விரைந்து ஆவலுடன் வந்தார். என்றும் எங்கும் காணாத அளவிற்குத் தன் தம்பியைப் புகழ்ந்தார் - வியந்தார் - பாராட்டினார் - மகிழ்ச்சியில் துள்ளினார். எந்த வாயால் இராமலிங்கரைச் சரியாகப் படிக்கவில்லை என்று தூற்றினாரோ அதே வாயால் அவரைத் துதித்துப் போற்றினார்.

பிரசங்கம் முடிந்து பெருமானார் வீடு திரும்பினார். அவரைக் கண்ட அண்ணனும் அண்ணியாரும் அடியற்ற மரம்போல அவர் காலில் விழுந்து வணங்கினர். போற்றினர். கை கட்டி அவர் எதிர் நின்று மன்னிப்பு கோரினர்.

## இராமலிங்கர் துறவும் திருவருள் மீட்பும்

அண்ணனும் அண்ணியும் தன்னை வணங்கியதை இராமலிங்கர் விரும்பவில்லை. அந்த வீட்டை விட்டு வெளியேறத் திட்டமிட்டார். சிறு வயது முதல் தன்னோடு பழகியிருந்த பால்ய நண்பன் எதிர் வீட்டு ரத்தினத்தை அழைத்தார். எனக்குப் பொய்யுலக ஆசை இல்லை. உனக்கு எப்படி என்று கேட்டார். தனக்கும் அவ்வாறே என்று ரத்தினமும் கூற இருவரும் துறவு மேற்கொண்டு வெளியேறினர். அவர் துறவு மேற்கொண்டு வெளியேறித் தவம் செய்யப் போய்விட்டால் மக்களை யார் திருத்துவது? வள்ளலாரை இறைவன் ஏன் இந்த மண் உலகிற்கு அனுப்பினான்.

இந்த உலகத்திலுள்ள சமய மத நெறியெலாம் பேய் பிடிப்புற்ற பிச்சுப் பிள்ளை விளையாட்டு என உணர்ந்திடாது உயிர்கள் பல பேதமுற்று போரிட்டு இறந்து வீண் போகிறார்களே. அவர்கட்குப் புனிதமான சுத்த சன்மார்க்க நெறி காட்டவும் தெய்வத்தின் உண்மையை உணர்த்தவும் அல்லவா வள்ளலார் வருவிக்க உற்றார் அதைச் செய்யாமல் துறவு மேற்கொண்டால் எப்படி?

அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்திருந்த உலகர் அனைவரையும் சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்தை அடைவித்து அவரும் இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்திடும்படிச் செய்யத்தானே வள்ளலார் வந்தார். அவரே துறவு மேற்கொண்டால் இதை யார் செய்ய முடியும். தன் பிள்ளையான வள்ளலார்தானே செய்ய வேண்டும். அவரைத் துறவு மேற்கொள்ள விடாது தடுத்து மீட்டு விட்டார் இறைவர்.

**ஐய நான் ஆடும் பருவத்திற்றானே அடுத்த நன்னேயனோடு அப்பா**
**பொய்யுலகாசை எனக்கில்லை உனக்கென் புகலென அவனும் அங்கிசைந்தே**
**மெய்யுறத் துறப்போம் என்று போய் திருவருள் மீட்டிட மீண்டேம்**
**துய்ய நின் உள்ளம் அறிந்ததே எந்தாய் இன்று நான் சொல்லுவதென்னே**
(3485)

வள்ளலார் எந்த ஆசையும் இன்றித் தூய்மையாக விளங்கியவர்.

அவர் புராணப் பிரசங்கம் செய்யுங்கால் அது முடிந்து திரும்பும்போது காணிக்கை தருவர். அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு வந்து அண்ணனிடம் தர வேண்டும். அதுவரைகூட அந்தப் பணத்தை வைத்திருப்பது அவருக்கு மிகவும் அருவருப்பாக இருந்தது. அந்தப் பணத்தைக் கிணற்றிலே எறிந்து விடுவார். கேணியிலும் எறிவார். கூரைமேல் எறிவார். அந்தப் பணத்தைக் கையால் தொடவும் விருப்பமின்றி நம் வள்ளலார் இருந்தார்.

**செறிவதில் மனத்தேன் காசிலே ஆசை செய்திலேன் இந்த நாளன்று**
**அறிவதில்லாத சிறு பருவத்தும் அடுத்தவர் கொடுத்த காசு அவர் மேல்**
**எறிவதும் மேட்டில் எறிந்ததும் எனக்குள் இருக்கின்ற நீ அறிந்ததுவே**
**பிறிவதில்லா நின் அருட்பெரும் பொருளைப் பெற்றனன் பேசுவதென்னே**
(3395)

**பணத்திலே சிறிதும் ஆசை ஒன்றிலை. நான் படைத்த**
**அப்பணங்களைப் பல்கால்**
**கிணற்றிலே எறிந்தேன் குளத்திலும் எறிந்தேன்**
**கேணியில் எறிந்தனன் எந்தாய்**
**குணத்திலே நீதான் கொடுக்கின்ற பொருளை**
**எறிகலேன் கொடுக்கின்றேன் பிறர்க்கே**
**கணத்திலே எல்லாம் காட்டும் நின் அருளைக்**
**கண்டனன் இனிச் சொல்வதென்னே** (3396)

பணத்தில் மட்டுமல்ல. உணவு உண்பதில்கூட அவர் மனம் எவ்வாறு இருந்தது? அறிவதில்லாத சிறு பருவத்திலும் அருந்தலில் எனக்கிருந்த வெறுப்பை நான் கூற வேண்டுமா? என்னுள் இருந்த நீ அறிந்தது தானே என்கிறார் இறைவனிடம்.

**அறிவிலாச் சிறிய பருவத்திற்றானே அருந்தலில் எனக்குள வெறுப்பைப்**
**பிறிவிலாது என்னுள் கலந்த நீ அறிதி இன்று நான் பேசுவதென்னே**
**செறிவிலாக் கடையனேன் எனினும் அடியேன் திருவருள் அமுதமே விழைந்தேன்**
**எறிவிலாச் சுவை வேறெவற்றினும் விழைவு ஓர் எட்டுணையேறும் இல் எந்தாய்**
(3393)

விரும்பி உண்ணக் கூடிய உணவினைக் கண்ட காலத்தும் பயந்தேன். சுப காரியங்களில் நேயர் விருந்துண்ண அழைத்த போதெல்லாம் சில ஒளிப்புறு

வார்த்தை கூறி விருந்துணவைத் தவிர்த்தேன் என்றார். சுவையான உணவை நான் தேடிப் போனதே இல்லை என்பதுடன் நான் பிறர்போல ஆடை அணிய விழைந்தேனா அல்லது உண்ணத்தான் ஆசைப்பட்டேனா அல்லது வேறு ஏதாகிலும் பொருளை இச்சித்தேனா இறைவா நீ தானே என்னை அணைய விழைந்தேன். அந்த ஆசை வெள்ளம் அணை கடந்து போயிற்றே. உலகோர் என்னைப் பற்றி என்ன சொன்னாலும் சொல்லட்டும். நீ என்னை அணைய வேண்டும் என்று நான் சொல்கிறேன். என்னுடைய மானம் (லஜ்ஜை) எல்லாம் விட்டு விட்டேன் என்று கூறுகின்றார்.

**களிப்புறு சுகமாம் உணவினைக் கண்ட**
**காலத்தும் உண்ட காலத்தும்**
**நெளிப்புறு மனத்தோடு அஞ்சினேன் எனைத்தான்**
**நேர்ந்த பல் சுபங்களில் நேயர்**
**அளிப்புறு விருந்துண்டமர்க என்றழைக்க**
**அவர்களுக்கு அன்பினோடாங்கே**
**ஒளிப்புறு வார்த்தை உரைத்தயல் ஒளித்தே**
**பயத்தொடும் உற்றனன் எந்தாய்** (3438)

**உன்புடை நான் பிறர்போலே உடுக்க விழைந்தேனோ**
**உண்ண விழைந்தேனோ வேறுடைமை விழைந்தேனோ**
**அன்புடையாய் என்றனை நீ அணைந்திடவே விழைந்தேன்**
**அந்தோ என் ஆசை வெள்ளம் அணை கடந்ததரசே**
**என்புடை வந்தணைக என இயம்புகின்றேன். உலகோர் என்**
**சொலினும் சொல்லுக என் இலச்சையெலாம் விடுத்தேன்**
**தென்புடையோர் முகம் நோக்கித் திருப்பொது நிற்கின்றோய்**
**சித்த சிகாமணியே என் திருநடநாயகனே** (3763)

வள்ளலார் பனை ஓலைகளிலும் காகித ஏடுகளிலும் பாக்கள் எழுதினார். அவரது பாடல்கள் எளிமையாயும் இனிமையாயும் இருந்ததால் பலரும் பாராட்டினர். அவரது புகழ் பரவியது. இவரது பாக்களைப் படித்து மகிழ்ந்தவர்களில் ஓர் அன்பர் துலுக்காணத்து இரேணுகை மீது பாக்கள் எழுதித் தரும்படி வேண்டினார். வள்ளலாரும் பஞ்ச ரத்தினம் என்று ஐந்து பாக்களைப் பாடிக் கொடுத்தார். கொந்தமூர் சீனுவாச வரதாச்சார்ய சுவாமிகள் கேட்டுக் கொண்டதன் பேரில் இராம நாமப் பதிகம் பாடிக் கொடுத்தார்.

மற்றும் ஒருவர் கேட்டுக் கொண்டதின் பேரில் திருப்பள்ளித் தாமம் தாங்கலும் தன் தமையனார் பரசுராமப் பிள்ளைக்காகச் சிங்கபுரிக் கந்தர் பதிகமும் பாடிக் கொடுத்தார்.

## ஞான வாழ்க்கை

ஒழுக்கத்திலும் பக்தியிலும் தலைசிறந்து விளங்கிய வள்ளலார் உலகியல் படிப்பிலே நாட்டமில்லாதிருந்தாரேயொழிய எல்லாக் கலை நூல்களையும் அறிந்தவராகவே விளங்கினார். தொல்காப்பியம், பாணி நீயம் போன்ற இலக்கண நூல்களையெல்லாம் மனப்பாடமாகச் சொல்லக் கூடிய நாவளத்தைச் சிறு வயதிலேயே பெற்றிருந்தார் என்பதே போதுமான சான்றாகும்.

தமது பன்னிரண்டாம் வயதிலேயே ஞான வாழ்க்கை அதாவது தவத்தை மேற்கொண்டார் என்று அவரது பாடல் மூலம் தெளிவாகின்றது.

**ஈராறு தொடங்கி இற்றைப் பகல் வரையுமே**
**எளியேன் பட்ட பாட்டை நினைக்கில் இரும்பும் கரையுமே**
**பனிரெண்டாண்டு தொடங்கி இற்றைப் பகலின் வரையுமே**
**படியில் பட்ட பாட்டை நினைக்கில் மலையும் கரையுமே.**

ஈராறாண்டு பனிரண்டாண்டு தொடங்கி என்பது பன்னிரண்டாம் வயது தொடங்கி. படியில் பட்டபாடு - தவத்தின் அனுபவப்படிகளைக் கடக்கப்பட்ட அரும்பாடு இற்றைப் பகலின் வரையுமே - இற்றைப் பகல் என்பது எந்த நாள்?

வள்ளலாரே தனது அருட்பாவில் அதற்கு விடையளித்திருக்கிறார். அவர் செய்த தவத்தின் விளைவையெல்லாம் தருமச் சாலையிலே ஒரு பகலில் இறைவன் தனக்கு அளித்து விட்டான் என்கிறார். அந்தப் பகல் தான் இற்றைப் பகல்.

**காலையிலே என்றனக்கே கிடைத்த பெரும் பொருளே**
**களிப்பே என் கருத்தகத்தே கனிந்த நறுங்கனியே**
**மேலையிலே இம்மையிலே ஒருமையிலே தவத்தால்**
**மேவுகின்ற பெரும் பயனாம் விளைவையெலாம் தருமச்**
**சாலையிலே ஒரு பகலில் தந்த தனிப்பதியே சமரச சன்மார்க்க**
**சங்கத் தலையமர்ந்த நிதியே**
**மாலையிலே சிறந்தமொழி மாலை அணிந்தாடும்**
**மாநடத்தென்னரசே என் மாலையும் ஏற்றருளே**

வள்ளலாரின் தலை மாணாக்கர் இவரது ஞான வாழ்க்கையைக் குறிப்பிடும்போது இவர் யாரிடம் எங்கு தீட்சை பெற்றார் என்பது எவருக்கும் தெரியாது என்கிறார்.

தான் எவரிடம் தீட்சை பெற்றேன் என்பதை வள்ளலாரே தனது பாடல் மூலமாகவும், சத்தியப் பெரு விண்ணப்பத்திலும் தெரிவிக்கின்றார்.

"குமார பருவத்தில் என்னைக் கல்வியில் பயிற்றும் ஆசிரியர் இன்றியே என் தரத்தில் பயின்று அறிதற்கருமையாகிய கல்விப் பயிற்சியை எனதுள்ளகத்தே யிருந்து பயிற்றுவித்தருளினீர்."

புறத்தே எந்த ஆசிரியரிடத்தும் கல்வி பயின்றதும் இல்லை. எந்த ஞானியிடத்தும் வள்ளலார் தீட்சை பெற்றதும் இல்லை. அவருள்ளிருந்து எல்லாவற்றையும் இறைவனே அளித்தான். வள்ளலாரை இறைவனே உறக்கத் திலிருந்து எழுப்பி ஞானம் புரியாமல் நலிந்து போகாதே எழுந்தே தவம் செய் என்று உணர்த்தினான்.

**வாட்டமொடு சிறியனேன் செய்வகை யறியாது மனமிக மயங்கி ஒரு நாள்**
**மண்ணிற்கிடந்து அருளை உன்னி உலகியலினை மறந்து துயில்கின்றபோது**
**நாட்டமுறு வைகறையில் என் அருகணைந்து என்னை நன்றுற எழுப்பி மகனே**
**நல்யோக ஞானம் எனினும் புரிதலின்றி நீ நலிதல் அழகோ எழுந்தே**
**ஈட்டுக நின் எண்ணம் பலிக்க அருளமுதம் உண்டு இன்புறுக என்ற குருவே**
**என் ஆசையே என்றன் அன்பே நிறைந்தபேர் இன்பமே என் செல்வமே**
**வேட்டவை அளிக்கின்ற நிதியமே சாகாத வித்தையில் விளைந்த சுகமே**
**மெய்ஞ்ஞான நிலை நின்ற விஞ்ஞான கலருளே மேவு நடராசபதியே**
(நடராச பதி மாலை)

நல்யோக ஞானம் எதுவும் புரியாமல் நலிந்து போகாதே என இறைவன் வைகறையில் வந்து அறிவுரைத்தானாம். நான் உனக்கு அடியன் என்றால் நீ எனக்கு ஆண்டவன் என்றால் நான் எப்படி யோக ஞானம் செய்வது என்று இன்று இரவே எனக்கு உணர்த்த வேண்டும் என்றும் கேட்டார் வள்ளலார்.

**ஆண்டவன் நீயாகில் உனக்கடியனும் நானாகில்**
**அருளுடையாய் இன்றிரவில் அருள் இறையாய் வந்து**
**நீண்டவனே முதலியரும் தீண்டரிதாம் பொருளின்**
**நிலைகாட்டி அடிமுடியின் நெறி முழுதும் காட்டி**
**வீண்டவனே காலையில் நீ விழித்தவுடன் எழுந்து**
**விதி முடித்துப் புரிதி இது விளங்கும் எனப் புகல்வாய்**
**தாண்டவனே அருட்பொதுவில் தனி முதலே கருணைத்**
**தடங்கடலே நெடுந்தகையே சங்கரனே சிவனே**

ஆண்டவனே இன்று இரவில் வந்து எனக்கு ஞானத்தை உணர்த்துவாயாக என்று வள்ளலார் வேண்டினாரே இறைவன் வந்தானா. ஆம். வந்தான். வள்ளலாரைப் பாதி இரவில் எழுப்பி அருட்ஜோதி அளித்தது மட்டுமின்றி அவருடைய உள்ளகத்தே சூழ்ந்து கலந்து கொண்டான். தான் பெற்ற நெடும் பேற்றைச் சொல்லி முடியாது என வள்ளலார் பெருமிதம் கொள்வதுடன் இந்தப் பேற்றை உலக மக்கள் அனைவரும் பெற வேண்டும் என்று இறைவனை வேண்டினார்.

**பாதி இரவில் எழுந்தருளி இப்பாவியேனை எழுப்பி அருட்**
**ஜோதி அளித்து என் உள்ளகத்தே சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்**
**நீதி நடஞ்செய் பேரின்ப நிதி நான் பெற்ற நெடும்பேற்றை**
**ஓதி முடியாது என்போல் இவ்வுலகம் பெறுதல் வேண்டுவனே.**

வள்ளலாரைப் பொறுத்தவரையில் என்ன வேண்டினாரோ அதைப் பெற்றார். தான் பெற்றது போல் இவ்வுலக மக்கள் அனைவரும் பெற வேண்டும் எனவும் ஏங்கினார். வேண்டினார். தவம் செய்- நலிந்து போகாதே என வள்ளலாருக்கு இறைவன் உணர்த்தினான். நீயே எனக்குக் குருவாய் இருந்து செய்முறையை உணர்த்துவாயாக என வேண்டினார். இறைவனே குருவாய் இருந்து அருள் புரிந்தான். வள்ளலாரும் தவ வாழ்க்கையைத் தமது பன்னிரண்டாம் வயதில் தொடங்கினார்.

## <u>சிவ யோகியார் சந்திப்பு</u>

வள்ளலாருக்கு வயது 16. தனது நண்பருடன் திருவொற்றியூரில் நடந்த திருவிழா காணச் சென்றார். மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. கூட்ட நெரிசலில் நண்பன் பிரிந்து விட்டார். அவரைத் தேடி வள்ளலார் அலைந்தார். தியாகராசர் சந்நிதிக்கருகேயிருந்த நந்தி ஓடை நந்தி ஆசிரமம் இரண்டினையும் கண்ணுற்றார். அகமிக மகிழந்து நந்தி ஆசிரமத்தினுள் நுழைந்தார். அங்கே பல சந்நியாசிகள் வேதம் முதலியன ஓதிக் கொண்டிருந்தனர். அந்த ஆசிரமத்தின் சூழ்நிலை, அமைதி., தெய்வீகம் ஆகியவை வள்ளலாரை மிகவும் கவர்ந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக சந்நியாசிகளின் மத்தியில் கம்பீரமாக சாந்தமாக, இள நகை அரும்ப, பிரகாசமான உருவந்தாங்கி அமர்ந்திருந்த அந்த நந்தி ஆசிரமத்தின் தலைவராக விளங்கிய சிதம்பர மாமுனிவரைக் கண்டு மனதிலே ஆனந்தம் பொங்க அவரது திருவடிகளில் வள்ளலார் பணிந்தார். தனக்குப் புகலிடம் கிடைத்து விட்டதென அக மிக மகிழ்ந்தார். தன்னை அங்கேயே தங்க அனுமதிக்கும்படி அந்தத் தலைவரிடம் வேண்டினார். அவரோ சிரித்து அங்கே தங்குவதற்கு ஒரு நிபந்தனை விதித்தார். அதாவது உச்சியிலே பிச்சையெடுத்து அதனை இங்குள்ளோர்க்கும் பகிர்ந்தளித்து மீதியை மட்டும் நீ உண்ண வேண்டும் இசைவாயா என்றார்.

வள்ளலாரோ உடனே மறுமொழி கூறினார். இதுவா பெரியது, கச்சியிலே பிச்சையெடுத்துக் காசியிலே நீராடிக் கொச்சியிலே ஜெபம் முடித்துக் கொங்கணத்திலே புசியென்றாலும் மகிழ்வோடு செய்வேன் என்றார்.

அப்படியானால் உன் பெற்றோரிடம் சென்று அனுமதி பெற்றுவா என்று சிதம்பர மாமுனிவர் கூறினார். வலியுள்ள ஒரு புலியின் குகைக்குள் சென்று வா என்பது போல் அல்லவா இருக்கிறது தங்களின் ஆணை என்று மறுமொழி கூறினார் வள்ளலார். இதைக் கேட்ட அந்த முனிவர் வள்ளலாரை ஆசிரமத்தில் சேர்த்துக் கொண்டார்.

ஆசிரமம் வள்ளலாரின் உறைவிடமாயிற்று. திருஒற்றியூர் தியாகேசர் ஆலயத்திற்குச் சென்று பக்தி சிரத்தையுடன் தினமும் வழிபாடு செய்வது

அவரின் வழக்கமாயிற்று. திரு ஒற்றியூர் வழிபாடு தொடங்கியது. பாக்கள் மடைதிறந்த வெள்ளம்போல் வந்து கொண்டே இருந்தன. அவர் எழுதிக் கொண்டே இருந்தார்.

திருவாசகம் மணிவாசகர் சொல்ல இறைவனால் எழுதப்பட்டது என்று சொல்வார்கள். திரு அருட்பாவோ இறைவன் சொல்ல வள்ளலார் எழுதினார். அதனால்தான் நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன் தன் வார்த்தை என்றுரைக்கின்றார். மேலும் தான் கூறியதை வள்ளலார் சரியாக எழுதியுள்ளாரா என்று ஆண்டவன் வள்ளலார் பாட்டை படித்துப் பார்த்து ஆங்காங்கே திருத்தினார்.

**தேன் பாடல் அன்புடையார் செயப் பொதுவில் நடிக்கின்ற சிவமே ஞானக்**
**கான்பாடிச் சிவகாமவல்லி மகிழ்கின்ற திருக்கணவா நல்ல**
**வான்பாட மறைபாட என்னுளத்தே விளங்குகின்ற மன்னா நின்னை**
**யான்பாட நீ திருத்த என்ன தவஞ்செய்தேனோ எந்தாய் எந்தாய்**
**ஆன்பாலும் நறுந்தேனும் சர்க்கரையும் கூட்டியதெள்ளமுதே என்றன்**
**ஊன்பாலும் உளப்பாலும் உயிர்ப்பாலும் ஒளிர்கின்ற ஒளியே வேதம்**
**பூம்பாடல் புனைந்தேத்த என் உளத்தே ஆடுகின்ற பொன்னே நின்னை**
**யான்பாட நீ திருத்த என்ன தவம் செய்தேனோ எந்தாய் எந்தாய்**

(திருஅருட்பா)

அருட்பெருஞ்ஜோதி அகவலில் சில திருத்தங்களை நாம் காணலாம். ஆக வள்ளலார் சிவநேச வெண்பா, திருவருள்முறையீடு, மகாதேவ மாலை போன்ற பாக்களை இயற்றிக் கொண்டே இருந்தார். வடிவுடை மாணிக்கமாலை, இங்கிதமாலை போன்ற பாக்களும் இக்காலத்தில் எழுதப்பட்டவையே. புலவர்கள் என்றால் கடுநடையில் கடின வார்த்தைகளைக் கொண்டு எழுதினால்தான் சிறப்பு, மதிப்பு என எண்ணி அவ்வாறே எழுதி வந்த காலத்தில், மிக மிக எளிமையாகப் பாமர மக்களும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் பாக்கள் தொடுத்தவர். வள்ளலாரே என்றால் மிகையாகாது. எளிய நடையில் அரிய கருத்துக்களை அவரது பாக்கள் அள்ளித் தந்தன. வடிவுடை மாணிக்கமாலைச் சுவடியின் காப்பேட்டின் வலது ஓரத்தில் சிவ என்று பதினாறு முறை அடியிற்கண்டவாறு சிந்தித்து இருக்கின்றார்கள்.

| | | |
|---|---|---|
| | சிவ | |
| | சிவ | |
| சிவ | சிவ | சிவ |
| சிவ சிவ | சிவ | சிவ சிவ |
| சிவ | சிவ | சிவ |
| | சிவ | |
| | சிவ | |
| | சிவ | |

ஏன் இப்படி எழுதினார்கள் என்று சிந்தித்துப் பாருங்கள், இடது கண் வலது கண் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

எளிமையான பாடல் மட்டுமல்ல இங்கிதமாலை புரிந்து கொள்வது கடினம். அவ்வாறும் பாடல் எழுதக் கூடியவர் வள்ளலார். மொத்தத்தில் அவரது பாடல்கள் எளிமையானவையே.

## தலைமாணாக்கரின் முதல் சந்திப்பு

### வள்ளலாரின் வயது 26

பலமொழிகளில் பாண்டித்யம் பெற்றவரும் கவித்திறன் வாய்ந்தவருமான தொழுவூர் வேலாயுத முதலியார் என்பவர் வள்ளலாரின் பாக்களைக் கண்ணுற்று வியந்தார். வள்ளலாரின் அறிவாற்றலைச் சோதிக்க எண்ணிப் பனை ஏடுகள் சிலவற்றில் சொந்தமாகச் சில பாடல்களை எழுதி அந்த ஓலைகள் பழைய ஏடுகளாகத் தோன்றுமாறு அவற்றைப் பக்குவம் செய்து வள்ளலாரிடம் வந்து அவரை வணங்கினார். தான் கொண்டு வந்த அந்தப் பாக்களை வள்ளலாரிடம் தந்து அவரை வணங்கி இவை சங்க காலத்துப் பாடல்கள் அருமையாகக் கிடைத்தவை என்று கூறினார். பாடல்கள் எழுதிய சுவடிகளைக் கண்ணுற்றவுடனே இவை சங்க காலத்துப் பாடல்களல்ல யாரோ ஒரு கற்றுக்குட்டி பாடியது சங்க காலத்துப் பாக்களாய் இருந்தால் இவ்வளவு பிழைகள் இராது என்றார் வள்ளலார். வேலாயுதனார் வள்ளலாரது அறிவாற்றலைக் கண்டு திகைத்தார். வணங்கினார். தன்னை மாணவனாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினார். வேலாயுதனாரது புலமையை மெச்சி அவருக்கு உபய கலாநிதிப் பெரும்புலவர் என்று பட்டம் கொடுத்தார். வேலாயுதனாரும் அன்று தொடங்கி வள்ளலாரின் மாணவரானார். வள்ளலாரைச் சோதித்த தொழுவூர் வேலாயுத முதலியார் சாதாரணமானவரல்ல. ஒரு வெண்பாவைக் கொண்டே பத்து வெண்பாக்களை ஆக்கும் தசபங்கியும் ஒரு வெண்பாவைக் கொண்டே நூறு வெண்பாக்களை ஆக்கும் சதபங்கியும் பாடும் ஆற்றல் பெற்றவர். அதனாற்றான் அவரது புலமையை வள்ளலார் மெச்சி அவருக்குப் பட்டமும் அளித்து அவரை மகிழ்வித்தார். தொழுவூர் வேலாயுத முதலியார் 1949ம் ஆண்டில் வள்ளலாரின் மாணவரானார். அவர் எழுதிய சதபங்கி கிடைக்கவில்லை. ஆனால் ஒரு தசபங்கி கிடைத்துள்ளது. அந்தப் பாடல் :

### தசபங்கி

1. **வெண்ணிலாவே தீயை வீசும் மீனம் முயர்த்தோன்**
   **விரைந்த செய்கை மேனந்திய**
   **எண்ணமேதோ பாயிளங்கா றானண்ணி வண்ணம்**
   **புரைந்தம் மேனி வானம் பெறு**
   **புண்ணதாக் கள்னோய் விளைத்தக் கோன்மன்ன**
   **பொன்னைப் புரிந்து நேரா மானம் வடல்**
   **நண்ணியே யாய்வதென்னா நானென்ன செய்வன்**
   **பரிந்தே வாழி வாநம்பியே**

## வஞ்சித் துறைகள்

2. வெண்ணிலாவே எண்ணமேதோ புண்ணதாக்க நண்ணினாயே
3. தீயை வீசும் பாயிளங்கா நோய் விளைத்த ஆய்வதென்னாம்
4. மீனம் உயர்த்தோன் றானண்ணி வண்ணம் கோன் மன்ன
   பொன்னை நானென்ன செய்வன்
5. விரைந்த செய்கை புரைந்தம் மேனி புரிந்து நேரா பரிந்தே வாழி
6. மேனந்திய வானம் பெறுமானம் வடல் வா நம்பியே

## வஞ்சி விருத்தம்

7. வெண்ணிலாவே தீயை வீசம் எண்ணமேதோ பாயிளங்கால்
   புண்ணிதாக்கன்னோய் விளைத்த நண்ணியே யாய்வதென்னே

## நேரிசை வெண்பா

8. வெண்ணிலாவே தீயை வீசும் மீனம் முயர்த்தோன்
   எண்ணமேதோ பாயிளங்காறா - னண்ணி வண்ணம்
   புண்ண தாக்கன் னோய் விளைத்தக் கோன் மன்ன பொன்னை
   நண்ணினாயே யாய்வதென்னாம்

## வஞ்சி விருத்தம்

9. விரைந்த செய்கைமே னந்திய புரைந்த மேனி வானம் பெறு
   புரிந்து நேரா மானம் வடல் பரிந்தே வாழி வா நம்பியே
   நானென்ன செய்வன் என்பது கூன் இறுதியிற் கூறுக

## கட்டளைக் கலித்துறை

10. வெண்ணிலாவே தீயை வீசும் மீனம் உயர்த்தோன் விரைந்த
    எண்ணமேதோ பாயிளங்கா றானண்ணி வண்ணம் புரைந்த
    புண்ணதாக்கன்னோய் விளைத்தக்கோன் மன்ன பொன்னைப் புரிந்து
    நண்ணினாயே யாய்வதென்னா நானென்ன செய்வன்பரிந்தே

ஒன்றைப் பத்தாக்கியது தசபங்கி. ஒன்றை நூறாக்கியது சதபங்கி. அது கிடைத்திருந்தால் தொழுவூராரின் ஆற்றல் இன்னும் புலப்பட்டிருக்கும். அப்படிப்பட்டவர் வள்ளலாரின் மாணவர் என்றால் வள்ளலாரை எவ்வாறு போற்றுவது.

## வள்ளலாரின் திருமணம்

**வள்ளலாரின் வயது 27.**

சபாபதிப் பிள்ளையும் சின்னம்மையாரும் பள்ளிப் படிப்பில் நாட்டமில்லாமல் வள்ளலார் இருந்ததைக் கண்டு கவலைப்பட்டதுண்டு. வள்ளலாரின் ஞான அறிவைப் புரிந்து கொண்டபின் அந்தக் கவலை நீங்கிற்று. மற்ற பிள்ளைகளைப்போல் இல்லாமல் கோயில் குளம் என்று சுற்றிக் கொண்டிருப்பது தற்சமயம் மிகுந்த கவலையை அளித்தது. ஒரு கால் கட்டு போட்டால் வீட்டோடே தங்காமலா போய் விடுவார் என்று எண்ணிய தாயாரும் அண்ணன் சபாபதியும் வள்ளலாருக்குத் திருமணம் செய்ய ஏற்பாடுகள் செய்தனர். வள்ளலாரோ திருமணம் வேண்டாம் என்று மறுத்தார். அவர்களால் முடிந்தவரை எவ்வளவோ அறிவுரைகள் கூறிப் பார்த்தனர். வாதம் செய்தனர். வள்ளலார் திருமணத்திற்கு இசையவேயில்லை.

வள்ளலார் அதிக ஈடுபாடு கொண்டிருந்த நந்தி ஆசிரமத் தலைவராகிய சிவயோகியாரிடம் முறையிட்டு எப்படியாவது இராமலிங்கரைத் திருமணத்திற்கு இசைய வைக்க வேண்டும் என்று வேண்டினர். சிவயோகியாரும் அவர்கள் கேட்டுக் கொண்டபடி வள்ளலாரைத் திருமணம் செய்து கொள் என்று வற்புறுத்தினார்.

மோகம் மேலிட்டவர்கள் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துவது முறையானது. அவ்வாறில்லாத நான் திருமணம் செய்து கொள்வது நல்லதல்ல என்றார் வள்ளலார்.

இறைவனே அம்மை அப்பனாகத்தானே விளங்குகின்றான். ஆண், பெண் என்ற படைப்பு இறைவனுனைடயதுதானே. எல்லா ஜீவன்களிலும் ஆணும், பெண்ணும் இணைந்து வாழும்படித் தானே ஆண்டவன் செய்திருக்கின்றான். நீ மறுப்பது என்ன நியாயம் என்று சிதம்பர மாமுனிவர் வினவினார்.

சிவம் என்பது சும்மா இருப்பது; சும்மா இருப்பது என்பது மனம் அடங்கிய தவம். தவம் ஆற்றுவோர் அடைவது சக்தி. அதாவது ஆற்றல். தவம் செய்வோர் எந்த அளவிற்கு அதைச் செய்கின்றார்களோ அந்த அளவிற்கு ஆற்றல் பெறுவர் என்ற தத்துவத்தை விளக்கவே சிவம்பாதி சக்தி பாதி என்று கூறி சிவனை ஆணாகவும், சக்தியைப் பெண்ணாகவும் நமது முன்னோர் காட்டியுள்ளனர். இது தத்துவ விளக்கமே தவிர வேறில்லை என்று தாங்கள் அறியாததா. இதை உதாரணம் சொல்லலாமா என்றார் வள்ளலார்.

உன்னைப் பெற்றெடுத்த தாயும் உன்னை வளர்த்த அண்ணனும் மனம் வருந்தலாமா இது சரியா என்றார் சிவயோகியார். எனக்கு விருப்பம் இல்லாமல் திருமணம் செய்து கொண்டால் ஒரு பெண்ணின் வாழ்க்கை பாழாகிவிடாதா. எந்த விதத்திலும் எனக்குத் திருமணம் செய்வது சரியல்ல என்றார் வள்ளலார்.

சிவயோகியார் விடுவதாக இல்லை. நீ பக்தி உள்ளவன்தானே. எல்லாம் அவன் செயல் என்பதை நம்புகிறாயா இல்லையா. நீ திருமணம் செய்து

கொள்வது ஆண்டவனுக்குச் சம்மதம் இல்லை எனில் சுந்தரரது முன் மணத்தில் ஓலை காட்டித் தடுத்தது போல் தடுக்கட்டும். நீ தடுப்பதில் தர்மம் இல்லை என்றார்.

வள்ளலார் இதற்கு என்ன சொல்வது என்று தயங்கினார். ஆண்டவன் தடுத்து விடுவான் என்று நம்பினார். பதில் பேசவில்லை.

மௌனத்தையே சம்மதமாக எடுத்துக் கொண்டு தமக்கையார் உண்ணாமுலை அம்மாளின் மகளான தனக்கோட்டி அம்மையாரை வள்ளலாருக்குத் திருமணம் செய்து வைத்தனர். திருமணம் நடந்தபோது அவருக்கு வயது 27.

இராமலிங்கர் எதிர்பார்த்ததுபோல் அவரது திருமணத்தைத் தடை செய்ய இறைவன் முன்வரவில்லை. இறைவன் தடை செய்வான் என்று இராமலிங்கர் எதிர் பார்த்ததற்கு அவரது பாடலே சான்று.

**முன் மணத்தில் சுந்தரரை முன் வலுவில் கொண்டதுபோல்**
**என் மணத்தில் நீ வந்திடாவிடினும் நின் கணத்தில்**
**ஒன்றும் ஒரு கணம் வந்துற்றழைக்கில் செய்ததன்றி**
**இன்றும் ஒரு மணம் செய்வேன் நான்.** (2019)

அவரது வாழ்வில் திருமணம் நடைபெற்றது என்பதற்கு இந்த அவரது பாடலே சான்றாக உள்ளது.

திருமணம் செய்து கொண்ட அன்றிரவே தனக்கோட்டி அம்மையாரிடம் திருவாசகம் கொடுத்துப் படிக்கச் சொல்லிவிட்டு வள்ளலார் வீட்டை விட்டு வெளியேறினார் என்றே இதுவரை எழுதி வந்துள்ளனர். இக்கருத்துப் பற்றி ஓர் ஆய்வு.

இராமலிங்கர் திருமணம் செய்து கொண்டபோது அவரது வயது 27. அவரது தாயார் சின்னம்மையார் இறந்த பிறகுதான் அவர் 1858ம் ஆண்டு, அவரது 35ம் வயதில் வீட்டை விட்டு வெளியேறுகின்றார். திருமணத்திற்குப் பிறகு எட்டு ஆண்டுகள் வீட்டில் தான் இருந்திருக்கிறார். வள்ளலார் தாம் பாடிய திருஅருட்பாவில் தன்னைப் பற்றியும் சில செய்திகளைக் கூறியுள்ளார். அவை அவருடைய வாழ்க்கையின் அகச் சான்றுகள். அந்த வகைப் பாடல்களைப் பொதுப்படையாகப் பாடியவை என்றோ பிறருக்காகப் பாடியவை என்றோ கூற முடியாது. உதாரணமாகப் பிள்ளைப் பெரு விண்ணப்பம் 43வது பாடல் (3452).

முனித்த வெவ்வினையோ நின் அருட்செயலோ தெரிந்திலேன் மோகமேலின்றித்
தனித்தனி ஒருசார் மடந்தையர் தமக்குள் ஒருத்தியைக் கை தொடச்சார்ந்தேன்
குனித்த மற்றவரைத் தொட்டனனன்றிக் கலப்பிலேன் மற்றிது குறித்தே
பனித்தனன் நினைத்ததோறும் உள்உடைந்தேன் பகர்வதென் எந்தைநீ அறிவாய்

மோகம் மேலின்றித் தனித்தனி ஒரு சார் மடந்தையர் தமக்குள் ஒருத்தியைக் கைதொடச் சார்ந்தேன் என்பதன் பொருள் என்ன?

| | | |
|---|---|---|
| மோகம் மேலின்றி | .. | மோகாந்த காரமில்லாது |
| மடந்தையர் | .. | பெண்களுள் |
| கைதொட | .. | பாணிக் கிரகணம் அதாவது திருமணம் |

மோகம் அதிகப்படாது திருமணம் செய்து கொண்டதால் ஒருத்தியைச் சார்ந்து வாழ்ந்தேன்.

| | | |
|---|---|---|
| குனித்த | .. | வளைத்த - (அல்லது) என்னை விரும்பிய |
| மற்றவரை | .. | மற்ற பெண்களை |
| தொட்டனன்றிக் கலப்பிலேன் | .. | தொட்டிருக்கலாம் ஆனால் அவர்களோடு சேர்ந்து கலந்ததில்லை |
| மற்றது குறித்து | .. | தொட்டதை நினைத்தே |
| பனித்தனன் | .. | நடுங்கினேன் |

திருமணம் செய்து கொண்டதால் அதுவும் மோகாந்தம் இல்லாது ஒருத்தியைச் சார்ந்தேன்; என்னை விரும்பி வளைத்த மற்ற பெண்களோடு கலப்பிலேன் என்பது நமக்குப் பொருந்தாது. இந்தத் திருமணமும் வெவ்வினையின் காரணமா அல்லது நினது திருவருட்செயலா என்று இறைவனைக் கேட்கிறார். இது பொதுவான பாடல் அல்ல. அவரது வாழ்வின் ஒரு சம்பவத்தை எடுத்துக் காட்டும் அகச் சான்று என்பதில் ஐயமில்லை. எனவே அவரது வாக்கின்படித் திருமணம் செய்து கொண்டதால் ஒருத்தியைச் சார்ந்தேன். மற்றவரோடு கலந்ததில்லை என்பதும், 27 வயதில் திருமணம் செய்து கொண்டவர் தனது 35ம் வயதில் வெளியேறியதால் அதுவரை அவர் வீட்டில்தான் இருந்தார் என்பதும் உண்மை. திருமணத்தன்று இரவு மனைவியிடம் திருவாசகம் கொடுத்து வெளியேறினார் என்பதற்கு எவ்விதச் சான்றும் இல்லை.

ஐந்து வயதுக் குழந்தையாய் இருந்த போதே அண்ணியாரின் கண்ணீர் கண்டு இரங்கிய வள்ளலார், உணவிலே விருப்பமில்லாவிட்டாலும் பெற்ற தாய் முகவாட்டம் பார்ப்பதற்கஞ்சி இரக்கம் காரணமாகப் பேருணவு கொண்ட வள்ளலார், இரக்கம் ஒருவில் என் உயிரும் ஒருவும் என்று கூறிய வள்ளலார், ஜீவகாருண்யமே தெய்வ வழிபாடு என்று கூறிய வள்ளலார் தனக்கோட்டி அம்மாளிடம் கருணை இல்லாமல் இருந்திருப்பாரா என்று சிந்திக்க வேண்டும்.

இல்லறவாழ்வில் ஈடுபட்டால் ஞான நிலை அடைய முடியாது என்று வள்ளலார் கூறவில்லை. 27ம் வயதில் திருமணம் கொண்ட இராமலிங்கர் தனது 35ம் வயதில் தான் வீட்டை விட்டு வெளியேறினார் என்பது உண்மை.

## நிர்வாண சந்யாசி

திருஒற்றியூருக்குச் செல்லும் போதெல்லாம் வள்ளலார் வழக்கமாகத் தேரடித் தெரு வழியாகச் செல்வார். ஒருமுறை நெல்லிக்காய் பண்டாரம் சந்து வழியாய் வந்து கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் அந்தத் தெருவிலே சந்யாசி ஒருவர் ஆடை ஏதுமின்றி நிர்வாணமாக உட்கார்ந்து கொண்டு போவோரை, வருவோரையெல்லாம் கையைக் காட்டிக் காட்டி நாய் போகிறது, நரி போகிறது, சிங்கம் போகிறது, என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார். உண்மையில் அங்கே சென்று கொண்டிருந்தவர்கள் மனிதர்கள்தான். அவர்கள் உருவிலே மனிதராய் இருந்தனர். உள்ளத்தில் நாயாய், நரியாய், சிங்கமாய்த் தான் வாழ்ந்து வந்தனர். அவர்கள் மனித உருவிலே நடமாடிக் கொண்டிருக்கும் மிருகங்கள். அந்த வழியாய் வள்ளலார் வருவதைப் பார்த்த அந்த சந்நியாசி ஓர் உத்தம மனிதர் வருகின்றார் என்று கூறித் தன் கையால் அங்கத்தை மறைத்துக் கொண்டார். வள்ளலார் அவரிடம் ஏதோ கூறினார். அந்தச் சந்நியாசி அன்றைக்குப் பிறகு அங்கே காணவில்லை. பிறகு விசாரித்ததில் அந்த சந்நியாசி வேலூர் சென்று அங்கே மடம் ஒன்று நிறுவி அந்த மடத்திலேயே சமாதி ஆனதாகச் சொல்கின்றனர். அந்த சன்யாசியின் பெயர் பாலகிருஷ்ணன் என்றும், திருஞானசம்பந்தர் மீது கொண்ட அளவற்ற பக்தியால் ஞானசம்பந்தர் பாடிய தோடுடைய செவியன் என்ற பாடலின் முதலெழுத்தையும் தன் பெயரிலுள்ள முதலெழுத்தையும் இணைத்து "தோபா" சாமிகள் என்று பெயர் சூட்டிக் கொண்டு வாழ்ந்து மறைந்து விட்டதாகச் செய்தி.

காட்டிற்குச் சென்று சிங்கத்தைப் பார்த்தால் சிங்கம் என்று தெரிகிறது. புலியைப் பார்த்தால் புலி என்று தெரிகிறது. நரியைப் பார்த்தால் நரி என்று தெரிகிறது. ஆனால் மனிதனைப் பார்த்தால் அவனிடம் எந்த மிருக குணம் உள்ளதோ அதனைக் காண முடிவதில்லை. ஏனெனில் மிருகங்களெல்லாம் மானிட உருவில் அல்லவா நடந்து கொண்டிருக்கினறனர்.

## ஒழிவில் ஒடுக்கம் பதிப்பித்தது

**வள்ளலாரின் வயது** 28.

சீர்காழிக் கண்ணுடைய வள்ளலார் அருளிய ஒழிவில் ஒடுக்கம் என்ற நூலுக்குத் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் உரை எழுதினார். ஒழிவில் ஒடுக்கம் என்ற நூலைச் சிதம்பர சுவாமிகள் எழுதிய உரையுடன் இராமலிங்கர் 1851ம் ஆண்டு பதிப்பித்தார். பதிப்பிக்கும்போது ஒழிவில் ஒடுக்க நூலின் சிறப்புப் பாயிரச் செய்யுளுக்கு மட்டும் ஒரு விருத்தி உரை செய்து தன்னுடைய பதிப்பில் சேர்த்தார்.

வள்ளலார் அருளிய (ஒழிவில் ஒடுக்கச் சிறப்புப் பாயிர) விருத்தி உரைக்கான சிறப்புப் பாயிரம் இதுதான்.

**வள்ளல் குருராயன் வாது வென்ற சம்பந்தன்**

**வள்ளல் மலர்த்தாடலை மேல் வைத்துரைத்தான்--உள்ளத்து**

**அழிவில் அடுக்கும் தேனை அன்பரெலாம் உண்ண**

**ஒழிவில் ஒடுக்க நூல் ஓர்ந்து**

அன்பு என்ற சொல்லுக்கு நாம் கொண்டிருக்கும் பொருள், ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் பாசம் ஆகும். பெற்றோருக்குத் தங்கள் பிள்ளைகள் மீது கொண்டிருப்பது அன்பு என்றும், கணவன் மனைவி மீது கொண்டுள்ளதும் மனைவி கணவன் மீது கொண்டிருப்பதும் அன்பு என்றும் எண்ணுகிறோம். ஆனால் ஒழிவில் ஒடுக்கச் சிறப்புப்பாயிர விருத்தி உரையில் அன்பர் என்ற சொல்லுக்கு வள்ளலார் தரும் விளக்கம். அன்பர் என்பது பொருள் புகழாதியைக் குறித்துப் பயில்வோரை நீக்கிச் சிவானந்தம் எந்நாள் அடைதும் என்று அதில் பயில்வோரைக் குறித்தது என்கிறார். அதாவது இறைவன் மீது கொள்வது அன்பு என்றும் மற்ற உயிர்கள் மீது கொள்வது பாசம், பரிவு, இரக்கம், ஈரம், தயவு என்றெல்லாம் கூறுவார்.

ஒவ்வொரு கடிதத்திலும் ஜீவர்கள் மீது தயவும் கடவுளிடத்தில் அன்பும் மாறாமல் இருக்க வேண்டும் என்று வள்ளலார் எழுதியுள்ளார். அவரது பாடலுக்குப் பொருள் காணும்போது இந்தக் கருத்தை வைத்தே காண வேண்டும். அன்பு என்பது இறைவன் மீது நாம் கொள்வது. மற்ற ஜீவர்களிடத்தே காட்டும் இரக்கம் அன்பு அல்ல. தயவே ஆகும்.

அடிகள் பதிப்பித்த நூலின் முகப்பேடு :-

உ

திருச்சிற்றம்பலம்

# ஒ ழி வி லொ டு க் க ம்

சீகாழி

திருஞானசம்பந்த சுவாமிகள்

திருவருள் பெற்ற

**கண்ணுடையவள்ளல்**

திருவாய்மலர்ந்தருளிச்செய்தது

திருப்போரூர்ச்

**சிதம்பரசுவாமிகளால்**

அருளிச்செய்த - உரையுடன்

சிதம்பரம்

**இராமலிங்கபிள்ளை**

யவர்களால்

பார்வையிடப்பட்டு

மண்ணிப்பாக்கம்

## சபாபதி முதலியா

ரவர்களால்

முத்தமிழ் விளக்க அச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது

விரோதி கிருது வருஷம் ஐப்பசி மாதம்

முதல் பதிப்பு

## தெய்வமணிமாலை

14ம் நூற்றாண்டில் திருப்போரூரில் கிடைத்த முருகன் சிலையைக் கொண்டு வந்து, சென்னையில் முத்துக்குமாரசாமி கோயிலை, செட்டியார் ஒருவர் நிர்மாணித்தார். அது முதல் அந்தக் கோயிலைச் செட்டியார் வகுப்பைச் சார்ந்தவர்களே தருமகர்த்தர்களாக இருந்து நிர்வகித்து வருகின்றனர். அந்தக் கோயில் 400 ஆண்டுகளில் பழுது அடைந்து விட்டதால் பாளையம் முத்து செட்டியார் அவர்கள் அந்தக் கோயிலைப் பழுது பார்த்துப் புதுப்பித்தார். கும்பாபிஷேகம் செய்வதற்கு முன் அந்தக் கோயிலின் மீது சில பாக்கள் எழுதித் தரும்படி வள்ளலாரை வேண்டினார். இதுவரை முத்துக் குமாரசாமி கோயில் என்று மட்டுமே வழங்கப்பட்டு வ்நத அந்தக் கோயிலுக்குப் புதுப்பித்ததை நிலைநாட்ட வள்ளலாரும் கந்தகோட்டம் என்று புதுப் பெயரிட்டார். ஒரு நாளைக்கு ஒரு பாடல் என 31 பாடல்கள் "தெய்வமணி மாலை" என்ற தலைப்பிலும் "கந்தர் சரணப்பத்து" என்ற தலைப்பில் பத்து பாடல்களும் வள்ளலார் எழுதிக் கொடுத்தார்.

வள்ளலார் முதன் முதலில் வழிபட்ட தலம் சென்னை கந்த கோட்டம் தான் என்றும் அவர் பாடிய முதற் பாடல் திருவோங்கு எனத் தொடங்கும் தெய்வமணி மாலையே என்றும் வள்ளலார் வாழ்க்கை வரலாற்றில் எழுதப்பட்டும் மேடைகளில் பேசப்பட்டும் வருகிறது. இதில் எந்த அளவிற்கு உண்மை இருக்கின்றது என ஆய்வு செய்தால் மட்டுமே வள்ளலாரின் வாழ்க்கை வரலாற்றின் உண்மையை உணர முடியும். அது பற்றி ஓர் ஆய்வு..

## வள்ளலார் பாக்களில் முதல் பாடல் எது

(ஓர் ஆய்வு)

பிருங்கி மாநகரம் இராமசாமி முதலியார் அவர்கள் 1896ம் ஆண்டு தாம் வெளியிட்ட (ஆறு திருமுறைகள்) சரித்திரச் சுருக்கத்தில் 9வது பக்கத்தில் குறிப்பிடுவதாவது,

"ஒன்பதாம் ஆண்டில் கந்தர் சஷ்டி உபாசனா காலத்தில் உபவாசமிருந்து சாந்தியாதீத கலானுபவத்தை விளக்கும் திருத் தணிகாசலபதி தோத்திரமாக."

**ஆறுமுகப் பெருங்கருணைக் கடலே, தெய்வயானை மகிழ்**
**அருட்குன்றே அரசே முக்கட்**
**பேறுமுகப் பெருஞ்சுடர்க்குச் சுடரே செவ்வேள்**
**பிடித்தருளும் பெருந்தகையே பிரமஞானம்**
**வீறுமுகப் பெருங்குணத்தோர் இதயத்தோங்கும்**
**விளக்கமே ஆனந்த வெள்ளமே முன்**
**தேறுமுகப் பெரிய அருட்குருவாய் என்னைச் சிறு காலை**
**ஆட்கொண்ட தேவ தேவே . . . . . .**

எனத் தணிகைப் பதிகமோதிச் சிந்தனை செய்தலும் அக்காலத்தில் திருத்தணிகைப் பதியாரும் சின்முத்திரையைக் காட்டி அருள் செய்யத் திருவருள் பெற்றுப் பின்னும் பாடுவாராய் . . . . .

1924ம் ஆண்டு திரு. S. கூடலிங்கம் பிள்ளை என்பவரால் வெளியிடப்பட்ட ஆறு திருமுறைகள் புத்தகத்தில் இராமலிங்கபிள்ளைச் சரித்திரச் சுருக்கம் என்ற பகுதியில் ஆறாவது பக்கத்தில் பிருங்கிமாநகரம் இராமசாமி முதலியார் முதல் பாடல் பற்றி என்ன கூறியுள்ளாரோ அது அப்படியே வெளியிடப்பட்டுள்ளது.

1942ம் ஆண்டு வெளியிடப்பட்ட சென்னை அருட்பெருஞ்ஜோதி அச்சகத்தாரின் சமரச சுத்த சன்மார்க்க சங்க வெளியீடு 5ம் திருமுறையில் பக்கம் 15ல் தரப்பட்டுள்ள செய்தி என்னவெனில்,

"நம் பிள்ளைப் பெருமான் ஒழுங்காகப் பாடம் கேட்பதுமில்லை. படிப்பில் கருத்தைச் செலுத்துவதுமில்லை. ஆயினும் அவர் தம் கருத்தைக் கந்தப் பெருமானார் கழல்களில் பாமாலையாகிய பூமாலை சாத்திப் போற்றிப் புகழ்தலிலேயே செலுத்தினார். ஒவ்வொரு நாள் மாலையிலும் கந்தப் பெருமானார் ஆலயத்திற்குச் சென்று

**ஈயென்று நானொருவரிடம் நின்று கேளாத**
**இயல்பும் என்னிடம் ஒருவர் ஈது இடுவென்றபோது அவர்க்கு**
**இலை என்று சொல்லாமல் இடுகின்ற திறமும் இறையாம்**

**நீ என்றும் எனைவிடா நிலையும் நான் என்றும் உள் நினைவிடா**
**நெறியும் அயலார் நிதி ஒன்றும் நயவாத மனமும் மெய்ந்**
**நிலை என்றும் நெகிழாத திடமும் உலகில்.**

**சீயென்று பேயென்று நாயென்று பிறர் தம்மைத் தீங்கு சொல்லாத**
**தெளிவும் திறமொன்று வாய்மையும் தூய்மையும் தந்து**
**நின் திருவடிக்கு ஆளாக்குவாய்.**

**தாயொன்று சென்னையில் கந்த கோட்டத்துள் வளர் தலமோங்கு**
**கந்தவேளே தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே**

முதலான பாமாலைகளைத் தொடுத்துப்பாடுவார்.

1972ல் சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம் தவத்திரு ஊரன் அடிகளார் இதுவரை ஐந்தாம் திருமுறையாக வைக்கப்பட்டிருந்த பாக்களை முதல் திருமுறை ஆக்கித் திருமுறைகளின் வரிசையை மாற்றி அமைத்து வெளியிட்டார். அவர் வெளியிட்ட ஐந்தாம் திருமுறை பக்கம் 78ல் கூறப்பட்டுள்ளதாவது.

"பள்ளி சென்று பயிலாதும் வீட்டில் தங்காதும் திரிந்த பிள்ளைப் பெருமான் நாள்தோறும் கந்த கோட்டத்திற்குச் சென்று வழிபடுவதை வழக்கமாகக் கொண்டார்கள். தனித்து ஓரிடத்தமர்ந்தும், கந்தவேளின் முன் நின்றும் நெடு நேரம் மெய்மறந்து தியானிப்பார். அருட்பாடல்களைப் பாடிப் பணிவார். அக்காலத்தில் அங்ஙனம் பாடப்பெற்றதே "தெய்வமணி மாலை"யும் "கந்தர் சரணப் பத்து"ம் ஆகும். பெருமானால் முதன் முதலில் பாடப் பெற்ற தலம் கந்த கோட்டமே. முதன் முதலில் பாடப் பெற்றது தெய்வ மணிமாலையே. முதற் பாடல் "திருவோங்கு புண்ணியச் செயலோங்கி" என்ற தொடக்கத்தை உடையது.

**திருவோங்கு புண்ணியச் செயல் ஓங்கி அன்பருள் திறலோங்கு**
**செல்வம் ஓங்கச் செறிவோங்கி அறிவோங்கி நிறைவான**
**இன்பம் திகழ்ந்தோங்க அருள் கொடுத்து**

**மருவோங்கு செங்கமல மலர் ஓங்கு வணம் ஓங்க வளர் கருணை**
**மயம் ஓங்கி ஓர் வரம் ஓங்கு தெள் அமுத வயம் ஓங்கி**
**ஆனந்த வடிவாகி ஓங்கி ஞான**

**உருவோங்கும் உணர்வின் நிறை ஒளி ஓங்கி ஓங்கும் மயில்**
**ஊர்ந்தோங்கி எவ்வுயிர்க்கும் உறவோங்கும் நின் பதம்**
**என் உளம் ஓங்கி வளம் ஓங்க உய்கின்ற நாள் எந்த நாள்**

**தருவோங்கு சென்னையில் கந்த கோட்டத்துள் வளர் தலம் ஓங்கு**
**கந்த வேளே தண்முகத் துய்யமணி உண்முகச்**
**சைவமணி சண்முகத் தெய்வ மணியே.**

பெருமான் பாடியருளிய முதற் பாடலிதுவே. பெருமானது திருவாக்கில் முதன் முதலிற் பிறந்த சொல் "திரு ஓங்கு" என்பதே. (இராமலிங்க அடிகள் வரலாறு ஆசிரியர் ஊரன் அடிகள் பக்கம் 26)

அன்பர் ஒருவர் முன்வந்து தெய்வமணி மாலையையும் கந்தர் சரணப் பத்தையும் அப்போதே அச்சிட்டார்.

அம் முதற் பதிப்பின் முகப்பேடு வருமாறு.

உ
சிவமயம்
சென்னைக் கந்தர்
**தெய்வமணி மாலை**
சரணப் பத்து
---
இவை
பாளையம்
முத்துச் செட்டியாரவர்கள்
கேட்டுக் கொண்டபடி
---
சிதம்பரம்
**இராமலிங்கப் பிள்ளை**
அவர்களா லியற்றப் பட்டு
காயாறு
ஞான சுந்தர ஐயர்
அவர்களால்
சென்னை-சாஸ்த்திர விளக்கச் சங்கத்தைச் சார்ந்த
வித்தியானந்த அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டன.

**இராமலிங்க அடிகள் வரலாறு (முதற் பதிப்பு)**
ஆசிரியர் ஊரன் அடிகள் - பக்கம் 28

வள்ளலார் எதை முதலில் பாடினால் என்ன? எதைப் பின்னால் பாடினால் என்ன? எல்லாம் திரு அருட்பாதானே என்போர் இத்துடன் நின்று எதை வேண்டுமானாலும் முதற்பாட்டாகக் கொள்ளலாம்.

திரு அருட்பாவில் முதற்பாடல் எதுவென்று அறிந்து கொள்ள அவா உள்ளவர்கள் மேலே தொடரலாம்.

முதலில் வந்த பதிப்புகளில் 'ஆறுமுகப் பெருங்கருணைக் கடலே' எனத் தொடங்கும் பாடலே முதற் பாடல் எனக் கொள்ளப்பட்டது. தவத்திரு ஊரன் அடிகள் தம்முடைய புத்தகத்தில் திரு அருட்பா மூல ஏடுகளைப் பற்றிய சிறு குறிப்பு ஒன்றை பக்கம் 59 முதல் 61 வரை அளித்துள்ளார். அதன்படித் திருவருள் விலாசப்பத்து என்ற தலைப்புடைய பதிகத்தில் 'ஆறுமுகப் பெருங்கருணைக் கடலே' என்ற பாடல் முதல் பாடலாக உள்ளது. இப்பதிக எண் 42 ஆகும். மூல ஏடுகளைப் பற்றிய குறிப்பின்படி திருத்தணிகைப் பதிகங்களில் முதலாவது பிரார்த்தனை மாலை முதல் 36வது தரிசனை

வேட்கை ஈறாக 36 பதிகங்களும் ஒரு சுவடியில் வேலாயுதனாரால் பதிக்கப்பட்ட வரிசையிலே எழுதப்பட்டுள்ளன. இச்சுவடியின் ஏட்டெண்கள் 232-298. ஏனைய பதிகங்கட்கு மூலம் சில சிறிய சுவடிகளும் தனி ஏடுகளுமாம்.

தணிகைப் பதிகத்தின் முதல் பதிகமே ஏட்டெண் 232ல் எழுதப்பட்டுள்ளதென்றால் ஏட்டெண் 1 முதல் 231 வரை உள்ள பாடல்கள் மூன்றாம் திருமுறை இரண்டாம் திருமுறைச் சிவபெருமான் பற்றிய பாடல்கள் என அறியப்படுகிறது. இதனால் வள்ளலாரால் முதலில் முருக உபாசனை செய்யப்படவில்லை என்பதும் தெளிவாகிறது. எனவே ஆறுமுகப் பெருங் கருணைக் கடலே என்ற பாடல் வள்ளலாரால் பாடப்பட்ட முதற்பாடலாகாது.

அருட்பெருஞ்ஜோதி அச்சகத்தாரின் சமரச சுத்த சன்மார்க்க சங்கப் பதிப்பில் கூறப்பட்டுள்ள ஈயென்று நானொருவரிடம் எனத் தொடங்கும் பாடல் முதற் பாடல் என்ற செய்தி தவறானதே.

அடுத்துத் தவத்திரு ஊரன் அடிகளாரின் கூற்றுப்படி திருவோங்கு எனத் தொடங்கும் தெய்வமணிமாலைப் பாடல் தான் வள்ளலாரால் முதன் முதல் பாடப்பட்டதா என்ற ஆய்வு.

தெய்வமணிமாலை முதன் முதலில் அச்சிடப்பட்ட காலை காணப்படும் முகப்பேட்டைச் சற்று மேலெழுந்த வாரியாகப் பார்த்தாலே பாளையம் முத்துச் செட்டியார் அவர்களின் வேண்டுகோளின்படி வள்ளலாரால் இயற்றப்பட்டது என்பது எளிதில் புலனாகிறது. இதைச் சற்று ஆய்வு செய்வோம்.

1. பாளையம் முத்துச் செட்டியார் வள்ளலாரைப் பாடல் பாடித் தரும்படிக் கேட்கக் காரணம் என்ன?

ஏற்கெனவே வள்ளலார் பாடிய பாக்களைப் படித்து இன்புற்றிருந்ததால்தான் இத்தலத்தைப் பற்றியும் பாடல்களை வள்ளலாரிடம் கேட்டிருக்கக் கூடும்.

2. வேறு யாருக்காகவும் வள்ளலார் பாடியுள்ளாரா?

ஆம் ஓர் அன்பருக்காகத் துலுக்காணத்து இரேணுகை மீதும், கொந்தமூர் சீனிவாச வரதாச்சார்ய சுவாமிகள் கேட்டுக் கொண்டதின்பேரில் இராமநாமப்பதிகமும், இன்னுமொருவருக்காகத் திருப்பள்ளித்தாமம் தாங்கலும், தன் தமையனார் பரசுராமப் பிள்ளைக்காகச் சிங்கபுரிக் கந்தர் பதிகமும் பாடியுள்ளாரே. (ஆதாரம் 5ம் திருமுறை ஊரன் அடிகள் பதிப்பு பக்கம் 76)

வள்ளலார் குழந்தைப் பருவத்தில் அதாவது சிறு பருவத்தில் பாடியிருந்தால் குழந்தை இராமலிங்கம் பாடியது என்று இருக்க வேண்டும். அப்படியில்லாது சிதம்பரம் இராமலிங்க பிள்ளை என்று ஜாதிப் பெயரோடு சிறு பருவத்துக் குழவியை அழைக்க மாட்டார்கள். ஜாதிப் பெயர் நம் பெருமானார் பெயரோடு சேர்க்கப்பட்டிருப்பதாலும் பரமேது வினை செயும் பயனேது என்பது போன்ற பாடல்கள் தெய்வமணி மாலையில் இடம் பெற்றிருப்பதாலும் இவை நல்ல வாலிபப் பருவத்தில் அதாவது சுமார் 25 வயதிற்கு மேல் பாடப்பட்டிருக்க வேண்டும் என எளிதில் ஊகிக்க முடிகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாகச் சென்னை கந்தகோட்டத்தின்மீது தெய்வமணி மாலை, சரணப்பத்து, என்ற இரண்டு பதிகங்கள் மட்டுமே பாடப்பட்டுள்ளது. நம் பெருமானார் வழிபட்ட தலங்களாகிய திரு ஒற்றியூர், திருத்தணிகை, சிதம்பரம், வடலூர் போன்ற தலங்கள் மீது பல்லாயிரம் பாடல்கள் செய்தவர் பிறருக்காக எழுதிக்கொடுத்த சுவாமிகள் மீது மறுபடி பாடவில்லை என்பதை உணர்வோமாக. துலுக்காணத்து இரேணுகை மீது பஞ்சரத்னம் ஓர் அன்பருக்காகப் பாடியது. வேறு பாடல் இல்லை. இராமநாமப்பதிகமும் சிங்கபுரிக்கந்தர் மீதும் வேறு பாடல்கள் இல்லை. அவ்வாறே கந்த கோட்டத்தின் மீதும் முத்துச் செட்டியாருக்காகப் பாடிக் கொடுத்தது போகப் பின் பாடவே இல்லை. கந்த கோட்டம் நம் பெருமானாரின் வழிபடுதலமாய் இருந்திருப்பின் வேறு பல பாக்கள் வந்திருக்க வேண்டும். எனவே கந்த கோட்டம் அவர் வழிபட்ட தலமுமல்ல. அவரால் முதன் முதலில் பாடப்பட்டதுமல்ல. முத்துச் செட்டியார் என்பவர் வேண்டுகோளின்படிப் பாடப்பட்டதே ஆகும்.

கோயிலில் ஏற்பட்ட பழுதுகளைச் சரி செய்து புதுப்பித்ததாகவும், கும்பாபிஷேகம் செய்யும் போது வள்ளலாரை பாளையம் முத்துச் செட்டியார் அணுகிப் பாடல்கள் இயற்றித் தருமாறு கேட்டதாகவும் அதுவரை முத்துக்குமாரசுவாமி கோயில் என்று வழங்கப்பட்டதை மாற்றிக் கந்த கோட்டம் எனப் புதுப்பெயர் சூட்டி வள்ளலார் பாடிக் கொடுத்தார் எனவும் கூறப்படுகின்றது.

கந்தகோட்டம், செட்டியார்கள் பரம்பரையினர்களால்தான் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. பாளையம் முத்துச் செட்டியார் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி என்றதுமே அது வள்ளலார் தானாக வழிபட்டதல்ல என்பதும், அவரால் முதன் முதலாகப் பாடப்பட்டதல்ல என்பதும் சுலபமாகப் புலப்படுமே.

**திருவோங்கு புண்ணியச் செயல் ஓங்கி அன்பருள் திறலோங்கு**
**செல்வம் ஓங்கச் செறிவோங்கி அறிவோங்கி நிறைவான**
**இன்பம் திகழ்ந்தோங்க அருள் கொடுத்து**

என்று அந்த அன்பரை வாழ்த்திப்பாடல் தொடங்குவதைக் காணலாம்.

இவைகள் எல்லாம் முதற்பாடல் அல்ல எனில் எதுதான் முதற்பாடல்?

இறுக்கம் இரத்ன முதலியாரின் உண்ணாவிரத நோன்பு வள்ளலாரின் மனதைக் கரைத்துத் திரு அருட்பா அச்சிட இசைவளிக்கச் செய்தது. உபயகலாநிதிப் பெரும்புலவர் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களும் இரத்ன முதலியார் போன்றோரும் சிதறிக்கிடந்த பாடல்களைத் திரட்டித் திருமுறையாக வகுக்கின்றனர். வள்ளலாரின் சம்மதத்துடன் அவற்றை ஆறு திருமுறைகளாக வகுத்தார்கள்.

வள்ளலாரின் கட்டளைப்படியே முதல் நான்கு திருமுறைகள் மட்டிலும் 1867ம் ஆண்டு வெளியிடப்படுகின்றன, அந்த முதல் வெளியீட்டிற்கு உழைத்த பெருமக்களுக்கு வள்ளலார் பாடிய முதற்பாடல் எதுவென்று தெரிந்திருக்க நியாயமுண்டு. அவர்கள் கூறினால் நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

முதல் நான்கு திருமுறை வெளிவந்த போது அப்புத்தகத்தின் பின் இணைப்பாகத் தொழுவூர் வேலாயுதனார் திருஅருட்பா வரலாறு என்ற ஒரு சிறு நூலைத் தாம் இயற்றி அதனையும் சேர்த்தே வெளியிடுகிறார். நம் பெருமானார் கண்ணுற்ற புத்தகம் அது. அதைக் கண்ணுற்ற நம் பெருமானார் திருவருட்பிரகாச வள்ளலார் என்று யார் போடச் சொன்னது என்று தொழுவூர் வேலாயுதனாரை வினவி இருக்கிறார். நம் பெருமானார் சம்மதமின்றி அதில் ஒன்றும் சேர்த்திருக்க முடியாது என்பது புலனாகின்றது. விண் படைத்த பொழிற்றில்லை அம்பலத்தான் எனப் பாடல் வரியைத் திருத்திக் கொள்ளுமாறும் தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோல் என்ற பாடல் நன்றாய் இருக்கிறது அதையும் சேர்த்துக் கொள்ளலாம் என்றும் வள்ளலார் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்த திருவருட்பா வரலாற்றில் தொழுவூர் வேலாயுத முதலியார் கூறுவது என்னவெனில், திருஞான சம்பந்தராக வந்த காலத்துத் தோடுடைய செவியன் எனும் தொடையால் நாடுடைய பொருளாகிய சிவனை விளக்கினீர்கள் இன்று அருட்பிரகாச வள்ளலாராய் வந்து உலகமெலாம் உதிக்கின்ற எனும் தொடையால் இறை உண்மையை விளக்கினீர் என்பதாம். அப்பாடல் வருமாறு.

பாடல் எண் 26

**தோடுடைய செவியன் எனும் தொடையான் முன்னாள் எவர்க்கும்**
**நாடுடைய பொருட்சுட்டி நன்று விளக்கியதென்ன**
**வீடுடைய உலகமெலாம் உதிக்கின்ற எனும் தொடையால்**
**பீடுடைய பொருட்சுட்டி பேறெமக்கின்றீதென்றும்.**

இது தவறாய் இருப்பின் வள்ளலார் ஏன் இப்படி எழுதினீர் எனக் கேட்டிருப்பர். வள்ளலார் அறியாதது ஒன்றுமில்லை. எனவே தொழுவூர் வேலாயுதனார் கூறியதுபோல உலகமெலாம் உதிக்கின்ற எனும் பாடலே வள்ளலார் பாடிய முதற்பாடலாகும். உலகமெலாம் எனும் ஒரு சொல்லுக்கு இதுவரை யாரும் காணாத விளக்கங்கள் தந்தவர் வள்ளலார் அச் சொல்லைக் கொண்டே தாமும் பாடியிருக்க வேண்டும். வள்ளலார் தோன்றும் துணையாய் இருந்த காலத்திலேயே அப்புத்தகம் வெளியானதால் தொழுவூரார் கூறியதை மறுப்பதற்கு வாய்ப்பே இல்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக அருட்பாவை மறுத்த ஆறுமுக நாவலர் உள்ளிட்டோர் வெளியிட்ட இராமலிங்கர் பாடல் ஆபாச தர்ப்பணம் (அல்லது) மருட்பா மறுப்பு என்ற புத்தகத்தில் 118ம் பக்கத்தில் முதலாம் பக்கம் என்ற தலைப்பில் கூறப்பட்டுள்ளதாவது.

"திருஞான சம்பந்தப் பெருமான் தோடுடைய செவியன் என்று முதலில் அருளியது போலப் பிள்ளையும் உலகமெலாம் உதிக்கின்ற என்ற செய்யுளைப் பாடினார் என்று தொழுவூர் வேலாயுத முதலியார் தாம் பாடிய வரலாற்றில் 26வது செய்யுளிற் கூறினார். பிள்ளையின் சரித்திரச் சுருக்கத்தில் ஆறுமுகப் பெருங் கருணைக் கடலே என்பதை முதலில் பாடினாரெனக் காட்டப்பட்டிருக்கிறது. இவற்றுள் எது உண்மை?" இதுவரை நம்மவர்கள் படித்துக் கேட்டிராத

கேள்வியை அருட்பாவை மறுப்போர் கேட்கிறார்கள். ஆறுமுகப் பெருங்கருணைக் கடலே என்ற பாடலையோ அல்லது உலகமெலாம் உதிக்கின்ற என்ற பாடலையோ முதலில் வைக்காமல் பரசிவம் சின்மயம் எனத் தொடங்கும் பாடல் முதலில் வைக்கப்பட்டதால் திருவருட்பா வைப்பு முறையில் வழு என்று வாதிட்டனர்.

நம்மைச் சார்ந்தோர் திருஞான சம்பந்தர் முதலில் பாடிய தோடுடைய செவியன் என்ற பாடலைத் தேவாரத்தில் முதலில் வையாதது வழு அல்ல எனில் திருவருட்பாவும் வழுவல்ல என மறு மொழி புகன்றுள்ளனர்.

வள்ளலாரே கண்டு மறுக்காததும் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள் கூறுவதும் ஆகிய உலகமெலாம் உதிக்கின்ற என்ற பாடலே வள்ளலாரால் முதன் முதலில் பாடப் பெற்ற திரு அருட்பா வாகும்.

அந்த முதற் பாடல் இதுதான் :

**உலகமெலாம் உதிக்கின்ற ஒளிநிலை மெய்யின்பம்**
**உறுகின்ற வெளி நிலை யென்றுபய நிலையாகி**
**இலகிய நின் சேவடிகள் வருந்தியிட நடந்தே**
**இரவில் எளியேன் இருக்குமிடம் தேடியடைந்து**
**கலகமிலாத் தெருக்கதவம் காப்பவிழ்க்கப் புரிந்து**
**களித்தெனை யங்கழைத்து எனது கையிலொன்று கொடுத்தாய்**
**அலகில் அருட்கடலாம் உன் பெருமையை என் என்பேன்**
**ஆனந்த வல்லி மகிழ் அருள் நட நாயகனே.**

வள்ளலார் எழுதிய முதற் பாடல் இதுவே.

## திருத்தணிகை வழிபாடு

திருத்தணிகை முருகன் மீது நிறைய பாக்களை இராமலிங்கர் இயற்றியுள்ளார். எந்த வயதில் முருகனை வழிபடத் தொடங்கினார் என்பது சரியாகத் தெரியவில்லை. பல பாக்களில் என்னைச் சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே என்று பாடியிருப்பதால் இள வயதில் முருகனை வழிபட்டிருக்கலாம். அல்லது கந்த கோட்டப் பதிகம் பாடிய பின்னர் தொடர்ந்து முருக உபாசனை ஏற்பட்டிருக்கலாம். ஆண்டாறு மூன்றாண்டில் ஆட்கொண்டது தில்லை நடராசனே என்று இராமலிங்கர் பாடியிருப்பதால் அவரது ஒன்பதாம் வயதில் சிதம்பர நடராசரால் ஆட்கொள்ளப்பட்டதாக அறிய முடிகிறது. ஆட்கொள்வது என்பது ஒருமுறை தான். எனவே முருக உபாசனை ஒன்பது வயதிற்குப் பின்னர் திரு ஒற்றியூர் வழிபாட்டோடு இணைந்தும் ஏற்பட்டிருக்கலாம். திருத்தணிகைப் பதிகங்களில் முதலாவது பிரார்த்தனை மாலை முதல் 36வது தரிசனை வேட்கை வரை 36 பதிகங்களும் ஒரு சுவடியில் வரிசையாக எழுதப்பட்டுள்ளன. இச்சுவடியின் ஏட்டெணிகள் 232-298 ஆகும். 231 பக்கங்கள் வரை திரு ஒற்றியூர்

பற்றிய பாக்களே மேலும் திருத்தணிகைப் பதிகங்களில் காம உணர்வை அடக்க வேண்டிய அவசியம் பற்றிய பாக்கள் பரவலாக உள்ளன. தெய்வமணி மாலை 2வது பாடலைப் போல. எனவே திருத்தணிகை பற்றிய பாக்களும் இராமலிங்கரால் தெய்வமணி மாலை பாடிய பின்னரே எழுதியிருக்கப்பட வேண்டும் என ஊகிக்கலாம்.

## நிட்டானு பூதி நூலுரைக்குச் சாற்றுக்கவி

நிட்டானு பூதியை அருளிச் செய்தவர் 1851ம் ஆண்டில் திருக்கைலாய பரம்பரை திருக்கோவிலூர் ஆதீனம் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்தில் பிரதம குருமூர்த்தியாக விளங்கியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக மெய்ஞான சிவாச்சார்ய சுவாமிகள் ஆவார். முத்துகிருஷ்ண பிரம்மம் அவர்கள் இந்த நூலுக்கு உரை எழுதினார். முத்துகிருஷ்ண பிரமம் அவர்கள் கேட்டுக் கொண்டதனால் இராமலிங்கர் அவர் எழுதிய உரையைப் பாராட்டி ஒரு சாற்றுக் கவி அளித்தார்.

**நலங்கொள் சிவயோக மண நாற்றிசையும் மணக்கும்**
**ஞான மணங் கந்திக்கு மோன மண நாறும்**
**விலங்கலில் சித்தாந்த மணம் பரிமளிக்கும் இன்பா**
**வேதாந்த மணங்கமழும் வேத மணம் வீசும்**
**நலங்கொள் மெய்யத்துவிதத் திருமணமும் பரவும்**
**தனி முத்துக் கிருட்டிணப்பேர் தங்கிய நம்பிரமம்**
**வலங்கொளு நன்னிட்டானு பூதியெனு நூற்கே**
**வாய்மலர்ந்த உரையெனும் ஓர் மாமலரிடத்தே**

## துலுக்காணத்து ரேணுகை

சென்னையில் ஆனைக்காரக் கோனார் தெருவிலுள்ள துலுக்காணத்து ரேணுகை அம்மன் மீது பாக்கள் எழுதித் தரும்படி ஓர் அன்பர் இராமலிங்கரை வேண்டிக் கொண்டார். மனமிரங்கி இராமலிங்கரும் துலுக்காணத்து இரேணுகை மீது ஐந்து பாக்கள் எழுதித் தந்தார். துலுக்காணத்து ரேணுகை பஞ்சரத்னம் என்ற பெயரால் அப்பாடல்கள் அச்சிடப்பட்டு வருகின்றன.

## அடியார் பசி தவிர்த்தல்

தினமும் திருவொற்றியூர் ஆலயம் சென்று வழிபட்டு வரும் வழக்கம் உடையவராய் இராமலிங்கர் விளங்கினார். ஒரு நாள் இரவு வீடு திரும்ப வெகு நேரமாகிவிட்டது. அன்னையார் அண்ணியார் அனைவரும் காத்திருந்து களைத்துப்போய் உறங்கி விட்டிருந்தனர். வீடு திரும்பிய இராமலிங்கர்

இரக்கத்தின் காரணத்தால் உறங்குகின்றவர்களை எழுப்ப மனமின்றி வீட்டுத் திண்ணையிலேயே பசியோடு படுத்து விட்டார். சற்று நேரத்தில் அவரது தாயார் அவரை எழுப்பி உணவளித்தாள். இராமலிங்கரும் பசியாற உண்டார். இன்னும் சிறிது நேரம் கழிந்த பிறகு மீண்டும் இராமலிங்கரின் தாயார் அவரை உணவு உண்ண எழுப்பினார். சற்று முன்னர் தானே என்னை எழுப்பி உணவளித்தீர்கள் என்றார் இராமலிங்கர். இல்லையே நான் இப்போதுதான் விழித்துக் கொண்டேன். நீ இன்னும் வரவில்லையே என்று பார்க்க வெளியில் வந்தேன். நீ உறங்கிக் கொண்டிருந்தாய். எனவே சாப்பிட அழைத்தேன் என்றார். அப்படியானால் தாய் வடிவில் வந்து முன்னம் உணவு அளித்தது யார்?

**இருள் இரவில் ஒரு மூலைத் திண்ணையில் நான் பசித்தே**
**இளைப்புடனே படுத்திருக்க எனைத்தேடி வந்தே**
**பொருளுணவு கொடுத்து உண்ணச் செய்வித்தே பசியைப்**
**போக்கி அருள்புரிந்த என்றன் புண்ணிய நற்றுணையே**
**மருள் இரவு நீக்கி எல்லா வாழ்வும் எனக் கருளி**
**மணிமேடைநடு இருக்க வைத்த ஒரு மணியே**
**அருள் உணவும் அளித்தென்னை ஆட்கொண்ட சிவமே**
**அம்மபலத்தென் அரசே என் அலங்கல் அணிந்தருளே**

பெற்ற தாய் குழந்தையின் பசி காணச் சகியாள் என்பார்கள். அந்தப் பெற்ற தாய்க்கும் முன்னதாகப் பரிந்து வந்து இராமலிங்கருக்குப் பசி போக்கிய கருணையை என்னென்பது.

## தமிழ் தந்தை மொழி

ஒரு முறை சங்கராச்சார்ய சுவாமிகள் இராமலிங்கரைச் சந்தித்து உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது சங்கராச்சார்யார் வட மொழிதான் எல்லாமொழிக்கும் தாய் மொழி என்றார். இராமலிங்கர் அதை மறுக்காமல் வட மொழி தாய் மொழியானால் தமிழ் தந்தை மொழி என்றார். வட மொழிக்கும் மூத்த மொழி தமிழ் என்று நிரூபித்தார்.

மேலும் தமிழ் மொழியின் சிறப்பினை இராமலிங்கர் எடுத்துக் காட்டினார். அது வருமாறு--

"தமிழ் எழுத்துக்கள் கற்பதற்கு எண்ணளவு சுருக்கமானவை. தமிழ் ஒலி இலேசானது. தமிழில் கூட்டு என்னும் சந்தி அதி சுலபமானது. உரைநடை எழுதவும் கவி செய்யவும் தமிழ் மிக நேர்மையானது. எழுத்தாரவாரம், சொல் ஆடம்பரம் முதலிய பெண்மைக் குணங்கள் இல்லாதது. எம்மொழியின் ஒலிகளையும் தன்னுட் கொண்டது. தன் மொழிக்கே அமைவுற்ற ழ் ற் ன் என்னும் முடி, நடு, அடி சிறப்பியல் அக்கரங்களில் முடிநிலை இன்பானுபவ சுத்த மோனா தீதத்தைச் சுட்டுறச் சுட்டும் இயற்கை உண்மைத் தனித்தலைமைப்

பெருமைச் சிறப்பியல் ஒலியாம். தமிழ் ஒன்றே சாகாக் கல்வியை லேசில் தெரிவிப்பது. சுத்த சிவானு பூதியை அதி சுலபமாகக் கொடுக்க வல்லது."

தமிழ் என்ற சொல்லுக்கே அரியதொரு உரை எழுதி வெளியிட்டார். அந்த உரையானது "உண்மை விளக்கம்" அல்லது "சித்தாந்த தீபிகை" என்னும் மாத இதழில் 21.8.1897ல் "தமிழ் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளால் எழுதப்பட்டது" என்ற தலைப்புடன் முதன் முதல் அச்சிடப்பட்டது. பின்னர் சித்தாந்தம் 1913 ஜூலை இதழில் மீண்டும் அச்சிடப்பட்டது.

வள்ளலார் தாம் எழுதிய சமரச சுத்த சன்மார்க்க சத்தியப்பெரு விண்ணப்பத்தில் கூறியுள்ளதாவது:-

"இடம்பத்தையும், ஆரவாரத்தையும், பிரயாசத்தையும், பெருமறைப்பையும், போது போக்கையும் உண்டு பண்ணுகின்ற ஆரியம் முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்லவொட்டாது பயிலுதற்கும், அறிதற்கும் மிகவும் லேசுடையதாய் பாடுதற்கும், துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய் சாகாக் கல்வியை லேசில் அறிவிப்பதாய்த் திருவருள் வலத்தால் கிடைத்த தென்மொழி ஒன்றினிடத்தே மனம் பற்றச் செய்து அத்தென்மொழிகளாற் பல்வகை தோத்திரப் பாட்டுக்களைப் பாடுவித்தருளீர் . . . . . . "

இவ்வாறு தமிழின் பெருமையை உலகிற்கு எடுத்துக் காட்டினார்.

## வேறிடங்கேளேன்

கந்தசாமி முதலியார் என்பவர் இராமலிங்கரை அணுகித் தன் வறுமை நிலையை விளக்கினார். செல்வந்தர் யாருக்கேனும் ஒரு கடிதம் கொடுத்தால் அக் கடிதத்தைக் காட்டித் தேவையான பொருள் பெற்று நிம்மதியாக வாழலாம் என்ற எண்ணத்தில் இராமலிங்கரிடம் ஒரு கடிதம் கேட்டார். ஏட்டால்கூட எவரிடமும் கேட்கமாட்டேன் எது வேண்டுமானாலும் இறைவனிடம்தான் கேட்பேன் என்று பொருள்படும்படி ஒரு பாட்டு எழுதிக் கொடுத்து விட்டார்.

**ஏட்டாலும் கேள் அயல் என்பாரை நான் சிரித்து என்னைவெட்டிப்**
**போட்டாலும் வேறிடங்கேளேன் என் ஆணைபுறம் விடுத்துக்**
**கேட்டாலும் என்னை உடையானிடம் சென்று கேட்பனென்றே**
**நீட்டாலும் வாயுரைப் பாட்டாலும் சொல்லி நிறுத்துவனே**

## தொண்ட மண்டல சதகம்

வள்ளலாரின் வயது 31

படிக்காசுப் புலவர் இயற்றிய தொண்ட மண்டல சதகம் என்ற நூலை ஆய்வு செய்து பதிப்பிக்குமாறு தொண்ட மண்டலத் துளுவ வேளாளர் இயற்றமிழ்ப் போதக சாலைத் தலைவர் கொண்ணூர் ஐயாசாமி முதலியார் அவர்கள் இராமலிங்கரை வேண்டினார். அவரது வேண்டுகோளுக் கிணங்கி 1854ம் ஆண்டு ஜனவரி (மார்கழி) மாதத்தில் வள்ளலார் அந்த நூலைப் பதிப்பித்தார். அதன் முகப்பேடு வருமாறு

உ
சிவமயம்
**தொண்ட மண்டல சதகம்**
இஃது
**படிக்காசுப் புலவரால்**
இயற்றப்பட்டது
---
1854ம் வருஷம் ஜனவரி மாதம்
மஉறாராஜஸ்ரீ கனம் பொருந்திய
தொண்ட மண்டலம்
துளுவ வேளாளர்கள் ஏற்படுத்திய
இயற்றமிழ் போதகசாலை இரட்சகர்த்தராகிய
---
கொண்ணூர்
**ஐயாசாமி முதலியார் அவர்கள்**
கேட்டுக்கொண்டபடி
---
சிதம்பரம்
**இராமலிங்கப் பிள்ளையவர்களாற்**
பரிசோதிக்கப்பட்டு
இந்து பிரஸென்னும் அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது
இராட்சஸ வருஷம் மார்கழி மாதம்
----

தொண்ட மண்டலம் என்பது சரியா தொண்டை மண்டலம் என்பது சரியா என்ற வாதம் எழுந்தது. தொண்ட மண்டல சதகப் பதிப்பிலே நூற் பெயர் இலக்கணத்தில் இறுதியில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

தொண்ட மண்டலம் என்பதைத் தொண்டை மண்டலம் என்று இச் சென்னை நகரிலிருக்கின்ற வித்வான்களிற் சிலர் மாறாக வழங்க அது

குறித்துச் சில பிரபுக்களும், வித்வான்களும், உபாத்தியாயர்களும் "இவ்விரண்டில் இலக்கண அமைதியும் உலக வழக்கும் உள்ளது எது, அதனை ஒருவாறு தெரிவிக்க வேண்டும், என்று கேட்டுக் கொண்டபடி சிதம்பரம் இராமலிங்க பிள்ளையவர்களாற் தெரிவிக்கப்பட்டது."

இராமலிங்கர் இலக்கண நூல்களைச் சான்று காட்டி மிக விரிவாக விளக்கியுள்ளார். தொண்ட மண்டலம் என்பது சரி என்று மட்டும் எடுத்துக் காட்டாமல், தொண்டை மண்டலம் என்பதே சரி என்போர் வாதத்தையும் கூறி அதனுக்கு மறுப்பையும் எடுத்தியம்புகிறார். தன்வாதத்தின் நிறைவாக "இங்ஙனம் உணர மாட்டாதார் ஆதொண்டச் சக்கரவர்த்தி என்பவர் தாம் அரசு செய்யுங் காலத்தில் தன்னால் கட்டுவிக்கப்பட்ட ஆலயங்களில் தனது பெயரைக் கல்வெட்டில் பொறித்தார். அதில் ஆதொண்டன் என்றே பொறித்திருக்கின்றது. இதனைத் திருவலிதாயம் திருமுல்லைவாயில் போன்ற சிவதலங்களில் உள்ள கல்வெட்டுகளில் கண்டு தெளியக்கடவர் என்று தனது வாதத்தை நிறைவு செய்கிறார்.

கல்வெட்டு ஆராய்ச்சியும் செய்தவர் இராமலிங்கர்

## மனுமுறை கண்ட வாசகம்

சென்னை சாஸ்திர விளக்கச் சங்கத்தார் பள்ளி மாணவர்கட்குத் துணைப் பாட நூல் ஒன்று எழுதித் தருமாறு இராமலிங்கரை வேண்டினர். இராமலிங்கரும் பெரியபுராணத்தில் இருந்து மனு நீதி கண்ட புராணம் என்ற நூலை மனுமுறை கண்ட வாசகம் என்ற பெயரில் எழுதித் தந்தார். இந்த நூலை ஏன் இராமலிங்கர் தெரிந்தெடுத்தார் என அறிந்து கொள்வது அவசியம். மனித உயிரை மிக மிக உயர்வானதாகவும் மற்ற உயிர்களை மிக மிகக் கேவலமானவையாகவும் மனிதர்கள் நடத்துகின்றனர். ஒரு மனிதனைக் கொன்று விட்டால் அவனைக் கொலைகாரன் என்று குற்றம் சாட்டி, கைது செய்து, அவன் மீது வழக்கு தொடுத்து அவனுக்கு ஆயுள் தண்டனையோ அல்லது மரண தண்டனையோ விதிக்கப்படுகின்றது. ஆனால் ஒவ்வொரு நாளும் பல லட்சக் கணக்கான உயிர்கள் ஆடுகள் - மாடுகள் - கோழிகள் - பன்றிகள் போன்ற பல உயிர்கள் கொலை செய்யப்பட்டு அவைகளின் மாமிசத்தை மனித இனம் உணவாக உண்டு வருகிறது. இந்த உயிரினங்களைக் கொல்வது ஒரு குற்றமாக எண்ணப்படுவதில்லை. மனித உயிரைக் கொன்றால் மட்டுமே கொலை செய்தவனைக் குற்றவாளியாக்கித் தண்டனை அளிக்கிறார்கள். மனுமுறை கண்ட புராணத்தில் மனுநீதிச் சோழனுடைய மகன் வீதிவிடங்கன் என்பவன் தேரில் செல்லும்போது ஒரு பசுங்கன்று அவனது தேர்ச் சக்கரத்தில் சிக்கி இறந்து விடுகிறது. அந்தக் கன்றின் தாய்ப் பசுவானது மன்னனின் அரண்மனை வாசலில் கட்டப்பட்டிருந்த ஆராய்ச்சி மணியைத் தனது கொம்புகளால் இயக்கி மன்னனிடம் நீதி கேட்கிறது.நடந்தவற்றை அறிந்த மன்னனோ வேதனையால் துடிக்கிறான். தன் மகன் பசுங்கன்றின் உயிர் பிரியக் காரணமானதால் அந்தக் கன்றின் உயிருக்கு ஈடாகத் தன் மகனைத் தேர்ச் சக்கரத்தில் இடறி மரணமடையச் செய்ய வேண்டும் என்று தீர்ப்பளிக்கிறான். மன்னனது மந்திரியான

கலாவல்லபன் என்பவர் பசுங்கன்றின் உயிருக்கு ஈடாகக் கோதானம் செய்யலாம், வஸ்த்திர தானம் செய்யலாம் என்பது போன்ற பிராயச் சித்தங்கள் செய்தால் போதும் என்று எவ்வளவோ எடுத்துக் கூறியும் தனது முடிவிலிருந்து மன்னன் மாறவே இல்லை. பசுங்கன்றின் உயிரும் வீதிவிடங்கனான அரசகுமாரனின் உயிரும் சமமானதே - அதில் தாழ்வு உயர்வு என்பது கிடையாது என்பது மன்னனின் வாதம். எத்துணையும் பேத முறாது எவ்வுயிரும் தம் உயிர் போல் எண்ண வேண்டும் என்ற கருத்துடைய இராமலிங்கர் அதே கருத்துடைய மனுமுறை கண்ட வாசகத்தைப் பள்ளிப் பிள்ளைகளின் தமிழ்த் துணைப் பாடமாக எழுதித் தருகிறார். உயிர்கள் அனைத்தும் ஒன்றே என்றும் அவற்றில் உயர்வு தாழ்வு என்ற பேதம் இல்லை என்றும் குழந்தைகள் மனதிலே ஆழமாகப் பதித்துவிட வேண்டும் என்பதே இராமலிங்கரின் நோக்கம். குழந்தைகள்தான் எதிர்கால வாரிசுகள். அவர்கள் திருந்திவிட்டால் பிற்காலத்தில் நாட்டிலே கொலைக் குற்றங்களே இல்லாத, ஜீவகாருண்யமே லட்சியமாய்க்கொண்ட வாழ்க்கை அமையும் என்று இராமலிங்கர் திட்டமிட்டு மனுமுறை கண்ட வாசகம் என்ற உரைநடை நூலை ஆக்கித் தந்தார்.

மனுநீதி கண்ட புராணத்திற்கும் இராமலிங்கரது மனுமுறை கண்ட வாசகத்திற்கும் சிறு வேறுபாடு உண்டு. அரசகுமாரன் வீதிவிடங்கன் வீதி உலாப் போனதாக மனுநீதி புராணம் கூற இராமலிங்கரின் மனுமுறை கண்ட வாசகம் தேரில் ஏறிச் சிவதரிசனம் செய்ய ஆலயம் சென்றதாகக் கூறும்.

மனுமுறை கண்ட வாசகம் 1854ம் ஆண்டு ஜூன் மாதம் முதன் முதலாக அச்சிட்டு வெளியாக்கப்பட்டது. அதன் முகப்பு ஏடு பின் வருமாறு

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## மனுமுறை கண்ட வாசகம்

இஃது பலருக்கு உபயோகமாகச் சாஸ்த்திர விளக்கச்

சங்கத்தார் கேட்டுக் கொண்டபடி மனுநீதி கண்ட புராணத்தை

விரிவுள்ள வாசக நடையாகச்

**சிதம்பரம் இராமலிங்க பிள்ளையவர்களால்**

இயற்றப்பட்டு

பாளையம் சுப்பராயச் செட்டியார் அவர்களால்

மேற்படி சங்கத்தாரவர்களது

**வித்யானந்த அச்சுக் கூடத்தில் பதிக்கப்பட்டது**

ஆனந்த வருஷம் ஆனி மாதம்

தனது மகனின் தேர்க்காலில் அடிபட்டுப் பசுங்கன்று இறந்தது என்ற துயரச் செய்தியைக் கேட்டவுடன் மனுநீதிச் சோழன் இந்தச் செய்தியைக் கேட்க நான் என்ன பாவம் செய்தேனோ என்று புலம்புவதாக இராமலிங்கர் எழுதும் அருமை வியக்கத்தக்கது.

நல்லோர் மனதை நடுங்கச் செய்தேனோ!
வலிய வழக்கிட்டு மானங் கெடுத்தேனோ!
தானங் கொடுப்போரைத் தடுத்து நின்றேனோ!
கலந்த சினேகரைக் கலகம் செய்தேனோ!
மனம் ஒத்த நட்புக்கு வஞ்சகம் செய்தேனோ!
குடிவரி உயர்த்தி கொள்ளை கொண்டேனோ!
ஏழைகள் வயிறு எரியச் செய்தேனோ!
தருமம் பாராது தண்டஞ் செய்தேனோ!
மண்ணோரம் பேசி வாழ்வழித்தேனோ!
உயிர்க்கொலை செய்வோர்க்கு உபகாரஞ் செய்தேனோ!
களவு செய்வோர்க்கு உளவு சொன்னேனோ!
பொருளை இச்சித்துப் பொய் சொன்னேனோ!
ஆசைகாட்டி மோசஞ் செய்தேனோ!
வரவு போக்கொழிய வழியடைத்தேனோ!
வேலையிட்டுக் கூலி குறைத்தேனோ!
பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனோ!
இரப்போர்க்குப் பிச்சை இல்லையென்றேனோ!
கோள் சொல்லிக் குடும்பங் கலைத்தேனோ!
நட்டாற்றிற் கையை நழுவ விட்டேனோ!
கலங்கியொளித்தோரைக் காட்டிக் கொடுத்தேனோ!
கற்பிழந்தவளைக் கலந்திருந்தேனோ!
காவல் கொண்டிருந்த கன்னியை அழித்தேனோ!
கணவன்வழி நிற்போரைக் கற்பழித்தேனோ!
கருப்பமழித்துக் களித்திருந்தேனோ!
குருவை வணங்கக் கூசி நின்றேனோ!
குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனோ!
கற்றவர் தம்மைக் கடுகடுத்தேனோ!
பெரியோர் பாட்டிற் பிழை சொன்னேனோ!
பக்ஷியைக் கூண்டில் பதைக்க அடைத்தேனோ!
கன்றுக்குப் பாலூட்டாது கட்டி வைத்தேனோ!

ஊன் சுவையுண்டு உடல் வளர்த்தேனோ!

கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ!

அன்புடையவர்க்குத் துன்பஞ் செய்தேனோ!

குடிக்கின்ற நீருள்ள குளத்தைத் தூர்த்தேனோ!

வெய்யிலுக் கொதுங்கும் விருக்ஷ மழித்தேனோ!

பகைகொண்டு அயலார் பயிரழித்தேனோ!

பொதுமண்டபத்தைப் போயிடித்தேனோ!

ஆலயக் கதவை அடைத்து வைத்தேனோ!

சிவனடியாரைச் சீறி வைதேனோ!

தவஞ் செய்வோரைத் தாழ்வு சொன்னேனோ!

சுத்த ஞானிகளைத் தூஷணஞ் செய்தேனோ!

தந்தை தாய் மொழியைத் தள்ளி நடந்தேனோ!

தெய்வ மிகழ்ந்து செருக்கடைந்தேனோ!

என்ன பாவம் செய்தேனோ!

நாம் செய்யக் கூடிய பாவங்களையெல்லாம் பட்டியல் போட்டு மனுநீதிச் சோழன் புலம்பியதாக இராமலிங்கர் கூறியுள்ளதைக் கூர்ந்து கவனித்தால் பாவம் செய்வோருக்குப் பழி வந்து சேரும் என்பது அவரது கருத்து என விளங்கும்.

## ஒற்றியா தில்லையா?

ஆரம்ப காலம் முதலே திருஒற்றியூர் திருத்தலத்தின் மீதும் தியாகேசர் மீதும் தீராத காதல் கொண்டிருந்தார் இராமலிங்கர். ஆயிரக்கணக்கான பாடல்கள் திரு ஒற்றியூர் மீது பாடியுள்ளார். சைவப் பெருமக்களுக்குக் கோயில் என்றால் சிதம்பரம் தான். இராமலிங்கருக்கும் சிதம்பரத்தின் மீது நல்ல பக்தி உண்டு. தனக்கு அருள் தரப்போவது ஒற்றியா அல்லது சிதம்பரமா என்று ஐயுறுகின்றார்.

**பெற்றி அறியாப் பிரமனுக்கும் பெரிய மாற்கும் பெற அறியார்**

**புற்றின் அரவார் கச்சை உடைப் புனிதர் என்னைப் புணரும் இடம்**

**தெற்றி மணிக்கால் விளங்கு தில்லைச் சிற்றம்பலமோ அன்றி இந்த**

**ஒற்றி நகரோ சோதிடம் பார்த்துரைப்பீர் புரி நூல் உத்தமரே**

## சிதம்பர புராணம் பதிப்பு

## சாற்றுக் கவி 1855

### இராமலிங்கரின் வயது 32

புராணத் திருமலை நாதர் என்பவர் சிதம்பர புராணம் என்னும் நூலை இயற்றினார். மதுரை ஆதீனம் சிதம்பர சுவாமிகள் அந்தச் சிதம்பர புராணத்தை 1855ம் ஆண்டில் பதிப்பித்தார்கள். மதுரை ஆதீனம் கேட்டுக்கொண்டபடி அவரது சிதம்பர புராணப் பதிப்பிற்கு இராமலிங்கர் சாற்றுக் கவி அளித்தார். அது வருமாறு

"சிதம்பர புராணம் இதம் பெறத் திருத்திய
சிதம்பர முனிவன் பதம் பரவியது
செம்மலர் செம்மலுந் திருத்தகு நிறத்தனும்
படைத்திடன் முன்னாப் பயனுறு பெருந்தொழி
னடைத்திற மூன்று நடாஅய்ப் பிறங்கிய
தத்தந் தலைமையிற்றாழ்வின்றியோங்குபு
சித்தந் திறமுறத் திருவருட் சார்த்திச்
சின்மய வடிவிற் சிதாகா யத்திடைத்
தன்மய வின்பத் தனி நடம் புரியுங்
காரண வெண் குணா கார வகண்ட
பூரண பராபர புனித சிற்பர
சிவநிலை யிஃதெனத் தெளிவித் தழியா
நவநிலை ஞாங்கர் நண்ணியவநுபவத்
தனிச் சிவஞானத் தன்னை மூவாண்டிற்
பனிப்பறச் சிவைமுலைப் பாலொடு மளாஅய்
ஊட்டிட வுண்டிவ் வுலகெலாந் தழைப்ப
வாட்டமி லமுத வாய்மலர் மலர்ந்து
தோடுடை யெனுமறைச் சொல்லமு தளித்து
நாடுடைத் தாதையை நயப்பித் தருளிப்
பற்பல சைவப் பதிதொறுமணுகிச்
சொற்பல பதிகச் சுருதிகள் புனைந்து
பொற்றிருத் தாளமும் புதுமணிச் சிவிகையுங்
கொற்றவர் புகழ்மணிக் குடையுஞ் சின்னமுஞ்
சுந்தரக் காளமுஞ் சந்தநற் றாரையுஞ்
சித்தரும் வெண்மணிப் பந்தருங் காசும்

பரம்பர னளிக்கப் பண்புடன் பெற்றோன்
வரம்பெறு மழவன் மகட்பிணி சவட்டி
மருகலில் வசியன்ய வல்விடந் தீர்த்து
வருநெறி பற்பல மகத்துவம் புரியாக்
கூடலிற் றென்னன் கூனுங் குற்றமும்

வாடலி லமணர் தம் மதமும் வாழ்க்கையும்
எளிதினின் முருக்கி யியல்புறு மாண்பனை
யளியுறு பெண்பனை யாகக் காட்டியொண்
மயிலையி லென்பினை மங்கை யாக்கியுள்
அயர்வறு திருமணத் தடைத்தவர் தமக்கெலாம்

பெறலருஞ் சோதிப் பேருரு வளித்திவ்
வையமும் வானமு மறையுஞ் சைவமும்
உய்ய வோங்கிய வொரு பெருங் குரவன்
ஞான சம்பந்த நாயக னருளால்
ஈன சம்பந்த மெல்லா மொழித்தோன்

**நரைவருமென்றெணி நல்லறி வாளர்**
**இரவுறு குழவி யிடத்தே துறந்தார்**
**என்னு நாலடிக்** கிலக்கியமானவன்
மன்னுமா தவரெலாம் வழுத்து மருந்தவன்
எல்லா வுயிர்க்கு மிதஞ்செயலன்றிப்

பொல்லாமை யொன்றும் புணராப் புண்ணியன்
வாய்மையு மாண்பும் வயம்பெறு மனனுந்
தூய்மையுந் தெளிவுஞ் சுற்றமாக் கொண்டோன்
கனவிலு முலகைக் கருதாக் கருத்தினன்
நனவினிற் சுழுத்தி நண்ணிய திறத்தோன்

முப்பொருட் டிறனு முழுதுணர் முனிவன்
எப்பொருட் கண்ணு மெய்ப்பொரு ளுணர்ந்தோன்
சிவமலா தொன்றுஞ் சிந்தைவைத் தறியான்
பவமிலா நெறியே பற்றிய நிலையினன்
காமம் வெகுளி மயக்கெனுங் கரிசினை

நாமங் கெடவுண் ணலிவித்த வித்தகன்
துறவரில் துறவன் சுத்த மெய்ஞ் ஞானி
அறவரி னறவ னன்பரி னன்பன்
திகழ்சிவ யோகி ஜீவன் முக்தன்
புகழிக ழொன்றும் பொருந்தாப் புனிதன்

தெய்வமா **மதுரைச் சிதம்பர தேவன்**
புண்ணிய சிதம்பர புராணந் தன்னை
நுண்ணிய வறிவா னோக்குபு திருத்தம்
ஏர்பெற வியற்றியாவரும் பயின்றுயப்
பாருறுமச்சிற் பதிப்பித் தருளிய

உதவியை நினைந்துள முவந்து முப்பொழுதும்
பதமரு ளவனருட் பதமிறைஞ் சுதுமே.

உலகெலாம் புகழுஞ் சிதம்பர வரலா
றுயிரெலா முணர்ந்து வீடடைவான்
அலகுறா மடற்க ணெழுதுறா வெழுத்தி
னமைவித்த வருட் பெருங் கடலே
இலகுசீர்க் கூடன் மடாலயத் தமர்ந்த
வெழிற்றிரு ஞானசம் பந்தத்
திலகசற் குருவி னருள்பெறும் பொருளே
**சிதம்பர மாதபோ நிதியே.** 1

சிதம்பர வரலா றுலகெலா முணரத்
திருத்தியெம் போன்றவர் தமக்கும்
இதம்பெறு மழியாப் பதம்பெற வளித்த
இன்பமே யென்றனி யன்பே
கதம்பெறு மதங்க ளதம்பெறப் புரிந்த
கவுணியற் கினியவுட் களிப்பே
சிதம்பெறு ஞானா முதந்தரு மதுரைச்
**சிதம்பர மாதபோ நிதியே.** 2

சத்திறையுயிர் தான் சத்தசத் தாகுந்
தடைமல மசத்திவற் றிடைநீ
இத்திறை யபர நோக்கலை பரநோக்
கெய்துதி யிறைநிறை வுறைவாய்
புத்தியீ தெனவென் புத்தியைத் திருத்தும்
போதசின் மயவொளி மணியே
சித்தியெண் வகையும் பெறத்தரு மதுரைச்
**சிதம்பர மாதபோ நிதியே.** 3

மறைநெறிப் பொதுவு மாகமச் சிறப்பும்
வகுப்பது சிவத்தொடு மருவிக்
குறைநிறை வகலக் கூடுதலிதனைக்
குறிப்பறக் குறியெனக் குறிக்கக்
கறைமிடற் றொளித்துச் சடைமுடியோடுங்
காட்சிதந் தருள்செழுங் கதிரே
சிறைமல மகற்றி யருடரு மதுரைச்
**சிதம்பர மாதபோ நிதியே.** 4

ஒன்றெனி லிரண்டாங் குறுமய லதனா
லொன்றெனக் குறித்தலு மொழித்தே
நின்றனை யெனினீ நின்றனை யறிதி
நெறியிதென் றுணர்த்திய நிறைவே
மன்றிலா னந்த வாரிவா யமுதம்
வாரியுண் டெழுஞ் செழு முகிலே
தென்றிரைக் கணிகொண் டோங்கிய மதுரைச்
**சிதம்பர மாதபோ நிதியே.** 5

## காலைச் சுற்றிய பாம்பு

ஒரு நாள் மாலை இராமலிங்கர் வியாசர்பாடியில் பிரசங்கம் செய்து முடித்து விட்டுச் சில அன்பர்களுடன் திரும்பி வந்து கொண்டிருந்தார். வழியில் ஒரு பாம்பு குறுக்கிட்டது. உடன் வந்த அனைவரும் அஞ்சி ஓடி விட்டனர். இராமலிங்கர் மட்டும் அப்படியே அசையாமல் நின்றார். அந்தப் பாம்பும் சிறிது நேரம் அவரது காலைச் சுற்றிக் கொண்டிருந்து விட்டு அகன்றது.

குறிப்பு : பாம்பு இராமலிங்கரின் காலைச் சுற்றிக் கொண்டபோது அவருடன் சென்றவர்களுள் மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியாரும் ஒருவர். இந்தச் சம்பவத்தை ச.மு. கந்தசாமி பிள்ளை அவர்களிடம் மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியார் அவர்களே நேரில் கூறியதாக ச.மு.க. தெரிவித்தார்.

வித்வான் கண்ணாடி சுப்பராய முதலியார் என்பவர் பல ஆண்டுகளாக வாத நோயால் அவதிப்பட்டு வந்தார். ஒரு நாள் இராமலிங்கரை அணுகித் தன் குறையை நீக்குமாறு வேண்டினார். இராமலிங்கரும் மனமிரங்கி அவருக்குத் திருநீறு அளித்து அவரைக் குணமாக்கினார். மகிழ்ந்த கண்ணாடி சுப்பராய முதலியார் இராமலிங்கர் மீது துதிப் பாடல் இயற்றிப் போற்றினார்.

**அகத்தியனோ வான்மீகியோ ஆதிசேடன் தானோ**
**மகத்துவமாம் சம்பந்தமாலோ - சகத்திலகுஞ்**
**சச்சிதானந்தத்தின் தண்ணளியோ என் என்பேன்**
**மெச்சுமதி ராமலிங்கவேள்**

## குடும்ப கோஷம்

சஞ்சலன் என்ற கதாநாயகன் தனது 16ம் வயதில் தன் நண்பனுடன் திரு ஒற்றியூர் திருவிழாக்காணச் சென்று தன் நண்பனைத் திருவிழாக் கூட்ட நெரிசலில் பிரிந்து நந்தி ஆசிரமம் சென்று சிதம்பர மாமுனிவரைத் தரிசித்தது என்பனவற்றை விளக்கிக் குடும்ப கோஷம் என்ற தலைப்பில் ஒரு நூல் செய்ய இராமலிங்கர் முனைந்திருக்கிறார். அந்நூலை 19 படலங்களாக எழுதத் திட்டமிட்டார். படலங்களின் பெயர்களையும் நிர்ணயம் செய்தார்.

1. குருதரிசனப்படலம்
2. முயற்சிப்படலம்
3. தந்தையாதியர்வருபடலம்
4. விடை கொடுத்தபடலம்
5. தந்தையாதியர் புலம்புறுபடலம்
6. நகர்காண்படலம்
7. விண்ணப்பபடலம்
8. குடும்ப கோஷ படலம்
9. தேச சஞ்சார படலம்
10. துயருறு படலம்
11. தூஷணப்படலம்
12. உலகியற்படலம்
13. பெண் சமூகப்படலம்
14. ஆண் சமூகப்படலம்
15. துறவுப்படலம்
16. சாதுசங்கப்படலம்
17. நிராசைப்படலம்
18. மகிழ்ச்சிப்படலம்
19. உபதேசப்படலம்

இந்தப் பத்தொன்பது படலங்களில் முதல் இரண்டு படலங்கள் மட்டுமே செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது படலத்தில் திரு ஒற்றியூரனைப் பாடியவர் தொடர்ந்து தியாகர் மீதே பாக்கள் இயற்றத் தலைப்பட்டு இக்குடும்ப கோஷத்தைத் தொடராது விட்டதுபோல் தோன்றுகின்றது.

குடும்பகோஷத்திற் கூறப்படும் வரலாறு வருமாறு :

தொடக்கத்தில் ஒற்றியூரும் அங்குள்ள நந்தியாச்சிரமமும் அதன் முனிவர் கூட்டமும், ஆச்சிரமத் தலைவராகிய சிவகுரு ஆங்கெழுந்தருளியிருக்கும் வண்ணமும் அழகாக வருணிக்கப்படுகின்றன. பின்னர் பதினாறு ஆண்டுச் சிறுவனொருவன் தன்னை ஒத்த சிறுவர் சிலரோடு திருவொற்றியூர்த் திருவிழாவுக்குச் செல்லுகிறான். சிறுவர்கள் திருவிழாக் காட்சிகளைக் கண்டுகளிக்கின்றனர். மற்ற சிறுவர்கள் பிரிந்துவிடச் சஞ்சலன் மட்டும் சிவகுருவைத் தரிசிக்கிறான். தன்னை ஆட்கொள்ள வேண்டுகிறான். சிவகுரு அவனது வரலாற்றை உசாவுகிறார். சஞ்சலன் கூறியது:- தன் ஊர் அருகிலுள்ள

சென்னை, குலம் சூத்திரர் குலம், தந்தையின் பெயர் ஆசையுடையான், தாயின் பெயர் வினைச்சி, என் பெயர் சஞ்சலன், நான் கடைசிப்பிள்ளை, எனக்கு முன்னே பிறந்தவர்கள் சுற்றத்தார் மிக உண்டு. தாய்ப்பால் ஏழாண்டு மட்டும் குடித்து நாக்குத் தடிப்பேறினேன். படிப்பேறவில்லை. எனக்கு முன்னே பிறந்தோர் தம் பெயர் எழுதக் கற்று தடிப்பேறினர். நான் அவர்முன் நொடிப்பேற நின்றேன். இவன் நாக்குத் தடித்தான், உடம்புந் தடித்தான், புத்தியில் உலக்கைக் கொழுந்தானான் என்று என் தந்தை என்னைக் கல்விச் சாலையினின்று அகற்றிக் கடைகளுக்குச் சென்று பண்டங்கள் சுமந்து வரப் பணித்தார். நான் பெற்றோர்க்கும் கடைப்பிள்ளையானேன். கல்வியிலும் கடைப்பிள்ளையானேன். தொழிலிலும் பண்டங்கள் வாங்கிச் சுமந்துவரும் கடைப்பிள்ளையானேன். நான் செல்வக் குடும்பத்திற் பிறந்தேன். பிறந்தநாள் தொட்டு இந்நாள் வரை வேறு குறையில்லை. கல்வி அறிவில்லாக் குறையொன்றே குறை. கல்வியில் ஆசையுள்ளேன். திருவொற்றியூரில் திருவிழாவென்று சொல்லக்கேட்டு ஏனைய சிறுவர்களோடு எய்தினேன். விழாக் காட்சிகளைக் கண்டேன். உடன் வந்தோர் பிரிந்தனர். முன் பிறப்பில் செய்த தவப்பயனால் தங்களைத் தரிசிக்கப் பெற்றேன். சிறியேனைக் காத்தருள வேண்டும் என்றான். அதனைக் கேட்ட சிவகுருவும் புன்னகை புரிந்து 'இப்போது உன் நகருக்கு ஏகித் தந்தை தாயிடம் கூறிச் சம்மதம் பெற்று வருக' என்றார். தந்தை தாய் சம்மதத்தை வேண்டிச் சென்னைநகர் சென்றேனேல் குகையிலுள்ள புலியப் போய்ப் பார்த்து வரப்போன வகையாய் முடியும் எனச் சஞ்சலன் புகன்றான். இங்குள்ளோர் பிச்சைவாங்கி உண்பார். நீயும் அவ்வாறுண்பாயானால் இங்கிரு எனச் சிவகுரு அருளினார். அங்ஙனமே இசைந்து சஞ்சலன் ஆச்சிரமத்திலேயே இருந்தான். ஒற்றிப் பெருமானை முப்போதும் வழிபட்டுக் கோயிற் பணியாற்றித் தம் மாணவர்களிடம் கலைபயிலக் குருநாதர் பணித்தருளினார். ஆச்சிரமத்தின் தலைமாணாக்கர் சிதம்பர முனிவர். அவரிடம் சஞ்சலன் நாள்தோறும் ஒரு நாழிகை பயின்றுமற்றைப் பொழுதெல்லாம் சிவப்பணியே செய்தான்.

திருக்கூட்டத் தலைவர் சிதம்பர முனிவர் சஞ்சலனின் உள்ளத்தை அறிந்து ஏற்றவாறு கற்பித்தார். ஒரு நாழிகைப்போது கலைபயிலுதல், ஐந்து நாழிகை உறக்கம், மற்றைப் பொழுதெல்லாம் சிவப்பணியும் குருபணியும் இயற்றி இருக்கும் நாளில் - இவ்வளவோடு முயற்சிப் படலம் முடிகிறது. பின் பதினேழு படலங்களும் செய்யப் பெறவில்லை. பெயர்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன. படலத்தின் பெயர்களே அருமையாயுள்ளன. 19.4.1866-இல் அடிகள் வடலூரிலிருந்து சென்னைக்கு இறுக்கம் இரத்தின முதலியார்க்கு எழுதிய திருமுகத்தில் இக்குடும்ப கோடம் முற்றுப பெறாதிருத்தலைக் குறிப்பிடு கின்றனர். ஆதலின் இது அக்காலத்திற்கு முன்னரே செய்யத் தொடங்க பெற்றதென்பது வெள்ளிடைமலை. சென்னையிலிருந்தபோதே இது எழுதப்பெற்ற தென்பது கிடைத்துள்ள ஆதாரங்களால் நன்கறியக்கிடக்கிறது.

சஞ்சலன், ஆசையுடையான், வினைச்சி என்பன புனை பெயர்கள். நந்தியாச்சிரமமும் நந்தியோடையும் ஒற்றியூரில் உள்ளவை. குடும்பகோஷம் கற்பனை நிகழ்ச்சியா உண்மை நிகழ்ச்சியா எனச் சொல்லக்கூடவில்லை. முற்றிலும் கற்பனையாக இருத்தற்கில்லை. ஓர் உண்மை நிகழ்ச்சியையே-வரலாற்றையே-கற்பனை நயத்துடன் அடிகள் கூறுகின்றார்கள் எனக்கொள்ள

வேண்டியுள்ளது. சஞ்சலன் வரலாறு அடிகள் வரலாற்றோடு பெரிதும் பொருந்து கிறது. சென்னை சமரச சன்மார்க்க சங்கத்தின் திருவருட்பா பதிப்பில் குடும்ப கோஉத்தின் கீழ் இது அடிகளது வரலாற்றைக் குறிக்காது என்றொரு அடிக்குறிப்பு எழுதப்பட்டுள்ளது. ஓற்றியூர் வழிபாட்டுக் காலத்தில் இதனை அடிகள் செய்திருக்கிறார்கள். தன்வரலாற்றையும் அனுபவத்தையும் வேறு பெயர்களை வைத்து ஒரு பெருநூலாகப் பலபடங்களில் பாடும் முயற்சியில் அடிகள் இளமையில் தலைப்பட்டிருக்கக்கூடுமோ என ஐயுற வேண்டியளது. அடிகள் நூலை முடிக்காது நிறுத்திவிட்டமை இவ்வையத்தை மிகுவிக்கிறது. இந்நூல் முடிக்கப்பெற்றிருப்பின் ஆயிரம் செய்யுட்குமேல் ஆகும். பல பொருள்கள் சாதனமுறைகள் அனுபவங்கள் வெளிப்பட்டிருக்கும். முற்றுப்பெறாது போனமை நம் தவம் முற்றுப் பெறாமையே.

## திருவலிதாயம்

தற்போது பாடி என வழங்கும் திருவலிதாயம் சிவன் கோயிலுக்கு இராமலிங்கர் ஒருமுறை சென்றிருந்தபோது அந்தச் சிவலிங்கத்திற்கு கிழிந்து போன கந்தல் துணி ஒன்று சாத்தப்பட்டிருந்தது. இதைக் கண்ட இராமலிங்கர் மனம் பொறாது கந்தை சாத்தப்பட்டிருந்ததைப் பத்து பாக்களில் குறிப்பிட்டுள்ளார். படிப்போர் நெஞ்சமே கரையக்கூடிய அளவில் அப்பாட்டுக்கள் அமைந்துள்ளன.

கோயிலுக்குச் சென்று வழிபடுவோர் சாமி சிலைக்குச் சாத்தியிருக்கும் துணியைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். அதைக் கண்டு கொள்வதுகூட இல்லை. ஆனால் இராமலிங்கர் கண்களுக்கோ அந்தக் கிழிந்த துணியைப் பூசகர் உடுத்தியதாகத் தோன்றவில்லை. இறைவனே உடுத்துக் கொண்டிருப்பதாகக் கண்டார். அவர் மனதில் கருணை வழிந்தது.

இறைவா நீ உடுத்திக் கொண்ட கந்தையை நீக்கித் துணிந்து வேறொன்றை மாற்றுவார் இல்லையா, நீயே கந்தலைச் சுற்றிக் கொண்டிருந்தால் எனக்கு என்ன தரப் போகிறாய், கந்தையைச் சுற்றிக் கொண்டு. ஐயோ, பரதேசி போல் இருந்தாயே. நீ பழங்கந்தையை உடுத்திக் கொண்டுள்ளாயே நீ யாருமற்ற அநாதையா, இந்தக் கந்தையை நீக்கித் துணிந்து ஒன்று உடுத்துவார் யாரும் இல்லையா என்று மனம் உருகிப் உருகிப் பாடுவார். நீ கந்தையைச் சுற்றிக் கொண்டுள்ளதைக் காண என் நெஞ்சம் கரைகின்றதே என்று உள்ளம் உருகி உருகிப் பாடுவார்.

## திருமுல்லைவாயில்

திருவலிதாயம் சென்று வழிபட்ட இராமலிங்கர் திருமுல்லைவாயில் கோயிலுக்கும் சென்றிருக்கிறார். இத்தலத்தின் மீது இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார்.

## திரு எவ்வுளூர்

தற்போது திருவள்ளூர் என வழங்கப்படும் ஊரிலுள்ள வீரராகவப் பெருமாளைப் போற்றி ஐந்து அருட்பாக்களை இராமலிங்கர் இயற்றியுள்ளார்.

## சின்மய தீபிகை

இராமலிங்கரின் வயது 34

சின்மய தீபிகை என்ற ஞான நூலை இயற்றியவர் விருத்தாசலம் குமார தேவர் ஆதீனத்தைச் சார்ந்த முத்தையா சுவாமிகள் ஆவர். சின்மய தீபிகை 114 பாடல்களையும் 5 பாயுரச் செய்யுட்களையும் கொண்டது. இந்த ஞான நூல் மக்கட்கு நன்கு பயன்பட வேண்டும் என்பதற்காக 1857ம் ஆண்டு கார்த்திகைத் திங்களில் (நவம்பர்) இராமலிங்கர் பதிப்பித்தார். அதன் முகப்பேடு :

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

**சின்மய தீபிகை**

சிதம்பரம்

**இராமலிங்க பிள்ளை அவர்களால்**

பார்வையிடப்பட்டு

மண்ணிப்பாக்கம்

**சபாபதி முதலியார்**

பாக்குப்பேட்டை

**மதுரை முதலியார்**

இவ்விருவர்களால்

முத்தமிழ் விளக்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது

பிங்கள வருஷம் கார்த்திகை மாதம்

முதற் பதிப்பு

# சென்னையா வேண்டாம்

இராமலிங்கரின் வயது 35

இராமலிங்கர் பல நாட்கள் கோயிலிலேயே தங்கிவிடுவதும் சில நாட்களில் வீட்டிற்கு வருவதுமாக இருந்தார். அவருடைய நெஞ்சிலே இரக்கம் வளர்ந்து கொண்டே வந்தது. தன்னால் யாருடைய மனமும் புண்படக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். இதற்கு உதாரணமாக ஒன்றைக் கூறலாம். அருந்தலிலே சுக உணாக் கொள்வதிலே அருவருப்பு கொண்டிருந்த இராமலிங்கர் தன்னைப் பெற்றெடுத்த தாயாரின் முகம் வாடி விடுமே என்று அஞ்சிச் சில வேளைகளில் சற்று அதிகமாகவும் உணவு கொண்டிருக்கிறார். அவரே இந் நிகழ்ச்சியைப் "பெற்ற தாய் முகவாட்டம் பார்ப்பதற்கஞ்சி பேருணவுண்டனன் என்று ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளார். மேலும் உற்றவர் நேயர் அன்புடையோர் அவர்கள் வாட்டம் அடையக் கூடாதே எனவும் சில நாள் உணவு கொண்டார். இவையன்றி நல்ல உணவு கொள்ள என் மனம் நடுங்கியதே என இறைவனிடமே விண்ணப்பிக்கின்றார்.

இதற்கு ஆதாரமான அருட்பா --

**உற்ற தாரணியில் எனக்கு உலக உணர்ச்சி**
**உற்ற நாள் முதல் ஒரு சில நாள்**
**பெற்ற தாய் முகவாட்டம் பார்ப்பதற்கஞ்சிப்**
**பேருணவுண்டனன் சில நாள்**
**உற்றவர் நேயர் அன்புளர் வாட்டம்**
**உறுவதற்கஞ்சினேன் உண்டேன்**
**மற்றிவையலால் சுக உணாக்கொள மனம்**
**நடுங்கியது நீ அறிவாய்** (3440)

குளத்தின் நீரிலேயே தாமரை இருந்தாலும் தன்னிடம் நீர் ஒட்டாது இருப்பதுபோல் திருமணம் முடிந்து எட்டு ஆண்டுகள் தன் தாய் தமையன் முதலானாரோடு இராமலிங்கர் இருந்தாலும் அவரது இறை பக்தியும் கருணை உணர்வும் ஒழுக்கமும் சாதனையும் வளர்ந்து கொண்டுதான் இருந்தன.

செல்வம் மிகுந்த சென்னையின் ஆடம்பர வாழ்க்கை இராமலிங்கருக்குப் பிடிக்கவில்லை. பல நேரங்களில் சென்னையை விட்டுப் போய் கிராமப்புறங்களிலே தங்கி விடுவார் என்பதை முன்னமே கண்டிருக்கிறோம். சென்னை ஆன்மீக வளர்ச்சிக்குத் துணை செய்யாது என்றும் வேடிக்கை வினோதங்களில் மனதைத் திருப்பக் கூடியது என்றும் கருதினார். இந் நிலையில் இயற்கை அவருக்குத் துணை செய்வது போல அவரது தாயார் சின்னம்மையார் காலமானார். அண்ணன் பரசுராமப் பிள்ளையும் நோய்வாய்ப்பட்டார். பரசுராமப் பிள்ளை சிதம்பரம் சென்று அங்கேயே தங்கித் தமது இறுதி நாட்களைக் கழிக்க விரும்பினார். இராமலிங்கர் தம் தமையனாரை அழைத்துக் கொண்டு காஞ்சிபுரம் புதுச்சேரி மார்க்கமாகச் சிதம்பரம் சென்றடைந்தார்.

சென்னையை விட்டு வெளியேறிய சமயம் இராமலிங்கர் வெள்ளைத் துணியால் முக்காடிட்டு உடம்பை மறைத்துக் கொண்டார். இராமலிங்கர் தாயாரின் மறைவிற்குப் பின்னர்தான் முக்காடிட்டுக் கொண்டார் என்பதற்கு ஆதாரம்.

**அருளுருக் கொண்ட ஒரு வடிவு சிவயோகி வடிவான நின்னரிய முடிமேல் அங்கே வளர்ந்த சிகை மூன்று பிரிவுள்ளே நின்னரியதாய் சின்னம்மைதான் அருள் சிவனடிச் சேர்ந்த பின்னர்**

**ஒரு சிகை கொண்டு அரிய வெண்துகில் மேற்கொளீஈ அருட்பாதம் ஏற்கும் நன்கிருபாதரட்சைதனை அங்ஙனமகற்றி ஆளும்**

**இருளறு வளாகாமது சித்தியெனும் ஓரிடத்து கற்பூர தீபம் ஏற்றி ஆராதித்து ஆனந்த மேலிட்டு இனிய கூத்தாடி நின்று**

**பருவுடல் மறைத்து வெளியான அரசே வருக வருக நல்லரிய சித்திவண்மையருள் திருவருட்பிரகாச வள்ளலே வருக என் மணி வருக வருகவே**

செல்வம் மிகுந்த சென்னையில் இருந்தால் தன் உள்ளம் சிறுகுறுமோ என அஞ்சிப் பலகால் சென்னையை விட்டு நீங்கிச் சுற்றுப் புறங்களிலுள்ள கிராமங்களிலே தங்கியிருக்கிறார்.

**தேட்டிலே மிகுந்த சென்னையில் இருந்தால்**
**சிறுகுறும் என்றுளம் பயந்தே**
**நாட்டிலே சிறிய ஊர்ப்புறங்களிலே நண்ணினேன்**
**ஊர்ப் புறம் அடுத்த**
**காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்க்**
**களத்திலே திரிந்துற்ற இளைப்பை**
**ஏட்டிலே எழுத முடியுமோ இவைகள் எந்தை**
**நீ அறிந்தது தானே** (3467)

அடிகளார் சென்னை வாழ்வை நீப்பாராகி, ஒரு நாள் சென்னையை விட்டுப் புறப்பட்டுச் சிதம்பர சுவாமிகள், சடைச் சுவாமிகள், வீராசாமி நாயக்கர், தொழுவூர் வேலாயுத முதலியார் முதலிய அன்பர்களுடன் வண்டிப் பாதையாகப் புறப்பட்டு காஞ்சிபுரம் பாண்டி சென்றார். புதுவையில் விஸ்வநாதய்யர் முதலிய அன்பர்கள் வேண்டுதலினால் சில நாள் தங்கியிருந்து பின்னர் புறப்பட்டு சிதம்பரம், சீர்காழி, வைத்தீஸ்வரன் கோயில் ஆகிய தலங்கட்குச் சென்று சிதம்பரம் வந்தடைந்தார்

.

# கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள்

இராமலிங்கர் சிதம்பரத்தில் தங்கியிருந்தபோது கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் என்பவரும் வந்திருந்தார். சுந்தர சுவாமிகள் நன்கு கற்றவர். நல்ல புலமைமிக்கவர். சிறந்த சிவபக்தர். அவரைக் காண விரும்பிய இராமலிங்கர் எப்போது வந்து அவரைச் சந்திக்கலாம் என்றுகேட்டு வரும்படி ஒருவரை சுந்தரசுவாமிகளிடம் அனுப்பினார். அவர் சென்று கேட்டவுடன் இராமலிங்கர் என்னை வந்துசந்திப்பதா என்று பதறிய சுந்தர சுவாமிகள் நான் வந்து அவரைச் சந்திக்கிறேன் என்று உடனே வந்து இராமலிங்கரைச் சந்தித்தார். இருவரும் ஏதோ ஒரு பொருள் பற்றிப் பேசத் தொடங்கி அது விவாதமாக மாறி மூன்று நாட்கள் விவாதம் நடந்தது. முடிவில் இராமலிங்கருக்கே வெற்றி. சுந்தர சுவாமிகள் மனம் உடைந்து போனார். உடனே இராமலிங்கர் அவரது வருத்தம் காணச்சகியாதவராய் அவர் எந்தப் பொருளில் தோற்றுப் போனாரோ அதனைத் தாம் எடுத்துக் கொண்டு வாதாடினார்கள். அப்போதும் இராமலிங்கரே வென்றார். தாங்கள் இவ்வாறு வாதிட்டிருந்தால் வென்றிருக்கலாம் என்றார். சுந்தர சாமிகள் மனம் சமாதானம் அடைந்தது. இருவருடைய மூன்று நாட்கள் வாதத்தையும் பல அன்பர்கள் உடன் இருந்து கேட்டு மகிழ்ந்தனர். வாதம், நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சுந்தர சுவாமிகள் இராமலிங்கருக்கு நேர் எதிரில் உட்காராமல் சற்று தள்ளி ஒரு பக்கமாக அமர்ந்தே வாதம் செய்ததைக் கண்ட அங்கிருந்தோர் சுந்தர சுவாமிகளை ஏன் நேர் எதிரில் உட்கார்ந்து வாதம் செய்யாமல் ஓர் ஓரமாக அமர்ந்திருந்தீர்கள் என்று வினவினார்.

இராமலிங்கர் எதிரில் அமர்ந்து வாதம் செய்தால் நமது பலத்தை அவர் இழுத்து விடுவார். அதனால் தான் நேர் எதிரில் உட்காரவில்லை என்று சுந்தர சுவாமிகள் விளக்கம் அளித்தார்.

பின் முடிவில் சுந்தர சுவாமிகள் இராமலிங்கரிடம் திருநீறு கேட்டார். இராமலிங்கர் திருநீறு அளிக்கவில்லை. சுந்தர சுவாமிகள் தனது மடியிலிருந்து சிறிதளவு திருநீறு எடுத்து இராமலிங்கரின் நெற்றியில் இட்டு மீதத்தை அவர் அணிந்து கொண்டார்.

இராமலிங்கர் கோடகநல்லூர் சுந்தர சுவாமிகட்கு ஏன் திருநீறு அளிக்கவில்லை என அங்கிருந்தவர்கட்கும் மற்றவர்க்கும் ஓர் ஐயம் தோன்றியது. இராமலிங்கர் வெள்ளை வேட்டி அணிபவர். சுந்தர சுவாமிகள் காவி அணிந்த துறவி. வெள்ளை வேட்டிக்காரர் காவி அணிந்தோர்க்குத் திருநீறு தருதல் கூடாது என்பது உலக நியதி. அதனால் தான் இராமலிங்கர் கோடகநல்லூர் சுந்தர சுவாமிகட்குத் திருநீறு அளிக்கவில்லை.

## கருங்குழிவாசம்

இருவருடைய வாதத்தையும் கண்டு களித்த அன்பர்களில் வேங்கட ரெட்டியார் என்பவரும் ஒருவர். அவர் தன் வீட்டில் வந்து தங்கும்படி இராமலிங்கரை அழைத்தார். அவரின் வேண்டுதலுக்கு இசைந்த இராமலிங்கர் கருங்குழி என்ற கிராமத்திற்கு வந்து வேங்கட ரெட்டியாரின் இல்லத்தில் தங்கினார்.

இராமலிங்கருக்குத் தனியறை ஒன்று ஒதுக்கித்தரப்பட்டது. அவருக்கு வேண்டிய பணிவிடைகளை வெங்கட ரெட்டியாரின் மனைவி முத்தியாலு அம்மாள் கவனித்துக் கொண்டார். இராமலிங்கர் கருங்குழியில் தங்கியிருந்தபோதும் அடிக்கடி அருகில் உள்ள சிற்றூர்களுக்குச் சென்று தங்குவது வழக்கம். பாக்களைப் பகலில் மட்டுமின்றி இரவிலும் எழுதுவார். அகல்விளக்கு ஒன்றை வைத்து அதற்கு வேண்டிய எண்ணை முதலியவற்றை வேங்கட ரெட்டியார் மனைவி முத்தியாலம்மாள் எடுத்து வைத்து விடுவார்.

இராமலிங்கர் வீட்டை விட்டு வெளியே வந்தார் என்பது உண்மைதான். சுற்றத்தாரை அவர் வெறுத்தார் என்பது இல்லை. ரத்ன முதலியார் சமீபத்தில் தான் திருமணம் செய்து கொண்டார். 31.5.1858 அன்று ஸ்ரீரத்ன முதலியாருக்கு இராமலிங்கர் ஒரு கடிதம் எழுதினார். அதன் ஒரு பகுதி வருமாறு.

"சிரஞ்சீவி குமாரசாமி அவ்விடம் வருகிறபடியால் அவனுக்குப் படிப்பும் முயற்சியும் ஊதியமும் உண்டாகின்ற வகை எவ்வகை - அவ்வகை ஆராய்ந்து கூட்ட வேண்டும். பழமை பாராட்டலும், கண்ணோட்டம் செய்தலும் சுற்றம் தழுவலும் அவசியம் சமுசாரிக்கு வேண்டும். நீ இப்போது முன் மாப்பிள்ளை அல்ல - புது மாப்பிள்ளை - என்போல்வார் மீது ஞாபகமிராது. ஆதலால் ஞாபகப்படுத்தினேன்."

சிரஞ்சீவி குமாரசாமிப் பிள்ளைக்குப் படிப்பிக்க வேண்டும் என்று எழுதிய இராமலிங்கர் ரத்னமுதலியாரைக் கிண்டல் செய்து எழுதுமளவிற்கு அவரோடு நெருங்கிய தொடர்புடையவராக இருந்தார். ரத்னமுதலியார் மனைவி அவரை மணந்த இரண்டு ஆண்டுகட்குள் இறந்து விட்டதால் ரத்ன முதலியார் மறுமணம் செய்து கொள்ள இராமலிங்கரிடம் அனுமதி கோரினார். 27.5.1860 அன்று இரத்ன முதலியார்க்கு எழுதிய கடிதத்தில் பரமசிவத்தினிடத்தே மாறாது மனதை வைத்துக் கொண்டு புறத்தே ஆயிரம் பெண்களை மணந்து கொள்ளலாம் என்றும் எந்தக் காலத்தில் - எந்த இடத்தில் - எந்த விதமாக - எந்த மட்டில் - எதை அனுபவிக்க வேண்டுமோ அதை - அந்தக் காலம் - அந்த இடம் - அந்த விதம் - அந்த மட்டு - பொருந்தப் பொசிப்பிக்கின்றது திருவருட் சக்தியாய் இருந்தால் நமக்கென்ன சுதந்தரம் இருக்கிறது. எல்லாம் திருவருட்சக்தி காரியம் என்று சிந்தித்திருக்க வேண்டும். உண்மை இது என்று எழுதியுள்ளார்.

இராமலிங்கர் தனக்கு வேண்டிய லாங்கிளாத்து பீசு துணியை வாங்கி அனுப்பும்படி ரத்ன முதலியாருக்குத்தான் கடிதம் எழுதுவார். 1860ம் ஆண்டு ஜூலை மாதம் இரத்ன முதலியார்க்கு லாங்கிளாத்து பீசு ஒன்று வாங்கி அனுப்பும்படி இராமலிங்கர் கடிதம் எழுதியதும் அவ்வாறே அவர் வாங்கி அனுப்பியதும் கடிதங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

## வேதநாயகம் பிள்ளை நீதி நூலுக்குச் சாற்றுக்கவி அளித்தது

**இராமலிங்கரின் வயது 37**

மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை 11.10.1826ல் பிறந்து 21.7.1889ல் மறைந்தார். அவர் எழுதிய நீதி நூலுக்கு வள்ளலார் ஒரு சாற்றுக் கவி அளித்தார். அது இதுவே.

சாற்றுக் கவி :

**வளங்கொள் குளத்தூர் அமர்ந்த வேதநா**
**யகன் அருளால் வயங்க முன்னாள்**
**உளங்கொள் மனு உரைத்தனன் ஓர் நீதிநூல்**
**அந்நூற்பின் உறுநூலாகத்**
**துளங்கிடும் அவ்வூர் உறை அத்தோன்றல் ஓர்**
**நீதி நூல் சொன்னான் இந்நாள்**
**விளங்கும் இந்நூல் முன்னர் மற்றை**
**நூல் எல்லாம் கிழிபடத்தின் வெண்ணூலன்றே.**

நீதி நூலின் முதற்பதிப்பு 1859ல் தை மாதம் வெளியாயிற்று. நானூறு பாடல்களைக் கொண்ட அதனுடன் மேலும் இருநூறு பாடல்களைச் சேர்த்து 1860ல் இரண்டாம் பதிப்பு வெளியாயிற்று. அடிகளின் இச்சாற்றுக்கவி "சென்ன பட்டணம் வித்வான் மகாராஜராஜஸ்ரீ இராமலிங்க பிள்ளை" அவர்கள் இயற்றியது என அச்சிடப்பட்டது.

## பாலும் நீரும் போல்

**இராமலிங்கரின் வயது 38**

7.5.1861 செவ்வாயன்று இரத்ன முதலியார்க்கு நம் பெருமானார் ஒரு கடிதம் எழுதியுள்ளார். அது பின் வருமாறு :

"பகவத் பக்தியில் சிறந்தவராகிய வரதாச்சார்ய சுவாமிகள் திருவயிந்திரபுரத்திற்கு வந்ததாகக் கேள்விப் பட்டேன். அந்தச் சுவாமிகளைச் சென்னைப் பட்டணத்தில் தாம் கண்டால் ஒன்று சொல்ல வேண்டுவது. அது என்னவெனில் பாலும் நீரும் போலப் பார்ப்பன சிநேகம் என்று நான் தெரிவித்ததாகத் தெரிவிக்க வேண்டும்."

பாலும் நீரும் போலப் பார்ப்பன சிநேகம் என்ற வாசகத்தைப் பலர் பலப்பல விதமாகப் பொருள் கூறுகின்றார்கள். இதனைச் சற்று ஆய்வு செய்வோம்.

இரத்ன முதலியார்க்குக் கடிதம் எழுதி அந்தச் சுவாமிகளைக் கண்டால் இப்படித் தெரிவிக்க வேண்டும் என்று தவறான பொருள் தரும் வார்த்தையை அதுவும் நம் பெருமானார் கூறுவாரா - பக்தியிற் சிறந்த வரதாச்சார்ய சுவாமிகளைச் சொல்லியிருப்பாரா? பின் இந்த வாசகத்திற்கு என்ன தான் விளக்கம்.

பாலோடு நீரைச் சேர்த்தால் நீர் பாலில் நன்றாகக் கலந்து விடும். பால்தான் வெளியே தெரியுமே தவிர நீர் தெரியாது. அப்படி இணைந்துவிடும். பாலைக் காய்ச்சினால் முதலில் நீர் ஆவியாகி மேலேறும். உடனே அதனைப் பிடிக்கும் ஆவலில் பாலும் பொங்கி எழும். சிறிது நீர் விட்டால் பொங்கிய பால் நண்பனைக் கலந்து கொண்ட மகிழ்ச்சியில் அடங்கிவிடும். இதுவே பாலும் நீரும்போல இப்படி இணைந்து இருப்பதை நம் பெருமானார் திருத்தணி முருகனிடம் வேண்டுகிறார்.

**"நீயும் நானுமோர் பாலும் நீருமாய்**
**நிற்க வேண்டினேன் நீதியாகுமோ"**

என்றொரு பாடலிலும்

**பாலின் நீரென நின்னடிக்கணே பற்றுவாய்கொலோ**

என்று நம் பெருமானார் இன்னொரு பாடலிலும் வேண்டுகிறார். பாலில் நீர் எப்படிக் கலந்து விடுமோ அப்படி பிராமண சினேகம் கலந்து கொள்ளும் என்ற நல்ல கருத்தைத் தான் நம் பெருமானார் வெளிப்படுத்துகின்றார். இதற்கு உதாரணமாக நம் பெருமானாருக்குக் குடியாத்தம் தாசில்தாராக வேலை பார்த்து வந்த நரசிம்மாச்சாரியார் என்ற ஐயங்கார் எழுதிய கடிதத்தைப் பார்த்தால் எந்த அளவு இருவருக்கும் உறவு இருந்ததென்று தெரிந்து கொள்ளலாம்.

26.12.1866

தாசில்தார் நரசிம்மாச்சாரியார் எழுதியது

ஸ்ரீமத் சம்யத்த சத்குணபதி பூறன்னராய் கியானானுஷ்டான சம்பன்னராய் ராஜயோக சாம்பறாச்சி சிங்காசனா சீனராய் மஉறான்களாயியெழிந்தருளி இருக்கிற மகாராஜராஜஸ்ரீ இராமலிங்க பிள்ளை அவர்களுடைய சன்னிதானத்துக்கு,

கா. நரசிம்மாசாரியார் யெழிதிய விக்கியாபன பத்திரிகை. இவ்விடம் குடியாத்தத்தில் குசலம். தங்களுடைய ஆத்துமானுபவானந்தாதி செயங்களுக்கு யெழிதி அனுப்பி வைக்கக் கோருகிறேன். இப்பவும்--

தாங்கள் சிற்காலத்துக்கு விசேஉஷானுக்கிரஉற பூற்வகமாய்யெழுதி அனுப்பி வைத்த ஆக்கியா பத்திரிகை சேர்ந்து மிகவும் ஆனந்த மடையலானேன். தங்களுடைய ஆக்கியா பிரகாரம் சறிகை வெள்ளை தலை உருமாலை பியாங்கி துவாறா இத்துடன் அனுப்பி வைக்கலாச்சுது. சேர்ந்த சங்கதி தெரியப்படுத்தக் கோருகிறேன். இந்த உருமாலையினுடைய கிரயம் யெனக்கு சேற்குறதாக யெழிதிநீர்கள்.

தங்களுடைய ஆக்கியா பிரகாரம் நடப்பி வைக்க வேண்டியதேயென் வேலையே தவிர அதனுடைய கிரயம் வாங்குகிற வேலையன்னதல்ல. மகான்கள் விஷயத்திலே கரணத்திறிய பூற்வகமாய் நடப்பி வைத்த கைங்கரியங்களை குறிச்சு தகுந்த விசேஷம் சுவாமியே குடுத்துக் கொண்டிருக்கிற விஷயத்தில் அப்பேற் கொத்த கிரயத்தை விட்டுவிட்டு அல்ப்பமான திரவிய ரூப கிரயத்தை அபேக்ஷிக்குறது யெங்கையாவதுண்டோ. தாங்களே யோசிக்க வேண்டியது. கோவிந்தா சாரியரோடே சில சங்கதிகள் நான் சொன்னது தங்களுடைய தரிசனம் அப்பிடியாவது நேரிடுமென்னமோவென்று தாத்பறியத்துனாலேயே தவிர வேறில்லை. இவ்விடம் தாங்கள் யேளியெனக்கு தரிசனம் குடுக்க வேணுமென்று அபிசந்தி தங்களுக்கு இருந்தாலும் அதுக்கு பிறதிபாதகமாயி இருக்கப்பட்ட மஉறா பாபங்களுக்கு ஆகறமான யென்னை தாங்கள் ரொம்பவும் ஸ்தோத்திரம் பண்ணதைக் குறித்து நான் மிகவும் அஞ்சிகுறேன். மஸ்தான் அவர்களுடன் தாங்கள் இவிடம் யேஉறதாய் யெழிதினீர்கள். அப்பிடி யேஉறது தங்கத்துக்குப் பறிமஉ முண்டாப் போல சந்தோஉிக்கலாகுறது. தில்ல கோவிந்தராஜ சுவாமியாருடைய சன்னிதிக்கு வருஉஷா வருஉஷமும் கோஉஷ்ட்டி சேர்க்க தாங்கள் நினைச்சால் ஒரு அப்பியந்தரமும் இருக்க மாட்டாது. இஷ்டம் சம்பூற்ண மாகாமல் போனதைக் குறித்து வியாக்குலம் காண வைத்தீர்கள். "நாலோஉறி துரதிக் கிரமணா" என்கிற சீதா பிறாட்டி வசனப் பிரகாரம் எல்லாம் காலத்துக்கு உள்பட்டிருக்கிறபடியால் அந்தந்த காலத்து குணங்கள் - கேத மோதங்கள் - தப்புகிறதில்லை. அதுக்கு சிந்திச்சி பிறயோஜனமும் இல்லையென்று சர்வக்கியற்களாகிய தங்களுக்கு கியாபகப் படுத்துகிறேன். மகாராஜஸ்ரீ மஸ்தான் அவர்களுக்கு கோவிந்தாசாரியாற் அவர்களிடத்துக்கு ஒரு கடிதமும் அதுக்கு முன் தபால் மூலமாய் ஒரு கடிதமும் யெழிதியிருக்கிறேன். அதற்கு வெகு நாள் ஆயும் ஜவாபு வரவில்லை. அதுவும் யென்னுடைய தோஉஷமாகவே நினைக்குறேன். "கதா திறக்ஷியா மஉேறராமம்ஜெகதச் சோகனாசனம்" யென்கிறபடி தங்களுடைய தரிசனத்துக்கு விசேஉஷமாய் அபேக்ஷித்துயிருக்கிறேன். இவ்வளவே சமாசாரம்.

நரசிம்உறாசார்ய

க்ஷேமம் - இவை

இந்தக் கடிதம் சிதம்பரத்தில் ஊ ஸ்ரீமான் தில்ல கோவிந்தராஜ சுவாமி சன்னிதி தர்மகர்த்தாராகிய கோமாண்டூர் கிருஉஷ்ணமாசாரியார் அவர்கள் மேல் விலாசம் பார்த்துக் கொண்டு மகாராஜராஜஸ்ரீ பிள்ளையவர்கள் இராமலிங்க பிள்ளையவர்கள் சன்னிதானத்தில் குடுக்கத் தகுந்தது. குடியாத்தத்திலிருந்து.

கருங்குழியில் பெருமானார் தங்கியிருந்த வீட்டு எஜமானர் திருவேங்கட ரெட்டியார் அவர்கள் 3.9.1861 செவ்வாயன்று காலமானார்.

1862 பிப்ரவரி மாதத்தில் அதாவது அவரது 39ம் வயதில் நம்பெருமானார் கூடலூரைச் சார்ந்த நெல்லிக்குப்பம் கரும்பாலை ஆடும் தோட்டத்தில் தனித்து தங்கியிருந்தார். அவர் இருந்த இடத்தை விசாரித்து அறிந்து ஓர் அம்மாள் அவரிடம் போய் தன் வறுமையை முறையிட்டார்கள். நம் பெருமானாரும் இந்தக் கடிதம் கொண்டு வரும் அம்மாளுக்குத் தாங்கள் கடன் வாங்குகிற இடத்தில் இரண்டு வராகன் கடன் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று இரத்ன

முதலியாருக்கு ஒரு கடிதம் வரைந்து அந்த அம்மாளிடமே கொடுத்தனுப்பினார். இரத்ன முதலியாரும் எம்பெருமானாரின் கட்டளைப்படி அந்த அம்மாளுக்குப் பணம் கொடுத்தார். கொடுத்த பிறகு அந்தச் செய்தியை கட்டளை இட்டபடி உடனே கொடுத்தாயிற்று எனும் பொருள்படும் பின் வரும் ஆங்கிலக் குறிப்பை அந்தக் கடிதத்திலேயே எழுதிவிட்டார் (Paid immediately what is ordered). நம் பெருமானார்க்கு ஒரு தபால் எழுதி தெரிவிக்கவில்லை. சொன்னதைச் செய்வதும் செய்ததை வெளிப்படுத்தாதிருப்பதும் உண்மை நட்புக்கு அழகு.

பின்னர் 19.7.1862 அன்று புறப்பட்டு கூடலூருக்குப்போய் அங்கு தங்கி விட்டு அக்டோபர் மாதம் தான் மீண்டும் கருங்குழிக்கு நம் பெருமானார் வந்தார்.

கருங்குழியில் நம் பெருமானார் தங்கியிருந்த வீட்டு எஜமானர் திரு. ராமகிருஷ்ண ரெட்டியார் என்பவர் சுமார் ஐந்து மாதங்கள் உஷ்ண பேதியால் மிகவும் சிரமப்பட்டு 1863 பங்குனி மாதம் 27ம் நாள் புதவாரத்தன்று வானுலகடைந்தார்.

1864ம் ஆண்டு மே மாதம் ரத்ன முதலியார்க்கு ஆண் குழந்தை பிறந்தது. 19.5.1864 அன்று இரத்ன முதலியார்க்கு ஒரு கடிதம் எழுதினார்.

"தங்கட்குப் புத்திரப் பேறு உண்டாயிற்றென்று கேள்விப்பட்டு அளவுகடந்த சந்தோஷத்தை அடைந்தேன். குழந்தையை நன்றாகப் பாராட்டி சகல விஷயத்திலும் சாக்கிரதையாய் இருக்க வேண்டும்."

ரத்ன முதலியார் தனக்குப் பிள்ளைப் பேறு உண்டாயிற்றென்று பெருமானாருக்குத் தெரிவிக்கவில்லை. அதுபற்றிக் கொஞ்சம்கூட வருத்தப் படாமல் கேள்விப்பட்ட மாத்திரத்திலேயே தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் பெருமானாரின் உண்மை நட்பை நாம் இங்கு கவனிக்க வேண்டும்.

இரண்டாண்டுகள் பலவகைக் கருவிகளால் பதப்படுத்தி ஏழைகள் பலர்க்கும் உபயோகிக்கும் பொருட்டு தன்னிடமிருந்த ஓர் பேருழைப்பு ஓர் அஜாக்கிரதையால் தன்மை கெடப்பெற்றது என்றும், இங்ஙனம் பெறினும் நம் பெருமான் திருவுளக்குறிப்பு அங்ஙனம் இருந்தது என்று கருதி அமைதி பெற்றாமாயினும் பிணிகளால் பிணிப்புண்ட ஏழைகளைக் கருதும் போதெல்லாம் ஒரு சிறிது உளம்புடை பெயர்கின்றாம்" என இரத்ன முதலியார்க்கு வரைந்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எல்லாம் இறைவன் செயல் என்று கருதிய பெருமானாரின் உள்ளத்தை இங்கு காண்கிறோம்.

1864ம் ஆண்டு மே மாதம் இரத்ன முதலியார் அவர்களின் மாமனார் திருவேங்கட முதலியார் காலமான செய்தி நம் பெருமானார்க்கு எட்டியது.

இரத்ன முதலியார் இருமலால் தேகம் அபவக்குவப்பட்டு இருந்தார் என அறிந்து 20.9.1864 அன்று அவருக்கு மருந்து சாப்பிட அறிவுறுத்தினார் நம் பெருமானார்.

## தண்ணீரால் விளக்கெரித்தது

நம் பெருமானார் தங்கியிருந்த வீட்டில் பகலும் இரவிலுமாகப் பாடல்கள் எழுதிக் கொண்டே இருப்பார். வெளிச்சம் தருவதற்காக அகல் விளக்கு ஒன்றை அந்த அறையில் வைத்திருந்தார்கள். அகலில் எண்ணெய்விட ஒரு மண்பாத்திரத்தில் எண்ணெயும் வைத்திருந்தார்கள்.

எண்ணெய்விடும் மண்பாத்திரம் புதியதாக ஒன்று வாங்கி வந்து பழகுவதற்காக அதில் தண்ணீர் விட்டு வைத்திருந்தார்கள். அந்தவீட்டு அம்மாள் முத்தியாலம்மாள் என்பவர் ஒரு நாள் அடுத்த ஊரில் நடைபெற இருக்கும் திருமணத்திற்குச் செல்லும் அவசரத்தில் எண்ணெய்யுள்ள மண் பாத்திரத்தை விளக்கருகே எடுத்து வைக்க மறந்து போய் விட்டார்கள்.

இரவில் பாடல் எழுதிக் கொண்டிருந்த நம் பெருமானார் அகல்விளக்கில் எண்ணெய் தீர்ந்ததும் அருகில் பழக வைத்திருந்த புதிய மண் பாத்திரத்திலிருந்த தண்ணீரை எடுத்து அகலில் விட்டார்கள். அந்த அகலும் பிரகாசமாக நன்றாகவே எரிந்து கொண்டிருந்தது. திருமணத்திற்குச் சென்ற அந்த அம்மையாருக்குத் தான் விளக்கெரிக்க எண்ணெய் வைக்காது வந்து விட்டது கவனத்திற்கு வரவே திருமணம் கூடக் காணாமல் அடுத்த நாள் விடியற் காலையிலேயே கருங்குழிக்குத் திரும்பி விட்டார்கள். வந்து பெருமான் தங்கியிருந்த அறையைக் கண்டார்கள். பெருமானாரோ வழக்கம் போல எழுதிக் கொண்டிருந்தார்கள். விளக்கும் நன்றாகவே எரிந்து கொண்டிருந்தது. ஐயனே நான் எண்ணெய் வைக்க மறந்து போனேனே விளக்கிற்கு எதை விட் டீர்கள் என்று கேட்டார்கள். பெருமானார் தண்ணீர் வைத்திருந்த புதிய மண் பாத்திரத்தைக் காட்டினார்கள். தண்ணீர் விட்டும் அந்த விளக்கு எரிந்ததை அந்த அம்மாள் கண்டு வியந்தார்கள். நம் பெருமானாரும் அந்த அற்புதத்தைச் சென்னை நண்பர்கட்கு ஒரு பாடல் மூலம் அறிவிக்கின்றார்.

**மெய் விளக்கே விளக்கல்லால் வேறோர்**
**விளக்கில்லை என்றார் மேலோர் நானும்**
**பொய் விளக்கே விளக்கென உட்பொங்கி**
**வழிகின்றேன் ஓர் புதுமையன்றே**
**செய் விளக்கும் புகழுடைய சென்னை நகர்**
**நண்பர்களே செப்பக் கேளீர்**
**நெய் விளக்கே போன்றொரு தண்ணீர்**
**விளக்கும் எரிந்தது சந்நிதியின் முன்னே**

இது நம் பெருமானாரே தெரிவிக்கும் செய்தி இந்தச் செய்தி ஊரெங்கும் பரவியது மதுரை ஆதீனம் சிதம்பர சுவாமிகள் இதை உலகறியத் தெரியப் படுத்தினார் ஒரு கவி மூலம்.

**தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோல் மாந்தர்கள்தம்**
**உண்ணீர் சிவம் விளங்க ஓங்குவிக்கும் கண்மணியாம்**
**நங்கள் இராமலிங்கன் நல்லருட்பா மாமுறையை**
**துங்க முறமாணா தொழு**

இராமலிங்கரின் தலை மாணாக்கர் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களும் தாம் எழுதிய திருவருட்பா வரலாற்றில் தெரிவிக்கிறார்.

**பண்ணீர் மைச் சுவை முதிர்ந்த திருப்பனுவல் அருட்பயனைத்**
**தண்ணீர் என்றொரு வெண்பாச் சம்பந்தப் பிரான் வழியில்**
**தண்ணீர்த்தென் கூடல்வரும் சிதம்பர மாமுனி தெரித்தால்**
**உண்ணீர்மை ஒன்றுமிலேன் உரைப்பதும் ஓர் புகழாரமே**

தண்ணீரால் விளக்கெரித்த அதிசயம் கருங்குழியில் நிகழ்ந்தது.

## <u>சன்மார்க்க சங்கம்</u>

இராமலிங்கர் வயது 41

மக்களிடமுள்ள தீயகுணங்களை ஒழித்து நல்ல குணங்களை வளர்க்கவும், மனிதப் பிறப்பு எடுத்தவர்கள் இந்த உடம்பு இருக்கும் போதே இறைவனை அறிந்து அவனுடன் கலக்க வேண்டும் என்றும் இராமலிங்கர் போதித்தார். அதை நிலைநிறுத்தும் வகையில் 1865ம் ஆண்டில் சன்மார்க்க சங்கம் ஒன்றினைத் துவக்கினார். புத்தர் பெருமானுக்குப் பிறகு ஆன்மீகத் துறையில் சங்கம் கண்ட பெருமை இராமலிங்கர் ஒருவரையே சாரும்.

மனதிலே தூய எண்ணங்கள், சொல்லிலே தூய வார்த்தைகள் செயல்பாடுகள் அனைத்தும் தூய்மை இவ்வாறு வாழ்பவர்களைத் திருத்த வேண்டிய அவசியம் இல்லை.

மனதிலே தீய எண்ணங்கள். வாக்கிலே தீய வார்த்தைகள். செயல்பாடுகள் அனைத்தும் தீயவை. இவர்களைத் திருத்தவே முடியாது.

மனதிலே தீய எண்ணங்கள் இருந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் மிக மிக நல்லவர்கள் போல் பேசுபவர்களும் உண்டு. இவர்கள்தான் அகத்தே கறுத்துப் புறத்தே வெளுத்தவர்கள். இவர்களைத் திருத்தவே இராமலிங்கர் வந்தார். திருத்திய பிறகு அவர்களைச் சன்மார்க்கத்தில் சேர்த்து இந்தப் பிறவியிலேயே இறைவனை அடையும்படிச் செய்யவே தான் வந்ததாக அறிவிக்கின்றார்.

**அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்திருந்த உலகர் அனைவரையும்**
**சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்து அடைவித்திட அவரும்**
**இகத்தே பரத்தைப்பெற்று மகிழ்ந்திடுதற்கென்றே எனையிந்த**
**யுகத்தே இறைவன் வருவிக்க வுற்றேன் அருளைப் பெற்றேனே**

அவர் தோற்றிய சங்கத்திற்குச் சமரச வேத சன்மார்க்க சங்கம் என்று பெயரிட்டார்.

வழக்கமாக உலகியல் சங்கங்களில் ஆண்டு சந்தா, ஆயுள் சந்தா முதலியவற்றைப் பணமாகச் செலுத்தினால் அங்கத்தினராகலாம். ஆனால் இராமலிங்கரின் சமரச வேத சன்மார்க்கத்தில் சேர மூன்று தகுதிகளை நிர்ணயித்தார்.

1. **கொலை புலை தவிர்த்தவர்கள்**
2. **காமம் குரோதம் முதலியவை ஏற்படும் போது ஞான அறிவினால் தடுத்துக் கொள்பவர்கள்.**
3. **சமய மத மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்கள்.**

இவர்கள் தான் சன்மார்க்கத்திற்கு உரியவர்கள் என்று வரையறை செய்தார்.

**தயவுடையார் எல்லாம் சன்மார்க்கம் சார்ந்தவர்கள்**
**அருளுடையார் எல்லாம் சன்மார்க்கம் அடைந்தவர்கள்**
**சாகாதவனே சன்மார்க்கி**
**சாகாத நிலை பெற்றவனே சன்மார்க்கி**

இராமலிங்கர் இவ்வாறுதான் அறிவித்தார்

மக்கள் அனைவரையும் சன்மார்க்க சங்கத்தில் சேரும்படி அறை கூவி அழைத்தார்.

**மார்க்கமெலாம் ஒன்றாகும் மாநிலத்தீர் வாய்மையிது**
**தூக்கமெலாம் நீக்கித் துணிந்துளத்தே - ஏக்கம்விட்டு**
**சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திடுமின் சத்தியம் நீர்**
**நன்மார்க்கம் சேர்வீர் இந்நாள்**

சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்தவர்கள் சாதுக்களாக இருக்க வேண்டும் என்று இராமலிங்கர் எதிர்பார்த்தார்.

**புன்மார்க்கத்துள்ளும் புறத்தும் வேறாகிப்**

**புகன்ற சொல்லன்று நும்பொன்னடி கண்ட**

**சன்மார்க்கச் சங்கத்துச் சாதுக்கள் காணச்**

**சத்தியம் சத்தியம் சத்தியம் சொன்னேன்**

**தன்மார்க்கத் தென்னுடலாதியை நுமக்கே தந்தனன்**

**திருவருட் சந்நிதி முன்னே**

**என் மார்க்கத்தெப்படியேனும் செய்துகொள்கிற்பீர்**

**எனைப் பள்ளியெழுப்பி மெய்யின்பம் தந்தீரே**

சன்மார்க்க சங்கத்து அங்கத்தினராக எல்லா குணங்களும் நிரம்பியவர்களாய் தங்கமான மனிதர்கள் என்று மற்றவர்களால் பாராட்டும்படியாய் இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்.

**தங்கமே யனையார் கூடிய ஞான**

**சமரச சுத்த . . . சன்மார்க்க**

**சங்கமே கண்டு களிக்கவும் சங்கம்**

**சார் திருக்கோயில் கண்டிடவும்**

**துங்கமே பெறும் சற்சங்கம் நீடூழி**

**துலங்கவும் சங்கத்தில் அடியேன்**

**அங்கமே குளிர நின்றனைப் பாடி**

**ஆடவும் இச்சைகாண் எந்தாய்**

சங்கத்தைத் தோற்றுவித்த பெருமானார் அந்தச் சங்கத்தின் தலைவராக இறைவனையே வைத்தார். இராமகிருஷ்ண பரமஉறம்சருக்குப் பின் ஒரு விவேகானந்தர் தோன்றி இராமகிருஷ்ணரின் கொள்கைகளைப் பரப்பி வருவது போல் வள்ளலாருக்குப் பின் ஏன் வேறு யாரும் இல்லை என்று சிலர் கேட்கின்றார்கள்.

நான் சொல்வதைக் கேட்க மாட்டேன் என்று திடசித்தம் செய்து கொண்டீர்கள் என்றும் இதுகாறும் என்னோடு பழகியும் சன்மார்க்கம் இன்னதென்று தெரிந்து கொள்ளவில்லை என்றும் நம் பெருமானார் கூறியிருக்கிறார். அவரது பேச்சைக் கேட்காதவர்களிடமும் சன்மார்க்கமே இன்னதென்று தெரிந்து கொள்ளாதவர்களிடமுமா சங்கத்தை ஒப்படைப்பது. அதனால்தான் அவர் யாரையும் இன்று வரை நியமிக்கவில்லை. தானே சன்மார்க்கம் நடத்திக் கொண்டு வருகின்றார்.

**உலகமெலாம் போற்ற ஒளி வடிவனாகி**

**இலக அருள் செய்தான் இசைந்தே - திலகன் என**

**நானே சன்மார்க்கம் நடத்துகின்றேன் நம்பெருமான்**

**தானே எனக்குத் தனித்து.** (5391)

தமிழ் நாட்டில் சன்மார்க்க சங்கமும் அன்னதானம் செய்யும் பணியும் இல்லாத கிராமம் ஒன்றுகூட இல்லை என்று சொல்லுமளவு சன்மார்க்க சங்கம் எல்லாக் கிராமங்களிலும் பரவியுள்ளது. மேலும் வெளிநாடுகளிலும் வெகு வேகமாகச் சன்மார்க்க சங்கம் பரவி வளர்ந்து வள்ளற் பெருமானாரின் கருத்துக்களைப் பரப்பி வருகின்றன.

## சன்மார்க்க சங்கத்தின் பயன்

சன்மார்க்கச் சங்கத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே மரணத்தை வெல்ல முடியும் மற்றவர்களால் முடியாது என்றார்.

**மற்றறிவோம் எனச் சிறிது தாழ்ந்திருப்பீரானால்**
**மரணமெனும் பெரும்பாவி வந்திடுமே அந்தோ**
**சற்று மதை நும்மாலே தடுக்க முடியாதே**
**சமரச சன்மார்க்க சங்கத்தவர்கள் அல்லால் அதனை**
**ஏற்றி நின்று தடுக்க வல்லார் எவ்வுலகில் எவரும்**
**இல்லை கண்டீர் சத்திய மீதென் மொழி கொண்டுலகீர்**
**பற்றிய பற்றனைத்தினையும் பற்றறவிட்டு**
**அருளம்பலப் பற்றே பற்றுமினோ என்றும் இறவீரே**

மனிதர்கள் அனைவரும் தெய்வத்தின் உண்மை இன்னதென்று அறிந்து கொள்ளவும்.

நல்ல குணங்களில் பயின்று மனிதர்களாக வாழவும்
எடுத்த இந்தப் பிறப்பிலேயே இறைவனை அறிந்து அடையவும்

முடிவாக கிடைத்த இந்தத் தேகத்தையே நித்திய தேகமாக்கிக் கொண்டு மரணமிலாப் பெரு வாழ்வில் வாழ்ந்திடவும் சன்மார்க்க சங்கத்தை இராமலிங்கர் தோற்றினார்.

சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்தவர்கள் இதிலிருந்து மாறாமல் வேறொன்றை நாடாமல் மாண்டு போகாமல் வாழ வாருங்கள் என்று எச்சரிக்கை செய்கிறார்.

**ஆடாதீர் சற்றும் அசையாதீர் வேறொன்றை**
**நாடாதீர் பொய்யுலகை நம்பாதீர் - வாடாதீர்**
**சன்மார்க்க சங்கத்தைச் சார்வீர் விரைந்தினி இங்**
**கென் மார்க்கமும் ஒன்றாமே.**

1865ம் ஆண்டு இராமலிங்கரால் தோற்றுவிக்கப்பட்ட சன்மார்க்க சங்கம் இப்போது உலகெங்கும் பரவி அவரது கொள்கையைப் பரப்பி வருகின்றது.

## கல்பட்டு ஐயா அவர்கள் சீடராகிறார்

திருநறுங்குன்றத்தில் இராமலிங்க மூர்த்திகள் என்ற சுவாமிகள் தானே வந்து குருநாதன் தன்னை ஆட்கொள்ள வேண்டும் என்று இருந்தார். நம் பெருமானார் திருநறுங்குன்றம் சென்றார். வள்ளலாரைக் கண்டவுடன் இராமலிங்க மூர்த்தி சுவாமிகள் தன்னுடனிருந்த தன் சீடனை நோக்கி இவையெல்லாம் இனி உன்னுடையதே. நான் என் குருநாதருடன் செல்கிறேன் என்று கூறி வள்ளலாருடன் புறப்பட்டு விட்டார். அவருடனேயே தங்கியிருந்த அவரைக் கல்பட்டு ஐயா என்று எல்லோரும் அழைத்தனர். அவர் கேட்டுக் கொண்டபடியே சட்சு தீட்சை அளித்து நம் பெருமானார் அவரை ஆட்கொண்டார்.

திருநறுங்குன்றம் இராமசாமி நயினார்க்கு வரைந்த திருமுகம் ஒன்றில் அங்கே சென்றுள்ள கல்பட்டு ஐயாவைப் பற்றி விசாரித்து எழுது வதிலிருந்து 2.8.1966க்கு முன்பேயே அடிகளார் கல்பட்டு ஐயாவை ஆட்கொண்டார் எனத் தெரிய வருகின்றது. சிவஞான விருப்பினராகிய க. இராமலிங்க மூர்த்திகள் என்று அடிகளார் இவரைக் குறிப்பிடுவார். வள்ளலார் பிரசங்கம் நிகழ்த்தும்போது கல்பட்டு ஐயா அவர்களும் அதைக் கேட்டுப் பயனடைவார்.

குறிப்பு : கல்பட்டு ஐயா அவர்கள் சமாதி வடலூரில் தருமச்சாலை அருகே உள்ளது.

## அருட்பா அச்சேற அனுமதி

இராமலிங்கர் எழுதிய பாக்களை அச்சிட்டுப் புத்தகமாக வெளியிட அவரது அன்பர்கள் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டனர். ஆனால் இராமலிங்கர் அனுமதி அளிக்கவே இல்லை. சுமார் பத்து ஆண்டுகள் போராடியும் அனுமதி கிடைக்காததால் மனமுடைந்த இரத்ன முதலியார் பாக்களை அச்சிடுவதற்கு அனுமதிகிட்டும் வரை ஒரு வேளை உணவு தான் கொள்வது என்று முடிவு செய்து அதனை இராமலிங்கருக்கும் தெரிவித்தார். அக்கடிதத்தைக் கண்ட இராமலிங்கர் ஒருவேளை மட்டுமே உணவு கொண்டு இருக்கிறாரா. இரத்ன முதலியார் என்று பதறினார். அவர் மனம் தாளவில்லை உடனே அவருக்கு அனுமதி வழங்கி 30.12.1860 அன்று இரத்ன முதலியாருக்கு எழுதிய கடிதம் வருமாறு.

"நற்குணங்கள் எல்லாவற்றிற்கும் இடனாகிய நன்மனக் கருவியோடு எனது இதயத்திடைவிடாது இருக்கின்ற சிரஞ்சீவி இரத்ன முதலியார் அவர்கட்கு சிவானுக்ரகத்தால் தீர்க்காயுளும் சிவஞானமும் சகல சம்பத்து மேன்மேல் உண்டாவதாக.

நாளது வரையில் இவ்விடத்தில் யானும் மகாராஜராஜஸ்ரீ நாயக்கர் அவர்களும் க்ஷேமம். தமது சுப சரித்திரங்களைக் கேட்க ஆசையுள்ளவனாக இருக்கின்றேன். எனக்கும் நாயக்கர் அவர்களுக்கும் தபால் மார்க்கமாகத்

தாங்கள் அனுப்பிய கடிதங்கள் வந்து சேர்ந்து சங்கதிகளைத் தெரிந்து கொண்டேன்.

நான் சென்னப் பட்டணம் விட்டு இவ்விடம் வந்த நாள் தொடங்கி நாளது வரையில் பாடிய பாடல்கள் பல. அவைகளை முழுதும் எழுதி வைக்க வேண்டும் என்கிற லக்ஷியம் இல்லாமையால் அப்படி அப்படி சிதறிக் கிடக்கின்றன. ஆயினும் அவைகளைச் சேர்ப்பிக்க சுமார் இரண்டு மாதம் பிடிக்கும். ஆதலால் நான் பங்குனி மாதம் அவசியம் வருகிறேன். வரும்போது கொண்டு வருகிறேன். இது உண்மை. எவ்விதமாவது இரண்டு மாதத்திற்குள் தமது இடத்தில் இருக்கச் செய்கிறேன். குமாரசாமிப் பிள்ளை, சண்முகப் பிள்ளை, ரெட்டியார் இவாள் இடங்களில் தற்காலம் இருக்கின்ற பாடல்கள் சுமார் 50க்கு உட்பட்டதாகவே இருக்கும். வெளிப்பட்ட பாடல்கள் பல பல. ஆதலால் மன்னிக்க வேண்டும்.

அன்புள்ள என் கண்மணி போன்றதாம் இனி இதனடியில் எழுதுகின்ற வண்ணம் செய்யப் பிரார்த்திக்கின்றேன். அதாவது இந்தப் பாடல்கள் பங்கியில் அனுப்பி என்னிடம் சேர்கின்ற பரியந்தம் நான் ஒரு வேளை போஜனந்தான் செய்வேன் என்று எழுதியதைப் பார்த்த பின்பு நான் சாப்பிடுகின்ற சாதம் உடம்பில் பொருந்தவில்லை. பட்டினி கிடந்த வனைப்போல இருக்கிறேன். ஆதலால் என்னை நிம்மதியுள்ளவனாக்க எண்ணங்கொண்டு ஒரு வேளை போஜனம் கொள்ளுகிற நிபந்தனை நீக்கி உடனே தபாலில் எனக்குத் தெரிவித்தால் அல்லது நான் சலிப்பைத் தவிரேன். ஒரு வேளை போஜனம் உள்ளவனாகவே இருப்பேன். இது சத்தியம். என்மேல் ஆணை. தாம் மேற்குறித்த நிர்ப்பந்த ஏற்பாட்டைத் தவிர்த்து உடனே எனக்குத் தெரியப்படுத்த வேண்டும். இரண்டு மாதத்திற்குப் பின்பு பாடல்கள் அவசியம் சேரும்.

மார்கழி மாதம் சிதம்பரம் இராமலிங்கம்

18.2.

குறிப்பு : பெருமானுடைய இசைவைப் பெறுவதற்கு இரத்ன முதலியார் உண்ணா விரதப் போராட்டத்தைத் தொடங்கினார். இரக்கமே வடிவான இராமலிங்கரும் மனமிரங்கி இசைவு தந்து விட்டார். உண்ணாவிரதப் போராட்டம் கண்டு இராமலிங்கர் இசைவு தந்தது பெருமைக்குரியது. உண்ணா விரதத்தைத் தவிர்த்துத் தகவல் வரும் வரை தானும் ஒரு வேளை போஜனந்தான் கொள்வேன் என்று இராமலிங்கர் எழுதினாரே அது வேறு யாரும் செய்யாத செயல்.

இராமலிங்கர் எழுதியது போலவே நெஞ்சறிவுறுத்தல், விண்ணப்பக் கலிவெண்பா ஆகியவற்றைப் பெரிய தமக்கையார் சுந்தரம்மாள் அவர்கள் வசம் கொடுத்தனுப்பினார்கள். வழியில் கள்வர்கள் மடக்கிச் சுந்தரம்மாளிடமிருந்து நகைகளையும் பணத்தையும் பறித்துக் கொண்டார்கள். ஆனால் இந்த பாடல்கள் பத்திரமாகப் போய்ச் சேர்ந்து விட்டன. இது நடந்தது 1861 பிப்ரவரியில்.

1864 ஜனவரி முதல் வாரத்தில் வேலு முதலியாருக்கு எழுதிய கடிதத்தில் சுந்தரம் பிள்ளை எழுதிய பாயிரம் நன்றாக இருக்கிறது. அதை அச்சிடுவிப்பீர்களாக. அன்றி நமது சிதம்பர சாமிகள் பாயிரமும் நன்றாய் இருக்கிறது அதையும் அப்படி செய்க என்று எழுதியுள்ளார்.

1865 ஜூலை மாதத்தில் இரத்ன முதலியார் அவர்கள் பாடல்களைத் திருமுறைகளாகப் பிரித்துப் பிரதிகளை இராமலிங்கரின் பார்வைக்கு அனுப்பி வைத்தார்கள். அதைக் கண்ட இராமலிங்கர் இரத்ன முதலியாருக்கு வரைந்த கடிதத்தில் இவ்வாறு எழுதினார்கள்.

"தாங்கள் வரவிட்ட பங்கி தபாலில் அடங்கிய புத்தகமும் கடிதமும் முன்னும் பின்னுமாக வரப்பெற்றேன். இவற்றுள் பங்கி தபாலில் அடங்கிய புத்தகத்தைக் கண்டபோது பசியில்லாதவன் பழஞ்சோறு கண்டாற்போலும் குறிப்பில்லாதவனாக இருந்தேன். ஏனெனில் திருவருள் சாட்சியாகத் திருவடிக் கண்ணனன்றி வேறொன்றையும் என் மனம் விரும்புகிறதாகத் தோன்றவில்லை. என்றால் இந்தப் பனை ஏட்டையும் அதில் வரைந்த சிறு பிள்ளை விளையாட்டையுந்தானோ விரும்பும். விரும்பாது - விரும்பாது."

மீண்டும் 10.11.1865 அன்று எழுதிய கடிதத்தில் இறைவன் என்னுள்ளிருந்து பாடுவித்தவைகளை மாத்திரம் தாங்களாயினும் மகாராஜராஜஸ்ரீ செல்வராய முதலியார் அவர்களாயினும் தாங்கள் வரைந்தபடி செய்து கொள்ளலாம் என்று எழுதினார்.

இதற்கு அடுத்து இன்னுமொரு கடிதத்தில் ஒற்றியூர் பாடல்களையும் மற்றவைகளையும் அச்சிடுவதாகக் கேள்விப்படுகிறேன். அவைகளைத் தற்காலம் நிறுத்தி வைத்தால் நான் அவ்விடம் வந்தவுடன் இவ்விடத்திலிருக்கின்ற இன்னும் சில பாடல்களையும் சேர்த்து அச்சிட்டுக் கொள்ளலாம் என்று எழுதியுள்ளார்.

28.3.1866 தேதியிட்ட கடிதத்தில் இராமலிங்கர் எழுதியது.

"நான் இத்திசைக்கண் வந்தபின் இங்ஙனமிருந்து தங்களிடத்தில் போந்த சில பாடல்களில் ஒன்றும் வெளிப்படாதிருத்தல் வேண்டும். என்னையெனில் நான் இங்ஙனம் வந்த பின்னர் சிதம்பர விஷயத்தில் தோத்திர மாலைகளும் சாத்திர மாலைகளுமாக சுமார் 200 மாலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகள் வெளிப்படும்போது வெளிப்படுத்திக் கொள்ளலாம். இது நிற்க முன்னோர் கடிதத்தில் குறித்த பாயிரத்தை இன்னும் சில தினம் சென்ற பின்னர் அனுப்புகிறேன்.

இராமலிங்க சாமியென்று வழங்குவிப்பது என் சம்மதமன்று. என்னை. ஆரவாரத்திற்கு அடுத்த பெயராகத் தோன்றுதலில் இனி அங்ஙனம் வழங்காமை வேண்டும்.

26.11.1866 அன்று இரத்ன முதலியார் அவர்கட்கு எழுதிய கடிதத்தில் இராமலிங்கர் குறிப்பிட்டுள்ளதாவது.

"மகாராஜராஜஸ்ரீ அப்பாசாமி செட்டியார் அவர்கட்குத் தாங்கள் வரைந்த கடிதத்திற் குறித்த வண்ணம் சிதம்பரம் விஷயமான பாடல்களை தங்கள் கருத்தின்படி அச்சிட்டுக் கொள்ளுங்கள் அன்றியும்" கண்டாய் என் தோழி" என்கிற பாடல்களை வைத்திருக்கின்றவர் தற்காலம் சமீபத்தில் இல்லை அவர் வந்தவுடன் வாங்கி அனுப்புகின்றேன்.

"விண்படைத்த பொழில் தில்லை அம்பலத்தான்

எவர்க்கு மேலானான் அன்பருளமேவு நடராசர் எனல் வேண்டும்."

இராமலிங்கர் பாக்கள் எழுதியதும் அருகிலிருக்கும் அன்பர்கள் அந்தத் தாளிலிருந்து படி எடுத்து வைத்துக் கொள்வர். இராமலிங்கர் பாடிய பாக்கள் இவ்வாறு பலரிடத்தில் சிதறிக் கிடந்தன. அவற்றை ஒன்று சேர்த்து ஆறு திருமுறைகளாகப் பிரித்தார்கள்.

இராமலிங்கரின் ஆணைப்படி முதல் நான்கு திருமுறைகள் மட்டும் வெளியாவதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொண்டனர்.

புத்தகத்தின் முதற் பக்கத்தில் நூலின் ஆசிரியர் பெயர் அச்சிட வேண்டும். இராமலிங்கசாமி என்று வழங்குவது என் சம்மதமன்று அது ஆரவாரத்திற்கு அடுத்த பெயராகலின் அவ்வாறு வழங்காமை வேண்டும் என்று கூறி விட்டதால் என்ன பெயர் போடுவது என்று ஆலோசித்தனர். முடிவாகத் திருவருட் பிரகாச வள்ளலார் என்று போடலாம் எனத் தீர்மானித்தனர்.

முதல் புத்தகத்தில் "திருவருட் பிரகாச வள்ளலாரெனும் சிதம்பரம் இராமலிங்க பிள்ளை அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய திருவருட்பா" என்று அச்சிட்டனர்.

இப்புத்தகத்தைக் கண்ணுற்ற நம் பெருமானார், தொழுவூர் வேலாயுத முதலியாரை அழைத்து "திருவருட் பிரகாச வள்ளலார்" என்று யார் போடச் சொன்னது என்று கண்டித்தார். பட்டங்கள் பல போட்டுக் கொண்டால் தான் பெருமை என்று தமக்குத் தாமே பட்டம் சூட்டிக் கொண்டு பெருமை காட்டுகின்ற இவ்வுலகில் சுவாமி என்று வழங்க வேண்டாம் என்று ஆணையிட்டவர் நம் பெருமானார் என்றால் தன்னடக்கத்தில் எவ்வளவு உறுதியாக இருந்திருக்கிறார் என்பதற்கு வேறு என்ன சான்று வேண்டும்?

திருவருட்பா ஆறு திருமுறைகளாக முதலிலேயே வகுக்கப்பட்டதற்குச் சான்று :

**அறுசமயத்துள்ளாரும் அயலாரும் அவர் அறியப்**
**பெறு பொருளும் அளவாத பெரும் பொருளும் காட்டலினால்**
**உறுதி பெறும் அத்துவா அதன் மேலாய் உறு பொருளை**
**மறுவறக் காட்டுகையாலும் மற்றாறு முறையாக**

**பிரிந்து பிரியாதருளின் பெற்றிமிக்குப் பிணக்கறுமா**
**தெரிந்து முறை செய்தருளும் சிறப்பானே திருஅருட்பா**
**விரிந்த முறை ஆறெனவே மெய்யருளின் தொடர்பாட்டால்**
**பரிந்தன்பர் உலகமெலாம் பழிச்சு புகழ் நிலவியதே**

(திருவருட்பா வரலாறு செய்யுள் 38-39)

ஆறாவது திருமுறை பின்னர் வெளிப்படுத்த நம் பெருமானார் இட்ட கட்டளைக்குச் சான்று :

**ஆறாவது முறை ஆரியனார் தம் அருளாளே**
**வேறோர் சார் சேமுற்றன்று எம் வினை விளை பாகம்**
**தேறாப் பருவம் தேர்ந்தென்சினோர் உது நிற்க**
**வீறார் மற்றை முறை வெளி வந்தமை விரி செய்வாம்**

(திருவருட்பா வரலாறு செய்யுள் 45)

நான்கு திருமுறைகள் வெளியிட்டதன் சான்று :

**வேண்டுவன உபகரிக்கக் கலி நாற்பத் தொன்பது நூற்றறுபான் மேலெட்**
**டாண்டெழுதா எழுத்தேற்றி நான்கு முறை அரசறிய வெளியிட்டியார்க்கும்**
**பூண்டெழுபேர் இன்ப மகிழ்வது பெருகப் பணிபுரியும் பெற்றியானே**
**காண்தகு சீர்த் தேவ நாயகன் அருளும் இரத்தினப் பேர்க் காத்திட்டானே**

(திருவருட்பா வரலாறு செய்யுள் 57)

மக்களின் பக்குவ நிலைக்கேற்ப முதல் நான்கு திருமுறைகள் மட்டும் 1867ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வெளியிடப்பட்டது. அப்போது வள்ளலாரின் வயது 44.

சைவத் திருமுறை 12ல் கடைசியாக அடியார்களின் வரலாறு கூறும் பெரிய புராணத்தை வைத்துத் திருமுறை வகுத்தது போல் இங்கும் முதல் நான்கு திருமுறைகளில் கடைசியாக நால்வர் துதியை வைத்துப் புத்தகத்தை அச்சிட்டு முடித்தனர். புதுவை வேலு முதலியார், சிவானந்தபுரம் செல்வராய முதலியார், இறுக்கம் இரத்ன முதலியார் வேண்டுகோள்படி தொழுவூர் வேலாயுத முதலியார் புத்தகத்தை அச்சிட்டு முடித்தவர்களாவர். முதல் நான்கு திருமுறைகள் வெளியிடப்பட்டதை தொ. வேலாயுதனார் தமது திருவருட்பா வரலாறில் 57 பாடலில் தெரிவிக்கிறார்.

இப்புத்தகத்தின் முடிவில் திருவருட்பா வரலாறு என்றொரு நூல் தொழுவூர் வேலாயுத முதலியார் இயற்றி அதைப் பின் இணைப்பாக வைத்துப் புத்தகத்தை வெளியிட்டனர். பல ஆண்டுகள் போராடிய பின்னர் ஒருவாறு அனுமதி பெற்று 1867ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் நான்கு திருமுறைகள் வெளியிடப்பட்டன.

அப்புத்தகத்தின் முகப்பேடு வருமாறு :

உ

தி ரு ச் சி ற் ற ம் ப ல ம்

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும்

சிதம்பரம்

**இராமலிங்கப பிள்ளை**

அவர்கள்

திருவாய் மலர்ந்தருளிய

# திருவருட்பா

முதற் புத்தகம்.

இஃது

சமரச வேத சன்மார்க்க சங்கத்தை யபிமானித்த

புதுவை - வேலு முதலியார்

சிவாநந்தபுரம் - செல்வராய முதலியார்

இறுக்கம் - இரத்தின முதலியார்

வேண்டுகோளின்படி

இவ்வாசிரியர் மாணாக்கரும்

மேற்படி சமரச வேத சன்மார்க்க சங்க

வித்வான்களிலொருவருமாகிய

தொழுவூர் - வேலாயுத முதலியாரால்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

Asiatic Press, 292, Linghi Chetty Street, Madras

February 1867.

Registered Copy-right

திருஅருட்பா அச்சேறு முன்னர் அதனைத் தொகுத்து நம் பெருமானாரிடம் அனுமதி கோரியிருக்கிறார்கள். பிற பாடல்களைச் சேர்ப்பதற்கும் அனுமதி பெற்றிருக்கிறார்கள். அவருடைய பெயரைப் போடவும் அனுமதி கேட்டிருக் கிறார்கள். எந்தெந்தப் பாடல்களை வெளியிட வேண்டாம் என்று கூறினார்களோ,

அவற்றை வெளியிடாமல் நிறுத்தி அவரின் ஆணைப்படி முதல் நான்கு திருமுறைகள் மட்டுமே வெளியிடப்பட்டன. எனவே அவரது ஆணைப்படி வகுக்கப்பட்ட திருமுறைகளை மாற்ற யாருக்கும் உரிமை இல்லை.

## வீராசாமி நாயக்கர்

சென்னை வாழ்வை நீத்து பெருமானார் புறப்பட்டபோது அவருடன் சென்ற பலருள் வீராசாமி நாயக்கரும் ஒருவர்.

நம் இராமலிங்கர் கருங்குழியில் உறையத் தொடங்கியது முதல் வீராசாமி நாயக்கரும் அவருடன் தங்கி இராமலிங்கருடன் மிகவும் நெருங்கிப் பழகுவாராயினர் ஒவ்வொரு கடிதத்திலும் நாயக்கர் க்ஷேமத்தை தெரிவித்தே கடிதம் எழுதும் அளவிற்கு அவர் நெருங்கியிருந்தார். அதே போல் நாயக்கர் சென்னை முதலிய இடங்கட்குச் சென்றபோது அங்கிருந்தோரிடம் அவரது நலத்தை விசாரித்தருளினார். 1860ம் ஆண்டு ஜூலை மாதம் இரத்ன முதலியாருக்கு எழுதிய கடிதத்தில் நாயக்கர் அவர்களின் தாயார் ராணிப்பேட்டையில் இருப்பதாகக் குறிப்பிடுகிறார்கள்.

1862 பிப்ரவரி மாதம் இரத்ன முதலியார்க்கு எழுதிய கடிதத்தில் நாயக்கர்சாமி அவர்களின் தாயார் இறந்து விட்டதாகவும் ரூ.20/- கடன் வாங்கி நாயக்கர் அவர்கட்குத் தர வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார்.

நாயக்கர் அவர்கள் சென்னையில் வேலு முதலியாரிடம் இருப்பதாகவும் தான் அவசியம் சென்னப் பட்டணம் வர வேண்டியிருப்பதால் தான் வருகின்ற வரையில் பட்டணத்தில் தானே இருக்க வேண்டும் என்றும் தான் வந்த பின்பு உடன் கூடிக் கொண்டு ஆண்டவர் திருவுளப்படி சஞ்சரிக்கலாம் என்றும் தெரிவிக்கும்படி இரத்ன முதலியாருக்கு 15.7.1862 அன்று ஒரு கடிதம் எழுதினார். நாயக்கர் அவர்கள் ராணிப்பேட்டை சென்றது தொடங்கி அக்டோபர் மாதம் 1865 வரை சென்னையில் வேலு முதலியாரிடமும் இரத்ன முதலியாரிடமும் தங்கியிருந்திருக்கிறார்.

மகாராஜராஜஸ்ரீ நாயக்கர் அவர்கள் முளை மூலம் எடுத்துக் கொண்டு இப்போது தான் உடம்பு பக்குவமாகி வருகின்றது என்றபடி இன்னும் தாங்கள் அவரது தேகம் சரியான பக்குவத்தை அடையும் வண்ணம் பாராட்டி வர வேண்டும் என்று ஜூலை 1865ம் ஆண்டில் இரத்ன முதலியார்க்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகின்றார். பின்னர் நாயக்கர் அவர்கள் சென்னையை விட்டுக் கருங்குழி வந்து நம் இராமலிங்கருடன் தங்கினார்.

நாயக்கர் அவர்கள் க்ஷேமமாக இருப்பதாகவும் ஆனால் நிம்மதியில்லாமல் இருப்பதாகவும் எழுதிய இராமலிங்கர் கடைசியில் நாயக்கர் வந்த நாள் தொட்டு தேக அசவுக்கியத்தோடே இருக்கிறார்கள் என்று 1866ம் ஆண்டு பிப்ரவரியில் இரத்ன முதலியார்க்கு எழுதிய கடிதத்தின் மூலம் தெரிய வருகிறது.

28.3.1866 அன்று எழுதிய கடிதத்தில் மகாராஜராஜஸ்ரீ நாயக்கர் சாமிக்கு பித்த விசேஷத்தால் சிறிது குணம் விகற்பித்து அடிக்கடி சொல்லாமல் போவதும் பின்பு வருவதுமாக இருக்கின்றார் என்று குறிப்பிடுகின்றார்.

இறுதியாக 19.4.1866 அன்று இரத்ன முதலியார்க்கு எழுதிய கடிதத்தில் நாயக்கரைப் பற்றி இராமலிங்கர் எழுதிய வாசகம் அடியிற் காணுமாறு உள்ளது.

"நாயக்கர் சாமி என்பவர் தற்காலம் ˙இவ்வுலகில் இருக்கின்ற தான்தோன்றிச் சாமிகளில் தலைநின்ற சாமி என்க. என்னை? அறிய வேண்டுவனவற்றை அறிய முயலாமையோடு பித்த மயக்கால் மனம் சென்ற வழி சென்று பித்தச் சாமி என்றும் விசேடப் பேர் ஒன்று மிகையாகக் கொண்டிருக்கிறார் ஆகலிற் சூழும் வண்ணம் சூழ்க."

ஒவ்வொரு கடிதத்திலும் நாயக்கர் அவர்கள் க்ஷேமத்தைத் தெரிவிக்கும் பெருமானார், நாயக்கர் தன்னை விட்டுப் பிரிந்து சென்னை முதலிய இடங்கட்குச் சென்றிருந்த போது ஒவ்வொரு கடிதத்திலும் அவரைப் பற்றி விசாரித்து எழுதும் இராமலிங்கர் 19.4.1866க்குப் பின் ஒரு வரிகூட எழுதாமல் விட்டது ஏன்? இராமலிங்கருடன் சேர்ந்து இருந்த போது அவருடைய ஞான அறிவில் சிறிது பெற்றவுடனே தான் ஒரு பெரிய ஞானி ஆகிவிட்டதாகத் தலைக்கனம் ஏறியது. தலைக்கனம் ஏறிய நாயக்கர் தான் ஒரு தலைவன் ஆக வேண்டும் என்ற புகழாசை மேலோங்கவே தனக்குத் தானே பித்தச் சாமி என்று பெயர் வைத்துக் கொண்டு இராமலிங்கரை விட்டுப் பிரிந்து சென்றார்.

**ஞானமணிப் பொது நடம் செய்திருவடி கண்டிடவே**
**நடக்கின்றேன் அந்தோ முன் நடந்த வழியறியேன்**
**ஊன மிகும் ஆணவமாய் பரவி எதிர்ப்படுமோ**
**உடமையெலாம் பறித்திடுமோ நடைமெலிந்து போமோ**
**ஈனமுறும் அகங்காரப் புலி குறுக்கே வருமோ**
**இச்சை எனும் ராக்கதப் பேய் எனப் பிடித்துக் கொளுமோ**
**ஆன மலத் தடை நீக்க அருள் துணை தானுறுமோ**
**ஐயர் திருவுளம் எதுவோ ஏதுமறிந்திலனே**

என்ற திருவருட்பாவின் உண்மைக்குச் சான்று வீராச்சாமி நாயக்கரின் பிரிவு..

எவ்வளவு கற்றாலும் எந்த நிலை அடைந்தாலும் ஆணவம் தலைப்பட்டால் குருவைப் பிரிந்து விடக்கூடும்.

நாயக்கர் வரலாற்றைப் பற்றிச் செய்திகள் ஏதும் பின்னர் தெரியவில்லை.

## அப்பாசாமி செட்டியார்

அடிகளார்க்கு ஆட்பட்டவர்களுள் கூடலூர் மு. அப்பாசாமி செட்டியாரும் ஒருவர். இவர் அடிகளைப் பற்றிக் கேள்வியாலறிந்து கருங்குழிக்கு வந்து அடிகளுக்கு ஆட்பட்டார். இவரது தமையனார் இராமசாமி செட்டியார் என்பவர் நாவில் புற்று உண்டாகித் துன்புற்றார். அப்பாசாமி செட்டியாரின் வேண்டுகோளுக்கிணங்க அடிகள் மூன்று வேளை பூசுமாறும் உட்கொள்ளுமாறும் திருநீறளித்து அப்புற்று நோயை நீக்கியருளினர். பின்னர் அப்பாசாமி செட்டியார் அடிகளைக் கூடலூர்க்கு அழைத்துச் சென்று உபசரித்தார். செட்டியார்க்கும் அடிகட்கும் இவ்வாறு தொடர்புண்டாயிற்று. அடிகள் கூடலூர் செல்லுங்காலங்களில் பெரும்பாலும் அப்பாசாமி செட்டியார் வீட்டிலேயே தங்குவது வழக்கம். அவர் வீடு தேரடிக்கருகில் நான்காவது வீடாகும். ஒரு கால் அடிகள் கூடலூரில் செட்டியார் வீட்டில் தங்கியிருக்கும்போது பங்குனி உத்திரம் வந்தது. கிண்ணித் தேர் விழா நடைபெற்றது. திருவிழாவை முன்னிட்டுச் செட்டியார் வீட்டுக்கு வந்திருந்த பலர் திண்ணையிலிருந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது யாரோ புதியவர் ஒருவர் ஒளி வீசும் தோற்றத்துடன் விரைவாக வீட்டினுள் நுழைவதைச் சிலர் பார்த்தனர். அவர் யார் என்ற ஐயம் எழுந்தது. திண்ணையிலிருந்தவர்களுள் புதுவை உறையூர் துரைசாமி பிள்ளை என்பவர் உள்ளே போய்ப் பார்ப்போம் என்று உடன் சென்றனர். வீட்டினுள் அடிகளைத் தவிர வேறு யாரும் இல்லை. அடிகளின் திருமுன்னர் பெரிய லட்டு ஒன்று இருந்தது. துரைசாமி பிள்ளையும் மற்றவர்களையும் கண்டதும் அடிகள் அந்த லட்டை எடுத்துச் சிறிதளவு சுவைத்துப் "பிட்டு வாணிச்சி தந்தது இப்படித் தானிருந்ததோ" என்று வியந்து மிகுதியை அனைவர்க்கும் அளித்தனர். 'யாரோ வந்தாற் போலிருந்ததே இங்கு ஒருவரையும் காணோமே' என்று துரைசாமி பிள்ளை கேட்க, 'ஒரு சித்தர் வந்து போனார், அவர் இந்நேரம் காசியிலிருப்பார், அவர் கொடுத்த லட்டுதான் இது' என்று அடிகள் கூறினர். விண்வெளிச் செல்லும் வன்மையுள்ள சித்தர் கையுறையுடன் வந்து அடிகளைக் கண்டு செல்வதெனின் அடிகள் சித்தாதி சித்தரன்றோ? வந்த சித்தரின் திறத்தை வடலூர்ச் சித்தர் அறிவார். வடலூர்ச் சித்தரின் திறத்தை வந்த சித்தர் அறிவார். மற்று யாரே அறிவர் !

## தீண்டிய பாம்பு மாண்டது

அப்பாசாமி செட்டியாரின் வாழைத் தோட்டத்திற்கு ஒரு முறை அடிகள் சென்றிருந்தார்கள். வாழையிலையிலிருந்த பாம்பு ஒன்று அடிகளாரது தலையில் தீண்டிற்று. தீண்டிய இடத்தில் இரத்தம் கசிந்தது. அடிகள் அவ்விடத்தில் திருநீற்றைப் பூசினர். தோட்டத்திலிருந்து திரும்பியதும் தலையில் திருநீறு இருப்பதைக் குறித்துச் சிலர் கேட்கவே அடிகள் பாம்பு தீண்டியதென்றனர். உடனே எல்லாரும் பாம்பை அடிக்க ஓடினர். அடிகளோ 'பாம்பு, தான் சாவ நம்மைத் தீண்டிற்று' அங்கு ஏன் செல்கிறீர்கள் என்றனர். சென்று பார்த்தவர்கள் பாம்பு அது இருந்த வாழையிலையின் மீதே இறந்து கிடக்கக் கண்டனர். பாம்பு தீண்டி மனிதர் இறப்பதுண்டு. மனிதரைத் தீண்டிப் பாம்பு இறந்ததனை அடிகள் வரலாற்றில் தான் காண்கிறோம். அடிகள் சாதாரண மனிதரோ?

## கூடலூர் தேவநாயகம் பிள்ளைக்கு அருளியது.

கூடலூரில் யோகி ஒருவர் இருந்தார். அவர் இறக்குந் தருவாயில் தன் மகன் தேவநாயகம் பிள்ளையிடம் "யார் முக்காடு போட்டுக்கொண்டு கையில் பிரம்பு வைத்துக் கொண்டு இங்கு வந்து இது தானா உன் தகப்பன் வியோகஸ்தானம் என இவ்விடத்தைப் பிரம்பால் தட்டிக் காட்டிக் கேட்பாரோ அவரையே குருவாகக் கொள்" என்று சொல்லி இறந்தார். மூன்று வருடங்களுக்குப் பின் தேவநாயகம் பிள்ளை வீட்டிற்கு எழுந்தருளிய பெருமான் பிரம்பால் அவ்விடத்தைத் தட்டிக் காட்டி அவ்வாறே கேட்டனர். தேவநாயகம் பிள்ளையும் தந்தையார் கூறிச் சென்ற குறிப்பை நினைந்து அன்று முதல் அடிகளையே குருவாகக் கொண்டார். தேவநாயகம் பிள்ளை இரசவாதத்தில் பெரும் பொருளைச் செலவிட்டிருப்பதை அறிந்த அடிகள் இரும்புத் தகடொன்றைப் புடமிட்டுப் பொன்னாக்கிக் காட்டி இச்சையற்றவனுக்கே இது இயலும், இனி இவ்வேலையை விட்டு விடுக என அறிவுரை கூறியருளினர். பிறகு ஒரு கால் அடிகள் தேவநாயகம் பிள்ளையை அழைத்துக் கொண்டு செஞ்சி மலைக்குச் சென்று மலை மீது பலவிடத்தும் சுற்றித் திரிந்தனர். தேவநாயகம் பிள்ளை களைத்துப் பசியால் வாடினார். அவரை ஒருமரத்தடியிலிருக்கச் செய்து விட்டுச் சற்று தூரம் சென்று மீண்ட அடிகள் பெரிய லட்டு ஒன்றையும் ஒரு செம்பில் தண்ணீரையும் கொண்டு வந்தளித்தனர். தேவநாயகம் பிள்ளை அவற்றை அருந்திய பின் செம்பைக் கொடுத்து விட்டு வருவதாகச் சொல்லிச் சிறிது தூரம் சென்று திரும்பினர்.

## அன்பர் ஒருவர்க்கு வழித்துணை அருளியது

மஞ்சக் குப்பத்தில் ஆங்கில ஆசிரியராகவும் பின்னாளில் சிதம்பரத்தில் தாசில்தாராகவும் விளங்கிய இராமகிருஷ்ணபிள்ளை என்பவர் நாள்தோறும் இரவில் மஞ்சக் குப்பத்திலிருந்து கூடலூர்க்கு வந்து அடிகளின் அருளுபதேசங்களைக் கேட்டுச் செல்வது வழக்கம். திரும்பும் போது இருளால் சாலையில் அஞ்சியபோதெல்லாம் யாரோ ஒருவர் அவர்க்குச் சற்று முன்னே செல்வது போலத் தோன்றும். அவரைத் துணையாகக் கருதி இவர் அஞ்சாது செல்வார். ஊரை நெருங்கியதும் முன் சென்றவர் மறைந்து விடுவார். இடையே உற்று நோக்கினும் அம்மனிதர் தோன்றுவதில்லை.

## தாசில்தாருக்கு அறிவுரை

மஞ்சக்குப்பம் தாசில்தார் வேங்கடசுப்பையர் நாடோறும் அடிகளின் உபதேசங்களைக் கேட்க வடலூர்க்கு வருவார். அவரது வண்டிக்கு முன் சக்கிலியன் ஒருவன் கொம்பு ஊதிக் கொண்டு ஓடி வருவது வழக்கம். ஒரு நாள் மிக வேகமாக ஓடிவர நேரிட்டதால் பசித்துக் களைத்த அவனது உடல் நடுங்கிற்று. அன்று ஐயர் கூட்டத்திற்கு வந்தவுடன் வழக்கம்போல் அடிகள்

அவரைப் பார்த்து விசாரிக்கவில்லை. சற்று நேரங் கழிந்தபின் அவரைப் பார்த்து "இந்த வாழ்வு எத்தனை நாளைக்கு இருக்கும். கொம்புக்காரனை முன்னமே போக வேண்டிய இடத்திற்கு அனுப்பி அவ்விடத்திற்குச் சிறிது தூரம் முன்னிருந்தே ஊதினால் போதாதோ" என்று புகன்றனர். தாசில்தாரும் அவ்வாறே செய்வதாகக் கூறிப் பொறுத்தருள வேண்டினார். பசித்துக் களைத்திருந்த சக்கிலிக்கு உணவளிக்கச் செய்த பின்னரே அடிகள் அன்றைய உபதேச உரையைத் தொடங்கினர்.

## குன்மம் நீக்கியது

வள்ளலார் கருங்குழியில் தங்கியிருந்த காலத்தில் பாலு ரெட்டியார் என்பவர் குன்ம நோயால் மிகவும் அவதிப்பட்டார். ஒரு நாள் வள்ளலாரிடம் வந்து தன் நோயைக் குணப்படுத்துமாறு விழுந்து வணங்கினார். வள்ளலாரும் மனமிரங்கித் திருநீறு அளித்து நீ குணமடைவாய் என்று வாழ்த்தி அனுப்பினார்கள். அவ்வாறே குன்மம் நீங்கிக் குணமடைந்த பாலு ரெட்டியார் மனம் ஆனந்தத்தால் பரவசமடைந்து வள்ளலாரிடம் வந்து, நான் தரும் காணிக்கையை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினார். ஆனால் வள்ளலாரோ இதே ஊரில் இருக்கிற சீனிவாச பெருமாள் கோயில் கவனிப்பார் அற்றுக் கிடக்கிறது. எனக்குத் தருவதாகச் சொன்னதை இந்தக் கோயிலுக்கு எழுதி வையுங்கள் என்று கூறினார். பாலு ரெட்டியாரும் அந்த சொத்தைச் சீனிவாச பெருமாள் கோயிலுக்கே எழுதி வைத்து விட்டார்.

## மற்றும் சில அற்புதங்கள்

ஒரு நாள் கூடலூரில் இருசப்ப செட்டியார் என்பவர் வீட்டின் மாடியில் அடிகள் இருந்தபோது திருவழுந்தூர் சுப்பிரமணியன், திருப்பாதிரிப் புலியூர் முத்துவீரன், திருவயிந்திரபுரம் பொன்னன் ஆகிய மூன்று நாதசுரக்காரர்கள் அடிகள் திருமுன்பு நாதசுரம் வாசித்து வணங்கினர். பெருமான் அவர்களை நோக்கி "நீ மணியே, நீ முத்தே, நீ பொன்னே" எனக் கூறி அவர்களது இசைப் புலமையின் அருமையினைப் பாராட்டித் திருநீறளித்து வாழ்த்தியருளினர். மற்றொரு நாள் சேலத்திலிருந்து கூடலூர்க்கு வந்திருந்த அறுவை வாணிகரின் பணியாள் ஒருவன் உள் நாக்கு வளர்ந்து துன்புற்றவனாய் அடிகளிடம் வந்து திருநீறு பெற்றுக் குணமடைந்தான். ஒருவன் கண் நோயால் முகம் வீங்கித் தெரு வழியே சென்றதைக் கண்டு திண்ணையில் அருளுரையாற்றிக் கொண்டிருந்த அடிகள் அவனை அழைத்து ரஸ்தாளி வாழைப் பழத்தைக் கண்களில் வைத்துக் கட்டச் சொல்லியருளினார். அவ்வாறே செய்யலும் கண் நோய் குணமாயிற்று.

ஒரு நாள் கூடலூர் அப்பாசாமிச் செட்டியார் வீட்டுத் திண்ணையில் வித்துவான்கள் பலர் கூடியிருந்து உரையாடினர். ஒரு வித்துவான் 'அவனன்றி

ஓரணுவும் அசையாது' என்றார். மற்றொரு வித்துவான் கைவல்லியத்தில் உள்ள 'இந்தச் சீவனால் வரும்' என்னும் பாட்டை எடுத்துக் கூறினார். ஒரு மணி நேரம் வாதம் நிகழ்ந்தும் முடிவேற்படவில்லை. வீட்டினுள்ளிருந்த வள்ளற் பெருமானைக் கேட்க உட்சென்றனர். பெருமான் வித்துவான்களை நோக்கி 'ஏன் காணும், வாதம் வந்து விட்டதோ?' என்று கூறி, உட்கார வைத்து "சாத்திரப் பிரமாணம் சொன்னால் உங்களுக்குச் சந்தேகம் நிவர்த்தியாகாது, ஒரு கதை சொல்லுகிறேன் கேளுங்கள். தெருவில் நிர்வாண சந்நியாசி ஒருவர் போனார். ஒருவன் அவர்க்கு வாழைப்பழம் கொடுத்தான். இன்னொருவன் பெண்கள் இருக்கும் தெருவில் நிர்வாணமாய்ப் போகிறானென்று கோபித்துக் கல்லால் அடித்தான். மற்றொருவன் அவ்விருவரையும் சாமியாரையும் அழைத்துக் கொண்டு நீதிபதியிடம் சென்றான். சென்று அவ்விருவரையும் காட்டி 'இந்தப் புண்ணியவான் பழம் கொடுத்தான். இந்தப் பாவி கல்லால் அடித்தான்' என்றான். நீதிபதி சாமியாரை 'உம்மை யார் அடித்தது?' என்று கேட்டார். சாமியார் 'வாழைப் பழம் கொடுத்தவன் அடித்தான்' என்று கூறினார். 'யார் வாழைப் பழங் கொடுத்தது' என்று கேட்டதற்குக் 'கல்லால் அடித்தவன் வாழைப் பழம் கொடுத்தான்' என்று விடையளித்தார். நீதிபதி 'கல்லாலடித்தவன் யார்?' என்று கேட்டார். 'இட்டுக் கொண்டு வந்தவன் கல்லால் அடித்தான்' என்றார் சாமியார். நீதிபதி வாக்கு மூலம் எழுதத் தெரியாது மயங்கி 'இவர் மேற்படியிலுள்ளவர்' என ஒருவாறுணர்ந்து அடித்தவனைத் தண்டித்தார். சாமியாரைப் போன்றவர்களுக்கு 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பது பொருந்தும். பழம் கொடுத்தவன் இவன், கல்லாலடித்தவன் இவன் என்று பேதங் கொண்டவர்களுக்கு 'இந்தச் சீவனால் வரும்....' என்ற பாட்டுப் பொருந்தும் என்று கூறிக் கதையை முடித்து வித்துவான்களின் ஐயத்தைத் தெளிவித்தருளினர். அவர்களும் உண்மையை உணர்ந்து சமாதானமாயினர்.

இங்ஙனம் கூடலூரில் பல அற்புதங்கள் நிகழ்ந்தன. நாடோறும் மாலையில் அடிகளைக் காணப்பலர் வந்து கூடுவர். இரவு முன்னேரத்தில் அடிகள் அவர்களுக்கெல்லாம் அருளுரை பகர்வர். அதிகாரிகள் முதல் அனைவரும் வந்து அடிகளைக் கண்டு வணங்கியும் அருளுரைகளைக் கேட்டும் பயன் பெறுவாராயினர்.

## சம்பேடு ஸ்ரீதர நாயக்கருடன் சந்திப்பு

இராமலிங்கரின் வயது 44.

1867ம் ஆண்டு ஜனவரி மாதம் 16ம் நாள் திருப்பாதிரிப்புலியூரை யடுத்த பெண்ணையாற்றங்கரையில் கூடியிருந்த திருவிழாக் கூட்டத்தில் பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்த சம்பேடு ஸ்ரீதர நாயக்கர் என்பவர் உருவ வழிபாடு செய்யக் கூடாதென்றும், அருவ வழிபாடே தெய்வ வழிபாடென்றும் பேசினார்கள். அவர் பேசியதைக் கேள்வியுற்ற மக்கள் நம் பெருமானாரிடம் வந்து நீங்கள் இருவரும் கலந்துரையாடி ஒரு சரியான விளக்கம் தந்து எங்களது குழப்பத்தைப் போக்க வேண்டும் என்று வேண்டினார்கள். மக்கள் விரும்பியவாறே

நம் பெருமானாரும் ஸ்ரீதர நாயக்கருடன் விவாதம் செய்து உருவ வழிபாடு தேவை என்றும் உருவம் கரைந்தே அருவம் ஆகும் என்றும் துவைதமாக இருந்தால் அத்வைதம்தானே ஆகும் என்றும் விளக்கி உருவ வழிபாடும் அருவ வழிபாடும் அவரவர் பக்குவத்திற்கேற்ப அடுத்தடுத்த வகை என்று கூறி வாதில் வென்றார்.

அன்று நடந்த வாதப் பிரதிவாதத்தின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

## உருவ வழிபாட்டைப் பற்றிப் பிரம்ம சமாஜத்தாருடன் வாது 16.1.1867

அட்சய ஆண்டு தைத் திங்கள் ஐந்தாம் நாள் (16.1.1867) திருப்பாதிரிப்புலியூர்க் கடுத்த பெண்ணை நதித் தென்கரையில் உண்ணாமுலைச் செட்டிச் சாவடிக்கருகில் ஒரு நைமித்தியத் திருவிழாவைப் பற்றிப் பலர் கூடினர். அடிகளும் அதுசமயம் அங்கிருந்தார்கள். பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்த ஸ்ரீதரஸ்வாமி நாயக்கர் என்பவரும் அங்கு வந்திருந்தார். அவர் பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்தவராதலின் உருவ வழிபாட்டை அறவே வெறுப்பவர். உருவ வழிபாட்டை மறுத்து அப்பக்கத்தில் முன்னரே பலவிடங்களில் உரையாற்றியவர். அவர் ஆற்றிய உரைகளைக் கேட்டுக் குழப்பமடைந்திருந்த சிலர் அவர் கூற்றினை அடிகளுக்குத் தெரிவித்து உண்மையை விளக்கியருளுமாறு வேண்டினர். அடிகளுக்கும் ஸ்ரீதர நாயக்கருக்கும் சொற்போர் மூண்டது

அன்று நடந்த வாதத்தை 'நடந்த வண்ணம் உரைத்தல்' என்ற தலைப்புடன் ஆலப்பாக்கம் நாயனா ரெட்டியார் எழுதி வைத்திருந்தார். 1893ஆம் ஆண்டில் ச.மு.க. அதனை வெளியிட்டார். 'நடந்த வண்ணம் உரைத்தல்' வருமாறு:

கல்வி கேள்விகளால் சிறந்த அறிவுடையவர்களுக்கு வந்தனஞ் செய்து வெளிப்படுத்துகை :

அக்ஷய வருஷம் தை மாதம் 5ம் தேதியில் கூடலூரைச் சார்ந்த திருப்பாதிரிப்புலியூர்க்கடுத்த பெண்ணை நதித் தென்கரையில் உண்ணாமுலைச் செட்டிச் சாவடிக்குச் சமீபத்தில் ஓர் நைமித்தியத் திருவிழாவைப் பற்றி அறிவுடையோரனேகர் கூடினர். அவ்விடத்தில் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளுமிருந்தனர். அப்போது பிரம சமாஜம் சம்பேடு ஸ்ரீதரஸ்வாமி நாயக்கர் சிலருடன் வந்திருந்தனர்.

அதற்குமுன் திருப்பாதிரிப்புலியூரில் ஸ்ரீதரஸ்வாமி நாயக்கர் செய்த பிரசங்கத்தினாற் சந்தேகத்திலமுழ்ந்திய சிலர் தமது சந்தேகத்தை நீக்கிக் கொள்வதற்கு இது தருணமென்று கருதி அக்கூட்டத்தில் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளை நோக்கி "ஐயா! பிரம்மத்தை நினைப்பது தகுதியென்றும் விக்கிரக ஆராதனை செய்வது தகுதியல்லவென்றும் இங்கே வந்திருக்கின்ற ஸ்ரீதரஸ்வாமி நாயக்கரவர்கள் எங்கள் முன்பாகப் பல முறை பிரசங்கித்தார். அதனால்

எங்களுக்குச் சந்தேகமுண்டாகி யிருக்கின்றது. அந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்விக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள்.

அப்போது, சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள், "பிரம்மத்தையறியத் தொடங்கினோர் அறிதல் வேண்டும். விக்கிரக ஆராதனை செய்யத் தொடங்கி னோர் செய்தல் வேண்டும். இவ்விருவகையும் அதற்குரிய பக்குவர்களுக்கு அடுத்த வகைகளென்றறிய வேண்டும்" என்று சொல்லினர்.

அப்போது அங்கிருந்தவரிற் சிலர், நாயக்கரைப் பார்த்து, "இது விஷயத்தில் தங்கள் கோட்பாட்டை வெளிப்படுத்தி நிறுத்தல் வேண்டும்" என்றார்கள். நாயக்கர் லிகிதமூலமாய் வெளிப்படுத்துவேனென்றார்.

அதுகேட்டு, "ஓர் சபையில் மாறுபட்ட இருவர் தங்கள் தங்கள் கோட்பாடுகளை அந்தச் சபையிலறிஞரறிய எடுத்துரைத்து அதற்குத்தக்க காட்சி, அநுமானம், உவமானம் சத்தம் முதலிய பிரமாணங்களும் உடன் படல், மறுத்தல், ஒரு சாருடன்பட்டு மற்றொரு சாருடன்படாமை, முற்று முடன்படல் போன்றுடன்படாமை முதலிய கோட்பாடுகளுக் கமைந்த பல வகை யுக்திகளுக்குப் பொருந்த விரித்து விவகரித்து அந்த விவகாரத்திற் சந்தேக விபரீத மயக்கத்திற்கு இடங் கொடாமல் முடிந்த நிச்சயத்தை, பின்னர் லிகித மூலமாய்ப் பிறரறிய வெளிப்படுத்தல் மரபேயல்லது, மாறுபட்டோர் இருவரும் வேறு வேறிடங்களிலிருந்து அறிஞர் சபாபதி பத்தியமின்றித் தங்கள் தங்கள் மனஞ்சென்ற வழி அளவை எல்லையைக் கடந்தெழுதிக் கொள்வதில் ஞாயந் தோன்றாது என்றும், ஒழியாத லிகிதச் சண்டையாக முடியுமென்றும், அது தர்க்க மரபல்லவென்றும்" சுவாமிகள் சொல்லினர்.

அங்கிருந்தவரிற் சிலர், நாயக்கரைப் பார்த்து "ஐயா! தங்கள் கோட்பாட்டை வெளியிட்டுப் பிரமாணத்தால் நிலைபெறச் செய்து எங்களையும் அவ்வழியில் நடத்துவிப்பதற்கு அடுத்த தருணமிதுவாக விருக்க இத்தருணத்திலிப்படிச் சொல்வது தங்கள் கோட்பாட்டிற்கு அழகல்ல" என்றார்கள்.

உடனே நாயக்கர் "நித்திய நிரஞ்சன நிர்ம்மல நிராமய நிராலம்ப சொரூபமும் அவாங் மனோகோசரமுமான பிரமத்தை நினைப்பது தக்கதென்பதும், விக்கிரகாராதனை செய்வது தகாதென்பதும் எங்கள் பிரம்ம சமாஜ வேத சமாஜ கோட்பாடு" என்று வெளியிட்டார்.

"அவாங் மனோகோசரமான பிரமம், மனத்தினால் எப்படி நினைக்கப்படும்! ஆகாயம் அடியாலும் படியாலும் அளக்கப்படும், காற்று கையாற் பிடிக்கப்படும் என்பவைபோல், வார்த்தை மாத்திரத்தாலன்றி அர்த்த லக்ஷ்யானுபவங்களுக்கு இடம்பெறவில்லையே" என்று சுவாமிகள் வினவினர்.

"மிதக்கியானமுள்ள நம்மிட மனத்திற்குப் பரிமித வஸ்துவைப் போலடங் காததென்று சொன்னதேயல்லாது, ஏகதேசம் மனத்திற்கு விளங்காததென்று சொன்னதல்ல" என்று நாயக்கர் உத்தரித்தனர்.

"மனத்திற்கு அகோசர மென்பது, மனத்திற்கு விஷயப்படாததென்று பொருள்படுமேயல்லாது, சிறிது விஷயமாகிப் பொருள் கொள்வது லக்ஷண

வுபலக்ஷண விதியல்லவென்றும், ஒரு காலத்தில் சிறிது விஷயமாகும் பிறிதொரு காலத்திற் சிறிது விஷயமாகும் இவ்வாறு முழுவதும் விஷயமாகுமென்றும், அவாங் மனோகோசர மென்றதில், மனத்திற்குச் சிறிது விஷயமானபடி வாக்குக்குஞ் சிறிது விஷயமாதல் வேண்டுமென்றும், இங்ஙனம் மனவாக்குகளுக்குச் சிறிது விஷயமாகுமென்று மற்ற இந்திரியங் களுக்கும் விஷயமாகுமென்பது தானே விளங்குதலால் பிரம்ம லக்ஷணத்தோடு விரோதப்படுமென்றும், மன முதலான அந்தக் கரணங்களுக்கும் கண் முதலான இந்திரியங்களுக்கும் நாம ரூபக்கிரியைகள் விஷயமாகுமல்லது தத்துவா தீதமாகிய பிரமம் விஷயமாகும் என்பது விபரீத உணர்ச்சி என்றும், மனோலயங் கிடைத்த பின்னர் பிரம்மா நுபவங் கிடைக்குமென்றும், மனஞ் சிறிது தோன்றினும் ஆத்ம ஞானம் விளங்கா தென்றும், மனம் - அசத்து, சடம், நித்தியம், துக்கம், அசுத்தம் உடையது ஆகலின் மனத்திற்குப் பிரமம் எவ்வகையினும் விஷயமாகாதென்றும் இவ்வாறே வேத முதலிய கலைகளிலும் ஆப்த வாக்கியங்களிலும் ஆணையிட்டி ருப்பதென்றும், பிரம்மம் மனத்திற்கு விஷயப்படாதென்பது அநுபவத்திற்கும் மற்ற உேறதுக்களுக்கும் யூகங்களுக்கும் பொருந்துகின்ற பக்ஷமென்றும்" சுவாமிகள் சொல்லினர்.

பின்னர் சிலபொழுது நாயக்கர் சும்மாவிருந்தனர். அங்கிருந்தவரிற் சிலர் நாயக்கரைப் பார்த்து, "சும்மாவிருக்கப்படாது உத்தரிக்க வேண்டும்" என்றார்கள். நாயக்கர் சற்று நேரஞ் சென்று மீளவும் "மனத்தினால் பிரம்மத்தை நினைக்கக் கூடும்" என்று முன் சொல்லியதையே சொல்லினர்.

"தங்களிஷ்டப்படி விதியைக் கடந்த விவகாரமுந் தடைப்படுகின்றது. பிரமம், மனத்திற்கு விஷயமாகுமானால் கண்ணுக்கும் விஷயமாகும், இவைகளுக்கு விஷயமாகுமானால் மற்ற இந்திரியங்களுக்கும் விஷயமாகும் என்று நான் முன் சொல்லியதைத் தாங்கள் சிறிது உய்த்துணர வேண்டும்" என்று சுவாமிகள் சொல்லினர்.

நாயக்கர் சற்று நேரஞ் சென்று "மனத்திற்கு விஷயமாவதெல்லாங் கண்ணுக்கு விஷயமாகுமோ?" என்றார். சுவாமிகள் ஆகுமென்றார்.

நாயக்கர் "மற்ற இந்திரியங்களுக்கு விஷயமாகாமல் மனத்திற்கே விஷயமாகத் தக்கது ஒன்றுமில்லையோ! ஒன்றுமில்லையோ!" என்று பலமுறை வியந்து வினவினார்.

"மனத்திற்கே விஷயமாகத் தக்கது யாது? அதனைத் தாங்களே வெளிப்படுத்தல் வேண்டும்" என்று சுவாமிகள் சொல்லினர்.

"ஆனந்தம் மனத்திற்கே விஷயமாவ" தென்று நாயக்கர் சொல்லினர்.

"ஒரு ரூப விஷயத்தைக் கண்கள் கண்டு, அந்த ரூப விசேஷத்தால் ஆனந்த விருத்தியை யடைந்து, பின்னர் அதன் வழியாக மனத்திற்கும் அவ்வானந்தத்தை யடைவிக்குமென்றும், கண்கள் முன்னர் ஆனந்தத்தை யடைந்ததற்கு அடையாளம், அக்கண்களிலிருந்து சிந்துகின்ற பாஷ்பங்களே யென்றும் அதை யானந்த பாஷ்பமென்று வழங்குவதே போதுமான பிரமாண

மென்றும், இஃதன்றி நேத்திரானந்தம் சிரவனானந்தம் என்று அறிவுடையோர் பிரயோகிப்பதை யூகிக்க வேண்டுமென்றும், இங்ஙனம் கண் முதலிய இந்திரியங்களும் மனமுதலிய கரணங்களும் ஆன்மாவுக்கு உபகாரக் கருவி களாதலால் அவைகள் ஆனந்தமடைந்தன வென்பது உபசரிப்பென்றும், ஆனந்தம் பிரத்தியேக ஆன்ம ஞான விஷயமென்பது உண்மையென்றும்" சுவாமிகள் சொல்லினர்.

பின்னர் சற்று நேரம் சென்று, "ஓரிந்திரியத்திற்கு விஷயமாவது வேறோரிந்திரியத்திற்கும் விஷயமாகு மென்றது எப்படி? காதுக்குப் புலப்படுவது மூக்குக்குப் புலப்படாது, கருத்துக்குப் புலப்படுவது கண்ணுக்குப் புலப்படாது" என்று நாயக்கர் சொல்லினர்.

"முன்னர் அவாங் மனோகோசரமென்றதற்குத் தாங்கள் கொண்ட கருத்தின்படி வாக்குக்கும் மனத்திற்கும் பிரமஞ் சிறிது விஷயமாகுமானால் கண்களுக்கும் கைகளுக்கும் சிறிது விஷயமாகுமென்று தாங்களே யூகித்தறி யலாமென்றும், ஒரு பொருள் மனத்தினால் நினைக்கப்படுமானால் காதினாலுங் கேட்கப்படும், காதினாற் கேட்கப்பட்டது கண்ணினாலுங் காணப்படும், கைகளாலும் பிடிக்கப்படுமென்பது உபதர்க்க உபலக்கண மென்றும், ஸ்தூல சூக்கும காரண பூதங்களால் உருவாகித் தோன்றுகின்ற பொருளினிடத்து மனமுதலான கரணங்களுக்கும் கண் முதலான இந்திரியங்களுக்கும் விஷயங்களாகத் தக்க பண்புகள் உண்டாயிருக்குமென்று அறிந்த பக்ஷத்தில் ஒரு பொருள் ஒரு பண்பினால் ஓரிந்திரியத்திற்கு விஷயமாகுமானால் அந்தப் பொருள் மற்றொரு பண்பினால் மற்றோரிந்திரியத்திற்கும் விஷயமாகுமென்று சாதாரண ஜனங்களாலும் அறியப்படுமென்றும், அக்ஷயோக ஞாயத்தாலும் இந்திரியங்களின் சொரூப ரூப சுபாப வியாபக வியத்தி விசேஷ சாமாநிய முதலியவைகளையும் வெளிப்படுத்துகின்ற தத்துவ சாத்திரங்களாலும் பிரகிருதி சாத்திரங்களாலும் உய்த்துணர்ந்து தெளியப் படுமென்றும், கண்களும் மனமும் அதிகரனோ பாதான சம்பந்த முடையதென்றும், மத்திய பூத தூலசூக்கும காரியமென்றும், இதனால் மனத்திற்கு விஷயமாவது கண்களுக்கும் விஷயமாகுமென்றும், கண்களுக்கு விஷயமாவது மனத்திற்கும் விஷயமாகுமென்றும்" சுவாமிகள் சொல்லினர்.

அந்தச் சமயத்திலிவைகளைக் கேட்டுச் சூழநின்ற திருவயிந்திரபுரம் வைஷ்ணவப் பிராமண பண்டிதர்களும் ஸ்மார்த்த பண்டிதர்களும் அந்தச் சபையிலுட் புகுந்திருந்து சுவாமியை நோக்கி, "மனத்திற்குப் புலப்படுவது கண்களுக்கு எப்படிப் புலப்படும்" என்று வினவினர்.

"ஒரு பொருளில் ஸ்தூலப் பிரகிருதி, சூக்குமப் பிரகிருதி, காரணப் பிரகிருதி, மகா காரணப் பிரகிருதி, மூலப் பிரகிருதி, என ஐவகைப் பிரகிருதி அங்கங்களுண்டென்றும், அவைகளில் காரணப் பிரகிருதி மகா காரணப் பிரகிருதி யங்கங்கள் மனத்திற்கு விஷயமாகுமென்றும், ஸ்தூல சூக்குமப் பிரகிருதி அங்கங்கள் கண்களுக்கு விஷயமாகுமென்றும் இவை சாதாரண லக்ஷணமென்றும், அசாதாரண லக்ஷணத்தில் கண்ணறிவு பலமுறை சாதன லக்ஷியத்தால் நுட்பவறிவாகி மனத்திற்கு விஷயமாகின்ற காரண மகாகாரணப் பிரகிருதியங் கங்களையும் அறியுமென்றும், இவ்வாறறிவது அசாத்தியமல்ல சாத்தியமேயென்றும், இதனை அக்கயோக சாதன முதலிய வழிகளாலும் தத்துவ சாத்திரங்களாலும்

அநுமான முதலிய பிரமாணங்களாலும் அறிந்து கொள்ளலாமென்றும், அன்றி மனத்திற்குப் புலப்படுவது பிரபஞ்சம் அது கண்களுக்கும் புலப்படுமென்றும்" சுவாமிகள் சொல்லினர்.

"மனத்திற்குப் பிரமம் புலப்படாதோ" என்று பண்டிதர் வினவினார்கள்.

"பிரம்ம மாயா தீதமாதலால், மாயா காரியமாகிய மனத்திற்குப் புலப்படாதென்றும்" சுவாமிகள் சொல்லினர்.

ஆனால், "பிரமத்தை யெப்படி யறியலாம்" என்று பண்டிதர் வினவினார்கள்.

"ஆன்ம ஞானத்தால் அறியலாம்" என்று சுவாமிகள் சொல்லினர். பின்னர் சம்மதித்தவர்களாகப் பண்டிதர் சும்மா விருந்தார்கள்.

அதன்மேல் அங்கிருந்தவர்களிற் சிலர் நாயக்கரைப் பார்த்து, "சும்மா விருக்கப்படாது, தருண நேரிட்டபோதே உத்தரிக்க வேண்டும்" என்றார்கள். நாயக்கர், வழக்கப்படி "லிகிதமூலமாய் உத்தரிக்கின்றேன்" என்று சொல்லினர். அதுகேட்டு அந்தச் சபையிலுள்ளவர்களும் அதன் புறத்து நின்றவர்களும் சிறிது சிரித்தார்கள். அது பொறாமல் நாயக்கர் "இன்னும் எட்டுத் தினத்திற்குள் இவ்விடத்தில் என்னைச் சிரித்தவர்களை யெல்லாம் நான் சிரிப்பிக்கின்றேன்" என்று சபதங் கூறினர்.

அதுகேட்டு அந்தச் சபையில் உணர்வுத் தயவுமுடைய வொருவர், "இதென்ன கெர்வித வார்த்தை" என்றனர்.

அது பொறாமல் நாயக்கர் அளவிறந்த கோபாவேசத்தோடுங் கண்கள் சிவப்பத் தேகம் பதைப்ப வாயாற் சில பழிபடு வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டே திடிரென்றெழுந்து இடி முழங்கினாற்போல் ஆரவாரித்தனர். இவருக்குச் சகாயமாய்ப் பின் வந்தவர்களும் நெருப்பில் நெய்விட்டதுபோற் கோபமூண்டு கோடித்தனர்.

அத்தருணத்தில், சுவாமிகள் நாயக்கருக்கும் மற்றவர்களுக்குங் கோபந்தணியத்தக்க நல்ல வார்த்தைகளைச் சொல்லி எழுந்தவரை மீளவுமிருக்க வைத்து, "ஐயா, நாயக்கரவர்களே! கெர்வித வார்த்தையென்ற சத்தத்தின் லக்ஷியத்தை நாம் உள்ளபடியறிந்தால் இவ்வளவு தீவிரம் நேரிடு மென்று எனக்குத் தோன்றவில்லை. ஆயினும் போனது போக இனியாவது இச்சபையாரறிய பிரமம் மனத்திற்கு விஷயமாகாதென்று நான் தெரிவித்தபடி தாங்களும் சம்மதிக்கின்ற பக்ஷத்தில் சம்மதமென்று சொல்லிச் சும்மாவிருக்க வேண்டும், சம்மதியாத பக்ஷத்தில் பிரமாணத்தாலும், யுக்தியாலும் அனுபவத்தாலுந் தங்கள் கோட்பாட்டை நிறுத்துவீர்கள்" என்று சொல்லினர்.

"நாயக்கர் இப்போது என்னை விட்டு விட்டால், பின்பு லிகித மூலமாக வாதிக்கின்றேன்" என்று சொல்லினர்.

"எதிர் நின்று வாதிப்பதற்குக் கூடாமையால் லிகித மூலமாய் வாதிப்பீர்களென்பதில் நம்பிக்கையில்லை யென்றும், லிகித மூலமாய் வாதிப்பது

தர்க்க லக்ஷண மரபல்லவென்று முன்னரே குறித்திருக்கின்றேன்" என்றுஞ் சொல்லி முடித்து அந்தச் சபையிற் சிலரை நோக்கி "பிரம்மா நுபவம் விக்கிரக ஆராதனை செய்தாலல்லது வாராதென்றும், விக்கிரகம் என்பது விசேட இடம் என்று பொருள்படுமென்றும், ஆன்மா இருப்பதற்குக் கிரகம் மனிதர் முதலிய சீவ தேகங்களென்றும், பிரம்மப் பிரகாசமிருந்து வெளிப்படுவதற்கு விக்கிரகம் தேவ தேகங்களென்றும், அந்தத் தேவ தேகங்களாகிய விக்கிரகங்களில் விதிப்படி பக்தியோடு உபாசிக்கில் பிரம்மப் பிரகாசம் எளிதில் வெளிப்பட்டு அனுக்கிரகிக்கு மென்றும், அவ்வாறு விசேட இடமென்று சொல்லப்படுகின்ற விக்கிரகங்களில் பிரம்மப் பிரகாசம் வெளிப்பட்டு அனுக்கிரகித்ததற்கு அடையாளம் சில காலத்திற்குமுன் விக்கிரகாராதனஞ் செய்த பக்தர்கள் குஷ்டம் குன்மம் முதலான தீராத வியாதிகளைத் தீர்த்தும் இறந்தவர்களை எழுப்பியும் அசாத்தியமான அநேக மகத்துவங்களை நடத்தியும் இருந்ததே போதுமானதென்றும், இப்போதும் விக்கிரகாராதனை செய்கின்ற பக்தர்கள் சில மகத்துவங்களைச் செய்து வருகின்றார்களென்றும், பிரம்ம சமாஜத்தார் வேத சமாஜத்தார் அந்த அடையாளங்களை யுடையவர்களாகத் தோன்றவில்லை யென்றும், நாமெல்லாம் நமது பக்குவத்திற்குத் தக்கபடி விக்கிரகாரதனை செய்து அதனால் அருளைப்பெற்று அதனால் அறிவு விளங்கி அதனால் பிரம்ம சுகத்தை பயனுபவிக்கலாமென்றும்" சுவாமிகள் சொல்லிக் கொண்டே யெழுந்தனர்.

குறிப்பு :

முன்பு உருவ வழிபாடு செய்து வந்த குமரகுருபரர், அருணகிரிநாதர் போன்ற மகான்கள் தாங்கள் பெற்ற அருட்சக்தியால் தீராத வியாதிகளையும் தீர்த்து வைத்த அற்புதத்தை வள்ளலார் எடுத்துக் காட்டித் தற்போதும் விக்கிரக ஆராதனை செய்கின்ற பக்தர்கள் சில மகத்துவங்களைச் செய்து வருகின்றார்கள் என்றும் சுட்டிக்காட்டி விக்கிரக ஆராதனை செய்யாத பிரம்ம சமாஜத்தார் போன்றோர் அந்த அடையாளங்கள் உடையவர்களாகத் தோன்ற வில்லை என்பதையும் விளக்கியருளியுள்ளார்கள். விக்கிரகங்களைத் தேவ தேகங்கள் என்றும் மனிதர்களை, ஜீவ தேகங்கள் என்றும் கூறியவர், விக்கிரகங்களை முறைப்படி வழிபட்டு வந்தால் பிரமப் பிரகாசம் எளிதில் வெளிப்பட்டு அநுக்கிரகிக்கும் என்று கூறி விக்கிரக வழிபாட்டை நிலை நிறுத்தினார்.

## இலக்கணக் கடிதம்

### திருச்சிற்றம்பல ஞானினகள்

திருக்கழுக்குன்றத்தைச் சேர்ந்த இவர் திருச்சிற்றம்பல ஞானியார் என்றும் வழங்கப் பெறுவர். அடிகளிடம் மிகுந்த அன்பு பாராட்டிப் பழகியவர். தமக்கு உபதேசம் செய்தருளும்படி ஒருகால் அடிகளை இவர் வேண்டினார். கல்லாடைத் துறவியாகிய ஞானியார்க்கு வெள்ளை வேட்டிக்காரராகிய தாம் உபதேசஞ் செய்வது தகாதென்று அடிகள் தடுத்தனர். எனினும் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கேட்கவே தன்னைத்தான் உணர வேண்டுமென்ற கருத்துப்பட ஒரு பாடல் செய்தளித்தனர்.

**நின் நிலையை என்னருளால் நீயுணர்ந்து நின்றடங்கின்**
**என்னிலையை அந்நிலையே எய்துதிகான் - முன்னிலையை**
**இற்குருவி னாட்டாதே என்றுரைத்தான் ஏரகம் வாழ்**
**சற்குரு என் சாமிநாதன்**

இப்பாடலைப் பெற்றுக் கொண்ட ஞானியார் அகமிக மகிழ்ந்தவராகி மதுரைக்குச் சென்று திருஞானசம்பந்த சுவாமிகள் மடத்தில் தங்கினார்.

கருங்குழியில் அடிகள் உறைந்த வீட்டிலிருந்த புருஷோத்தம ரெட்டியார் ஒரு சமயம் வீட்டில் கோபித்துக் கொண்டு வெளியேறி விட்டார். அவர் மதுரைக்குச் சென்று திருஞானசம்பந்தர் மடத்தில் திருச்சிற்றம்பல ஞானிகளுடன் இருப்பதாகக் கேள்வியுற்ற குடும்பத்தினர் மதுரை மடத்திற்குக் கடிதமொன்றெழுதி அவரை வருவித்துதவுமாறு அடிகளை வேண்டினர். அடிகளும் மதுரை மடத்துச் சுவாமிகளுக்கு ஒரு திருமுகம் அனுப்பினர். அத்திருமுகத்தை மடத்திலிருந்த சிலர் பார்க்க நேரிட்டது. கணக்கிலவதானி தேவிபட்டினம் முத்துசாமி பிள்ளை என்பவர் அப்போது அங்கிருந்தார். அடிகளின் திருமுகத்தைப் பார்த்த அவர், 'வள்ளலாரைப் பெரிய வித்துவான் என்று சொல்கி றார்களே, அவருடைய படிப்பு இலக்கணமில்லாப் படிப்பு' என்றார். திருச்சிற்றம்பல ஞானிகள் அதனைக் கேட்டு வருந்தியவராய், 'வள்ளற்பெருமான் விவகரிக்குங் காலத்தில் சிதறிய இலக்கணத்தில் கோடியிலொரு கூறே இவ்வுலகில் வழங்குகிறது' என்றார். அப்படியாயின் இலக்கணச் சிறப்புடன் வள்ளலாரிடமிருந்து ஒரு கடிதம் வருவித்து அனைவர்க்கும் காட்டுமாறு மடத்துச் சுவாமிகள் கூறினர். ஞானிகள் அடிகட்கு ஒரு கடிதமெழுதி, அவ்விடத்திய செய்திகளை இலக்கண வகையால் தனக்குத் தெரிவிக்க வேண்டுமென விண்ணப்பித்தார். தொழுவூர் வேலாயுத முதலியாரும் ச. ஆறுமுக முதலியாரும் குடியிருந்த வீட்டின் முகப்பில் அடிகள் இருந்த போது அக்கடிதம் வந்தது. கடிதத்தைக் கண்ட அடிகள் 'பிச்' என்று சொல்லி எறிந்து விட்டனர். உடனிருந்த தொழுவூர் வேலாயுத முதலியாரும் மற்ற அன்பர்களும், இலக்கணப் புலமையுடன் ஒரு திருமுகம் எழுதியனுப்ப வேண்டுமென்று வற்புறுத்தினர். அடிகளும் மறுக்க மாட்டாது இரண்டொரு வரிகள் மட்டும் எழுதி வேலாயுதனாரிடம் கொடுத்துக் கடிதத்தை முடித்தனுப்பக் கட்டளையிட்டனர். அவ்வாறே வேலாயுதனார் பின்வரும் இலக்கணப் பத்திரிகையை எழுதியனுப்பினார்.

> உணர்ந்தோரானியல் வகையவின்ன வென்றவற்றிற் பின் மொழி மறைக்கு முதலீறு விளங்க முடிப்பதாய பின் மொழியடைசார் முன் மொழி ஞாங்கர் விளங்கிய ஞானிகட்கு பொய்யற் கெதிர்சார்புற்ற மூலியொன்று வளைத்து வணக்கஞ் செய்த கசுந நீரெழி லென்றும் வான் வழங்கு பண்ணிகாரமென்றும் நாகச்சட்டு மீனென்றும் வேறு குறிப்பதொன்று.
>
> அண்மைச் சுட்டடுத்த வேழாவதன் பொருண்மை யும்மையடுத்த பல்லோர் வினாப் பெயர்ப் பொருள் குறிஞ்சி யிறைச்சிப் பொருளொன்ற னோடு புணர்ப சேய்மைச் சுட்டடுத்த வத்திறத்தியல் யாது

இரண்டனுருபொடு புணர்ந்த தன்மைப் பன்மை யாறாவதன் பொருட்டாக்கினார்க் குய்த்த கற்பிய லதிகரிப்பின் வருத்தலை மகட் பெயர விரண்டினோ டிரண் டிரண் டூகக் கழிவிலைப் பெயரவு மகார வீற்று முதனிலைத் தனிவினைச் செயவென் வாய்ப்பாட்டு வினையெச்சத் தனவாகக் கலம்பகச் செய்யுளுறுப்பாற் சிறத்தும்.

இரு வகை முதற்பொரு ளொன்றன் பாகுபாட் டுறுப்பிற் குறித்த வைம் பெரும் பூதத்தோர் விசேடணத் தெதிர்மறை நடுக்குறையியற்சொற் பெயர வுயிர்ப் பெயராக வெதிர்காலங் குறித்து நின்றது சிலவினைச் சார்பான் விலங்கு சூடிய வரைவில் வெளியாம்.

இதனோ டீரிரு வகைப்பட்ட வோர் சார் புது நிலஞ் செலவுய்த் தனம் வேண்டுழி வேண்டியாங் குய்க்க மற்றைய பின்னர் வரைதும்

இற்றே விசும்பிற் கணைச்சலம்

இங்ஙனம்,

நங்கோச்சோழன் வீரமணி

சூடியார் திருவாணைப்படிக்கு

இலக்கணத் திருமுகத்தைப் பெற்ற திருச்சிற்றம்பல ஞானிகள் மடத்திலுள்ள அனைவர்க்கும் காட்டினர். அவதானியார் முத்துசாமி பிள்ளைக்குப் பொருள் விளங்காததால், 'வேணுமென்றே ஒரு வித்துவான் பூட்டுப் போட்டால் அந்த வித்வான் தான் அதைத் திறக்க வேண்டும்' என்றார். ஞானிகள், 'அப்படியாயின் நீர் ஒரு பூட்டுப் போடும்' என்றனர். அவதானியார்,

**தகரவரிக் கூந்தலர்கா மாதிமுந்நீர் தாழும்**
**தகரவரி நாலைந்து சாடும் -- தகரவரி**
**மூவொற்றியூர் பொருளை மூன்று மங்கை யேந்துமொரு**
**சேவொற்றியூரரனைச் செப்பு**

என்ற வெண்பாவை இயற்றியனுப்பினார். இதற்கு அவதானியார் கருதிய உரையையும் அவர்க்கும் விளங்காத வேறு ஒரு விசேட உரையையும் அடிகள் செய்து விடுத்தனர். அவற்றைக் கண்ட அவதானியார் செருக்கொழிந்தவராகி கருங்குழிக்கு வந்து தெருக்கோடியிலேயே வண்டியை விட்டுடிறங்கி வீதியில் வீழ்ந்து வணங்கிக் கொண்டே வந்து அடிகளைக் கண்டு பணிந்து 'வித்துவான் என மதித்திருந்தேன், பரிபூரண ஞானி என்று உணர்ந்திலேன் மன்னிக்க வேண்டும்' என வேண்டினார். அடிகளின் தோத்திரமாக ஒரு பாடலையும் பாடிப்பணித்தார். அப்பாடல் கிடைக்கவில்லை.

## அடிகளும் அரசாங்க அதிகாரிகளும்

உயர்தர அதிகாரிகள் பலர் அடிகளிடம் அன்பு பூண்டொழுகினர் என்றும், அடிகளுடன் இருப்பதை விரும்பித் தங்கள் இருப்பிடங்களை அடிகளுக்கு அருகில் மாற்றிக் கொண்டனர் என்றும் தென்னார்க்காடு மாவட்ட கெசட்டில் கூறப்பட்டுள்ளது. (At its height his influence must have been very real, his admirers and disciples, who included even level headed Government officials, are said to have changed their residences and gone to live where they could be constantly near him. – S.A. Dist. Gazetter, Page 316). மஞ்சக் குப்பம் தாசில்தார் வேங்கட சுப்பையர், மஞ்சக் குப்பம் கோர்ட்டு சிரஸ்ததார் இராமச்சந்திர முதலியார், சிதம்பரம் தாசில்தார் இராமகிருஷ்ணா பிள்ளை, தொடர்பு கொண்ட அதிகாரிகளுள் சிலராவர்.

## அடிகளை அன்பரொருவர் இசை விருந்தில் கலந்து கொள்ள அழைத்தல்

தன் வீட்டில் நடைபெறும் இசைவிருந்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென அன்பர் ஒருவர் அடிகளை வேண்டிக் கடிதமொன்று எழுதியிருக்கிறார்.

உ

ஐயா !

இன்று ராத்திரி நமது வீட்டில் 6 மணிக்கு நடக்கும் சிவகங்கை வயித்திநாதய்யர் பாட்டுக் கச்சேரிக்குத் தாங்கள் வந்திருந்து சிறப்பிக்கக் கோருகிறேன்.

1867 வருஷம் பிப்ரவரி மாதம் 4ம் தேதி

மகாராஜராஜஸ்ரீ கூடலூர் கருங்குழி இராமலிங்கம் பிள்ளையவர்களுக்கு,

ஊர்க்குடிகள் தத்தம் வீடுகளில் நடைபெறும் சிறப்புகளுக்கு அடிகளை அழைப்பது வழக்கம். இதனை இவ்வன்பர் கடிதம் உறுதிப்படுத்துகிறது. ஊர் மக்களோடு அடிகள் கலந்து பழகினர் என்பதும், மக்களும் அடிகளைப் பெரிதும் மதித்துப் பேரன்போடு போற்றினர் என்பதும் இதனால் அறியப்படும்.

# வள்ளலார் காட்டிய கருணை நெறி

இறையருளைப் பெறுதற்கு பக்தி மார்க்கத்திலே பல வகையான விரதங்களை ஏற்படுத்தியுள்ளனர் நமது முன்னோர்கள். ஆலயங்கட்குச் செல்வது, ஆண்டவனுக்கு அபிஷேக, ஆராதனை, அர்ச்சனை செய்வது, தலையை மொட்டை அடித்துக் கொள்வது, அங்கப் பிரதட்சணம் செய்வது, வேல் அலகு குத்திக் கொள்வது, காவடி எடுப்பது, உண்டியலில் காணிக்கை செலுத்துவது, சுவாமிக்குத் திருமணம் செய்வது, தீ மிதிப்பது, ஏகாதசி, கிருத்திகை, சஷ்டி, வெள்ளிக் கிழமை போன்ற சில குறிப்பிட்ட நாட்களில் பட்டினி இருப்பது, கோயில் கட்டுவது கும்பாபிஷேகம் செய்வது போன்ற பல காரியங்கள் பக்தி என்ற பெயரால் செய்யப்பட்டு வருகின்றன. இந்தச் செயல்கள் எல்லாம் ஆண்டவனுக்குச் சம்மதம் தானா, இவைகளால் ஆண்டவன் மகிழ்ந்து நம்முடைய பூஜையை ஏற்றுக் கொண்டு அருள் தருகின்றானா என்றெல்லாம் யாருமே எண்ணிப் பார்ப்பது இல்லை. வள்ளலார் எண்ணிப் பார்த்தார்கள். என்ன செய்தால் இறையருளைப் பூரணமாகப் பெற முடியும் என்று ஆய்ந்தார்கள். ஒரே ஒரு வழி தான் முடிவானதாகத் தோன்றியது.

இறைவன் அருளே வடிவானவன். கருணையே அவன் தொழில். அவன் எதை விரும்புவான். இரக்கமில்லாத இந்தச் சடங்குகளையா விரும்புவான். இல்லவே இல்லை. சிறு நெருப்பு இருக்குமேயானால் பெரு நெருப்பை அடையலாம். அதுபோல் நாம் பிற உயிர்கட்கு இரங்கிச் செய்யும் உபகாரமானது நம்மால் ஆற்றக் கூடிய சிறிய தயவு. நம்முடைய சிறிய தயவைக் கொண்டுதான் ஆண்டவனுடைய பெருந்தயவாகிய பேரருளைப் பெற முடியும். வேறொன்றினாலும் அருளைப் பெற முடியாது என்று கண்டார் இராமலிங்கர். இதைச் சொல்லால் சொல்லி வைத்தால் போதாது. நம்மால் ஆன தயவு என்பது ஆதரவற்ற ஏழைகள் பசியால் வருந்தும்போது மனமிரங்கி அவர்களது பசியைப் போக்குவதும் எந்த ஜீவனுக்காவது உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்று அறிந்தபோது விரைந்து நம்மால் ஆன அனைத்தினையும் செய்து எவ்விதத் தந்திரத்தாலாவது அந்த ஆபத்தை நீக்குவதும், நோயால் வருந்தக் கண்ட போதும் கேட்ட போதும் அவர்களுக்குப் பிணி தீர உதவி செய்வதும் மேலும் தாகம் இச்சை எளிமை பயம் முதலிய எதனாலும் வரக்கூடிய துன்பங்களை நீக்குவதும் ஆகும் என்று உணர்த்தினார். ஜீவர்கள் மீது காட்டும் கருணையாகிய ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல் என்றார். ஜீவகாருண்யம் இல்லாமல் செய்யக் கூடிய தவம் விரதம் தியானம் பூஜை முதலியவையெல்லாம் பிரயோஜனமில்லாத மாயா ஜாலச் செயல்களே என்றும் உணர்த்தினார்.

ஒருவன் தன்னுடைய ஆற்றலால் ஓர் ஆணைப் பெண்ணாக்கி அந்தப் பெண்ணை மீண்டும் ஆணாக்கி இறந்த பிணத்திற்கே உயிர் கொடுக்கும் வல்லபம் உடையவனாய் இருந்தாலும் மனதிலே இரக்கம் இல்லாமல் பிற ஜீவன்களைக் கொன்று மாமிசம் உண்ணும் எண்ணங் கொண்டாலே போதும் அப்படிப்பட்டவன் எவனாய் இருந்தாலும் அவனை ஞானியெனக் கூறாதே என்கின்றார் இராமலிங்கர்.

**மருவாணைப் பெண்ணாக்கி ஒரு கணத்தில்**
**கண் விழித்து வயங்கும் அப்பெண்**
**உருஆணை உருவாக்கி இறந்தவரை**
**எழுப்புகின்ற உருவனேனும்**
**கருவாள் நையுற இரங்காது உயிருடம்பைக்**
**கடிந்துண்ணும் கருத்தனேல் எங்**
**குருவாணை எமது சிவக் கொழுந்தாணை**
**ஞானி எனக் கூறொணாதே** (3027)

இறைவன் மனிதனிடமிருந்து பூஜைகளையும் விரதங்களையும் எதிர் பார்க்கவில்லை. மாறாக இரக்கம் ஒன்றையே எதிர்பார்க்கின்றான். அவன் எதிர்பார்க்கின்ற இரக்கத்தைப் பிற உயிர்கள் மீது காட்டாமல் வேறு எந்தச் செயலாலும் எந்த ஆலயத்திற்குச் சென்று எந்த ஆண்டவனை எப்படி வணங்கினாலும் கிஞ்சித்தும் அருளைப் பெற முடியாது. மனிதனிடம் இரக்கத்தை ஆண்டவன் எதிர்பார்க்கின்றான் என்பதற்கு என்ன ஆதாரம்?

ஒரு புலி ஆட்டைக் கடித்துத் தின்னும்போது அந்த ஆடு படும் வேதனை அந்தப் புலிக்குத் தெரியாது. ஒரு பூனை ஒரு எலியைக் கடிக்கும் போது அந்த எலி படும் துன்பமும் பயமும் அந்தப் பூனைக்குத் தெரியாது. ஆனால் ஒரு கோழியை, ஓர் ஆட்டை, ஒரு மாட்டை, அறுக்கும் போது அது துடிக்கின்ற துடிப்பை மனிதன் உணருகின்றான். பிற உயிர்கள் படும் துன்பத்தை உணரக் கூடிய ஓர் அறிவை எந்த மிருகத்திற்கும் வேறு எந்த ஜீவனுக்கும் தராது, அந்த அறிவை இறைவன் மனிதனுக்கு மட்டுமே தந்தான். ஏன்?

மனிதப் பிறவிக்கு அடுத்த பிறவி தெய்வப்பிறவி. மனிதன் தான் தெய்வமாகிறான். எனவே தான் தன் தொழிலை அதாவது பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தை நீக்கி அந்த உயிர்களைக் காப்பாற்றும் அந்தத் தொழிலை அருள் வடிவான புனிதத் தொழிலை மனிதனிடம் எதிர்பார்த்த இறைவன் அந்தச் செயலுக்குத் தேவையான இரக்க உணர்வை ஏற்படுத்தக் கூடிய, அறிவை பிற உயிர்கள் படும் வேதனையை உணரக் கூடிய, அறிவை மனிதனுக்கு மட்டுமே (இறைவன்) தந்தான். ஆனால் மனிதனோ இந்த உண்மையை உணராமல் பிற உயிர்களைக் கொலை செய்தும் மாமிசம் உண்டும் கடவுளுக்கு எதிரியாகி விட்டான்.

ஓரறிவு முதல் ஐந்தறிவு உள்ள ஜீவர்கள் வரை அந்த ஜீவர்கள் செய்யும் செயலுக்கு வினை என்பதில்லை. ஏனெனில் நல்லது இது கெட்டது இது என்று சிந்தித்து உணருகின்ற அறிவு அவைகட்கு கிடையாது. மனிதனால் நல்லது எது கெட்டது எது என உணர முடியும். அப்படி உணர்ந்திருந்தும் அவன் தீமைகளே செய்வானானால் பாபம் செய்தவனாகி அதற்குரிய தண்டனை பெறுகிறான். மனிதனுக்கு மட்டுமே பாவ புண்ணியங்களுண்டு மற்ற ஜீவன்கட்கு ஏன் பாவ புண்ணியங்கள் இல்லை என்றால் மற்ற ஜீவன்கட்கு ஆண்டவனால் சுதந்தரம் அளிக்கப்படவில்லை. மனிதனுக்கு மட்டும் தன் விருப்பம் போல்

செயல்படும் ஓர் அற்ப சுதந்தரம் ஆண்டவனால் அளிக்கப்பட்டுள்ளது. அந்த அற்ப சுதந்தரத்தால் மனிதன் தன் விருப்பம் போல் செயல்படுகிறான். உதாரணமாக ஓர் ஆட்டையோ, கோழியையோ உணவிட்டு வளர்க்கவும் சுதந்தரமுண்டு அதைக் கொல்லவும் அவனால் முடிகிறது. எனவே வளர்ப்பது புண்ணியம். அதைக் கொல்லும்போது கொலை பாதகம் செய்தவனாகிறான்.

பாவ புண்ணியங்கள் மனம் வாக்கு காயம் ஆகிய மூன்று வகையாக நம்மை அடையும் என்கிறார் நம் பெருமானார் அவர்கள் மனதினால் பாபம் செய்பவர்கள் அடுத்த பிறவியில் சண்டாள தேகம் எடுப்பார்கள் என்றும், வாக்கினால் பாவம் செய்பவர்கள் அடுத்த பிறவியில் மிருகங்களாகப் பிறப்பார்கள் என்றும், தேகத்தால் பாவம் செய்பவர்கள் அடுத்த பிறவியில் மரம் முதலிய சரீரம் எடுப்பார்கள் என்றும் வள்ளலார் தெரிவிக்கிறார். இதன்படி யார் பிற உயிர்களைக் கொலை செய்வதும் புலால் உண்பதுமாக வாழ்கின்றார்களோ அவர்கள் அடுத்த பிறவியில் கள்ளி முள்ளியாகப் பிறப்பெடுத்தே ஆக வேண்டும்.

மேலும் இறந்து போன ஜீவனைப் பிணம் என்கிறோம். ஆடு, மாடு, கோழி, எதுவானாலும் இறந்தவுடன் அதுவும் பிணம் தான். புலி, சிங்கம், நரி, நாய், கழுகு, காக்கை முதலிய சண்டாளப் பிறவிகட்குச் சமமாக மனிதனும் பிணம் தின்னலாமா? பிணத்தைத் தின்கிறோம் என்ற உணர்வு ஏற்படுமேயானால் மனிதன் பிணம் தின்பதை விட்டு விடுவான். சுடுகாடு என்பது பிணம் வேகும் இடம். எந்த வீட்டிலாவது ஆடு, மாடு, கோழி முதலிய பிணங்கள் சமைக்கப்படு மேயானால் அந்த வீடும் சுடுகாடு தானே. அந்த வீட்டில் இறைவன் வர மாட்டான் பேயும், பிசாசும் தான் குடி வரும். எனவே புலால் உண்பவர்கள் வீட்டில் எந்த பூஜை நடந்தாலும் இறைவன் ஏற்பதில்லை. அதனால்தான் புலால் உண்பவன் மட்டும் புலையனல்லன். புலால் உண்பவன் வீட்டில் உண்பவனும் புலையனே என்கிறார். எந்த உயிரையும் கொலை செய்வதும் மாமிசம் சமைப்பதும் உண்பதும் இறைவனுக்குச் சம்மதமல்ல. என உணர வேண்டும்.

மாமிசம் உண்பதாலே உடலுக்குப் பலம் உண்டாகிறது என்று சிலர் வாதம் இருக்கின்றார்கள். மாமிச உணவினால் மட்டுமே உடலுக்கு பலம் வரும் என்பது உண்மையானால் மாமிசம் உண்ணாத யானைக்கும், இழுக்கும் திறன் வாய்ந்த குதிரைக்கும் பலம் இருக்கக் கூடாது. மாமிசம் உண்ணாத யானைக்கிருக்கின்ற பலம் வேறு எந்த மிருகத்திற்கும் இல்லை. மனிதர்களில் பிராம்மணர்கள், சமணர்கள், சைவ வேளாளர் போன்ற பல ஜாதியினர் மாமிசம் உண்பதில்லை. அவர்கள் எல்லாம் பலம் இல்லாமலா வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மாமிசம் உணவு தான் பலம் தருகின்றது என்ற வாதம் உண்மைக்குப் புறம்பானது.

மேலும் மாமிசம் உண்போர் மாரடைப்பு, பக்கவாதம், இரத்தக் கொதிப்பு போன்ற தீராத நோய்கட்கு ஆளாகி அகால மரணம் அடைகின்றார்கள் என்பதே உண்மை. மாமிச உணவை நீக்கினால் மாரடைப்பு, பக்கவாதம், காலரா, இரத்தக் கொதிப்பு போன்ற பயங்கர வியாதிகள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். மக்கள் எல்லாம் நோயற்ற வாழ்வு வாழவேண்டும் என்றே மாமிசம் உண்ண வேண்டாம் என்று போதித்தார்.

மக்கள் நலனில் அக்கறை கொண்டவர் வள்ளலார் ஒருவரே. தான் கண்ட சன்மார்க்கம் வளரா விட்டாலும் பரவாயில்லை, மக்கள் நலமாக வாழ வேண்டும் என்ற பேரிரக்கத்தினால் புலால் உண்ணக் கூடாது என்று கடுமையாகப் போதித்தார்.

ஆண்டவன் முதலில் ஆணையும், அவனிடமிருந்து பெண்ணையும் படைத்தபோது பழத் தோட்டங்களில் உள்ள பழங்களை உண்டு களியுங்கள் ஆனால் ஒரு மரத்தைக் காட்டி அந்த மரத்தில் உள்ள பழங்களை மட்டும் உண்ணாதீர்கள் என்று போதித்ததாக அறிகிறோம். ஆண்டவன் கட்டளையிட்டது பழங்களை மட்டுமே உண்ணுவது. மாமிசம் உண்ண வேண்டாம். பழங்கள் மட்டும் தான் ஆண்டவன் இட்ட கட்டளை என்று சொன்னால் அந்த உண்மையை எத்தனை பேர் ஏற்றுக் கொள்வர்?

சிவனை வணங்குகின்ற, நெற்றியில் திருநீறு அணிகின்ற, சைவர்கட்குரிய உணவு சைவ உணவே. ஆனால் ஓட்டலில் மட்டுமே தற்போது உணவில் சைவம் உள்ளது. சைவர்கள் என்று சொல்லிக் கொள்வோர் அசைவம், புலால் உணவு கொள்கிறார்கள்.

எந்தச் சமயத்திலும் மதத்திலும் (தெரிந்த வரை ஜைனம் தவிர) புலால் உண்பதை வண்மையாகக் கண்டிக்கவில்லை. வள்ளலார் மட்டுமே தான் கண்ட சன்மார்க்கத்தின் வளர்ச்சியை மட்டும் கருத்தில் கொள்ளாமல் புலால் உண்பதை வண்மையாகக் கண்டிக்கின்றார். புலால் உண்பதால் கொலை பாவம் சேருகின்றதே, பயங்கர நோய்க்கு ஆளாகின்றார்களே, அந்த மக்கள் நன்றாக வாழ வேண்டும் என்ற ஒரே நோக்கம் பேரிரக்கம் வள்ளலாருடையது.

சிறிதளவுகூட பேதம் இல்லாமல் எல்லா உயிர்களையும் தம் உயிர்போல் உள்ளன்போடு நேசிக்கின்றார்களோ அவர்கள்தாம் உத்தமர்கள் என்று கூறிய வள்ளல் பெருமானார், சாதி, மதம், சமயம், இனம் முதலிய காரணங்களால் பிளவுகள் இல்லாது அனைவரும் ஒன்றுபட்டே வாழ வேண்டும் என்று பேசிய வள்ளலார் புலால் மறுத்தவர்களை அகவினத்தார் என்றும் புலால் உண்போரைப் புறவினத்தார் என்றும் இரண்டாகப் பிரிக்கின்றார். அத்துடன் நில்லாது புலால் உண்போருடன் நட்பு கொள்ளாதே, நல்ல வார்த்தைகள்கூடச் சொல்ல வேண்டாம் என்றும் அறிவிக்கிறார். புலால் உண்ணும் மனிதரைக் கண்டு மனம் பொறுக்க முடியாமல் எனது எலும்பெலாம் கருக இளைத்தனன் என்கிறார்.

புன்புலால் உடம்பின் அசுத்தமும் இதனில் புகுந்து நான் இருக்கின்ற புணர்ப்பும்
என்பொலா மணியே எண்ணி நான் எண்ணி ஏங்கிய ஏக்கம் நீ அறிவாய்
வன்புலால் உண்ணும் மனிதரைக் கண்டு மயங்கி உள்நடுங்கி ஆற்றாமல்
என்பெலாம் கருக இளைத்தனன் அந்த இளைப்பையும் நீ அறிவாய்

இரக்கத்தினால் மட்டுமே அருளைப் பெற முடியும் என்பதை ஏட்டில் எழுதினால் மட்டும் போதாது. சந்திர, சூரியர் உள்ளவரை ஒரு நிலையம் அதற்கென இருக்க வேண்டும். என வள்ளலார் கருதினார். தருமச்சாலை ஒன்றை உருவாக்க எண்ணினார்.

# ஆலயங்களிலே உயிர்ப் பலி

ஆலயங்களில் இறைவனுக்கு ஜீவர்களை உயிர்ப்பலி கொடுக்கிறார்களே அதை ஆண்டவன் ஏற்றுக் ொள்ளவில்லையா எனச் சிலர் வினவலாம். இல்லை. இல்லை. இல்லவே இல்லை. எந்தக் கடவுளும் உயிர்ப்பலி கேட்கவும் இல்லை. அதை ஏற்பதும் இல்லை. மந்திரவாதிகள் போன்றோர் மக்களை ஏமாற்றி விட்டார்கள். அங்காள பரமேஸ்வரி, ரேணுகை, திரௌபதி அம்மன் போன்ற அம்மன் கோயில்களில் தான் இன்னமும் பலியிடும் கொடிய பாவம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பரமேஸ்வரி அருளே வடிவானவள், அம்பிகையே என்றும் 'மதுரை மீனாட்சி, கஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி என்றெல்லாம் புகழ்ந்துவிட்டு அந்தப் பரமேஸ்வரி பலி கேட்கிறாள் என்பது முறையா - சரியா.

மகாபாரதக் கதையில் வரும் திரௌபதி மாமிசம் கேட்டதாக பாரதக் கதையில் எழுதப்பட்டுள்ளதா?

ரேணுகை ஒரு மகரிஷியின் தர்ம பத்தினி அல்லவா! ஆற்றிலே நீர் எடுக்கச் சென்றவள் வான வீதியிலே சென்று கொண்டிருந்த ஓர் ஆடவனின் அழகைக் கண்டு இவ்வளவு அழகாக இருக்கிறானே என்று எண்ணினாள் ரேணுகை. தன் கணவனைத் தவிர வேறு ஆடவனை மனதில் எண்ணியதால் கற்பிழந்தாள் எனக் கூறி அவள் தலையை வெட்டி விடு என்று கூறிய தந்தையின் சொல்லை ஏற்றுத் தன் தாயாகிய ரேணுகை தலையை வெட்டி வீழ்த்தினார் பரசுராமர். வேறொரு ஆடவனை மனதாலும் எண்ணக் கூடாது என்ற தத்துவத்தை விளக்க ரேணுகையின் தலையை முன்னோர்கள் வைத்தார்கள். எந்த ரேணுகை உயிர்ப்பலி எப்போது கேட்டாள். தன்னையே காப்பாற்றிக் கொள்ள முடியாத ரேணுகை உயிர்ப்பலி தருகின்ற மற்றவரைக் காப்பாற்றுவாளா? உயிர்ப்பலி கேட்கின்ற தெய்வங்களே கிடையாது. அந்தத் தெய்வங்களே இல்லை என்றபோது உயிர்ப்பலியை ஏற்பதற்கு யாரும் இல்லை. எனவே தெய்வத்தின் பேரால் உயிர்ப்பலி தராதீர்கள். கொலை பாவம் தான் சேரும். இப்படிப்பட்ட தெய்வங்கள் இருப்பதாகப் பெயர் வைத்து ஏமாற்றி விட்டார்கள். இரக்கமே வடிவாகிய வள்ளலார் இந்தக் கோயில்களைக் கண்டு நடுநடுங்கினார்.

நலிதரு சிறிய தெய்வ மென்றையோ
நாட்டிலே பல பெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றி குக்குடங்கள்
பலிக்கடா முதலிய உயிரைப்
பொலியுறக்கொண்டே போகவும் கண்டே புந்தி
நொந்துளம் நடுக்குற்றேன்
கலியுறு சிறிய தெய்வ வெங்கோயில்
கண்ட காலத்தும் பயந்தேன் (3472)

## வேட்ட வலம் ஜமீன்தாருடன் சந்திப்பு

வேட்டவலம் ஜமீன்தார் அப்பாசாமி பண்டாரியார் என்பவருக்கு இரண்டு மனைவிகள். அவர்களில் ஒருவருக்கு பிரம்ம ராட்சசம் மற்றொருவருக்கு மகோதரம் என்ற வியாதி. எவ்வளவோ மருத்துவம், மந்திரம் ஒன்றும் பயனில்லாது ஜமீன்தார் விரக்தியடைந்து வாழ்க்கையையே வெறுத்துக் கிடந்தார். அவ்வமயம் நம் பெருமானார் அந்த ஊருக்குச் சென்று அவர் மாளிகையினுள்ளே நுழைந்தார். ஜமீன்தாரின் மனைவியர் இருவரும் ஓடி வந்து வணங்கி நின்று திருநீறு பெற்றுக் குணமடைந்தனர். இவ்வதிசயத்தைக் கண்ட ஜமீன்தார் நம் பெருமானாரின் திருப்பாதங்களைப் பணிந்து ஐயனே நான் என்ன கைம்மாறு செய்வேன் என்று வேண்டி நின்றார். நம் பெருமானார் புன்னகையுடன் தங்கள் ஜமீன் எல்லைக்குள் எந்த ஆலயத்திலும் ஜீவன்களைப் பலியிடும் பழக்கத்தை நிறுத்துங்கள் அது போதும் என்றார். ஜமீன்தாரும் அவ்வாறே ஆணையிட்டுத்தன் அதிகார வரம்புக்குட்பட்ட எல்லா ஆலயங்களிலும் உயிர்ப்பலியை நிறுத்தி ஒழித்தார். இன்றுங்கூட வேட்டவலம் ஜமீன் எல்லைக்குள் எந்த ஆலயத்திலும் உயிர்ப்பலி செய்வதில்லை.

இந்த உலகம் பொருளையும் பொருள் உள்ளவர்களையுமே பெரிதாக மதிப்பதால் ஒரு பணக்காரர் வீட்டிற்கு அடிக்கடி சென்றால் நம்மிடமுள்ள பொருளின் ஆசையால்தான் இவர் அடிக்கடி நம்மிடம் வருகிறார் என்று ஏளனமாக எண்ணுவார்கள். எனவே எந்தப் பணக்காரர் வீட்டிற்கும் செல்லக்கூடாது என்ற கருத்துடைய பெருமானார் வேட்டவலம் ஜமீன்தார் வீட்டிற்கு மட்டும் ஏன் சென்றார்?

இனி சோமு செட்டியாருக்கு (சென்னையிலிருந்த ஒரு பணக்காரர்) கடிதம் எழுதவே மாட்டேன். இவரைப் போன்ற ஆயிரம் பணக்காரர்களை அரை நிமிடத்தில் அதிட்டிக்கலாம் என்று இரத்ன முதலியாருக்குக் கடிதம் எழுதிய பெருமானார் வேட்டவலம் ஜமீன்தார் வீட்டிற்கு வலிய ஏன் சென்றார்? ஆலயங்களில் உயிர்ப்பலி நிறுத்தப்பட வேண்டும் என்ற உயிர் இரக்கத்தால் பெருங் கருணையினால் மட்டுமே சென்றார் என்பதைப் புரிந்து கொண்டால் பெருமானின் கருணை உள்ளத்தை உணரலாம்.

## ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல்

நம் பெருமானாரது விருப்பத்தை அறிந்த வடலூர் மக்கள் தங்கள் நிலங்களை மனமுவந்து நம் பெருமானார்க்குத் தானமாகத் தந்தனர். நாற்பது பேர் சேர்ந்து 80 காணி நிலத்தை 2.2.1867ம் அன்று தானமாகத் தந்தனர்.

### வடலூர்க் குடிகள் அடிகளுக்குச் சாலைக்காக எழுதிக் கொடுத்த இனாம் பத்திரம்

| பட்டா நெம்பர் | பட்டாதாரர் பெயர் | விஸ்தீரணம் |
|---|---|---|
| | அருணாசல அய்யர் | 3-10-0 |
| | பறட்டபால பசி | 0-14-3 |
| | அருணாசலம் | 0-07-2 |
| | பொன்னன் வகையறா | 2-08-0 |
| | மேற்படி முத்து | 2-14-2 |
| | சமட்டி அழகன் | 0-07-0 |
| | சின்னான் சின்னபயல் | 0-15-1 |
| | இவறங்க பசி | 0-14-2 |
| | தம்பி பசி | 1-00-0 |
| | முத்துகண்ணு | 0-10-1 |
| | நாராயணன் | 0-10-1 |
| | சின்ன பசி | 0-10-0 |
| | ராமலிங்கம் | 1-02-0 |
| | வெங்கடாசல பசி | 3-03-0 |
| | ஆனை பசி | 0-15-3 |
| | பிறமன் | 1-03-1 |
| | மொட்ட வெங்கடாசலம் | 0-15-2 |
| | சின்ன ராமன் | 0-11-2 |
| | சின்னதம்பி பசி | 2-02-2 |
| | பூசாரி சேபெருமாள் | 0-11-0 |
| | பூசாரி சேவி | 2-02-2 |
| | பூசாரி ஆனை | 0-11-0 |

| பட்டா நெம்பர் | பட்டாதாரர் பெயர் | விஸ்தீரணம் |
|---|---|---|
| | பிள்ளையான் | 2-02-2 |
| | சமட்டி பாலன் | 1-11-0 |
| | பொத்தி மொட்டயன் | 0-14-3 |
| | பூசாரி சின்ன சேபெருமாள் | 1-03-2 |
| | சீனன் சின்ன முத்தன் | 1-00-0 |
| | பூசாரி பரியன் | |
| | வெங்கடாசல நாய்க்கன் | 1-01-1 |
| | ஆரியான் | 3-06-2 |
| | சேவிகான் | 0-12-3 |
| | காலிங்கராம பசி | 0-12-0 |
| | பெரியகுட்டி வெங்கிடாசலம் | 0-12-2 |
| | மஞ்சக்கொல்லைனான் | 1-02-1 |
| | பொந்தய சேபெருமாள் முத்துமகன் பாலன் | 2-00-0 |
| | பறட்டமாரி பசி | 2-11-0 |
| | வெங்கிடாசலனான் வகையரா | 1-03-1 |
| | அனாதிகரம்பு | 8-00-0 |

## தருமச் சாலை தொடக்க விழா முன்னேற்பாடுகள்

தருமச்சாலை தொடங்குவதற்கு விரிவான முன்னேற்பாடுகள் சன்மார்க்க சங்கத்தாரால் செய்யப்பட்டன. பிரபவ வருஷம் வைகாசி மாதம் 11ம் தேதி வியாழக்கிழமையன்று சாலையைத் தொடங்குவதென முடிவு செய்யப்பட்டது. மண் சுவர் எழுப்பி விழல் வேய்ந்து தற்காலிகமாக தருமச்சாலைக்கு ஒரு கட்டிடத்தைக் கட்டி அதில் வைகாசி மாதம் 11ம் தேதி அன்னம்பாலிக்கத் தொடங்குவதென்றும் அன்றே சாலையின் நிலையான செங்கற் கட்டிடங்களுக்கும் கிணறு முதலியவற்றிற்கும் அடிப்படையிடுவதென்றும் முடிவு செய்யப் பெற்றது. வைகாசி 11 தொடக்க விழாவன்று மூவாயிரம் பேராவது கூடுவரென்று எதிர்பார்த்தனர். அன்றைய செலவு முழுவதையும் சாலை அபிமானிகளாகிய சங்கத்தவர்களே பகிர்ந்து கொள்வதென்று ஏற்பாடு செய்யப் பெற்றது. இம்முன்னேற்பாடுகளைக் குறித்துச் சங்கத்தாருள் ஒருவராகிய மு. அப்பாசாமி செட்டியார் சாலை அபிமானிகளுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பினார். அது வருமாறு :

உ

அன்புந் தயவுமுள்ள ஐயா வந்தனம்.

நாம் ஆன்ம லாபத்தைப் பெற்றுக் கொள்ளு நிமித்தம் கடவுள் சம்மதப்படி யேற்படுத்திக் கொண்ட சமரச வேத தருமச்சாலையின் செங்கற் கட்டிடங்களின் அஸ்திவாரங்களும், கிணறும், குளம், கேணி முதலிய நீர்நிலை யெடுப்புகளும் தற்காலம் இலேசிலே நம்மாற் கட்டுவித்துக் கொண்ட விழன்மேய்ந்த மண் கட்டடச் சாலையில் ஒருசார் ஆகார தரும விருத்தியும் பிரபவ வருஷம் வைகாசி மாதம் கக௨ குருவாரம் உதயகாலம் சிங்க லக்கினத்தில் துவக்கஞ் செய்வதாகத் தீர்மானித்துக் கொண்டபடி அன்றைய தினத்தில் துவக்கும்போது மூவாயிரம் சனங்களுக்குக் குறையாமல் கூடுமென்று தோன்றுகின்றது. ஆகையால் அத்தினத்தில் செல்லுகின்ற செலவு முழுவதும் இந்தத் தருமச்சாலை யபிமானித்த நாமனைவரும் பாகஞ் செய்து கொண்டு செலுத்துவோமாக.

பிரபவ வருஷம்

சமரச வேத தருமச்சாலைத் தலைவராகிய
சிதம்பரம் இராமலிங்கப் பிள்ளையவர்கள்
அநுமதிப்படி மேற்படி தருமச்சாலையை
நடத்துகின்ற சமரச வேத சன்மார்க்க
சங்கத்தாரில் ஒருவராகிய

மு. அப்பாசாமி செட்டி

தருமச்சாலை தொடக்க விழாவன்று அன்னதானம் செய்ய காய்கறி, நெய் முதலியவற்றைச் சேகரிக்கத் திருவாளர்கள் கூடலூர் திரு. துரைசாமி அவர்களும் திரு. விசுவலிங்க வாத்தியாரும் நியமிக்கப்பட்டனர். நம் பெருமானார்க்கு கூடலூர் துரைசாமி அவர்கள் எழுதிய கடிதம் வருமாறு :

அன்புந் தயவுமுள்ள அய்யா அவர்கள் திருவடிகளுக்கு . . . . . . . .

தெண்டநிட்ட விண்ணப்பம்.

நானும் விசுவலிங்க வுபாத்தியாயரும் நாளது மாதம் 16ம் நாள் சனிக்கிழமை 5 மணிக்கு மேல்பட்டு ஆபீசை விட்டு பிறையாணமாயி வடக்கு நோக்கி ரெட்டிச் சாவடிக் கடுத்த ஓரூரில் தங்கி விடியர்க்காலம் அழசிப் பாக்கம் சிங்கிரி கோவிலுக்குப் போயிப் பகற்போது போசனஞ் செய்துக் கொண்டு 18 நாழிகைக்கு மேல்ப்பட்டு அவ்விடம் விட்டு பிறையாண மாகிஞே மப்போது மாடுகளுக்கும் எங்களுக்கும் அருள் துணையாய் மந்தாரமிட்டு தென்றல் வீசுவது போல் கொண்டலடித்தது. செல்லஞ்சேரி தூக்கணாம்பாக்கம் வந்து இரவு காலமாகையால் ஜீவகாருண்ணியத்துக்குத் தகுதியல்லாதவ ராயினாரொருவர் வுள்ளேரிப்பட்டு வந்து தங்கி விடியர்க் காலை தெற்கு நோக்கி வருகையில் எனக்கு நெஞ்சி கருத்து கொஞ்சம் பித்த ஜலமும் அஜீரணத்தால் சொர்ப்ப அன்னமும் வெளிப்பட்டது. திருப்பணாம்பாக்கம் ... ... அறிவானது தூண்டச் சீரகம் மிளகு பொடி செய்து சர்க்கரை சேர்த்து நெய்யாலுண்டை செய்து நானும் உபாத்தியாயரும் பொசித்தோம். உடனே ..... மணிக்கு கூடலூர் வந்து சேர்ந்து குரு கிருபையால் அவாளவாள் அலுவலைப் பார்த்து வருகிறோம்.

வைகாசி மாதம் 11ம் தேதி நடக்கப்போகிற அன்னதானத்திற்கு சுமார் மூன்றுக்குமேல் நெல்லு வண்டிகளும் ஒரு வண்டி காய்கறிகளுமாக நான்கு வண்டி தயாராகுமென்று நினைக்கிறேன். ஆனால் அருள்கூட்டி வைக்குமென்பதே அடியேன் துணிவு.

வருகிற சனிக்கிழமை சாயரக்ஷை புறப்பட்டு திருமாணிக்குழி பாலூர் பக்கம் போக வேணுமென்கிற ஆசையிருக்கிறது. ஆனால் அடியேன் தேகம் அல்ப்ப பசியோடு கூடியதால் அளவுக்கு மேலிரண்டொரு கவளம் புசித்தால் முன் சொல்லிய பித்தா திக்கம் அதிகப்படுமேயென்று யோசிக்கிறேன். அதற்குத் தகுந்த மருந்து அல்லது விபூதிப் பிரசாதம் அனுக்கிரகம் செய்தால் அத்துணைப்பற்றி அன்ன தானத்து அடியார்களில் யானொரு வடியேனாக மதிக்கப் பெறுவேன். அருள் கூட்டி வைக்க வேண்டியது. வேணும் தெண்டநிட்ட விண்ணப்பம்.

இப்படிக்கு,

கூ. துரைசாமி

மூன்று வண்டிகளில் நெல்லும் ஒரு வண்டி காய்கறியும் தயார் செய்யப்பட்டன. அழைப்பிதழும் ஆயிரம் காப்பிகள் அச்சடிக்கப்பட்டன. அழைப்பிதழ் சங்கத்தின் பெயரால் அனைவர்க்கும் அனுப்பப்பட்டது. துறவிகட்கு மட்டும் பெருமானார் பெயராலேயே அழைப்பிதழ் அனுப்பப்பட்டது. ஆக இரண்டு விதமான அழைப்பிதழ்கள் தயார் செய்யப்பட்டன.

# சாலைத் தொடக்க விழா அழைப்பு

(1)

உ

கடவுள் துணை

சாந்த சித்தமுடைய சாமியவர்களுக்கு வந்தனம்.

சிதம்பர தலத்துக்குச் சுமார் இருகாத வழிநடை எல்லையில் கூடலூரைச் சார்ந்த வடலூரென்றும் பார்வதிபுரமென்றும் வழங்கப்படுகின்ற ஊருக்கு வடபுரத்தில் சென்னை நகரிலிருந்து கும்பகோணத்திற்குப் போகின்ற பெரிய பாட்டை 125-வது மைலில் மஞ்ச குப்பத்திலிருந்து விருத்தாசலம் போகின்ற பாட்டை 23-வது மைலில் பிரபவ வருஷம் வைகாசி மாதம் 11ம் தேதி குரு வாரம் உதய காலம் சிங்கலக்கினத்தில் சமரச வேத தருமச் சாலையின் செங்கற் கட்டடங்களுக்கு அஸ்திவாரங்களும் கிணறு, குளம், கேணி, முதலிய நீர்நிலை எடுப்புகளும் தற்காலம் அவ்விடத்தில் நூதனமாகக் கட்டப்பட்ட விழன்மேய்ந்த மண் கட்டடச் சாலையில் ஒரு சார் ஆகார தரும விருத்தியுந் துவக்கஞ் செய்யும்படி நிச்சயித்திருக்கின்றது.

ஆதலால் அந்தத் தினத்தில் அவ்விடத்தில் அன்பர்களுடன் எழுந்தருளி அனுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

(2)

உ

கடவுள் துணை

அன்புந் தயையுமுடைய ஐயா வந்தனம்.

சிதம்பர தலத்திற்குச் சுமார் இருகாத வழி நடை எல்லையில் கூடலூரைச் சார்ந்த வடலூரென்றும் பார்வதிபுரமென்றும் வழங்கப்படுகின்ற ஊருக்கு வடபுரத்தில் சென்னை நகரிலிருந்து கும்பகோணத்திற்குப் போகின்ற பெரிய பாட்டை 125-வது மைலில் மஞ்சகுப்பத்திலிருந்து விருத்தாசலம் போகின்ற பாட்டை 23-வது மைலில் பிரபவ வருஷம் வைகாசி மாதம் 11ம் தேதி குருவாரம் உதய காலம் ருஷப லக்கினத்தில் சமரச வேத தருமச்சாலையின் செங்கற் கட்டடங்களுக்கு அஸ்திவாரங்களும் கிணறு, குளம், கேணி, முதலிய நீர்நிலை யெடுப்புகளுந் தற்காலம் அவ்விடத்தில் நூதனமாகக் கட்டப்பட்ட விழன் மேய்ந்த மண் கட்டடச் சாலையில் ஒரு சார் ஆகார தரும விருத்தியுந் துவக்கஞ் செய்யும்படி நிச்சயித்திருக்கின்றது.

ஆகலில் அந்த தினத்தில் தாங்கள் தங்கள் மனைவியர், புத்திரர், துணைவர், தந்தையார், தாயார், உறவினர், சிநேகர், முதலியவர்களோடும்

வந்திருந்து அந்தத் தரும விசேஷ விருத்தியை விபவமாக நடத்து விப்பீர்களென்று நம்புகின்றோம்.

பிரபவ வருஷம்
மாதம் தேதி

சமரச வேதத் தருமச்சாலைத் சித்திரை தலைவராகிய சிதம்பரம் இராமலிங்க பிள்ளையவர்கள் கட்டளைப்படி மேற்படி தருமச்சாலையை நடத்து கின்ற சமரச வேத சன்மார்க்க சங்கத்தாரில் ஒருவராகிய

மு. அப்பாசாமி செட்டி

23.5.1867 அன்று தருமச் சாலை தொடங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டு அதற்குரிய மற்ற வேலைகள் துரிதமாக நடந்தன. தருமச் சாலை திறப்பு விழா ஒரு புறமும், நிலையான கட்டடம் கட்ட அடிக்கல் நாட்டு விழா மறு பக்கமும், ஆக ஒரே நாளில் அடிக்கல் நாட்டு விழாவும் தருமச் சாலை திறப்பு விழாவும் நடைபெற்றன.

வழக்கமாக அடிக்கல் நாட்டு விழா முதலில் நிகழும். பின்னர் கட்டடம் எழுப்பித் தக்கோரைக் கொண்டு திறப்பு விழா நடைபெறும். இது உலக வழக்கு. ஆனால் நம் பெருமானாரோ அடிக்கல் நாட்டு விழா அன்றே திறப்பு விழாவும் செய்தனர் என்றால் அவர் தம் செயலாற்றும் திறனை என்னென்பது.

தருமச்சாலை திறப்பு விழாவன்று ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் முதல் பகுதி மக்களுக்கு வாசித்துக் காட்டப்பட்டது. அதில் பசியின் கொடுமையையும் பசியினால் வரும் வேதனை துன்பம் முதலியவற்றையும் வள்ளலார் விரித்துரைப்பதுபோல் இதுவரை வேறு யாரும் கூறவில்லை. பசி கொலை இவ்விரண்டினால் வரும் துன்பத்தைப் போக்குவது பர ஜீவகாருண்யம் என்றும் பிணி தாகம் இச்சை எளிமை பயம் முதலியவற்றால் வரும் துன்பத்தைப் போக்குவது அபர ஜீவகாருண்யம் என்றும் கூறுவர்.

இறைவனை அடைவதற்குத் தருமமே வழி ஆதலால் அதற்குத் தருமச் சாலை என்றே பெயர் வைத்தார். இறைவனை நம்மிடம் அழைத்து வருவதும் நம்மை இறைவனிடம் கொண்டு சேர்ப்பதும் தருமம் என்ற சாலையே.

தருமச் சாலை திறப்பு விழாவன்று சாலை விளம்பரம் ஒன்றும் வெளியிடப்பட்டது.

## சாலை விளம்பரம்

23.05.1867

உ

திருச்சிற்றம்பலம்

# ஜீ வ கா ரு ண் ய ஒ ழு க் க வி ள ம் ப ர ம்

கல்வி கேள்விகளாற் பகுத்தறியத் தக்க அறிவையுடைய உயர் பிறப்பாகிய மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்களனைவர்க்கும் வந்தனஞ் செய்தறிவிக்கை.

உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால் அடையத்தக்க பிரயோசனத்தைக் காலமுள்ள போதே அறிந்து அடைய வேண்டும்.

அந்தப் பிரயோசனம் யாதோவெனில்: எல்லா அண்டங்களையும், எல்லாப் புவனங்களையும், எல்லாப் பொருள்களையும், எல்லாச் சீவர்களையும், எல்லாச் செயல்களையும், எல்லாப் பயன்களையும் தமது பரிபூரண இயற்கை விளக்கமாகிய அருட்சத்தியால் தோன்றி விளங்க விளக்கஞ் செய்விக்கின்ற இயற்கை உண்மை வடிவினராகிய கடவுளின் பூரண இயற்கையின்பத்தைப் பெற்று எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் தடைபடாமல் வாழ்கின்ற ஒப்பற்ற பெரிய வாழ்வை அடைவதே இந்த மனிதப் பிறப்பினால் அடையத் தக்க பிரயோசனமென்றறிய வேண்டும்.

இயற்கை யின்பத்தைப் பெற்றுத் தடைபடாமல் வாழ்கின்ற அந்தப் பெரிய வாழ்வை எதனால் அடைய வேண்டுமெனில்: கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளைக் கொண்டே அடைய வேண்டுமென்றறிய வேண்டும்.

கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளை எதனால் பெறக்கூடுமெனில்: ஜீவகாருணிய ஒழுக்கத்தினாற் கடவுளருளைப் பெறக் கூடுமல்லாது வேறெந்த வழியாலும் சிறிதும் பெறக் கூடாதென்று உறுதியாக அறிதல் வேண்டும்.

ஜீவகாருண்யத்தின் முக்கிய லக்ஷியமாவதெதுவெனில்: எந்த வகையாலும் ஆதாரமில்லாத ஏழைகளுக் குண்டாகின்ற பசியென்கின்ற பெரிய ஆபத்தை நிவர்த்தி செய்கின்றதே முக்கிய லக்ஷியமென்றறிய வேண்டும்.

ஆதலில் அந்த ஜீவகாருணிய ஒழுக்கத்தை நடத்தும் பொருட்டு கூடலூர் ஜில்லா கூடலூர் தாலுக்காவைச் சார்ந்த வடலூரென்கின்ற பார்வதிபுரத்தில் **சமரச வேத தருமச்சாலை** யென்றொரு தருமச்சாலை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அது பலர் சகாயத்தாலேயே நிலைபெற வேண்டுமாதலால், ஜீவதயையுடைய புண்ணியர்கள் தங்கள் தங்களாற் கூடிய வரையில் பொருள் முதலிய உதவி செய்து அதனால் வரும் லாபத்தைப் பாகஞ் செய்து கொள்ள வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை.

உலக முழுதும் ஆளுகின்ற சக்கரவர்த்தியாகிய அரசனுக்கும் உலக முழுதும் ஒரு நிமிஷத்தில் வெல்லத்தக்க சுத்த வீரனுக்கும் மூன்று ஆசைகளையும் ஒழித்து உண்மையறிந்து பிரமானுபவத்தைப் பெற்ற ஜீவன் முத்தர்களுக்கும் பசி நேரிட்ட போது மனமிளைத்தும் வலி குலைந்தும் அனுபவந் தடைபட்டும் வருந்துகின்றார்களென்றால், எந்த வகையிலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்குப் பசி நேரிட்டால் என்ன பாடுபடார்கள்! பசி அதிகரித்த காலத்தில் முகம் புலர்ந்து போகின்றது, உச்சி வெதும்புகின்றது, பிரமரந்திரம் அடைபடு கின்றது, காது கும்மென்று செவிடுபடுகின்றது, கண் பஞ்சடைந்து எரிந்து நீருலர்ந்து குழிந்து போகின்றது, நாசி அழன்று கலைமாறி பெருமூச்சு விடுகின்றது, நாக்கு நீருலர்ந்து தடிப்பேறுகின்றது, மெய் முழுதும் கருகி சக்தியற்று ஸ்மரணை கெடுகின்றது, வாக்கு குழறித்தொனி மாறுகின்றது, கைகளும் கால்களும் தடதடத்துச் சோர்ந்து தடுமாறுகின்றது, மலசல வழி வெதும்பி வேறுபடுகின்றது, உரோமம் வெறிக்கின்றது, பற்கள் கருகித் தளர்கின்றது, இரத்தமுஞ் சலமும் சுவறுகின்றது, சுக்கிலம் தன்மை மாறி வறளுகின்றது, எலும்புகள் குழைந்து நோக்காடுண்டாகின்றது, நாடி நரம்புகள் வலியிழந்து மெலிந்து கட்டுவிடுகின்றது, வயிறு பகீரென்கின்றது, மனசு தளர்ந்து நினைவு மாறுகின்றது, புத்தி கெட்டு நிலை மாறுகின்றது, சித்தம் கலங்கித் திகைப்பேறுகின்றது, அகங்காரம் குலைந்து அச்ச முண்டாகின்றது, பிரகிருதி சுருங்குகின்றது, கடவுள் விளக்கமும் ஆன்ம விளக்கமும் மறைபடுகின்றது, தாபசோபங்கள் மேன்மேலுண்டாகின்றது.

இவ்வளவு அவத்தைகளும் ஏக காலத்தி லுண்டாகின்றது எல்லாச் சீவர்களுக்கும் பொதுவாகவே யிருக்கின்றது. ஆகாரமுண்டு பசி நீங்கிய தருணத்தில் தத்துவங்களெல்லாம் தழைந்து கடவுள் விளக்கமும் ஆன்ம விளக்கமும் அகத்திலும் முகத்திலும் வெளிப்பட்டு, திருப்தியின்ப முண்டாகின்றது. ஆகலில் நாமனைவரும் எந்த வகையிலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்குப் பசி நேரிட்ட போது மிகவும் கருணையுள்ளவர்களாகி நம்மாற் கூடிய மட்டில் அந்தப் பசியென்கின்ற ஆபத்தைப் பொதுவாக நிவர்த்திப்பதற்கு முயற்சி செய்வதே ஆன்ம லாப மென்று அவசியம் அறிய வேண்டும்.

| | |
|---|---|
| பிரபவ வருஷம் | இங்ஙனம் |
| வைகாசி மாதம் 11 தேதி | சமரச வேத |
| பார்வதிபுரம் சமரச வேத தருமசாலை | சன்மார்க்க சங்கத்தார் |

## முத்துகிருஷ்ணபிரமம்

நிட்டானுபூதிக்கு உரை எழுதிய முத்துகிருஷ்ண பிரம்மம் அவர்கட்குத் தருமச்சாலை தொடக்க விழாவில் கலந்து கொள்ளுமாறு வள்ளலார் ஒரு கடிதம் எழுதி அனுப்பினார். வள்ளலார் எழுதிய கடிதம் வைகாசி மாதம் 7ம் நாள் அதாவது 19.5.1867 அன்று தான் முத்துகிருஷ்ண பிரமம் அவர்கட்குக் கிடைத்தது. 23.5.1867 தருமச்சாலை தொடக்க நாள் அந்தக் காலத்தில் சென்னையிலிருந்து உடனே வந்து சேர்வதற்கு ரயிலோ, பேரூந்தோ கிடையாது.

குறித்த காலத்தில் வர இயலாது. எனவே முத்துகிருஷ்ணபிரமம் அவர்கள் சூரிய சந்திரர் உள்ளவரை தருமச்சாலையில் அன்னதானம் தொடர்ந்து நடைபெற வாழ்த்தி வள்ளலாருக்கு உடனே கடிதம் அனுப்பினார். அது வருமாறு.

உ

சுபமஸ்து

அருணாசலீஸ்வரன் பேட்டை

பிரபவ வருஷம் வைகாசி மாதம்

அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூப சாட்சாத்கார சிவசுப்ரமண்யக் கடவுளினது வரப்பிரசாதத்தினால் திரு, அவதாரஞ் செய்த என்னருமைக் கண்மணியாகிய சமரச உள்ளம் வாய்ந்த இராமலிங்கமே !

முதலாவது - முன்னால் சித்திரை மாதம் முதல் தெய்தி எழுதிய கடிதத்திற்கு பதில் ஒன்றும் காணாமல், மேற்படி மாதம் 22ம் தேதியில் எழுதி வரவிட்ட சமரச வேத தருமச் சாலையின் செங்கற்கட்டட முதலானதும் நாளது மாதம் 11ம் தேதி ரிஷப லக்னத்தில் ஆரம்பஞ் செய்வதற்கு இவனும் வர வேண்டுமென்று குறிப்பிட்ட பத்திரிகை நாளது மாதம் 7ம் தேதி பார்க்க சந்தோடமாயிற்று. ஆனால் இவன் வருவதற்கு நாளில்லாமல் போனதால் நின்றுவிட லாயிற்று. முந்தி தெரிந்தால் மகாராஜராஜஸ்ரீ வேலு முதலியாருடன் வந்து விடுவேன் அல்லது தனித்தாவது வரலாம். அது என் பாக்கியம். அப்படிக் கிருந்த போதிலும் என்னுடைய மங்கள வாழ்த்துதலானது மேற்படி மாதம் 11ம் தேதி முதலாய் மேற்படி கட்டட முதலாகியதும் நிர்விக்கினமாய் முடிந்தேறி நித்தியோச்சவமாய் தங்கள் உள்ளன் பிற்றோன்றிய சங்கல்பப்படி எல்லா தருமங்களும் அபிவிர்த்தியாய் சந்திராதித்தர் உள்ள வரையிலும் நடந்து வரும்படி நமது சிவானந்தக் கருணா சமுத்திரத்தை பிரார்த்தித்துக் கொண்டிருக்கின்றது.

## சுருதிப் பிரமாணம்

## ஞானவாசிட்டம்

அறிஞர்க் குலகா னந்தமய மறியா தவருக் கிடர்மயமாஞ் செறியுமிருளா மந்தகர்க்குச் செங்கணுள்ளோர்க் கொளியாகும், பிரிவில் பிரம மனைத்துமென நாடிற்பிரம மவனேயாம், நறிய வமுதுண் டவனமுத மயத்தை நண்ணா திரானன்றே.

சிருட்டி தொட்டு இந் நாள் பரியந்த முண்டாயிருக்கும் வித்தியாசப் பிராந்தியை நீக்கும் பொருட்டு தங்களாலேற்படும் வித்தியானந்தமும் அன்னசாலையும் வியாச பகவான் சுகருக்கு (ப்ரபஞ்சமதே ப்ரம்மோக மென்று) போதிச்சது போலவே பெத்தனும் முத்தனுமாகிய யாவருடைய அறிவின் கண்ணைத் திறந்து காட்டி வருமென்று நம்புகிறேன். அதற்கு மேல் நாரதர் சுகருக்கு (ஏகமே வாத்வைதம் ப்ரம்மோகமென்று) போதித்தது போல் மேற்

சொல்லிய பசி வுபாதி நீங்கி வித்தியானந்த முண்டாயிருக்கும் தருமச் சாலையில் நின்றும் சிவ புனிதர்கள் அப்பேறடைவார்கள் எனத் தோன்றுகின்றது. சுபமஸ்து.

சிவகடாக்ஷந்துணை

திருச்சிற்றம்பலம்

(மேல் விலாசம்)

சென்னைக்கடுத்த அருணாசலீஸ்வரன்
பேட்டை மேற்படி கோயிலுக்கு எதிர் 224
வது கதவிலக்கமுள்ள திருமடத்திலிருக்கும்
இன்னான்.

இங்ஙனம்
தங்களன்பிற்கூழியன்
திரு.முத்துகிருஷ்ணன்

பிறர் மனதில் நிகழுவதைப் பார்க்கவல்லவர். அவரது பார்வை ஒன்றே மாமிசம் உண்ணும் பழக்கத்தை ஒழிக்கப் போதுமானதாய் இருந்தது.

## கிளைச் சாலைகள்

தருமச் சாலையைச் சார்ந்து வைத்திய சாலை, சாஸ்திர சாலை, உபகார சாலை, விருத்தி சாலை, உபாசனா சாலை, விவகார சாலை ஆகிய சாலைகளை அதன் கிளைகளாக நிறுவ அடிகள் திட்டமிட்டிருந்தனர். இவைகளை நிறுவுவதைக் குறித்துச் சன்மார்க்க சங்கத்தவர்கள் செய்து கொண்ட கையொப்ப ஏற்பாட்டைப் பற்றிய சிறு குறிப்பொன்று வருமாறு :

> சமரச வேத தருமச்சாலையைச் சார்ந்த வைத்திய சாலை, சாஸ்திர சாலை, உபகாரச் சாலை, விருத்தி சாலை, உபாசனா சாலை, யோக சாலை, விவகார சாலை -- இவைகளைக் குறித்து சமரச வேத சன்மார்க்க சங்கத்தவர்கள் ஏற்படுத்திக் கொண்ட கையொப்ப ஏற்பாடு.

இக்கிளைச் சாலைகள் அனைத்தும் நிறுவப் பெற்றதாகத் தெரியவில்லை, நிறுவுதற்கான திட்டத்தை அடிகள் உளங் கொண்டிருந்தனர். சன்மார்க்க சங்கத்தார் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

தருமச்சாலையின் அன்னதானப் பணி சிறப்புடன் தொடர்ந்து நடக்க வேட்டவலம் ஜமீன்தார், அப்பாசாமி பண்டாரியார் போன்றவர்கள் பொருளுதவி செய்ய முன் வந்தனர். நம் பெருமானார் அதை ஏற்க மறுத்து விட்டதுடன் திருவருளால் அந்த நல்ல புண்ணிய காரியம் நடக்கும் என்று திருவாய் மலர்ந்தருளினார். அன்று வள்ளலார் ஏற்றிய அடுப்பானது இன்று வரை அன்னதானப் பணி தடைபடாது நடைபெறுகிறது என்பதற்குச் சான்றாக உள்ளது.

## ஜீவகாருண்ய ஒழுக்கம்

ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு என்பது அடிகளாரின் வாக்கு அற்றார் அழிபசி தீர்த்தல், புலால் மறுத்தல் ஆகிய இரண்டையும் வற்புறுத்தி எழுதப்பட்ட நூலே ஜீவகாருண்ய ஒழுக்கம். வினாக்களை தானே தொடுத்து அதற்குரிய பதிலையும் அவாரே அளித்து அப்பதிலையொட்டி எழுப்பக் கூடிய வினாவையும் எழுப்பி அதற்குரிய பதிலையும் அளித்து இவ்வாறு வினா விடையாகவே எழுதப்பட்டுள்ளது. வள்ளலார் இதனை மிக மிக விரிவாக ஏழு பிரிவுகளாக எழுத எண்ணினர். ஆனால் நமக்குக் கிடைத்ததோ முதல் மூன்று பிரிவுகள் மட்டுமேயாகும். அதிலும் மூன்றாவது பிரிவு முற்றுப் பெறாமல் விடப்பட்டுள்ளது. தருமச்சாலை தொடங்கிய 23.05.1867 அன்று முதற் பிரிவு மட்டுமே வாசித்துக் காட்டப்பட்டது. 11.05.1869 அன்று திரு. இரத்ன முதலியார் அவர்கள் வடலூர் திரு. சண்முகப் பிள்ளைக்கு எழுதிய கடிதத்தில் ஜீவகாருண்ய ஒழுக்கம் எழுதி முடிந்ததும் முடியாததும் தெரிவிக்காமல் மறந்து விட் டீர்கள். அவசியம் தெரிவிக்கவும் என்று எழுதுகிறார். இதிலிருந்து ஜீவகாருண்ய ஒழுக்கம் 1869ம் ஆண்டில்கூட எழுதி முடிக்கப் பெறவில்லை எனத் தெரிகிறது. 19.4.1866ல் திரு. இரத்ன முதலியாருக்கு எழுதிய கடிதத்தில் குடும்ப கோஷம், பொது வேதம், மெய்ம் மொழிப் பொருள் விளக்கம், சன்மார்க்க விளக்கம் என்பவைகளை நூதனமாக ஏற்படுத்தக் கருதியபடி வரையாக் கடிதப் புத்தகம் மூன்று என்னிடத்தில் இருக்கின்றன. அவை அமையும். ஆகலில் அது விடயத்தில் உழத்தல் வேண்டாம் என்று எழுதுகிறார். எனவே அவர் எழுதி முடிக்காமல் விட்டதற்கு என்ன காரணம் என்று ஊகித்து அறிய முடியவில்லை.

1866ம் ஆண்டிலேயே எழுதத் தொடங்கப் பெற்ற ஜீவகாருண்யம் முற்றுப் பெறாமல் நிறுத்தப்பட்டுவிட்டது. 1879ல் புதுச்சேரியில் திரு. பு.பெ. கிருஷ்ணசாமி நாயகர் என்பவரால் ஜீவகாருண்ய ஒழுக்கம் முதல் பதிப்பு அச்சிடப்பட்டது.

அதன் முகப்பேடு வருமாறு.

உ

அருட்பெருஞ்ஜோதி

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும்

சிதம்பரம்

இராமலிங்க பிள்ளையவர்கள்

திருவாய் மலர்ந்தருளிய

சீவகாருண்யவொழுக்கம்

இஃது

கூடலூர் டிஸ்ட்ரிக்ட் - ஸ்கூல் இன்ஸ்பெக்டர்

சீ. இரங்கசாமி பிள்ளை

புதுவைக்கடுத்த

வைத்திகுப்பம் - மே - அப்பாசாமி நாயகர்

இவர்கள் கேட்டுக் கொள்ள

கலவை - முத்தியாலு செட்டியார் குமாரர்

சங்கர செட்டியார் முயற்சியில்

பு. கிருஉஷ்ணசாமி நாயகரால்

சபா - மாணிக்க பிள்ளை அச்சுக்கூடத்தற்

பதிப்பிக்கப்பட்டது

## சன்மார்க்க போதினி

சன்மார்க்க போதினி என்ற பாடசாலை ஒன்றை 1867ம் ஆண்டிலேயே தொழுவூர் வேலாயுத முதலியார் போன்றோரைக் கொண்டு தொடங்கினார். குழந்தைகள் முதல் வயது முதிர்ந்தோர் வரை இதில் பயிலலாம் என்றும் தமிழ், ஆரியம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பாடம் நடத்தப்படும் என்றும் அறிவித்தார். முதியோர் கல்வி இல்லாத அந்தக் காலத்திலேயே முதியோர் கல்வியையும் மும்மொழிப் பாடத் திட்டத்தையும் அறிமுகம் செய்த பெருமை நம் பெருமானார் ஒருவர்க்கே உரியது.

தொழுவூர் வேலாயுத முதலியாரும் இன்னும் சிலரும் இந்தப் பாடசாலையின் ஆசிரியர்களாக அமர்த்தப்பட்டனர்.

## திருக்குறள் வகுப்பு

அறம், பொருள், இன்பம், வீடு என்று நான்கினைச் சொல்லுவார்கள். ஆனால் திருவள்ளுவரோ அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்றினை மட்டும் எடுத்துக்கொண்டு குறட்பாக்களை இயற்றினார். வீடு பேறு என்ற மோட்சத்தின் மீது அவருக்கு நம்பிக்கை இல்லையோ என்னவோ? அக்காலத்தில் திருக்குறளை மன்னர் முதல் அனைவரும் போற்றினர். உதாரணமாக அநபாயச் சோழன் என்ற மன்னன் தனக்கு மந்திரியாக வருபவர் இந்த மூன்று வினாக்களுக்கும் சரியான விடை அனுப்ப வேண்டும் என்று பறையறைந்தான்.

**பூமியை விடப் பெரியது எது?**

**கடலை விடப் பெரியது எது?**

**மலையை விடப் பெரியது எது?**

இந்த மூன்று வினாக்கட்கும் குன்றத்தூரில் அப்போது வாழ்ந்து வந்த சேக்கிழார் பெருமான் மூன்று திருக்குறளை பதிலாக அனுப்பினார்.

1. காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
   ஞாலத்தின் மாணப் பெரிது

2. பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
   நன்மை கடலிற் பெரிது.

3. நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
   மலையின் மாணப் பெரிது.

இக்குறட்பாக்களைக் கண்ட மன்னன் மகிழ்ந்து சேக்கிழாரை மந்திரியாக்கினான். அவரே பின்னாளில் பெரிய புராணம் இயற்றியவர்.

அக்காலத்தில் திருக்குறளின் அவசியத்தை மக்கள் உணர்ந்திருந்தார்கள்.

உலக வாழ்க்கை செவ்வனே அமைய திருக்குறள் அறிவு அவசியம் என்று வள்ளலாரும் கருதினர்.

தனது தலை மாணாக்கர் தொழுவூர் வேலாயுத முதலியாரைக் கொண்டு திருக்குறள் வகுப்பு நடத்தச் சொன்னார். அவரும் அவ்வாறே திருக்குறள் பாடம் சொல்ல ஆரம்பித்தார். மூன்று மாதங்கள் ஆகியும் முதல் அதிகாரமே முற்றுப் பெறாதது கண்ட சிலர் வெகுண்டு வள்ளலாரிடம் முறையிட்டார்கள். உடனே வள்ளலாரும் அந்த "மூடமுண்ட வித்வானைக் கூப்பிடுங்கள் என்றாராம்."

தொழுவூர் வேலாயுதனாரை மூடம் முண்டம் என்று வள்ளலார் திட்டி விட்டார் என்று அகம் மிக மகிழ்ந்து போயினர். ஆனால் வேலாயுதனாரோ துளிகூட வருத்தம் இன்றி வள்ளலாரைக் காண வந்தார். வள்ளலார் உங்களைத் திட்டினாரே உங்களுக்கு வருத்தமே இல்லையா என்று கேட்டனர். சிரித்துக் கொண்டே வள்ளலாரா ஒருவரைத் திட்டுவார் என வேலாயுதனார் கேட்டார். உங்கள் அனைவருடைய மூடத்தை உண்ட வித்வான் என்று என்னைப் பாராட்டினார் என்றாராம். வள்ளலார் அவரை அழைத்துச் சற்றே துரிதமாக நடத்துங்கள் என்றாராம்.

தமிழகத்திலேயே முதன் முதல் திருக்குறள் வகுப்பு நடத்திய பெருமையும் வள்ளலார் ஒருவருக்கே உண்டு.

## சன்மார்க்க விவேக விருத்தி

பல நிறுவனங்களை ஏற்படுத்தியதால் மக்களுக்குச் செய்திகள் நிறைய வெளிப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தனக்கென ஒரு பத்திரிக்கை வேண்டும் என வள்ளலார் எண்ணி சன்மார்க்க விவேக விருத்தி என்ற பத்திரிக்கையைத் தொடங்கினார். இது மாத இதழ். பத்திரிக்கை நடத்தப் பொருளுதவி தேவையல்லவா. அடியிற் குறித்துள்ள அனைவரும் தன்னால் தரக்கூடிய தொகையை மாதா மாதம் செலுத்துவதாக ஒப்புக் கொண்டனர்.

| ஊர் பேர் | பெயர் | ரூ. அ. பை |
|---|---|---|
| சிதம்பரம் | இராமலிங்கம் | 1 - 0 - 0 |
| கூடலூர் | வெங்கடேசய்யர் | 1 - 0 - 0 |
| " | மு. அப்பாசாமி செட்டி | 1 - 0 - 0 |
| " | துரைசாமி நாயகன் | 1 - 0 - 0 |
| " | சின்னசாமிப் பிள்ளை | 0 - 8 - 0 |
| " | கா. அய்யாசாமி | 0 - 8 - 0 |
| " | தேவநாத பிள்ளை | 0 - 4 - 0 |

| | | |
|---|---|---|
| " | பூ. சின்னதம்பி | 0 - 2 - 0 |
| " | ம. வீராசாமி | 0 - 2 - 0 |
| " | கா. இரத்தின முதலி | 0 - 2 - 0 |
| " | கா.மு. தேவ நாயகம் | 0 - 8 - 0 |
| " | வி. இராஜா | 0 - 4 - 0 |
| " | இராமையர் | 0 - 2 - 0 |
| " | விசுவலிங்க முதலியார் | 0 - 2 - 0 |
| புதுவை | குமரப்ப சதாசிவ செட்டி | 0 - 8 - 0 |
| கூடலூர் | விஜயரகுநாதன் | 0 - 2 - 0 |
| " | அப்பாவு ஞானியார் | 0 - 2 - 0 |
| புதுவை | மு. அண்ணா-சுப்பராய | 0 - 2 - 0 |
| புதுவை | எப். குப்புசுவாமி நாயுடு | 0 - 2 - 0 |
| கூடலூர் | ந. சிவசிதம்பரசெட்டி | 0 - 4 - 0 |
| புதுவை | கி. துரசாமி | 0 - 8 - 0 |
| திருப்பாதிருப்புலியூர் | அ.க. பரமானந்தன் | 0 - 6 - 0 |
| திருமயிலை | முருகேச முதலியார் | 0 - 2 - 0 |
| திருக்கோவலூர் | சுப்பிரமணியன் | 0 - 2 - 0 |
| அரசூர் | இராஜகோபாலு | 0 - 8 - 0 |
| ஆலப்பாக்கம் | சு. நாயினாரெட்டி | 0 - 8 - 0 |
| கூடலூர் | வரதராசன் | 1 - 0 - 0 |
| புதுப்பாளய சிரஸ்தார் | ராமச்சந்திர முதலி | 0 - 8 - 0 |
| புதுப்பாளய நாசர் | வா.........ரெட்டி | 0 - 8 - 0 |
| கூடலூர் | கெ........தன் | 0 - 2 - 0 |
| கூடலூர் | குமாரசாமி தம்பி ஆறுமுகம் | 0 - 2 - 0 |
| கூடலூர் | ம. அரங்கநாதன் | 0 - 4 - 9 |
| புதுவை | கனகசபை | 0 - 4 - 0 |
| நெல்லி | கொமரகுரு | 0 - 2 - 0 |
| சிதம்பரம் | ஆனந்தநாதசண்முக சரணலயன் | 0 - 2 - 0 |
| கல்பட்டு | ராமலிங்கம் | 0 - 2 - 0 |
| சி. தருமச்சாலை | சண்முக பிள்ளை | 0 - 2 - 0 |
| க. தருமச்சாலை | நமசிவாயன் | 0 - 2 - 0 |
| சி. வேட்டவலம் | அரங்கசாமி | 0 - 2 - 0 |

| | | |
|---|---|---|
| வேட்டவலம் | அப்பாசாமி பண்டாரியார் | 1 - 0 - 0 |
| சிதம்பரம் | குழந்தைவேலு | 0 - 2 - 0 |
| சிதம்பரம் | பாவாடைப் பிள்ளை | 0 - 2 - 0 |
| சிதம்பரம் | நா. அருணாசலப் பரதேசி | 0 - 2 - 0 |
| பனப்பாக்கம் | ஆறுமுகம் | 0 - 2 - 0 |
| பொலவநூர் | வேலாயுதம் | 0 - 2 - 0 |
| பறங்கிப்பேட்டை | பரங்கிப்பேட்டைகாதர் சாயபு | 0 - 1 - 0 |
| வடலூர் | ஆதிப் படையாச்சி | 0 - 2 - 0 |
| ஒறத்தூர் | அண்ணாமலை நயினார் | 0 - 2 - 0 |
| திருநறுங்குன்றம் | சி. தானப்ப நயினார். | 0 - 2 - 0 |

வள்ளலார் முதலில் ரூபாய் 1.0.0 என்று போட்டு விட்டதால் கூடலூர் அப்பாசாமி செட்டியார் வேட்டவலம் ஜமீன்தார் போன்றோரும் அதற்கு மேல்போட முடியாமல் அவர்களும் ரூ.1.0.0 மட்டுமே போட்டிருக்கிறார்கள். சன்மார்க்க விவேக விருத்தி என்ற பெயரே பத்திரிக்கை எந்த விதமான செய்தியைக் கொண்டு வெளிவரும் என்பதை வெளிப்படையாகக் கூறுகிறதே. வள்ளலாரின் செயல் திட்டங்களில் பத்திரிக்கை தொடங்கியது ஒரு சிறப்பான அம்சமாகும்..

## வள்ளலாரின் தோற்றம்

வள்ளலார் மெலிந்த தேகம் உடையவர். தெளிந்த மாநிறம். நடுத்தர உயரம், நீண்ட மெல்லிய நாசி, பொறி பறக்கும் கண்கள். நரம்புகள் தெரியும். வெள்ளைத் துணியால் தலையில் முக்காடிட்டுக் கொண்டிருப்பார். காலில் ஆற்காடு ஜோடு தரித்திருந்தார். கைகளை வீசி நடக்காமல் கைகளைக் கட்டியே நடப்பார். திண்ணை மேல் உட்கார்ந்தால் கூடக் கால்களைக் கீழே தொங்க விடமாட்டார். பஞ்சணை (மெத்தை விரிப்பு)யில் படுத்ததில்லை. ஆகாரம் ஒன்றிரண்டு கவளங்களே உண்பார். உண்ணாவிரதம் அடிக்கடி மேற்கொள்ளுவார். பல மாதங்கள்கூட உண்ணாவிரதம் நீடிக்கும். அந்த நாட்களில் தேன் மட்டும் உள்ளங்கையில் விட்டுச் சிறிதே அருந்துவார். நிராகாரத் தபசி போல் இருந்தார்.

பிறர் மனதில் நிகழுவதைப் பார்க்க வல்லவராக வள்ளலார் இருந்தார். அவரது பார்வை ஒன்றே மாமிசம் உண்ணும் பழக்கத்தை ஒழிக்கப் போதுமானதாக இருந்தது.

ஒருவன் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் தூங்கப் பழக்கம் செய்வானானால் அவன் ஆயிரம் ஆண்டுகள் ஜீவித்திருப்பான் என்றார். அவரைப் பொறுத்த வரையில் தூக்கத்தையே ஒழித்தவர்.

கையுற வீசி நடப்பதை நாணிக்
கைகளைக் கட்டியே நடந்தேன்
மெய்யுறக் காட்டவெருவி வெண்துகிலால்
மெய்யெலாம் ஐயகோ மறைத்தேன்
வையமேல் பிறர்தம் கோலமும் நடையும்
வண்ணமும் அண்ணலே சிறிதும்
பைய நான் ஊன்றிப் பார்ப்பதே இல்லை
பார்ப்பனேல் பயமிகப் படைப்பேன்

காட்டுயர் அணைமேல் இருக்கவும் பயந்தேன்
காலின்மேல் கால் வைக்கப் பயந்தேன்
பாட்டயல் கேட்கப் பாடவும் பயந்தேன்
பஞ்சணை படுக்கவும் பயந்தேன்
நாட்டிய உயர்ந்த திண்ணைமேல் இருந்து
நன்குறக் களித்துக் கால் கீழே
நீட்டவும் பயந்தேன் நீட்டிப் பேசுதலை
நினைக்கவும் பயந்தனன் எந்தாய்

மொத்தத்தில் அடக்கமே உருவாக விளங்கினார். உடல் தோற்றம் மட்டுமல்ல. அவர் உள்ளம் எவ்வாறு இருந்தது. அவரே சொல்கின்றார்.

## வள்ளலாரின் உள்ளம்

பயிர்கள் வாடுவது கண்டு வாடினேன். ஒவ்வொரு வீடாகச் சென்று சோறு கேட்டுப் பிச்சை எடுத்தும் ஒன்றும் கிடைக்காமல் வெறும் பாத்திரத்தை வைத்துக் கொண்டு கதி கலங்கி நிற்பவர்களைக் கண்டு என் உள்ளம் பதைத்தது. என்ன மருத்துவம் பார்த்தும் நோய் தீராமல் பல காலம் வருந்துவோரைக் கண்டு என் உள்ளம் துடித்தது. ஏழைகளாய் இருந்தும் அவமானம் ஏற்படுமே என்று யாரிடமும் கேளாமல் நெஞ்சம் வாடி நிற்கும் மக்களைக் கண்டு நானும் இளைத்துப் போனேன்.

இந்த உலகிலே உயிர்கள் தாம் வருந்தும் வருத்தத்தை அது மிக மிகச் சிறிதளவேயாயினும் என் கண்ணால் கண்டபோதும், காதால் கேட்ட போதும் ஒரு கண நேரம்கூட என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. உன் அருள் வல்லபத்தால் நான் சொல்லியவுடனே அவ்வுயிர்களின் துன்பத்தை நீக்குதலே எனது ஆசை. என இறைவனிடமே முறையிடுகின்றார்.

**மண்ணுலகதிலே உயிர்கள் தாம் வருந்தும்**
**வருத்தத்தை ஒரு சிறிதெனினும்**
**கண்ணுறக் கண்டும் செவியுறக் கேட்டும் கணமும் நான்**
**சகித்திட மாட்டேன்**
**எண்ணுறும் எனக்கே நின் அருள் வலத்தால் இசைத்த போது**
**இசைத்த போதெலாம்**
**நண்ணும் அவ்வருத்தம் தவிர்க்க நல்வரந்தான் நல்குதல்**
**எனக்கிச்சையாம் எந்தாய்.**

இராகு காலம், எமகண்டம் என்று பஞ்சாங்கத்தில் குறித்திருக்கும். தினமும் இராகு காலம் ஒன்றரை மணி நேரமும், எமகண்டம் ஒன்றரை மணி நேரமும் குறித்திருப்பதைத் தினசரிக் காலண்டரில் கூடக் காணலாம். அந்த நேரங்களில் அனேகமாக எல்லாரும் எந்த நல்ல காரியமும் தொடங்க மாட்டார்கள். ஆனால் வள்ளலாரோ பிறந்தது ஞாயிற்றுக்கிழமை மாலை இராகு காலத்தில். அவர் வடலூரில் தருமச்சாலை தொடங்கியது வியாழக்கிழமை காலை 7 மணிக்கு எமகண்டத்தில். மேட்டுக் குப்பத்தில் முதன் முதலாக சன்மார்க்கக் கொடி கட்டிப் பேருபதேசம் செய்ததும் புதன்கிழமை காலை எட்டு மணிக்கு எமகண்டத்தில். ராகு காலம், எமகண்டம் முதலியனவற்றை லட்சியம் செய்யாத வள்ளலார் பல்லிகள் சத்தமிடும்போது யாருக்கு என்ன துன்பம் நேர்ந்தது என்று கேட்கப் போகின்றோமோ, என்றும் ஆந்தை அலறல் சத்தம் கேட்டபொழுதும் அவ்வாறு பயந்தும் இருந்திருக்கிறார். நம் உடம்பில் கண்ணிமைகள் துடிப்பதும், தோள் முதலிய இடங்களில் சில நேரங்களில் தோல் துடிப்பதும் நமக்குச் சாதாரணம். ஆனால் அவை வள்ளலாருக்கு நேரும்போதெல்லாம் மற்றவர்கள் படப்போகும் துன்பத்தைக் காண நேருமோ என்றெல்லாம் கலங்கியிருக்கிறார். காக்கைகள் கூவும்போதும், பருந்தின் கொடுமையான குரல் கேட்கும் போதும், ஆந்தையின் அலறலைக் கேட்ட போதும் சாக் குருவியின் சத்தம் கேட்ட போதும் வள்ளலார் கலங்கியிருக்கின்றார். பிறருக்கு வரப்போகும் துன்பத்தை முன்னதாகவே அறிந்து வெளிப்படுத்தக் கூடிய அறிவு பல்லிக்கோ, ஆந்தைக்கோ, காக்கைக்கோ, பருந்துக்கோ, சாக் குருவிக்கோ இல்லை என்பது வள்ளலார் அறியாததா? பின் ஏன் கலங்க வேண்டும். அவருடைய இளகிய உள்ளம் கலங்கியது. அவருடைய எல்லையற்ற இரக்கத்தினால் மற்றவர்கள் இந்தச் சத்தங்களையெல்லாம் அபசகுணம் என்பார்களே ஒரு வேளை அது பலித்து உண்மையிலேயே பிறர் துன்பம் கேட்க நேருமோ என்று கலங்கினார். இரக்கம் மிக மிக உடைய தயவு உள்ளங்கட்கு மட்டுமே இது புரியும்.

உயிர் இரக்கம் காரணமாக உலகியலில் என் மனம் செல்ல நேரும்போதெல்லாம் உனது திருவடியில் விண்ணப்பம் செய்துள்ளேன். உயிர் இரக்கம் என்பதும் எனது உயிர் என்பதும் தனித்தனியாக இரண்டல்ல. அவை ஒன்றே. அதனால் கருணையே வடிவாகி மற்றவர்கட்கு உண்டாகும் கொடுந் துயரம், பயம் முதலியவற்றை நினது அருள் துணை கொண்டு நான் நீக்க வேண்டும். புலை, கொலை என்ற இரண்டும் இல்லாத நிலையில் உலக மக்கள்

அனைவரையும் இருத்தவும் அம்பலந்தனிலே உனது புகழை வழுத்தவும் உன்னை வாழ்த்தவுமே எனது அசை கண்டாய்.

**கருணையே வடிவாய்ப் பிறர்களுக்கடுத்த**
**கடுந்துயர் அச்சமாதிகளைத்**
**தருண நின் அருளால் தவிர்த்தவர்க்கின்பம்**
**தரவும் புலை கொலை இரண்டும்**
**ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க**
**உருற்றவும் அம்பலந்தனிலே**
**மருவிய புகழை வழுத்தவும் நின்னை**
**வாழ்த்தவும் இச்சைகாண் எந்தாய்**

யாராவது உரத்த குரலில் பேசினாலோ, வீட்டுக் கதவை வேக வேகமாகத் தட்டினாலோ, ஐயோ, அம்மா, அப்பா என்று யாராவது அலறினாலோ என்ன நேர்ந்து விட்டதோ என்று வேதனையால் கலங்குவார்.

**உரத்தொருவருக்கொருவர் பேசியபோது**
**உள்ளகம் நடுங்கினேன் பலகால்**
**கரத்தினால் உரத்துக் கதவு தட்டியபோது**
**ஐயவோ கலங்கினேன் கருத்தில்**
**புரத்திலே அம்மா அப்பனே ஐயோ**
**எனப் பிறர் புகன்ற சொல் புகுந்தே**
**தரத்தில் என் உள்ளத்தைக் கலக்கிய கலக்கம்**
**தந்தை நீ அறிந்ததுதானே**

மனிதர்களிடம் மட்டுமா வள்ளலார் நெஞ்சம் இளகியது? மிருகங்களாகிய பசுக்கள், கன்றுகள் முதலியவை கதறிய போதும் பயந்தார். ஆடுகள், மாடுகள் முதலான மிருகங்களும் உடல் இளைத்துப் போவது கண்டு அவருடைய உள்ளமும் இளைத்துப் போனது கோழிகள் முதலிய பறவைகள் கூவும் போது அந்தச் சத்தம் கேட்டு அவர் உள்ளமும் குலைந்து போயிற்று. கொடிய மனமுடைய மக்கள் கையிலே வாளை ஏந்திய போதெல்லாம் வெகுண்டார்.

**காணுறு பசுக்கள் கன்றுகளாதி**
**கதறிய போதெல்லாம் பயந்தேன்**
**ஏணுறு மாடு முதல் பலவிருகம்**
**இளைத்தவை கண்டுளம் இளைத்தேன்**
**கோணுறு கோழி முதல் பல பறவை**
**கூவுதல் கேட்டுளம் குலைந்தேன்**
**வீணுறு கொடியர் கையிலே வாளை**
**விதிர்த்தல் கண்டேன் என வெகுண்டேன்.** (திரு அருட்பா)

மனிதர்கள் மட்டில் அல்லாமல் மிருகங்கள், பறவைகள் முதலிய அனைத்து உயிர்கள் மீதும் கருணை கொண்டவர் வள்ளலார். ஓரறிவுடைய பயிர்கள் மீதும் இரக்கம் காட்டியவர். ஓரறிவுடைய தாவரம் முதல் ஆறறிவுடைய மனிதர் வரை வள்ளலார் இரக்கம் சென்றது எனக் கண்டோம். அவர் இரக்கம் மேல்நோக்கியும் செல்கிறது. மணிவாசகப் பெருமாள் பொருட்டு இறைவன் மண் சுமக்க வந்ததாகப் புராணத்தில் எழுதப்பட்டுள்ளது. அணையை அடைக்காமல் இருந்த காரணத்தால் மண் சுமக்க வந்தவனை (இறைவனே என உணராத மன்னன்) கைப் பிரம்பால் அடித்தான் எனவும் திருவிளையாடல் புராணத்தில் எழுதப்பட்டுள்ளது. இறைவன் அடிபட்டான் என பல காலத்திற்குப்பின் இன்று கேட்ட என் நெஞ்சம் இடி விழுந்தாற்போல் துன்பம் அடைகின்றதே அன்று நேரில் கண்ட உன் நெஞ்சம் என்ன பாடுபட்டதோ என மணிவாசகர் மீது இரக்கம் காட்டுகிறார்.

**வன்பட்ட கூடலில் வான் பட்ட வைகை வரம்பிட்ட நின்**
**பொன்பட்ட மேனியில் புண்பட்ட போதில் புவி நடையாம்**
**துன்பட்ட வீரரந்தோ வாதவூரர் தம் தூய நெஞ்சம்**
**என்பட்டதோ இன்று கேட்ட என் நெஞ்சம் இடிபட்டதே** (திரு அருட்பா)

வள்ளலார் இரக்கம் அடிகளார் மீதுமா இறைவன் மீதே இரக்கம் கொள்ளும் அதிசயத்தைக் காணலாம். நடந்து போகும் போது கால் மிதிபட்டு எறும்பு போன்ற சிறு சிறு உயிர்கள் இறந்து போகுமே என அவைகள் மீது இரக்கம் கொண்டு மயிலறகு கொண்டு நடக்குமுன் தரையைச் சுத்தம் செய்து செல்லுகின்ற ஜிவகாருண்யம் மிக்க அமணர் குலத்தை வேரறுக்க வந்த இறையவனே இது என்ன நியாயம் அப்பா? உன்னுடைய சடை முடி மேல் மண் எடுக்க முடியாமல் அடிபட்டாய். வளையல் விற்றாய். நீ விறகு சுமந்தாய். நல்ல பிள்ளைகளைப் பெற்றிருந்தால் அவர்களைச் சுமக்க வைத்திருக்கலாம். உன் சொல் கேளாத பிள்ளைகளைப் பெற்ற தோஷம் நீயே விறகு சுமக்கும்படி ஆயிற்று. என்ன செய்வது. அது உன் விதி - விதி வசம் தான் யாவரையும் விடாது காணே என்று இறைவன் மீதே அனுதாபம் காட்டி அவனுக்கும் சமாதானம் சொல்கின்றார்.

**இறகெடுத்த அமணர் குலம் வேரறுத்த கொக்கே ஈதென்ன ஞாயம்**
**அறுகெடுத்த சடை முடிமேல் மண் எடுக்கமாட்டாமல் அடிபட்டு ஐயோ**
**பிறகெடுத்தீர் வளையல் விற்றீர் சொற்கேளாப்பிள்ளைகளைப் பெற்றதோஷம்**
**விறகெடுத்தீர் என் செய்வீர் விதி வசந்தான் யாவரையும் விடாது தானே**
(திரு அருட்பா)

வாடிய பயிர்கள் முதல், பறவைகள், மிருகங்கள், மனிதர்கள், அடியார்கள், ஆண்டவன் வரை வள்ளலார் உள்ளம் இரக்கம் கொண்டதென்றால் அந்த மாண்புமிகு வள்ளலாரை எவ்வாறு போற்றுவது. இறைவன் மீது வள்ளலார் கருணை காட்டுவதா இது அடுக்குமா என்று எண்ண வேண்டாம். இறைவனுக்கு

அமுது படைக்கிறோமே நாம் கொடுத்தா அவன் பசி ஆறுகிறான். இல்லவே இல்லை.

**"என்னால் ஆவது ஒன்றும் உனக்கில்லை எனினும் எந்தாய்**
**உன்னால் வாழுகின்றேன் எனக்கு உண்மை உரைத்தருளே."**

என்று வள்ளலாரே பாடுவார். கருணை, நெஞ்சில் நிறைகின்ற போது அங்கு உயர்வு தாழ்வு என்ற பேதம் இருக்காது. இரக்கம் ஒருவில் என் உயிரும் ஒருவும் இரக்கம் வேறு நான் வேறு அல்ல என்பார் வள்ளலார். இரக்கமே வள்ளலார் - கருணைக்கு ஒரே ஒருவர் வள்ளலார். உயிர்கள் மீது மட்டுமா கருணை. ஜடப் பொருட்கள் மீதும் கருணை காட்டியவர் வள்ளலார் ஒருவரே.

ஒரு நாள் சன்மார்க்க அன்பர்கள் வெளியே உட்கார்ந்து ஜீவகாருண்யத்தின் எல்லை எது என்று பேசிக் கொண்டிருந்தார்கள். உள்ளே இருந்த பெருமானார் வெளியே வந்து ஒரு சிறு சம்பவத்தைக் கூறினார். அதாவது இரண்டு பெரியவர்கள் சாலையிலே நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். திடீரென ஒருவர் மயக்கமடைந்து விழுந்து விட்டார். உடன் வந்தவர் மயக்கமடைந்தவர் முகத்திலே தண்ணீர் தெளித்து மூர்ச்சை தெளிந்தபின் ஏன் மூர்ச்சையாகி விழுந்து விட்டீர்கள் என்று அவரைக் கேட்டார். தாங்கள் நடந்து வரும் போது தங்கள் கால்பட்டு ஒரு மண்ணாங்கட்டி உடைந்து உருக்குலைந்து விட்டது. அதைப்பார்த்து என் மனம் சகித்துக் கொள்ள முடியாது மயங்கி விழுந்து விட்டேன் என்று கூறினாராம். ஜீவகாருண்யம் இதையும் கடந்து போகும் என்றார். மீன் பிடிப்போர் வலைகளை எடுத்துச் சென்றால் எத்தனை உயிர்கள் இதிலே சிக்கி மாளப் போகின்றனவோ என்று எண்ணி உருகுவார். கண்ணி வகைகளைக் கண்டு உள்ளம் துடிப்பார். இப்படி இரக்கமே வடிவாய் வள்ளலார் விளங்கினார்.

உண்பதிலும் உடுப்பதிலும்கூட அவருக்கு இச்சை இல்லாதிருந்தது. ஆனால் அவரது மனதிலே இரக்கம் மட்டும் தயவு மட்டும் பூரணமாக நிறைந்தே இருந்தது. அவர் சரியாகப் படிக்கவில்லை என்று அவரது தமையனார் கண்டித்து வீட்டை விட்டு வெளியேற்றினார். இராமலிங்கர் வெளியேறினார். அவரது தந்தையின் திதியன்று வேளை தவறி ஆறிப்போன உணவை உண்ணுகின்றாரே என்று அண்ணியார் கண்ணீர் வடித்தார் அதைக் கண்ட இராமலிங்கர் மனம் வருந்தி அண்ணியார் சொற்படியே வீட்டில் தங்குவதற்கு இசைந்தார்.

அதே போல உணவிலும் வெறுப்பு கொண்ட அவர், பெற்ற தாயாரின் முகம் வாட்டம் அடைவது கண்டு அவளின் முகவாட்டம் பார்ப்பதற்கஞ்சி சில நாட்களில் அதிகமாகவும் சாப்பிட்டதுண்டு என்கிறார். ஆக அவருடைய மனதில் இரக்கம் தயவு கருணை என்பன இளமை முதலே இருந்தன என்பது கண்கூடு.

**உற்ற தாரணியில் எனக்கு உலகுணர்ச்சி உற்ற நாள் முதல் ஒரு சில நாள்**
**பெற்ற தாய் வாட்டம் பார்ப்பதற்கஞ்சிப் பேருணவுண்டனன் சில நாள்**
**உற்றவர் நேயர் அன்புளார் வாட்டம் உறுவதற்கஞ்சினேன் உண்டேன்**
**மற்றிவை அல்லால் சுக உணாக்கொள்ள மன நடுங்கியது நீ அறிவாய்**

தனது நண்பர் இரத்ன முதலியார் ஒரு வேளை போஜனந்தான் கொள்வேன் என்று எழுதிய கடிதங் கண்டவுடன் பாக்களை அச்சிட அனுமதி அளித்து விட்டார். இது தான் வள்ளலாரின் இரக்க உள்ளம். அவரது அருள் பெற என்ன செய்ய வேண்டும் என்பதை அவரது அண்ணியாரும் இரத்ன முதலியாரும் நமக்கு வழிகாட்டியுள்ளனர்.

## படிப்பது நன்றே அடிப்பது நன்றல்ல

பெருமானாரின் தமையனார் மருகர் பொன்னேரி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் பெருமானாரின் தமையனார் மகன் வடிவேல் பிள்ளை கல்வி பயின்று வந்தார். படிப்பிலே சிறிது கவனக் குறைவாய் இருந்தது கண்டு சுந்தரம் பிள்ளை அவர்கள் வடிவேலுப் பிள்ளையை அடித்து விட்டார். ஆசிரியர் பாடம் சொல்லித் தரும்பொழுது சரிவரக் கவனிக்காத மாணவனை, வினாவிற்கு விடை சொல்லத் தெரியாத மாணவனை ஆசிரியர் கண்டிப்பதும் அடிப்பதும் வழக்கம்தான். அதே வழக்கம் தான் சுந்தரம் பிள்ளை வடிவேலுப் பிள்ளையை அடித்தது. அவர் அடித்ததை அறிந்த இராமலிங்கர் பொன்னேரி சுந்தரம் பிள்ளைக்கு அடிக்க வேண்டாம் என்று அறிவுரை கூறி ஒரு பாடல் எழுதி அனுப்பினார்.

**படிப்பது நன்றெனத் தெரிந்த பாங்குடையாய்**
**மன்றுள் வெளிப் பரமன் அன்பே**
**தடிப்பது நன்றெனத் தெரிந்த சதுருடையாய்**
**அறநவின்ற தவத்தாய் வீணில்**
**துடிப்பதிலாத் தூய மனச் சுந்தரப்பேர்**
**உடையாய் என் தோழ கேள் நீ**
**அடிப்பது மச்சிறுவர்களை யடிப்பது நன்**
**றல என் மேலாணை ஆணை**

சிறுவர்களுக்குப் பாடங் கற்பிக்கும் போது ஏற்படும் சினத்தாலும், பொறுமையின்மையாலும் ஆசிரியர்கள் சிறுவர்களை அடிப்பதுண்டு. அவ்வாறு அடிப்பதும் நன்றல்ல என்றார் இராமலிங்கர்.

## தருமச் சாலையில் நம் பெருமானார் பெற்ற பேறு

ஆதரவற்ற ஏழைகட்குப் பசியாற்றல் செய்தது மட்டுமின்றி உடையும் தருமச் சாலையில் அளிக்கப்பட்டு வந்தது. நம் பெருமானார் ஜீவகாருண்யத்தோடு மட்டும் நில்லாது தமது பனிரெண்டாம் வயதில் தொடங்கிய ஞானநெறியில் தவம் இயற்றுவதைத் தொடர்ந்து கொண்டிருந்தார். அத்தவம் ஒரு

பகலில் தருமச்சாலையிலே நிறைவு பெற்றதாக நம் பெருமானார் அறிவிக்கின்றார்.

**காலையிலே என்றனக்கே கிடைத்த பெரும்பொருளே களிப்பே**
**என் கருத்தகத்தே கனிந்த நறுங்கனியே**
**மேலையிலே இம்மையிலே ஒருமையிலே தவத்தால்**
**மேவுகின்ற பெரும் பயனாம் விளைவையெலாம் தருமச்**
**சாலையிலே ஒரு பகலில் தந்த தனிப் பதியே**
**சமரச சன்மார்க்கச் சங்கத் தலையமர்ந்த நிதியே**
**மாலையிலே சிறந்த மொழிமாலை யணிந்தாடும்**
**மாநடத்தென்னரசே என் மாலையும் ஏற்றருளே.**

அஷ்டமா சித்திகள் அனைத்தும் அவரை வந்தடைந்தன. தான் பெற்ற ஞான அனுபவத்தை அவர் வெளிப்படுத்துகின்றார்.

**ஈராறு தொடங்கி இற்றைப்பகலின் வரையுமே**
**எளியேன் பட்ட பாட்டை நினைக்கில் இரும்பும் கரையுமே**
**ஏராயந்தப் பாடு முழுதும் இன்பமாயிற்றே**
**இறைவா நின் மெய்யருளிங் கெனக்குச் சொந்தமாயிற்றே**
**பனிரண்டாண்டு தொடங்கி இற்றைப் பகலின் வரையுமே**
**படியில் பட்ட பாட்டை நினைக்கில் மலையும் கரையுமே**
**துனியாதந்தப்பாடு முழுதும் சுகமதாயிற்றே**
**துரையே நின் மெய்யருளிங்கெனக்குச் சொந்தமாயிற்றே**

வள்ளலாருடைய தூல உடம்பானது சுத்த தேகமாக மாறியது. சுத்த தேகம் பெற்றவர்கள் நிலை எப்படிப்பட்டது என்னில் அவர்கட்கு மலஜலம், வியர்வை, துர்நாற்றம், சாயை முதலியன இல்லாமல் போகும். உணவோ, உறக்கமோ அவர்கட்குத் தேவையில்லை. இருந்த இடத்திலிருந்தே அவர்களால் எதையும் பார்க்க் முடியும். அவர்கள் கண்களுக்கு சுவர், மரம், மலை முதலிய எதுவும் தடையாய் இரா. நிழல் விழாத தேகமாக மாறிவிடுவதால் அவர்களைப் போட்டோ படம் பிடிக்க இயலாது. வள்ளலாரின் போட்டோ கிடையாது. அவர் காலத்தில் வாழ்ந்த இராமகிருஷ்ண பரமஉறம்ஸர், விவேகானந்தர், வள்ளலாரின் முதல் மாணாக்கராகிய தொழுவூர் வேலாயுத முதலியார் போன்றோரின் போட்டோ படங்கள் இருக்க வள்ளலாரை ஒன்பது முறை போட்டோ பிடிக்க முயன்றும் போட்டோவில் அவர் உருவம் விழவில்லை. அவர் ஒளி தேகமாகிய சுத்த தேகம் பெற்றார் என்பதற்கு இது ஒரு நல்ல சான்றாகும். இப்போதிருக்கும் வள்ளலாரின் படமெல்லாம் கற்பனையாக எழுதப்பட்டதே தவிர உண்மையான போட்டோ வல்ல.

(**<u>உண்மைத் தகவல்:</u>** இந்த வள்ளலார் வாழ்கிறார் என்ற புத்தகத்தை எழுதும் நான் 1960ம் ஆண்டு முதன் முதலாக வடலூர் சென்றேன். அப்போது மேட்டுக் குப்பத்தில் மிக மிக வயதான ஒரு பெரியவர் வள்ளலாரை நேரில் கண்டவர்

இருப்பதாகச் சொல்லவே அவரைச் சந்திக்க மேட்டுக் குப்பம் சென்றேன். அந்தப் பெரியவரைச் சந்தித்தேன். வள்ளலாரைப் பற்றி நிறைய செய்திகளை அவரிடம் கேட்டறிந்தேன். அதில் ஒன்று இது : வள்ளலாரின் உருவம் எப்படி இருந்தது என்று கேட்டேன். கருங்குழியில் வைக்கப்பட்டுள்ள உருவம் தான் அவரது உண்மையான தோற்றம் என்றார். ஓவியர் அவரைப் பார்த்து வரைந்த படம் அது என்றார். அந்தப் படத்தில் மீசை இருக்கும். இடுப்பில் சாவிக் கொத்து இருக்கும். அவரது உண்மை உருவம் அடுத்த பக்கத்தில் காண்க.)

## வள்ளலார் தங்கம் செய்தாரா!

வள்ளலார் தங்கம் செய்கிறார் என்றொரு செய்தி பரவியது. இரச வாதத்தில் வல்லவர் என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள். அதற்கேற்ப வள்ளலாரும் இரத்ன முதலியாருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் தங்கம் உரைக்கின்ற உரைகல் ஒன்றும் வெள்ளி உரைகல் ஒன்றும், எட்டு பலம் நிறுத்தக் கூடிய தராசு ஒன்றும் எடை கல்லும் அனுப்பி வைக்கும்படி எழுதினார்.

### பொன் விளைவு

3.5.1868

உ

சிவமயம்

அன்பு அறிவு தயை முதலிய சுப குணங்களிற் சிறந்த உண்மையன் பராகிய தங்கட்கு சிவ கடாக்ஷத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்து மேன் மேல் உண்டாக வென்று திருவருளை சிந்திக்கின்றேன். தங்கள் சுப சரித விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன். மற்ற சங்கதிகளை எனக்கு சாவகாசம் நேரிட்ட போது எழுதித் தெரிவிக்கின்றேன். தற்காலம் வேண்டுவதை இதனடியில் எழுதுகிறேன். அதாவது பொன்னுரைக்கின்ற உரைகல் ஒன்று, வெள்ளியுரைக்கின்ற உரைகல் ஒன்று, இவைகளையும் இவைகளுக்கு அடுத்த தராசு முதலிய கருவிகள் வைக்கின்ற பை ஒன்று, இம்மூன்றும் வாங்கி பங்கியில் அனுப்ப வேண்டும். சுமார் 8 பலம் நிறுக்கத்தக்க தராசு நேரிட்டாலும் அதனுடன் அனுப்ப வேண்டும்.

தேகத்தை பக்குவமாகப் பாராட்டிக் கொண்டு சிவசிந்தையும் ஜீவகாருண்ணியமும் மாறாமல் ஜாக்கிரதையோடு இருப்பீர்களாக. இதை சமரச வேத சன்மார்க்க சங்கத்தவரல்லாதவர்களுக்கு வெளிப்பட வாசிக்கப்படாது. வேணும். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

விபவ வருஷம் இங்ஙனம்

சித்திர மாதம் தேதி சிதம்பரம் இராமலிங்கம்

Stamped இ:.து சென்னப்பட்டணம் ஏழு கிணற்றுக்கடுத்த வீராசாமிப் பிள்ளை வீதியில் கீழண்டை வாடை நெ. கதவிலக்கமுள்ள வீட்டில் இருக்கும் மகாராஜராஜஸ்ரீ இரத்தின முதலியாரவர்களுக்கு, மதராஸ்.

வள்ளலார் தங்கம் செய்கின்ற செய்தி மக்கள்பால் மட்டுமின்றி திருடர்களுக்கும் எட்டியது போலும். ஒரு நாள் திருடர்கள் கூட சத்திய தருமச் சாலைக்குள் நுழைந்து விட்டார்கள். தென்னாற்காடு மாவட்ட கலெக்டர் வரை இந்தச் செய்தி பரவியது. தருமச்சாலையைச் சோதனை செய்யக் கலெக்டர் வந்தார். தருமச்சாலையின் முன் பக்கத்தில் கலெக்டர் வள்ளலாரிடம் பேசிக் கொண்டிருந்தார். கலெக்டரின் ஆட்கள் தருமச்சாலைக்குள் சோதனையிட்டுக் கொண்டிருந்தார்கள். வெள்ளிப் பூண்போட்ட கலெக்டரின் கைத்தடியைத் தன் கையில் வைத்து உருட்டிக் கொண்டே வள்ளலார் பேசிக் கொண்டிருந்தார். சோதனை முடிந்து தவறானது ஒன்றும் இல்லை எனத் திரும்பினார்கள். தொந்தரவு கொடுத்ததற்காக மன்னிப்பு கேட்டுக் கொண்டு கலெக்டரும் புறப்பட்டார். கலெக்டரின் கைத்தடியை வள்ளலார் திருப்பிக் கொடுத்தார். கைத்தடியிலிருந்த வெள்ளிப்பூண் தங்கமாக மாறியிருந்தது. வள்ளலார் கைப்பட்ட வெள்ளி தங்கமாக மாறியிருந்தது கண்டு கலெக்டர் ஒன்றும் செய்ய முடியாது திகைத்துப் போனார்.

14.12.1871 வியாழனன்று புதுவை திரு. இரத்ன செட்டியார் அவர்கள் கூடலூர் திரு. அப்பாசாமி செட்டியார் அவர்கட்கு எழுதிய கடிதத்தில் "சாலையில் திருடர் வந்ததாகவும் சில பேருக்குக் காயம் பட்டதாகவும் புதுவையில் வெகு குபாராய்ப் பேசிக் கொள்கின்றார்கள் என்று எழுதுகிறார்.

(பக்கம் 489 - உரைநடை - திருமுகம் எண் 10)

தங்கம் செய்த செய்தி அறிந்து திருடர்களும் தருமச்சாலைக்குள் நுழைந்தனரோ?

## திருவருட்பாவில் அரசியல்

வள்ளலார் காலத்தில் இந்திய நாடு அடிமைப்பட்டிருந்தது. வெள்ளையர் ஆட்சியின் கொடுமையைக் கண்ட வள்ளலார் மனம் நொந்து அவர்களது ஆட்சி கடுகி ஒழிய வேண்டும் என்று ஒரே ஒரு பாட்டாக அறம் பாடினார்.

**கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக**
**அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க - தெருள்நயந்த**
**நல்லோர் நினைத்த நலம் பெறுக நன்று நினைத்து**
**எல்லோரும் வாழ்க இசைந்து** (திரு அருட்பா)

## அருளாளர் சாபம் வீண் போகுமா?

1869ம் ஆண்டு அக்டோபர் 2ம் நாள் குஜராத்தில் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி பிறந்தார். மது, மங்கை, மாமிசம் மூன்றையும் தொட மாட்டேன் என்று தாயிடம் சத்தியம் செய்து லண்டன் போய் பாரிஸ்டர் பட்டம் பெற்றார். தென் ஆப்ரிக்காவில் நிற வெறியை ஒழிக்க அரும்பாடுபட்டார். அஉறிம்சை அதாவது ஜீவகாருண்யமே அவரது கொள்கை. கத்தியின்றி ரத்தமின்றி நாடு சுதந்தரமடையப் பாடுபட்டார்.

அவர் வணங்கியது ராமனை. எப்பொழுதும் அவர் வாயில் ஜெபித்தது ராம நாமம் தான். துப்பாக்கியால் சுட்ட போதும் அவர் வாயிலிருந்து வந்த வார்த்தை உேற ராம் என்பது தான். கோதண்டம் ஏந்திய ஸ்ரீராமனை நான் வணங்கவில்லை என்று மகாத்மா காந்தி தெளிவுபடுத்தி விட்டார். அப்படியானால் அவர் வணங்கியது எந்த ராமனை?

காந்தி பிறந்தார். சுதந்திரம் பெறப் பாடுபட்டார். 1947ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் நாள் சுதந்திரம் அடைந்ததும் 1948ம் ஆண்டு ஜனவரி 30ம் நாள் வெள்ளிக் கிழமை மாலை அவர் நாதுராம் விநாயகக் கோட்ஸே என்பவரால் சுடப்பட்டார்.

வள்ளலார் திருக்காப்பிட்டுக் கொண்ட நாளும் ஜனவரி 30 வெள்ளிக் கிழமை.

கருணை இலா ஆட்சி கடுகி ஒழிக என்றது வள்ளலார் சாபம். அந்தச் சாபத்தின் விளைவாகக் காந்தி தோன்றினார். வள்ளலார் வழியில் அஉறிம்சைப் பிரச்சாரம் செய்தார். சுதந்திரம் பெற்று கருணையிலா ஆட்சியை ஒழித்தார். வந்த வேலை முடிந்தது. ஜனவரி 30 வெள்ளியன்று போய் விட்டார். எனவே வள்ளலார் சாபமே மகாத்மா காந்தியாக வந்தது என்பது சிந்திக்கக் கூடிய ஒன்றே.

## <u>அகர உயிரின் இலக்கண நியாய விசார வினாக்கள்</u>

ஸ்ரீ சுவாமிகளுக்கு ஆட்பட்ட சமரச வேத சன்மார்க்க சங்கத்து அறிஞர்களில் ஒருவராகிய ஸ்ரீ ஆனந்த நாத சண்முக சரணாலய சுவாமிகள் எழுதியவற்றுள் கண்டது :-

> ... ... புலவர்கள் பலர் அகங்காரத்தால் தம்மை மதியாது இயலறியாது எழுதியவாறே, புலமையிற் பெரியோ மென்னுஞ் செருக்கின்றி............அறிவறிந் தடங்கியாரிற் சிலர் எழுதியவற்றிற் சில சில விடங்களில் வழுவினர். இவ்வழுக்கள் செருக்கால் வழுவியதன்று. விசாரத்தாலுஞ் சிவாநுபவ மேலீட்டாலும் வழுவியது. இவற்றைத் தேவாரந் திருவாசக முதலிய உண்மை முறைகளிற் காண்கின்றோம். இக்காலத்து எமது ஆசிரியரை வணங்கி "ஐயரே! தேவரீர் எழுதிய சில வாசகத்தினுஞ்

செய்யுளினுங் கருத்துக்கு விளங்கப் புலப்படாமை மயக்குகின்ற சொற்றொடர்கள் சில வுள வென்று எமது மாட்டாமையாற்றோன்றுகின்றது : இதற்கு யாது செய்வோம்?" என்று விண்ணப்பஞ் செய்ய, அவர் "ஐய! நீர் அஞ்சற்க, யாம் எழுதிய வாசகத்திலுஞ் செய்யுளினுஞ் அளவிறந்த குற்றங்களிருக்கின்றன: என் செய்வோம்! விசார வசத்தால் ஆங்காங்குந் தவறினேம். அதனைப் பெருங் கருணையுள்ள எமது கடவுள் மன்னிப்பர். மற்றையரு மன்னித்தல் வேண்டும். யாம் யார்? எமக்கு யாது தெரியும்? புழுவினுங் கடைய புலையரிற் சிறியேம் இதனால் நாணுதலுடையேம்" என்றனர். ஐயர் புகன்ற மாற்றம் எவ்வாறென் றெண்ணி நிற்குந் தருணத்து எம்மை ஆண்டிருக்கப் பணித்து மீட்டுஞ் சொல்லுவர் :-

அகரவுயிர் என்பது யாது? அகரவுயிர்க்கு

1. வரி வரலாற்றின் இலக்கணம் என்னை?
2. ஒலி வரலாற்றின் இலக்கணம் என்னை?
3. தன்மை வரலாற்றின் இலக்கணம் என்னை?
4. உணர்ச்சி வரலாற்றின் இலக்கணம் என்னை?
5. உண்மை யநுபவ விலக்கணம் என்னை?

அகர வுயிர்க்கு

6. வரி யுறு விலக்கணம் என்னை?
7. ஒலி யுறு விலக்கணம் என்னை?
8. தன்மை யுருவி னிலக்கணம் என்னை?
9. உணர்ச்சி யுருவி னிலக்கணம் என்னை?
10. உண்மையனுபவ வுருவி விலக்கணம் என்னை?

அகர வுயிரின்

11. வரிச் சொருப விலக்கணம் என்னை?
12. ஒலிச் சொருப விலக்கணம் என்னை?
13. தன்மைச் சொருப விலக்கணம் என்னை?
14. உணர்ச்சிச் சொருப விலக்கணம் என்னை?
15. உண்மை யநுபவச் சொருப விலக்கணம் என்னை?

அகர யுயிர்க்கு

16. வரிச் சொருப விலக்கணம் என்னை?
17. ஒலிச் சொருப விலக்கணம் என்னை?
18. தன்மைச் சொருப விலக்கணம் என்னை?
19. உணர்ச்சிச் சொருப விலக்கணம் என்னை?
20. உண்மை யநுபவச் சொருப விலக்கணம் என்னை?

அகர வுயிரின்

21. வரிச் செயற்கை யிலக்கண மென்னை?
22. ஒலிச் செயற்கை யிலக்கண மென்னை?
23. தன்மைச் செயற்கை யிலக்கண மென்னை?
24. உணர்ச்சிச் செயற்கை யிலக்கண மென்னை?
25. உண்மைச் செயற்கை யிலக்கண மென்னை?

அகர வுயிரின்

26. வரி யதிகார விலக்கணம் என்னை?
27. ஒலி யதிகார விலக்கணம் என்னை?
28. தன்மை யதிகார விலக்கணம் என்னை?
29. உணர்ச்சி யதிகார விலக்கணம் என்னை?
30. உண்மையதிகார விலக்கணம் என்னை?

அகரவுயிரின்

31. வரிப் பொது விலக்கணம் என்னை?
32. ஒலிப் பொது விலக்கணம் என்னை?
33. தன்மைப் பொது விலக்கணம் என்னை?
34. உணர்ச்சிப் பொது விலக்கண மென்னை?
35. உண்மைப் பொது விலக்கண மென்னை?

அகரவுயிரின்

36. வரிச் சிறப் பிலக்கணம் என்னை?
37. ஒலிச் சிறப் பிலக்கணம் என்னை?
38. தன்மைச் சிறப் பிலக்கணம் என்னை?
39. உணர்ச்சிச் சிறப்பிலக்கணம் என்னை?
40. உண்மைச் சிறப் பிலக்கணம் என்னை?

அகரவுயிரின்

41. வரிக் குண விலக்கண மென்னை?
42. ஒலிக் குண விலக்கண மென்னை?
43. தன்மைக் குண விலக்கண மென்னை?
44. உணர்ச்சிக் குண விலக்கண மென்னை?
45. உண்மைக் குண விலக்கண மென்னை?

என்பன முதலாக இவ்வகர வுயிர் ஒன்றற்கே யின்னும் பற்பல இலக்கண நியாய விசார வினாக்கள் உளவாயின், எம்போல் வாருணர்ச்சிக்கண் அவ்

வினாக்களுக்கு விடை யெங்ஙனந் தோற்றும்? ஒரெழுத்திற்கே யிங்ஙன மானால் பற்பல வெழுத்துக்களுக்கும் அவ்வெழுத்துக்களா லாகிய சொற்களுக்குஞ் சொற் பொருள்களுக்கும் விடை கொடுப்பது எங்ஙனம்? ஆகலில் கற்றோமென்னுஞ் செருக்கை முழுதும் விடுத்து விசார வசத்தராகிச் சிவ பெருமான் திருவருளைச் சிந்தித்திருத்தல் வேண்டும்" என்று எம்மையோர் பொருளாகக் கருதி இரக்கத்தால் இசைத்தனர். ஆகலின் கல்வியிற் செருக்கடைதல் எவ்வாற்றானும் பொருந்தாது.....

குறிப்பு :

ஆனந்த நாத சண்முக சரணாலய சுவாமிகள் பெருமானார் பாக்களிலும் சில வழுக்கல் உள்ளனவே என்று பெருமானாரைக் கேட்டார். எங்கெங்கே வழுக்கள் இருக்கின்றன காட்டுங்கள் என்று திருப்பிக் கேட்காமல் வழுக்கள் ஒன்றல்ல இரண்டல்ல அனேக லட்சம் உண்டு என்றும் தாங்கள் மன்னித்து ஏற்றுக் கொள்ளுங்கள் என்றும் கூறினார். இதைக் கூர்ந்து நோக்கின் ஓர் உண்மை புரியும். நான் நீங்கள் உய்யும் வழியல்லவா கூறியிருக்கிறேன். அதில் பிழைகள் உள்ளனவா என்று ஆராய்ச்சி செய்து ஏமாந்து விட்டு விடாதீர்கள். அவற்றை ஏற்றுப் பயனடைய வேண்டும் என்று தனது இரக்கத்தை அவர் மாட்டு கொண்ட பாசத்தை வெளிப்படுத்தினார். திரு அருட்பாவைத் தள்ளி விடாதீர்கள். ஏற்றுக் கொண்டு உண்மைப் பயனை அடையுங்கள் என்பதே வள்ளற் பெருமானாரின் வேண்டுகோள்.

## சாலையில் நிகழ்ந்த அற்புதங்களில் சில

வள்ளற் பெருமானார் வெளியே நடக்கும்போது சூரியனிடமிருந்து ஒளிக்கற்றை அவர் தலை மீது வந்து சேரும் (திரைப்படம் பார்க்கும் போது திரையில் ஒளி வந்து சேருவது போல).

ஒருமுறை வள்ளற் பெருமானார் வெளியே சென்றார். அவர் என்ன செய்யப் போகிறார் என்று பார்க்க ஆவல் கொண்டு சண்முகம் பிள்ளை என்பவர் பின் சென்று பார்த்தார். பெருமானாரின் அங்கங்கள் வெவ்வேறாகச் சிதறிக் கிடந்ததைப் பார்த்து அலறி அடித்துக் கொண்டு திரும்பி வந்தார். அவர் பின்னாலேயே பெருமானாரும் வந்து இனி இவ்வாறு வந்து பார்க்காதீர்கள் என்று அறிவுறுத்தினார்.

### ஒரே சமயத்தில் பல இடங்களில் திகழ்ந்தது

கூடலூர் பேரை தேவநாத பிள்ளை என்பவர் அடிகட்கு ஆட்பட்ட அன்பர்களுள் ஒருவர். அவர் பாடிய தோத்திரப் பாக்களை அடிகள் பார்வையிட்டுத் திருத்தி யருளியதோடு சாற்றுக் கவியொன்றும் அருளினார். அச்சாற்றுக் கவி.

**இரும்புருக்க உலைக்களந்தோ றுழல்கின்றீர்**
**இரும்பொன்றோ இளகாக் கல்லும்**
**விரும்பியொரு கணத்துருக்கும் உளவொன்று**
**கேட்கவள மேவு கூடற்**
**பெரும்புகழான் தேவநா தன்பரனைக்**
**குறித்தன்பு பிறங்கப் பாடும்**
**கரும்பியைந்த சுவைப்பாட்டில் ஒன்றவைக்கு**
**முன்பாடிக் காணு வீரே**

என்பதாம். இத் தேவநாத பிள்ளையின் மகன் ஐயாசாமி பிள்ளையின் ஒரு கால் தொடையில் கட்டி உண்டாகித் துன்புற்றார். அதனை அறிந்த வள்ளற் பெருமான் கட்டி உடைவதற்கு மருந்து கூறிப் பின்வரும் செய்யுளை வரைந்து திருநீற்றுடன் தேவநாத பிள்ளைக்கு அனுப்பியருளினர்.

**இறையருள் நிரம்ப இருத்தலான் மகிழ்ந்து**
**பிறையென வளரு நம் பிள்ளை மணிக்கு**
**ஊருவிற் கட்டி உடனே உடையும்**
**அதுகுறித் தையநீ அஞ்சலை அஞ்சலை**
**இதுகுறித் தருள்நீ றிதற்குள் அடக்கஞ்**
**செய்துவைத் தனன் அத் திருநீ றெடுத்து**
**எய்துமுப் போதும் இடுகமற் றதன் மேல்**
**கொவ்வைச்சாறும் கோள் வெடி யுப்பும்**
**கவ்வக்கலந்து காய்ச்சிப் பூசுக**
**பூசுக உடைந்தபிற் பூரம் பூசுக**
**பாசுறு முருங்கைப் பட்டைச் சாற்றினில்**

பெருமான் அனுப்பிய திருநீற்றினையும், கூறிய மருந்தையும் பூசி ஐயாசாமி பிள்ளை துன்பம் நீங்கப் பெற்றார்.

பின் ஒரு சமயம் ஐயாசாமி பிள்ளை கடும் நோயொன்றால் துன்புற்றார். நோயின் கடுமை உயிர் நீங்குமோ என அஞ்சுமாறு இருந்தது. ஒரு நாள் இரவில் தேவநாத பிள்ளை மகனது நோய்க்காக மிகவும் வருந்தியலராய் வள்ளற் பெருமானை நினைத்தார். அதுபோது வடலூரில் தருமச்சாலையில் அன்பரிடையே உபதேசம் செய்து கொண்டிருந்த பெருமான் அத்தருணமே கடலூரில் தோன்றி தேவநாத பிள்ளையின் வீட்டுக் கதவை தட்டினர். தேவநாத பிள்ளை கதவைத் திறந்தார். பெருமான் உள்ளே புகுந்து ஐயாசாமி பிள்ளைக்குத் திருநீறிட்டுச் சற்று நேரம் அங்கிருந்த பின் புறப்பட்டு விட்டனர். அன்றிரவே நோய் முற்றிலும் குணமாயிற்று. மறு நாள் தேவநாத பிள்ளை ஐயாசாமி பிள்ளையையும் வண்டியில் அழைத்துக் கொண்டு வடலூர்க்கு வந்தார். பெருமான் சாலையில் அன்பர் களிடையே அருளுரையாற்றிக் கொண்டிருந்தனர். தேவநாத பிள்ளை வருவதைக்

கண்டதும் விரைந்து எதிர் வந்து தனித்தழைத்துச் சென்று நேற்று கூடலூர் வந்ததை இங்கு யாருக்கும் கூற வேண்டாம் எனப் புகன்றனர். தேவநாத பிள்ளைக்கு ஐயமுண்டாயிற்று. அவர் சாலையிலிருந்தவர்களை உசாவினர். முன்னாளிரவு முழுவதும் அடிகள் சாலையிலேயே இருந்தனரென்றும் வெளியில் செல்லவில்லை என்றம் அவர்கள் கூறினர். ஒரே சமயத்தில் அடிகள் வடலூரிலும், கூடலூரிலும் காட்சியளித்து அங்கங்கு அருளிய திறத்தைத் தேவநாத பிள்ளையும் சாலையிலிருந்தவர்களும் அறிந்து வியந்து போற்று வாராயினர்.

ஒரு முறை அடிகள் திருவதிகைக்கு வழிபடச் சென்றபோது விழாக் காலமாதலின் மக்கள் கூட்டம் மிகுதியாக இருந்தது. அடிகளைக் காண்ப தற்காகக் கூட்டத்தில் பலர் நெருங்கவே பெரு நெருக்கடி உண்டாயிற்று. அப்போது அடிகள் அக்கூட்டத்தில் பல இடங்களிலும் தோன்றிக் காட்சி யளித்தனர்.

ஒரு நாள் மாலை சாலையிலிருந்து அடிகள் உலாவப் புறப்பட்டார்கள். உடன் பலர் புறப்பட்டனர். தனியே உலவச் செல்லக் கருதிய அடிகள் உடன் வருபவர்களை நோக்கி 'இருங்கள்' என்று கூறி நடந்தனர். அதன் பின்னரும் மற்றவர்கள் பின்தொடரவே அடிகள் தி டீரெனத் தொலைவிற் காணப்பட்டனர். தொடர்ந்தவர்கள் ஓடி நெருங்க முயன்ற போது பின்னும் தொலைவில் பெருமானைக் காணலாயினர்.

கருங்குழியில் உறையும் காலத்தில் ஒரு நாள் மாலை அடிகள் கல்லாங்குளத்தின் அருகே உலவிக் கொண்டிருந்தனர். தனித்திருக்கும் இதுவே உபதேசம் கேட்கத்தக்க சமயம் என்று கருதி அன்பர் ஒருவர் அடிகளை அணுகினர். அடிகள் அத்தருணமே தொலைவில் காணப்பட்டார்கள். நெருங்க, நெருங்கத் தூரமாகவே செல்லுவதைக் கண்ட அவ்வன்பர் அயர்ந்து நின்றார்.

மரம் வாங்குவதற்காக ஆறுமுக முதலியார் சென்னை சென்ற போதும் அடிகள் வடலூரிலிருந்தவாறே சென்னையிலும் தோன்றி அவருக்கு உதவினர்.

## அடிகளின் திருக்கரம் அமுதசுரபி ஆதல்

தருமச்சாலையில் ஒரு நாள் இரவு உணவு நேரத்தில் பலர் வந்து விட்டனர். சமைத்த உணவு சிறிதே உள்ளதென்றும் அனைவர்க்கும் பரிமாறப் போதாதென்றும் சண்முகம் பிள்ளை அடிகளிடம் விண்ணப்பித்தார். அடிகள் உடனே எழுந்து 'பிச்' இலை போடும் என்று கூறித் தம் கையால் அனைவர்க்கும் உணவு பரிமாறினர். அனைவரும் உண்ட பின்னும் உணவு எஞ்சியிருந்தது.

## சாலைக்கு அரிசி வருவித்தருளல்

ஒரு நாள் சண்முகம் பிள்ளை சாலையில் சமைப்பதற்கு அரிசி யில்லாததை விண்ணப்பித்தார். அடிகள் தனித்தமர்ந்து சிறிது நேரம் தியானம் செய்த பின் 'வேண்டிய அரிசியும் மற்றவையும் நாளைக்கு வரும்' என்று கூறினர். அவ்வாறே மறு நாள் திருத்துறை யூரினின்றும் ஓர் அன்பர் மூன்று வண்டிகளில்

அரிசியும் பிற உணவுப் பொருள்களும் கொண்டு வந்து நேற்றிரவு கனவில் உத்தரவானதாகக் கூறிச் சேர்ப்பித்தார்.

## திரை மறைவில் திருச்சிற்றம்பலம்

ஆண்டுதோறும் ஆனித் திருமஞ்சனத்திற்கும் திருவாதிரைத் திருவிழாவிற்கும் வெளியூர் அன்பர்கள் பலர் வடலூருக்கு வந்து அடிகளையும் அழைத்துக் கொண்டு சிதம்பரம் சென்று தரிசிப்பது வழக்கம். ஒரு சமயம் அவ்வாறே பலர் வந்து சிதம்பரம் செல்லக் காத்திருந்தனர். விழா நாள் நெருங்கியும் அடிகள் புறப்படுவதாகத் தோன்றவில்லை. விழா நெருங்க நெருங்க ஒவ்வொருவராகச் சிதம்பரம் சென்றனர். சிலர் மட்டும் அடிகளுடன் செல்வோம் என்று இருந்தனர். விழா நாளும் வந்தது. அன்றும் அடிகள் வடலூரை விட்டுப் புறப்படவில்லை. சிதம்பர தரிசனம் இதோ பாருங்கள் என்று தருமச்சாலையின் ஒரு பகுதியில் திரையிடச் செய்து, அத்திரைக்குள் சென்று பார்க்கக் கூறினர். திரைக்குள்ளே சென்றவர்கள் அங்கு சிதம்பர தரிசனத்தைக் கண்டு களித்தனர். அடிகளார் அப்போது தில்லை சென்று வழிபடும் பருவத்தில் இல்லை என்பதும் அடிகளாரின் இருப்பிடமே தில்லையாகத் திகழ்ந்தது என்பதும் இதனால் வெளிப்படை அடிகள் வடலூரை உத்தர ஞான சிதம்பரமாக்கியவரன்றோ?

## மழை பொழிவித்தது

கோடை காலத்தில் சித்திரைத் திங்களில் தருமாச்சாலைக்கு வந்தவர்களிற் பலர் மழையில்லாக் குறையால் துன்புற்றதை அறிந்த வள்ளற் பெருமான் ஒரு செம்பு தண்ணீரைக் கொண்டு வந்து தமது தலையில் ஊற்றும்படிக் கூறினர். அன்பர்கள் அவ்வாறே செய்ததும் சற்று நேரத்தில் மேகங்கள் திரண்டு நான்கு செவி மழை பெய்தது. புதுப்பேட்டை என்னும் ஊரில் உள்ள அன்பர்கள் இந் நிகழ்ச்சியைக் கேட்டு வடலூர்க்கு வந்து தம் ஊரில் மழையின்மையையும், கிணறுகள் நீர்ச் சுரப்பற்றுப் போயிருந்ததையும் விண்ணப்பித்தனர். பெருமான் ஆறு குடந் தண்ணீரைத் தம் காலில் விடக் கட்டளையிட்டனர். அவ்வாறே செய்யலும் புதுப்பேட்டையில் கிணறுகளில் நீர் நன்கு ஊறி மேல் நீராயிற்று. முன்னிலும் சுவையாயும் ஆயிற்று. ஊரில் நல்ல மழையும் பொழிந்து செழிந்தது.

வள்ளற் பெருமானார் தலை மீது தண்ணீர் விட்டதும் மழை பொழிந்தது. அவரது காலின் மீது தண்ணீர் விட்டதும் பூமியில் கிணறுகள் நிரம்பின எனில் வள்ளலாரின் அருள் ஆற்றல் பூமிக்கும் வானத்திற்கும் பரந்து கிடக்கிறது. என்பதை உணர வேண்டும்.

## நீ அடைந்து விலக்குக

ஒரு முறை தருமச்சாலையில் பணிபுரிந்த அனைவரும் காய்ச்சலால் அவதியுற்றனர். சாலையின் அன்னதானப் பணி தடையுறுமோ என்ற ஐயம் தோன்றியது. பெருமானார் ஒவ்வொருவரிடமும் போய் எனக்குத் தந்து விடுகிறாயா

என்று கேட்டுவிட்டு ஒரு மூலையில் போய் அமர்ந்தார். அவர் உடல் அனலாய்க் கொதித்து அடங்கியது. அங்கிருந்த அனைவர் காய்ச்சலும் பறந்து விட்டது. அவர்கள் காய்ச்சலை நம்பெருமானார் வேண்டிக் கேட்டுப் பெற்றுத் தவத்தினால் குணப்படுத்தினார். அகவலில்

உலகினில் உயிர்கட்குறும் இடையூறெலாம்
விலக நீயடைந்து விலக்குக - மகிழ்க என்ற
வரிகட்கு இதுதான் விளக்கமோ?

## தீயை அணைத்தது

பண்ருட்டியில் ஓர் அன்பர் வீட்டில் தீப்பற்றிக் கொண்டது. அவர் அங்கிருந்தே வள்ளலாரை வேண்டினார். வடலூர் தருமச்சாலையிலிருந்த வள்ளலார் தன்னுடைய மேலாடையைச் சற்று விசிறினார். பண்ருட்டியில் எரிந்து கொண்டிருந்த தீ அணைந்து விட்டது.

## கள்வனுக்கு கருணை

மஞ்சகுப்பம் கோர்ட்டு சிரஸ்த்தார் இராமச்சந்திர முதலியார் என்பவர் நம் பெருமானாரைத் தம் ஊருக்கு அழைத்துச் சென்றார். இருவரும் புறப்பட்டு வண்டியில் சென்று கொண்டிருந்தனர். குள்ளஞ்சாவடி அருகே கள்வர் வண்டியை மறித்தனர். சிரஸ்த்தார் கையிலிருந்த வைர மோதிரத்தைக் கழற்றும்படி அதட்டினார்கள். அவரோ அந்த மோதிரத்தைக் கழற்றுவதற்குச் சிரமப் பட்டுக் கொண்டிருந்தார். கள்வனோ சீக்கிரம் என்று அதட்டியதுடன் அவரை அடிக்கவும் கை ஓங்கினான். அதுவரை மௌனமாக இருந்த வள்ளலார் மிகவும் அவசரமோ என்று கேட்டார். அந்தக் கள்வனின் ஓங்கிய கை அப்படியே நின்று விட்டது. கள்வர்கள் நம் பெருமானாரின் வல்லபத்தை உணர்ந்து அவர் காலில் விழுந்து வணங்கி மன்னிப்புக் கேட்டனர். கள்வனின் கை மீண்டும் பழைய நிலைக்கு வந்தது.

## வள்ளலாரும் தண்டபாணி சுவாமிகளும்

முருகதத்ரச சுவாமிகள் என்றும் திருப்புகழ்ச் சுவாமிகளென்றும் அழைக்கப்பட்ட வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் வடலூர் வந்து வள்ளற் பெருமானாரைச் சந்தித்து உரையாடுவது பலப்பல நேரங்களில் நடந்துள்ளது.

நக்கீரர், அருணகிரிநாதர், குமரகுருபரர் என்றெல்லாம் தான் தான் பிறவி எடுத்திருந்ததாகவும், இந்தப் பிறவி தனது இருபத்தேழாவது பிறவி யென்றும்

முற்பிறப்பில் தாயுமானாரே இப்போது வள்ளலாராக வந்தவர் என்றும் ஈசன் தன்னிடம் கூறியதாக வண்ணச் சரபம் கூறியுள்ளார். வண்ணச்சரபம் தண்டாயுதபாணி சுவாமிகள் பாடிய பாடல்கள் பல்லாயிரக் கணக்கானவை.

வண்ணம் பாடுவதில் வல்லவரானதால் வண்ணச் சரபம் எனப் பலராலும் பாராட்டப் பெற்றார். இவரது பாடல்களைக் கேட்டு நம் பெருமானார் பல முறை வியப்படைந்திருக்கின்றார். அகத்தியர் முதல் வள்ளலார் வரை புலவர்கள் பலரது வரலாற்றைப் புலவர் புராணம் என வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடியுள்ளார். 72வது சருக்கமாகிய கடைசிச் சருகத்தில் வள்ளல் பெருமானாரைப் பற்றிப் பத்துச் செய்யுடகளை இயற்றியுள்ளார். அத்துடன் நில்லாது வள்ளற் பெருமான் திருக்காப்பிட்டுக் கொண்டபின் பலர் காண அறைக்குள் சென்ற வடலூரான் மீள வருவான் எனப் பத்துப் பாடல்களில் பாடியுள்ளார். இப்பதிகங்கட்கு அநுபவப் பதிகம் என்று பெயர். வடலூரான் இன்னும் ஏன் வரவில்லை என்று வினாப்பதிகம் பத்தும் பாடியுள்ளார். பெருமானார் காலத்தவர் இவர் ஆதலால் வள்ளலார் திருக்காப்பிட்டுக் கொண்டு மறைந்ததை உறுதிப்படுத்துவதுடன் மீளவும் வருவார் என்றும் இயம்புகின்றார்.

## <u>அருட்பா மருட்பா போர்</u>

இதுவரை வரலாறு எழுதியவர்கள் கூறி வந்த செய்தி. இராமலிங்கனாரின் பாக்கள் அருட்பா அல்ல என்று கோர்ட்டில் நாவலர் வழக்கு ஒன்று தொடுத்தார். விசாரணையன்று கோர்ட்டில் எல்லோரும் குழுமியிருந்தனர். இராமலிங்க அடிகள் கோர்ட்டில் நுழைந்ததும் அனைவரும் எழுந்து நின்றனர். நாவலரும் எழுந்து நின்றார். இதனைக் கண்ட நீதிபதி நீங்கள் தானே அவர் மீது வழக்கு தொடுத்தீர்கள். வழக்குத் தொடுத்த நீங்களே ஏன் எழுந்து நின்றீர்கள் என்று கேட்டார். திருநீறு அணிந்தவர்கள் யாராய் இருந்தாலும் அந்த அருளாளர்களை வணங்கி வரவேற்பதே சைவ மரபு என்றும் அவர் திருநீறு அணிந்திருப்பதால் எழுந்தேன் என்று நாவலர் கூறினார். தாங்களே அவரை அருளாளர் என்று கூறிவிட்டதால் அவருடைய பாடல்கள் அருட்பா தான் என்று நீதிபதி தீர்ப்பு கூறினார்.

இது உண்மையில் நடந்ததல்ல. உண்மையில் நடந்ததுதான் என்ன? மேலே தொடருங்கள்

### ஆறுமுக நாவலர்

ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணத்து நல்லூரிலே கார்காத்த வேளாளர் மரபிலே 1822 மார்கழி 5 அன்று பிறந்தார். ஐந்து வயதிலேயே வித்தியாரம்பஞ் செய்யப் பெற்றுச் சுப்பிரமணிய உபாத்தியாயரிடம் சில வருடம் கல்வி பயின்றார். சரவணமுத்துப் பிள்ளை என்பவரிடம் இலக்கிய இலக்கண, ஞான சாத்திரங்களைக் கற்றார். சைவமே தமிழ், தமிழே சைவம் என்று வாழ்ந்த இவர் இலக்கியம், இலக்கணம், தருக்கம், வேதாந்தம், சித்தாந்தம் முதலியவற்றைக் கற்ற பரசமயக் கோளரியாகவும் திகழ்ந்தார்.

சைவ சித்தாந்த சமயத்தைப் பரிபாலிக்கவும் அச்சமய நூல்களைப் பிரசுரிக்கவும், அவற்றைப் போதிப்பதற்கு வித்தியா சாலைகளை நிறுவவும், சித்தாந்த உண்மைகளைப் பிரசங்கிக்கவும், 'புறமத இருள்'களை ஓட்டவும் தமது வாழ் நாளை (திருமணங்கூட செய்து கொள்ளாமல்) அர்ப்பணித்துக் கொண்டவர் நாவலர். இருபது வயதில் பாதிரிமார்களால் நாவலருக்கு வேலை கிடைத்த போதும் சைவத்தை வளர்க்கும் பொருட்டு அவர் அதனைத் துறந்தார். அதனால் அவரது சகோதரர்களின் கோபத்திற்கு ஆளாகி அவர்களை விட்டு நீங்கும் நிலைமையும் ஏற்பட்டது.

'நாவலர்' என்னும் பட்டம் இவரது ஆளுமையைக் கருத்தில் கொண்டு திருவாவடுதுறை ஆதீனம் வழங்கியது. நாவலர் செய்யக் கருதிய சிவ புண்ணியங்களுள் முக்கியமானது தேவார பாராயணத்தை எல்லாத் தலங்களிலும் நடைமுறைப்படுத்த முயற்சி செய்ததாகும். சைவப் பணியோடு சமூகப் பணியிலும் நாவலர் அக்கறை காட்டியுள்ளார். 'கஞ்சித் தொட்டித் தருமம்' இவரது சமூகப் பணிக்கு உதாரணம். அருட்பா x மருட்பா விவாதங்களுக்குப் பின் தமிழகத்தை விட்டு யாழ்ப்பாணம் சென்ற நாவலர் அங்கு 1879 டிசம்பர் 5இல் மறைந்தார்.

ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணத்திலிருந்து 1848, 1849, 1854, 1858, 1864 ஆகிய ஆண்டுகளில் ஐந்து முறை தமிழகம் வந்துள்ளார். (நாவலர் மாநாட்டு மலர், 1969 : 1-4) இந்தத் தருணங்களில் பரவலாகச் சென்னையிலும் சிதம்பரத்திலும் வாழ்ந்தவர் அவர் என்றாலும், சிதம்பரத்தோடு அவருக்கிருந்த உறவே அதிகம் எனலாம். சிதம்பரத்தோடு அவர் கொண்ட தொடர்பு 1858இல் மேற்கொண்ட இந்தியப் பிரயாணத்தோடே தொடங்கியது என்பர்.

அருட்பா என்பது அருளைப் பெற்றுப் பாடிய பா அல்லது அருளைப் பெறப் பாடிய பா என்று பொருள்படும். அருளைப் பெற்றுப் பாடிய பாக்களுக்குச் சான்று தேவாரம் முதலிய ஐந்து புராணங்கள், அருளைப் பெறப் பாடிய பாக்களுக்குச் சான்று துண்டி விநாயகர் திருவருட்பா, கதிர்காம வேலர் திருவருட்பா முதலியன என்பது நாவலர் கருத்து.

திருமந்திரத்தையே அருட்பாப் பட்டியலில் சேர்க்க விரும்பாத நாவலர் வள்ளலாரது பாடல்களை அருட்பா என்று சொல்லுவதை விரும்பவில்லை. பட்டினத்தார் பாடல் திரட்டு, குமர குருபரர் பாடல் திரட்டு, தாயுமானவர் பாடல் திரட்டு என்று அழைப்பதைப் போல வள்ளலாரது பாடல்களையும் அவரது பெயராலேயே இராமலிங்கர் பாடல் திரட்டு என்று அழைக்க வேண்டும் என்பதே நாவலரது வாதமாக இருந்தது.

இவ்வாறு நாவலரால் பிரசிங்கப்பட்டதற்குக் கண்டனம் தெரிவிப்பதற்காக முதன் முதலில் திருமயிலை சண்முகம் பிள்ளையால் 1868இல் 'திருவருட்பா தூஷண பரிகாரம்' என்னும் நூல் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டது. அருட்பா மருட்பா பிரச்சினையில் வெளியான கண்டன நூல்களில் இதுவே முதல் நூல்.

நாவலரின் சீடர் சி.வை. தாமோதரம் பிள்ளை (1832-1901) நாவலரை 'இலக்கண இலக்கியங்களில் மகா வல்லவரும், சென்னை முதல் ஈழமீறாகவுள்ள தமிழ் நாட்டு வித்துவான்களில் தமக்கு இணையில்லாதவருமாகிய....' என்று

புகழந்திருந்தார். இது தமிழக அறிஞர்களை அவமதிப்பதாக உள்ளதென அருட்பா குழுவினர் எண்ணினர். இதற்கு முன்பே திருவருட்பாவைப் பற்றி, ஈழத்தவர் குறை கூறுதலும் அதற்கு மறுப்புத் தெரிவித்தல் என்பதும் தொடர்ந்து நிகழ்ந்து வந்துள்ளது.

திருவருட்பா நூல் குற்றம் - தமிழக வித்துவான்கள் அவமதிப்பு என்னும் இரு பிரச்சினைகளை முன்னிறுத்தி அதனைக் கண்டிக்கும் பொருட்டு வள்ளலாரின் மாணவர்களுள் ஒருவரான நரசிங்கபுரம் வீராசாமி முதலியார் 'விஞ்ஞாபனப் பத்திரிகை' என்பதை எழுதி அடுத்து வெளியிட்டார்.

வீராசாமி முதலியாரின் கண்டனத்திற்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில் 'நல்லறிவுச் சுடர் கொளுத்தல்' என்னும் நூல் சென்னை சிவபாத நேசப் பிள்ளை என்பவரால் எழுதப் பெற்று நாவலரின் சம்மதத்தோடு பதிப்பிக்கப் பெற்றது. (ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு 1996 : 140) ஆனால், இந்நூல் நாவலரால் எழுதப்பட்டது என்று சி. கணபதிப் பிள்ளை கூறுவார். (தாமோதரம் - அனுபந்தம் 1971 : 135).

நல்லறிவுச் சுடர் கொளுத்தல் நூலுக்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் வள்ளலாரின் சார்பாக வெளியான நூல் 'அகங்கார திமிர பானு.' இந்நூல் பற்றிய விவரம், எழுதியவர் பெயர் எதுவும் தற்போது கிடைக்கவில்லை. 'அகங்கார திமிர பானு'வின் ஆசிரியர் யார் என்பதை அறிய முடியாத போதும் அதனை எழுதியவர் தொழுவூர் வேலாயுத முதலியாராக இருக்கக்கூடும் என்று அனுமானிக்கலாம்.

'மகாராஜராஜஸ்ரீ தொழுவூர் வேலாயுத முதலியார் நாவலரை லக்ஷியஞ் செய்து இது வரையிலும் ஒன்றும் எழுதாமலிருந்தார். வீராசாமி வாத்தியார் தொந்திரவைக் குறித்து 'நல்லறிவுச் சுடர் கொளுத்தல்' என்னும் பத்திரிகைக்குப் பதிலெழுத ஆரம்பித்து எழுதிக் கொண்டு வரும்போது பெங்களூரில் முதலியாருடைய மைத்துனர் இறந்து விட்ட சமாசாரம் கேள்விப்பட்டு மேற்படியாருடைய கர்ம காரியத்திற்கு முதலியார் போயிருக்கிறார். 2-3 தினத்துக்குள் வந்து விடுவார். வந்தவுடனே அதையெழுதி முடித்து அச்சிட்டு வெளிப்படுத்துவதாக வீராசாமி வாத்தியார் யோசித்திருக்கிறார்.' (திருவருட்பா உரைநடைப் பகுதி. 1981: 483) என்னும் கடிதப் பகுதி இதனை உறுதிப்படுத்துகிறது.

இக்கண்டனத்தை அடுத்து வெளி வந்தது 'போலியருட்பா' என்னும் துண்டுப் பிரசுரமாகும். இப்பிரசுரத்தின் தலைப்பு பின்னாளில் 'போலியருட்பா மறுப்பு' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு இன்று வரை அதே பெயரில் வழங்குகிறது. இப்பெயர் மாற்றம் எப்பதிப்பில் நிகழ்ந்தது என்பது புலனாகவில்லை. இந்நூல், சுக்கில வருடம் (1869) வைகாசி மாதம், தத்துவ போதினி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டு மாமண்டூர் தியாகேச முதலியாரால் வெளியிடப்பட்டது.

வள்ளலாரின் மாணவர்களுள் மாமண்டூர் தியாகேச முதலியாரும் ஒருவர். இவர் முதலில் வள்ளலாருடன் இருந்து பின்பு அவரை விட்டு நீங்கி நாவலரைச் சரணடைந்தார். அந்தச் சமயத்தில்தான் நாவலர் 'போலியருட்பா மறுப்பு' என்பதை எழுதி அதனைத் தியாகேச முதலியார் பெயரில் வெளிப்படுத்தினார்.

'போலியருட்பா மறுப்பு'க்கு எதிராகப் பன்னிரு கண்டன நூல்கள் வெளியாயின. போலியருட்பா மறுப்புக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் 'நடந்த வண்ணம் அறிவித்தல்' என்னும் பத்திரிகை வெளியானது. இதனை எழுதி வெளியிட்டவர் சண்முக முதலியார். இதே போல விபவ வருடம் (1868) மாசி மாதம் கூடலூர் விசுவலிங்க முதலியார் 'பிரார்த்தனைப் பத்திரிகை' என்பதை எழுதி வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து தொழுவூர் வேலாயுத முதலியார் சுக்கில வருடம் (1869) ஆடி மாதம் 'போலியருட்பா மறுப்பின் கண்டனம் அல்லது குதர்க்காரணிய நாச மஉறாபரசு' என்னும் நூலை எழுதி வெளியிட்டார்.

குதர்க்காரணிய நாசமஉறாபரசுவை மறுத்து 'குதர்க்காரணிய நாசமஉறாபரசு கண்டனம்' என்னும் நூல் வெளியிடப்பட்டது.

1868இல் தொடங்கி நடைபெற்று வந்த அருட்பா x மருட்பா கண்டனங்கள் ஒரளவு அமைதியான பின்பு, ஈழம் திரும்பும் நோக்கோடு சென்னையிலிருந்து புறப்பட்டு நாவலர் 1869 ஜூன் மாதம் சிதம்பரம் வந்தார். இதற்கு முன்பே நாவலரால் கண்டிக்கப்பட்ட தீட்சிதர்கள் சிதம்பரத்திலே இராமலிங்கரையும் அவரது கோஷ்டியினரையும் துணையாகக் கொண்டு, நாவலரவர்களுக்கு எதிராகக் கூட்டம் கூட்டினார்கள். அந்தக் கூட்டம் பேரம்பலத்திலே நடைபெற்றது.

**'நிறைவெண் கொடிமாட நெற்றி நேர்தீண்டப்**
**பிறைவந் திறைதாங்கும் பேரம்பலம்** (தேவாரம் 1.80.4)

எனத் தேவார முதலிகளாற் போற்றப் பெற்ற பேரம்பலத்திலே, தேவார முதலிகளின் தேவாரம் உட்பட பஞ்சபுராணத்தையே 'அருட்பா' என்று கொள்ள வேண்டும் என வற்புறுத்தி நின்ற நாவலரவர்களுக்கு எதிராக 1869 ஜூன் மாதம் ஏழாம் தேதி கூடினார்கள். (பொ. பூலோக சிங்கம், 1993 : 195)

'1869 ஆனியில் உத்தர தரிசன தினம் சமீபத்தது. கூட்டம் சுவாமியையும் அழைத்துக் கொண்டு சிதம்பரம் புறப்பட்டது. தீக்ஷிதர்கள் பேரார்வத்தோடு அவர்களை வரவேற்றுப் பேரம்பலத்திலே கூடினார்கள். கூட்டம் ஆரம்பமானது. அன்று தரிசன தினம். முதலில் சுவாமி எழுந்து பேசினார். இல்லை, பேசுவித்தார்கள் என்பதே பொருத்தம்'. (சி. கணபதி பிள்ளை, 1968 : 19) 'இராமலிங்க அடிகளார் நாவலரவர்களை தூக்ஷித்துப் பேசும் போது 'நாவலர்' என்னும் சொல்லை 'நா - அலர்' எனப் பிரித்துப் பொய்யன், வித்தையில்லாதவன், நாவிற் பழிசொல்லை உடையவன் எனப் பலவாறு அதற்குப் பொருள் கொண்டு பேசினார். அப்போது ஈசான சிவாசாரியார் எழுந்து 'உந்தன் கருத்திலே தானா திருவாவடுதுறை யாதீனம் அவருக்குப் பட்டம் வழங்கியது' என்று கேட்டார். (ச. தனஞ்சய ராசசிங்கம், சுடரொளி, 1977. மேற்கோள் : இரா.வை. கனகரத்தினம், 1996 : 52) அவ்வளவிற் சுவாமி கண் மூடி மௌனியாய்ச் சும்மா விருந்தார். இக்கூட்டம் தொடர்பான செய்தி 'பேரம்பலப் பிரசங்கம்' என்னும் பெயர் கொடுத்து சி.சொ. சண்முகப் பிள்ளை, சி.அ. வேலாயுதப் பிள்ளை, ச.இரா. ஆறுமுகப் பிள்ளை என்னும் மூவரும் வெளிப்படுத்திய பத்திரிகையிற் காணப்படும். (த. கைலாச பிள்ளை, விக்கிரம வருடம், ப.80) 1869ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம்

16ஆம் தேதி வெளிவந்த 'பிறீமன்' (Freeman) பத்திரிகையும் இது குறித்துக் கருத்து தெரிவித்துள்ளது.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த தில்லைத் தலைமைக் குரு சபாநடேசர் எவ்வாறு நடந்து கொண்டார் என்பதை பீறீமன் பத்திரிகை பிரசுரித்ததைக் கொண்டு தனஞ்சயராச சிங்கம் பின்வருமாறு கூறுவார்.

'முன் காட்டியவற்றிலிருந்து அவை போன்ற சொற்றொடர்கள் சிலவற்றையும் பிரயோகித்துப் பேசிக் கொண்டிருந்த பிரம தீட்சிதர் ஆவேசமடைந்து, தாம் இருந்த ஆசனத்திலிருந்து எழுந்தார். நாவலர் இருக்கும் இடத்துக்குச் சென்று அவரை இழுத்துக் கொண்டு வந்து நையப் புடைப்பதற்குத் தாம் மிக விரும்புவதாகவும் மற்றவர்கள் தமக்கு உதவியாய் வருதல் வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். ஆயினும் எவருமே போகவில்லை. (ச. தனஞ்சயராச சிங்கம், சுடரொளி, 1977, மேற்கோள் : இரா.வை. கனகரத்தினம், 1994 : 239-240)

பேரம்பலத்தில் நடைபெற்ற இந்த இரு நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு நாவலர் கடலூர் - மஞ்சக் குப்பம் கோர்ட்டில் தீட்சிதர்கள், இராமலிங்கர் ஆகியோருக்கு எதிராக வழக்குத் தொடுத்தார்.

ஆறுமுக நாவலர் அறுவர் மீது வழக்குத் தொடுத்தார். முதலாம் எதிரி சபாநடேச தீட்சிதர். இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மான நட்டமும் பயமுறுத்தலும், அடுத்த நான்கு எதிரிகளாம் தீட்சிதர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு பயமுறுத்தல், ஆறாம் எதிரியாகிய இராமலிங்கர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு மான நட்டமாகும்.

நாவலரவர்கள் பேரம்பலப் பிரசங்கம் சம்பந்தமாக வைத்த வழக்கு கடலூர் நீதிமன்றத்தில் இணை நீதிபதி திரு. றொபேர்ட்ஸ் முன்னிலையில் 1869-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சாட்சியட்டவணை ஒன்றினை அளிக்க அவகாசம் கேட்ட போது சவுந்தர நாயகம் பிள்ளையின் ஆட்சேபத்தினையொட்டி உடனடியாக அட்டவணை சமர்ப்பிக் கப்படல் வேண்டுமென நீதிபதி பணித்தார்.

அட்டவணையிலே இடம் பெற்ற பேர்வழிகளைச் சோடிப்புக்கு இடமளியாமல் இருப்பதற்கு உடனடியாக விசாரிக்க வேண்டுமென்று சவுந்தரநாயகம் பிள்ளை வேண்டியதை அடுத்து, நீதிபதியின் பணிப்புரையின்படி, சாட்சிகள் அழைக்கப் பெற்ற போது ஒருவரும் முன் வரவில்லை. சவுந்தரநாயகம் பிள்ளை அட்டவணை தயாரித்த போது அவர்கள் அங்கே இருந்ததையும் பின்பு உடனடியாக அவ்விடம் நீங்கியதையும் தம்மால் நிரூபிக்க முடியும் என்று கூறி, அச் சூழ்நிலை அவர்கள் தம் சாட்சியங்களை நம்ப முடியாமற் செய்வதோடு, அவற்றிற்கு அளிக்க வேண்டிய மதிப்பினையும் குன்றச் செய்து விட்டதையும் எடுத்துக் கூறினார். மறுநாள் (26ஆம் தேதி) எதிரிகளின் சாட்சியங்களை விசாரிக்கத் தீர்மானித்திருந்த போதும் அவர்களுடைய வழக்குரைஞர் அன்று தாம் அவர்களின் தேவையைத் தவிர்த்துக் கொள்வதாகக் கூறினார். டிசம்பர் 20ஆம்

தேதி தீர்பபு கூறுவதற்குத் தவணை இடப்பட்டது. அடுத்த தவணை டிசம்பர் 18ஆம் 20ஆம் தேதிகளிலே நடைபெற்ற போது எதிரிகளின் சாட்சிகள் நால்வர் விசாரிக்கப்பட்டனர். சவுந்தரநாயகம் பிள்ளை அவர்களைக் குறுக்கு விசாரணை செய்து சாட்சியத்தினைக் குலைத்து விட்டார். எதிர்தரப்புச் சாட்சியங்களை ஒதுக்கி விடுவதற்கான சான்றுகள் போதுமான அளவு நீதிமன்றத்திலே வெளிப்படுத்தப் பட்டுள்ளதையும் அவர் தெளிவாக்கினார். எதிர் தரப்பினர் பயன்படுத்திய பிறிதிடமிருப்பு வாதத்தினை மறுக்கத் தாம் புதிய சாட்சிகளை அழைக்க அனுமதி கேட்கப் போவதாகச் சவுந்தரநாயகம் பிள்ளை கூறினார். அவர் கூறியவைகளைக் கேட்ட நீதிபதி றொபேர்ட்ஸ் (Roberts) எவ்விதமான தாமதமும்மின்றி தமது தீர்ப்பினை எழுதி விட்டார். அதன்சாரம், முதல் எதிரிக்கு ரூபாய் 50/- அபராதம் அல்லது தவறினால் ஒரு மாதம் சாதாரண மறியல், இராமலிங்கர் விடுவிக்கப்பட்டார்.

(நன்றி. இளவல் ப. சரவணன் ஆய்வு நூல் அருட்பா ஒ மருட்பா)

ஆறுமுக நாவலரைத் தொடர்ந்து அவரது ஆதரவாளர்களும் கதிரைவேற் பிள்ளை முதலியவர்களும் ஒவ்வொரு ஊராகச் சென்று தேவாரம் திருவாசகம் முதலிய நூல்களை யானை மேல் வைத்து இவைகள் தான் திருவருட்பா என்றும் இராமலிங்கம் பிள்ளை பாடல்கள் திருவருட்பா ஆகாது எனவும் தீவிரமாகப் பிரசாரம் செய்து வந்தனர். அவ்வாறு அவர்கள் செய்த பிரச்சாரமே வள்ளலாரின் திருவருட்பா மக்கள் மத்தியில் வெகு வேகமாகப் பரவ பேருதவியாய் இருந்தது. திரு. வி. கலியாணசுந்தரனார் போன்ற தமிழ்ப் பெரியார்கள் ஆரம்பத்தில் அருட்பாவை எதிர்த்தாலும் முடிவில் அவ்வாறு எதிர்த்தமைக்கு வேதனைப்பட்டு அருட்பாவின் சிறப்பையும் வள்ளலாரின் அருமை பெருமைகளையும் மக்கள் மத்தியில் எடுத்துரைத்தனர். திரு. வி.க. அவர்கள் "இராமலிங்கர் திருவுள்ளம்" என்றொரு புத்தகமே எழுதி வெளியிட்டார்.

## சபாபதி சிவாச்சாரியார் வருகை

இவரது ஊர் சிதம்பரத்திற்கு அடுத்த ஆடூர். இவரை முதன் முதலாக அடிகள் சிதம்பரத்தில் 1867 பிரபவ ஆண்டு மார்கழித் திங்களில் சந்தித்தார்கள் என்றும் அப்போது அவருக்கு வயது 19 என்றும் ஊரன் அடிகள் எழுதிய இராமலிங்க அடிகள் வரலாறு புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.6.1868 அன்று இராமலிங்கர் ஆடூர் சபாபதி சிவாசாரியார் அவர்கட்கு எழுதிய கடிதம்

உ

சிவமயம்

சத்தியக் கியானானந்த சொரூப சாக்ஷாத்கார சுத்த சிவ குல சிவாசார சிவாநுபவ சிவப் பிராமணோத்தம சிவத்துவ போதக சிகாமணிகளாகிய சுவாமி

அவர்கள் பரம கருணாம்பர பத்ம பாதயுகள சந்நிதிக்கு அடிமை பக்தி பூர்வகமாக அனந்த முறை தண்டனிட்டுச் செய்து கொள்ளும் விண்ணப்பம்.

சுவாமிகள் கடாக்ஷித்தருளிய நிரூபத்தைப் பூசித்து வாசித்து அறிந்தேன். அந்த நிரூபத்திற் குறித்தபடி சிவபுண்ணியத் திருவிழாவைத் தரிசிக்கும்படி பிரயாண சித்தனாயிருந்தேன். இத்தருணத்தில் இந்தப் பார்வதிபுரத்தில் பிராமணர் இருவர்களுக்கு இராஜாங்க விவகார வழியில் ஒரு பெரிய ஆபத்து நேரிட்டு அவர்களைப் பிடித்துக் கொண்டு போயிருக்கின்றார்கள். அவர்கள் இத்தருணத்தில் சிறிது சகாயம் செய்தால் உயிர் வாழ்வோம் இல்லாவிடில் உயிரிழந்து விடுவோமென்று பரிதபித்து எழுதிய கடிதம் வந்து சேர்ந்தபின் நான் அவ்விடம் வரும் பிரயாணம் ஆலசியப்பட்டது. இங்கு கூடியவரையில் அவர்கள் விஷயத்தில் சகாயம் செய்ய வேண்டுவது கருணைக்கு இலக்ஷிய மாகலில் என் மனது இவ்விடம் வருவதற்கும் அவ்விடம் போவதற்கும் துணிவு தோன்றாமல் ஊசலாடுகின்றது. இது சிறிது துணிவு பெற்ற பின் நான் வருகின்றேன். தற்காலம் அடிமை வந்திருப்பதாகவே சாமிகள் திருவுளங்கொண்டு மேற்குறித்த சிவ புண்ணியத் திருவிழாவைச் சிறப்பாக நடத்துவிக்க வேண்டுமென்றும் சுவாமிகள் திருவடிகளைச் சிந்தித்துப் பிரார்த்திக்கின்றேன். மற்றவைகளை நான் சந்நிதியில் வந்து விண்ணப்பஞ் செய்து கொள்ளுகிறேன். அடிமையின் மேல் கருணாநிதியாகிய சாமிகள் திருவுள்ளம் வேறுபடா தென்கிற துணிவு பற்றி இங்ஙனம் விண்ணப்பம் செய்து கொண்டேன். சாஷ்டாங்க தெண்டன்.

விபவ வருஷம் இங்ஙனம்

கைசி மாதம் சிதம்பரம் இராமலிங்கம்

1869ம் ஆண்டில் சிவாச்சாரியார் வடலூர் வந்தார்.

## மேட்டுக் குப்பத்தில் வள்ளலார்

ஆதரவற்ற ஏழைகள் பசியாறத் தருமச்சாலை கட்டிய வள்ளலார் தான் செய்த தவம் முற்றிய நிலையில் இறை அனுபவம் பூரணத்வம் அடையத் தனித்துறைய எண்ணினார். வடலூர் தருமச்சாலையில் இருந்த அன்பர்களால் அங்கிருந்த அவருக்கு அவ்வளவாக விருப்பமில்லாது போயிற்று.

வடலூரிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மேட்டு குப்பம் என்ற கிராமத்தில் உறையச் சென்றார். அந்த ஊர் மக்கள் வைஷ்ணவ குருமார்கள் வந்தால் தங்குவதற்குத் தனியாக ஒதுக்கப்பட்டிருந்த ஒரு குடிலை அவருக்குத் தந்தார்கள். மக்கள் தானமாகத் தந்த 80 காணி நிலம், தருமச்சாலை எல்லாவற்றையும் சண்முகநாத சரணாலய சுவாமிகள் முதலியோரை நிர்வகிக்க ஏற்பாடு செய்து விட்டு மேட்டுக் குப்பத்தில் அவருக்குத் தங்குவதற்காகத் தரப்பட்ட குடிலுக்குச் சித்தி வளாகத் திருமாளிகை என்று பெயரிட்டு அதிலேயே தங்கி விட்டார்கள். வடலூரை விட்டு அவர் புறப்பட்ட காலம் 1870ம் ஆண்டு ஜூலை மாதம் எனத் தெரிய வருகிறது.

நம் பெருமானார் அங்கே தனித் துறைந்தாலும் மாலையில் மக்களுக்கு உபதேச மொழிகள் கூறி வந்தார்கள். சுத்த தேகம் பெற்று விட்ட வள்ளலார் பிரணவ தேகம், ஞான தேகம் ஆகிய தேகங்களையும் பெற்று முத்தேக சித்தி பெற்றவராக விளங்கினார்.

சுத்த தேகம் என்பது தோன்றும் பிடிபடும். பிரணவ தேகம் தோன்றும் ஆனால் பிடிபடாது. ஞான தேகம் தோன்றியும் தோன்றாமலும் இருக்கும். தன் தேகம் தோன்றாமல் இருக்கும் நிலை பெற்று விட்டதா எனச் சோதிக்க எண்ணினார்கள்.

1870ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் யார் கண்களுக்கும் தோன்றாமல் மறைந்து போயினார். அவருடன் இருந்த அவருடைய மாணக்கர்களுக்கும் மற்றும் இருந்தோர்க்கும் ஒன்றும் புரியவில்லை. அவரை எங்கெங்கோ தேடினார்கள். பார்க்க முடியவில்லை. ஒருவரை யொருவர் கேட்டுப் பார்த்துக் கொண்டார்கள். வள்ளலாரைக் காணவில்லை. அவருக்கு என்ன ஆயிற்று? என்னென்னவோ வதந்திகள் பரவின. சென்னையிலிருந்த தொழுவூர் வேலாயுத முதலியாருக்கும் வள்ளலாரைக் காணவில்லை என்ற செய்தி எட்டியது. நம்முடைய சந்நிதானம் எங்கே எழுந்தருளியுள்ளது. அங்கிருந்து வருகின்றவர்கள் பலர் பல விதமாக பேசுகின்றார்கள். ஒரே குபாராவாக இருக்கிறது என்று வடலூர் தருமச்சாலையிலிருந்த சண்முக நாத சரணாலய சுவாமிகளுக்குக் கடிதம் எழுதினார்.

திருமுகம் 7

## நம் பெருமான் எங்குளார் எனல்

8-6-1870

### ஸ்ரீ வேலாயுத முதலியார்

### ஸ்ரீ ஆனந்தநாத சண்முக சரணாலய சுவாமிகளுக்கு எழுதியது

உ

**பொன்னாரு மணிமன்றுட் புலிமுனியும்**
**பதஞ்சலியும் போற்றா நிற்ப**
**மின்னாரு மிடைக்கயற்கண் மெல்லியல்வெற்**
**பரையன்மடப் பாவை காண**
**இன்னாமை யகன்றுலக முயவெடுத்த**
**திருவடிக்கே யெழிலா ரன்பு**
**பன்னாளும் பிரிவறிய வானந்த**
**நாதவருட் பண்ப போற்றி**

இவ்விடத்தில் அனைவரும் இட்ட பணிக்கணிருக்கின்றோம். அவ்விடத்தில் இப்போ திருக்கும் க்ஷேமாதிசயங்களைப் பற்றி யடிக்கடி திருமுகம் கட்டளையாக வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

அடிமையினுடைய தேகம் வந்தது தொட்டு சீத நோயான் மிக வருந்தி யிப்போது .................. தினமாகச் சிறிது திருவருட் டுணையால் சுகமாக வருகின்றது. ஆயினும் தேகத்தில் தக்க வலி போதவில்லை, யதுவும் திருவருளால் உடனே கூடுமென்று நினைக்கிறேன். அது காரணம் பற்றி தங்களுக்கு அடிக்கடி விண்ணப்பம் எழுதத் தடைப்பட்டது. ஆயினும் தங்களையொத்த தாயினும் பெருங் கருணை யுடையவர்களே சேயினுனைடய வழுக்குற்றங்களைக் கண்டு சினந்து முகம் பாரா தொழியின் பின்பு அக்குழவி என்னை பயன்பெறும். அது போல ஏழை நாயடியேனது பெருங் குற்றங்களை எண்ணி இதுவரையில் ஒரு திருமுகமும் கருணை செய்யாது விட்டால் என் செய்வது. 'பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர் கடமை போற்றி' என்பதைச் சிந்தித்திருக்கு மெனியேனுடைய நெஞ்சம் அடுத்த பொழுதில் எந்தாயே நின்னருட்டிருமுகம் வரப்பெறுவே னென்னுந் துணிவு கொண்ட வென் கருத்தை முடிப்பித்தருள வேண்டுவது.

அது நிற்க, நம்பெருமான் இப்போது எவ்விடத் தெழுந்தருளியிருக்கின்றது. சாலை என்ன ஸ்திதியி லிருக்கின்றது. அவ்விடத்திய காரியங்களை யார் பராமரிக்கின்றனர்கள். இது விபரங்களை யுடனே கட்டளையிடும்படி கோருகிறேன். அந்தப் பக்கங்களிலிருந்து இங்கு வருபவர்கள் தங்கள் தங்களுக்குத் தோன்றியபடியே சில பல சொல்லுந்தோறு மனந் துடிக்கின்றது. ஆதலால் உண்மை விடயங்களை யுணரவருள் செய்தல் வேண்டும். முதலியாரவர்கள் ஐந்து, ஆறு விசை பிரயாணப்பட்டு தெய்விகத் தடையால் நிற்கும்படி நேரிட்டது. அதன் விவரத்தை நாம் நேரிற் காணும்போது தெரிந்து கொள்ளலாம். அப்படியிருக்க முதலியாரவர்கள் நகை விஷயமாக நமது புதுவையி லிருக்கும் மகாராஜராஜஸ்ரீ கு. சதாசிவ செட்டியாரவர்களுக்கு இரண்டு கடிதம் சந்நிதானத்திற்குத் தெரியாதபடியாய் எழுதியிருந்தும் நாளது வரையில் அதற்கு அவர் பதில் எழுதாமலே யிருக்கின்றார். அது விஷயத்தில் நம்முடைய முதலியாரவர்களுக்கு கொஞ்சம் தொந்தரையா யிருக்கிறது. ஆதலால் தாங்களிது விஷயத்தை யோரணுவளவும் சந்நிதானத்திற்கு தெரியப்படுத்தாமற்படிக்கு வெளியிலும் சங்கதி தெரியாமற்படி கூடுமாயிருந்தால் சதாசிவ செட்டியாரை எவ்விதத்திலாவது கண்டு மேற்படி நகைகள் என்ன என்ன நகை எவ்வளவு யாரிடத்தி லிருக்கிறது. வட்டி எவ்வளவு ஆயிற்று என்று விவரம் தெரியப்படுத்தும்படி தங்களுக்கு விண்ணப்பித்து சங்கதி தருவிக்கும்படி யுத்தரவு செய்திருப்பதால் இது விவரங்களை யுடனே தெரிவிக்க வேண்டியது. மறந்து விடாம லவசியம் தெரிவிக்க வேண்டும். சாலையிலுள்ள பெரியோர்கள் அனைவர்க்கும் அடிமை வந்தனத்தைக் குறிப்பிக்க வேண்டும். மற்ற சங்கதி பின்னால் தெரிவிக்கிறேன். வேணும் விண்ணப்பம்.

சென்னப்பட்டிணம் இங்ஙனம்,

...................... அடிமை தொ. வேலன்

ஜூன் மாதம்

இந்த கடிதத்தை வெளிப்படுத்தாமல் தாங்களே பார்த்துக் கொண்டு பதில் உடனே எழுதும்படி கோருகிறேன்.

இவர்கள் சஞ்சலத்தை அறிந்த நம் பெருமானார் ஓர் அறிக்கையை 26.10.1870 அன்று சாலையை அப்போது நடத்தி வந்த சதாசிவ செட்டியாருக்கு அனுப்பி வைக்கிறார்.

"அன்புள்ள நம்மவர்கட்கு அன்புடன் அறிவிப்பது. ஒருவனைப் பற்றி அனேகம் பேருக்கு நன்மையுண்டாம் என்பதை உண்மையாக நம்பி இருங்கள். என்னால் உங்கட்கு நன்மை கிடைப்பது சத்தியம். நான் இன்னும் கொஞ்ச தினத்தில் திருவருள் வலத்தால் வெளிப்படுகின்றேன். அதுபரியந்தம் பொறுத்திருங்கள். நான் மிகவும் சமீபத்தில் தானே வெளிப்படுவேன். அஞ்ச வேண்டாம் சாலையை லகுவாக நடத்துங்கள் திருச்சிற்றம்பலம்."

இவ்வாறு ஓர் அறிக்கை வந்தது. அதே போலச் சில நாட்கள் கழித்து வள்ளலாரும் வெளிப்பட்டார்கள். இதற்குப் பின்னரும் பலமுறை அடிக்கடி மறைவதும் தோன்றுவதுமாக இருந்தார்கள். இதைத் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள் அடையாறு பிரமஞான சமாஜத்தாருக்கு அளித்த வாக்குமூலத்தில் "எங்கள் குருநாதர் பிறர் கண்களுக்குத் தோன்றாமல் அடிக்கடி மறைந்து விடுவதுண்டு. அந்தக் காலங்களில் அவர் எங்கு போனார் என்ன ஆனார் என்பது ஒருவருக்கும் தெரியாது." என்று கூறுகிறார். தான் ஞான தேகம் பெற்று விட்டதைச் சோதித்துப் பார்க்கவே இவ்வாறு அடிக்கடி மறைந்து மறைந்து தோன்றியுள்ளார். வள்ளலார் ஞான தேகம் பெற்றவர் என்பது உறுதியாகின்றது.

## ஞான சபை தோற்றம்

ஆதரவற்ற ஏழைகட்கு ஞானமடையப் பசி தடையாய் இருக்கக் கூடாது என்பதை உணர்த்தவே வடலூரில் தருமச்சாலை தோற்றுவித்து ஆதரவற்ற ஏழை மக்கட்கு உண்ண உணவும் உடுக்க உடையும் அளித்து வந்தார்கள்.

ஜாதி மதம் சமயம் முதலிய எந்த பேதமுமின்றி எல்லோரும் ஒன்றுபட்டு வழிபாடு செய்யவும் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய நெற்றிக் கண்ணைத் திறக்கப் பெற்றுக் கொண்டு காமக் குரோதம் முதலிய திரைகளெல்லாம் தவிர்க்கப் பெற்றுக் கொண்டால் மனமாகிய கண்ணாடியில் ஒளியாகிய ஆண்டவனைத் தரிசிக்கலாம் என்ற ஞான அனுபவத்தை உணர்த்தும் பொருட்டு வடலூரில் ஞான சபை ஒன்றினை அமைக்கத் திட்டமிட்டார்.

1871ம் ஆண்டு ஆனி மாதம் ஞான சபை கட்ட ஆரம்பித்து 1872ம் ஆண்டு ஜனவரி 25ம் நாள் ஞான சபை திறப்பு விழா நடைபெற்றது. முதன் முதல் வடலூர் ஞான சபையில் ஜோதி தரிசனம் 25.1.1872 வியாழனன்று நடைபெற்றது.

ஞானசபையில் சித்ஸபா ரகஸ்யம் என்ற பெரிய கண்ணாடியையும் மேலே தங்க கலசத்தையும் மேட்டுக் குப்பத்திலிருந்து சுவாமிகள் கையினால் தீப ஆராதனை செய்து கொடுக்க அன்பர்கள் கொண்டு வந்து ஞான சபையில் வைத்த போது எவ்விதமான மந்திரமாவது யாகமாவது தந்திரமாவது யாரைக் கொண்டும் செய்தது கிடையாது.

(ஆதாரம் வடலூர் வரலாறு பக்கம் 107)

உத்தர ஞான சிதம்பரமாகிய வடலூரில் சத்திய தருமச்சாலைக்கு அணித்தாகச் சத்திய ஞானசபை அமைந்துள்ளது. 1871 பிரஜோற்பத்தி ஆண்டு ஆனித் திங்களில் சபை கட்டத் தொடங்கப் பெற்றது. சபை எண்கோண வடிவானது. தெற்கு நோக்கியது. சபையின் முன் மண்டபத்தில் கீழ்ப்புறம் பொற்சபையும் மேற்புறம் சிற்சபையும் உள்ளன. கிழக்கு நோக்கிய வாயிலையுடைய சிற்சபை, தெற்கு நோக்கிய வாயிலையுடைய ஞான சபை, மேற்கு நோக்கிய வாயிலையுடைய பொற்சபை ஆகிய மூன்றும் ஆயுத எழுத்தைப் போன்றமைந்துள்ளன. பொற் சபையும் சிற்சபையும் சிதம்பரத்தில் முன்னரே உள்ளவை. அடிகள் புதிதாகக் கண்டது ஞான சபையே. எண்கோண வடிவான ஞான சபைக்குள் பன்னிருகால் மண்டபம் ஒன்றும் நாற்கால் மண்டபம் ஒன்றும் ஒன்றனுள் ஒன்றாக உள்ளன. நாற்கால் மண்டபத்தின் நடுவே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் எழுந்தருளியுள்ளார். அவ்வருட் பெருஞ்ஜோதியை மறைத்துக் கொண்டு ஏழு வெவ்வேறு நிறத்திரைகள் தொங்குகின்றன. இத்திரைகள் அருட்பெருஞ்ஜோதி அகவலில் பின்வருமாறு கூறப்படுகின்றன.

**கரைவின்மா மாயைக் கரும் பெருந் திரையால்**
**அரைசது மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி**
**பேருறு நீலப் பெருந்திரை அதனால்**
**ஆருயிர் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி**
**பச்சைத் திரையால் பரவெளி அதனை**
**அச்சுற மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி**
**செம்மைத் திரையால் சித்துறு வெளியை**
**அம்மையின் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி**
**பொன்மைத் திரையால் பொருளுறு வெளியை**
**அன்மையின் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி**
**வெண்மைத் திரையால் மெய்ப்பதி வெளியை**
**அண்மையின் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி**
**கலப்புத் திரையால் கருதனுபவங்களை**
**அலப்புற மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி**

அடிகள் சத்திய ஞான சபையை இயற்கை விளக்கம் என்பர், அகத்தே காணற்குரிய அனுபவத்தைப் புறத்தே பாவனையாகக் காட்டுவதே சத்திய ஞான சபை. திரைகளெல்லாம் தத்துவ படலங்களே! மாயா திரைகளே. நம்மிடத்திலுள்ள

அஞ்ஞானமாகிய திரைகள் நீங்கப் பெற்றால் ஆன்ம ஒளியாகிய அருட்பெருஞ் ஜோதியைத் தரிசிக்கலாம். அகத்தே நாம் பெற்ற அருட்பெருஞ்ஜோதி யனுபவத்தையே புறத்தில் சபையாகக் காட்டினர் அடிகள்.

**சத்திய ஞானசபை யென்னுட் கண்டனன்**
**சன்மார்க்க சித்தியை நான் பெற்றுக் கொண்டனன்**
**திருந்தும்என் உள்ளத் திருக்கோயில் ஞான**
**சித்தி புரம்எனச் சத்தியம் கண்டேன்**

என்னும் திருவாக்குகளைக் காண்க.

## சபை விளம்பரம்

சாலை தொடங்கும்போது சாலையைப் பற்றிய விளம்பரம் ஒன்றை வெளியிட்டது போன்றே சபை தொடங்கும் போதும் சபையைப் பற்றிய விளம்பரம் ஒன்றை அடிகள் வெளியிட்டருளினர்.

உ

திருச்சிற்றம்பலம்

உலகத்தினிடத்தே பெறுதற்கு மிகவும் அருமையாகிய மனித தேகத்தைப் பெற்ற நண்பர்களே!

அறிவு வந்த கால முதல் அறிந்து அறியாத அற்புத அறிவுகளையும், அடைந்து அறியாத அற்புத குணங்களையும், கேட்டு அறியாத அற்புதக் கேள்விகளையும், செய்து அறியாத அற்புதச் செயல்களையும், கண்டு அறியாத அற்புதக் காட்சிகளையும், அனுபவித்தறியாத அற்புத அனுபவங்களையும், இது தருணந்தொடங்கி கிடைக்கப் பெறுகின்றேன் என்றுணருகின்ற ஓர் சத்திய வுணர்ச்சியாற் பெருங் களிப்புடையேனாகி இருக்கின்றேன்.

நீவிர்களும் அவ்வாறு பெற்றுப் பெருங்களிப்பு அடைதல் வேண்டும் என்று எனக்குள்ளே நின்று நிறைந்து எழுந்து வெளிப்பட்ட எனது சுத்த சன்மார்க்க லக்ஷியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமைப் பேராசை பற்றியே இதனைத் தெரிவிக்கின்றேன்.

இயற்கையிற்றானே விளங்குகின்றனவரா யுள்ளவரென்றும், இயற்கையிற்றானே யுள்ளவராய் விளங்குகின்றவ ரென்றும், இரண்டு படாத பூரண இன்பமானவ ரென்றும், எல்லா அண்டங்களையும் எல்லா உலகங்களையும் எல்லாப் பதங்களையும் எல்லாச் சத்திகளையும் எல்லாச் சத்தர்களையும் எல்லாக் கலைகளையும் எல்லாப் பொருள்களையும் எல்லாத் தத்துவங்களையும் எல்லாத் தத்துவிகளையும் எல்லா உயிர்களையும் எல்லாச் செயல்களையும் எல்லா இச்சைகளையும் எல்லா ஞானங்களையும் எல்லாப் பயன்களையும் எல்லா அனுபவங்களையும்

மற்றெல்லாவற்றையும் தமது திருவருட் சக்தியால் தோற்றுவித்தல் வாழ்வித்தல் குற்றம் நீக்குவித்தல் பக்குவம் வருவித்தல் விளக்கஞ் செய்வித்தல் முதலிய பெருங் கருணைப் பெருந் தொழில்களை இயற்றுவிக்கின்ற வரென்றும், எல்லாம் ஆனவ ரென்றும், ஒன்றும் அல்லாதவரென்றும், சர்வ காருணியரென்றும், சர்வ வல்லப ரென்றும், எல்லாம் உடையராய்த் தமக்கு ஒருவாற்றானும் ஒப்புயர் வில்லாத் தனிப் பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதியர் என்றும் சத்திய அறிவால் அறியப்படுகின்ற உண்மைக் கடவுள் ஒருவரே அகம்புறம் முதலிய எவ்விடத்தும் நீக்கமின்றி நிறைந்த சுத்த மெய்யறிவென்னும் பூரணப் பொது வெளியில் அறிவார் அறியும் வண்ணங்களெல்லா மாகி விளங்குகின்றார்.

அவ்வாறு விளங்குகின்ற ஒருவரே யாகிய கடவுளை இவ்வுல கினிடத்தே ஜீவர்கள் அறிந்து அன்பு செய்து அருளையடைந்து அழிவில்லாத சத்திய சுக பூரணப் பெருவாழ்வைப் பெற்று வாழாமல், பல்வேறு கற்பனைகளாற் பல்வேறு சமயங்களிலும் பல்வேறு மதங்களிலும் பல்வேறு மார்க்கங்களிலும் பல்வேறு லக்ஷியங்களைக் கொண்டு, நெடுங் காலமும் பிறந்து பிறந்து அவத்தை வசத்தர்களாகிச் சிற்றறிவுமின்றி விரைந்து விரைந்து பல்வேறு ஆபத்துக்களினால் துன்பத்தில் அழுந்தி இறந்திறந்து வீண் போகின்றார்கள்.

இனி இச்சீவர்கள் விரைந்து விரைந்து இறந்து இறந்து வீண் போகாமல், உண்மையறிவு உண்மையன்பு உண்மையிரக்கம் முதலிய சுப குணங்களைப் பெற்று நற்செய்கை யுடையராய், எல்லாச் சமயங்களுக்கும் எல்லா மதங்களுக்கும் எல்லா மார்க்கங்களுக்கும் உண்மைப் பொது நெறியாகி விளங்குஞ் சுத்த சன்மார்க்கத்தைப் பெற்று, பெருஞ் சுகத்தையும் பெருங்களிப்பையும் அடைந்து வாழும் பொருட்டு, மேற்குறித்த உண்மைக் கடவுள் தாமே திருவுள்ளங் கொண்டு சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய உண்மை விளக்கஞ் செய்கின்ற ஓர் ஞான சபையை இங்கே தமது திருவருட் சம்மதத்தால் இயற்றுவித்து "இக்காலந் தொடங்கி அளவு குறிக்கப்படாத நெடுங்காலம் அளவு குறிக்கப்படாத அற்புத சித்திகளெல்லாம் விளங்க யாமே அமர்ந்து விளையாடுகின்றாம்" என்னுந் திருக்குறிப்பை வெளிப்படுத்தி, அருட்பெருஞ்ஜோதியராய் வீற்றிருக்கின்றார்.

ஆதலின், அடியிற் குறித்த தருணத் தொடங்கி வந்து வந்து தரிசிக்கப் பெறுவீர்களாகிற் கருதிய வண்ணம் பெற்றுக் களிப்படைவதும் அன்றி, இறந்தவர் உயிர்பெற் றெழுதல் மூப்பினர் இளமையைப் பெற்று நிற்றல் முதலிய பலவகை அற்புதங்களைக் கண்டு பெருங்களிப்பும் அடைவீர்கள்.

| | |
|---|---|
| சென்னப்பட்டிணம் | இங்ஙனம் |
| இராஜதானியைச் சேர்ந்த | சிதம்பரம் |
| கூடலூர் ஜில்லா மேற்படி | இராமலிங்க பிள்ளை |
| தாலுகா வடலூர் அல்லது பார்வதிபுரம் | |

## சாலையும் சலிப்பையே தந்தது

வடலூரில் தருமச் சாலையில் தங்கியவர்களாலோ அல்லது சாலை நிர்வாகிகளோ யாராலோ தெரியவில்லை. சாலையில் உள்ளவர்கள் சன்மார்க்கத்திற்கு ஒத்துவாயடங்கி மனமடங்கியிருக்க வேண்டும் என்று கண்டிக்கிறார். என் மேல் பழியில்லை. பின்பு வந்ததைப்பட வேண்டும் என்று எச்சரிக்கை செய்கிறார். எப்போதும் ஆசீர்வாதத்துடன் மங்களகரமாக வாழ்த்தியே கடிதம் எழுதும் வள்ளலார் அப்பாசாமி செட்டியார் அவர்கட்கு என்று நேராக எழுதுகிறார் என்றால் அங்கிருந்தவர்களால் அவர் மனம் என்ன பாடுபட்டிருக்கும்? அன்பர்கள் வள்ளலார் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை என்பது உண்மை. அதனால் அவர்அடைந்த நிலைகளில் ஒன்றுகூட மற்றவர்களால் அடைய முடியவில்லைபோலும். அவர் விடுத்த எச்சரிப்புப் பத்திரிக்கையைக் காண்போம்.

## சாலையிலுள்ளார்க்கு இட்ட ஒழுக்கக் கட்டளை

9-3-1872

உ

சிவமயம்

அப்பாசாமி செட்டியா ரவர்களுக்கு,

இந்த சாலையால் எனக்கு மிகவும் சலிப் புண்டாகிறது. அந்த சலிப்பு இரண்டு பக்கத்திலும் உபத்திரவம் பண்ணும். ஆதலால் சாலையிலிருக்கிறவர் களெல்லாம் சன்மார்க்கத்திற்கு ஒத்து வாயடங்கி மனமடங்கி யிருக்க வேண்டும் என் மேல் பழியில்லை. சொல்லிவிட்டேன். பின்பு வந்ததைப் படவேண்டும்.

பிரஜோத்பத்தி வருஷம்

மாசி மாதம் .....................

## அகவல் எழுதப்பட்டது

வடலூரில் 25.1.1872 வியாழனன்று ஞானசபையில் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை எழுந்தருளப் பண்ணிய பின் தோத்திரமாக 18.4.1872ல் வியாழக் கிழமையன்று 1596 வரிகள் கொண்ட அருட்பெருஞ்ஜோதி அகவலை ஒரே இரவில் எழுதி முடித்தார்கள்.

1596 வரிகள் கொண்ட அகவல் அருட்பெருஞ்ஜோதி, அருட்பெருஞ்ஜோதி, அருட்பெருஞ்ஜோதி, அருட்பெருஞ்ஜோதி என நான்கு முறை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை விளித்து அதே போல் இறுதியிலும் ஆண்டவரை நான்கு முறை விளித்து முடித்திருக்கின்றார். அந்த அகவலில் அருட்பெருஞ்ஜோதி என்ற

வார்த்தை 453 முறை எழுதப்பட்டுள்ளதால் ஒரு முறை அகவல் படிப்போர் 453 முறை அருட்பெருஞ்ஜோதியை அழைத்ததாக ஆகும். அகவல் ஆரம்பத்தில் அகர வரிசையில் உள்ளது. உலகத்திலுள்ள எல்லாச் சமயங்களும் எல்லா மதங்களும் இறைவனைப் பற்றித் தந்துள்ள அத்தனை விளக்கங்களையும் ஒன்று படுத்தினால் இறைவனது வடிவம், உருவம், அருவம், உருஅருவம் என்ற மூன்றினுள் அடங்கிவிடும். ஆனால் வள்ளலாரோ இந்த மூன்றாகவும் இறைவன் வடிவம் இல்லை என்கிறார் அகவலில்.

**ஒன்றென இரண்டென ஒன்றிரண்டென இவை**
**அன்றென விளங்கிய அருட்பெருஞ்ஜோதி**

அருட்பெருஞ்ஜோதி எங்கே இருக்கின்றது எனில் எப்போதும் எதையாவது சொல்லிக் கொண்டே இருக்கின்ற மனம் கடந்த பெருவெளியின் மேல் ஆட்சி செய்து கொண்டு அருட்பெருஞ்ஜோதி உள்ளது என்கிறார்.

**உரை மனம் கடந்த ஒரு பெரு வெளி மேல்**
**அரைசு செய்து ஓங்கும் அருட்பெருஞ்ஜோதி**

உருவம் அல்ல அருவம் அல்ல உரு அருவமும் அல்ல எனில் இறைவன் எவ்வாறு விளங்குகிறான்.

மனித தேகத்திலுள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து இந்திரியங்களும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய கரணங்களும் செயல் பாடற்ற நிலையில் ஏற்படும் ஓர் அனுபவம் தான் அருட்பெருஞ்ஜோதி. அருட்பெருஞ்ஜோதி என்பது ஓர் அனுபவமே.

**தனு கரணாதிகள் தாம் கடந்து அறியும் ஓர்**
**அனுபவம் ஆகிய அருட்பெருஞ்ஜோதி**

அகவலைக் கூர்ந்து கவனித்தால் சில உண்மைகள் புலப்படுகின்றன.

1. இறைவன் வள்ளலாருக்கு எதையெல்லாம் உணர்த்தினானோ அவற்றை யெல்லாம் அகவலில் கூறியுள்ளார்.

2. தான் பெற்ற அனுபவங்களை யெல்லாம் வள்ளலார் அகவலில் தெரியப்படுத் துகின்றார்.

3. பிற உயிர்கள் பால் கொண்ட இரக்கத்தினால் எல்லா உயிர்கட்கும் அருள் தரும்படி அகவலில் வள்ளலார் தூண்டுகிறார்.

4. இறைவனிடமிருந்து தான் பெற்ற அரிய பெரிய பேறுகளை யெல்லாம் அகவலில் விளக்குகின்றார்.

5. இறைவனது அருளாற்றலையும், அவனது தன்மையையும் அவனால் எந்தெந்த விதமாக மக்களுக்கு அளிக்க முடியுமோ சீக்கிரமே அளிப்பாயாக என வேண்டுகின்றார்.

6. இறைவன் தன்னுடன் கலந்து விட்டான் என்பதை மக்கட்கு உணர்த்துகின்றார்.

7. உலகத்திலே உயிர்கள் படக்கூடிய இன்னல்களை யெல்லாம் நீ அடைந்து அந்த உயிர்கட்கு இன்பம் தா என்று இறைவன் தனக்கு உத்தரவு இட்டுள்ளான் எனத் தெரிவிக்கின்றார்.

## நிலையங்களின் பெயர் மாற்றம்

ஞானசபைக்குள் பூஜை செய்வோர் தவிர வேறு யாரும் எக்காரணங் கொண்டும் உள்ளே நுழையக் கூடாது என்று கட்டுப்பாடு விதித்திருந்தும் பலர் உள்ளே போய்ப் பார்ப்பதாக வள்ளலாரிடம் பல முறை பலர் தெரிவித்தார்கள்.

18.7.1872 ஆங்கிரச ஆண்டு ஆடி மாதம் 5ம் நாளன்று நிலையங்களின் பெயர்களை மாற்றி அறிவித்தார். அதாவது இது தொடங்கிச் சன்மார்க்க சங்கம், சாலை, சபை ஆகிய மூன்றும் அடியிற்கண்டவாறு அழைக்கப்பட வேண்டும் என்றார்.

**சமரசசுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

**சமரசசுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை**

**சமரசசுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை**

இந்த அறிக்கையில் ஞானசபை வழிபாட்டு முறையை வகுத்தார்கள். அதன்படி ஞானசபைக்குள்ளே தகரக் கண்ணாடி விளக்கு வைத்தல் வேண்டும். மேலேற்றுகிற குளோப் முதலிய விளக்குகளும் வேண்டாம். தகரக் கண்ணாடி விளக்கு வைக்குங் காலத்தில் தகுதியுள்ள நம்மவர்கள் தேக சுத்தி, கரண சுத்தி உடையவர்களாய் திருவாயிற்படிப் புறத்தில் இருந்து கொண்டு விளக்கேற்றி பன்னிரண்டு வயதிற்குட்பட்ட சிறுவர் கையில் கொடுத்தாவது, எழுபத்திரண்டு வயதிற்கு மேற்பட்ட பெரியவர் கையில் கொடுத்தாவது உட்புற வாயில்களுக்குச் சமீபங்களில் வைத்து வரச் செய்ய வேண்டும். நாலு நாளைக்கு ஒரு விசை காலையில் மேற்குறித்த சிறியரைக் கொண்டாயினும் பெரியவரைக் கொண்டாயினும் உள்ளே தூசு துடைப்பிக்கச் செய்ய வேண்டும். தூசு துடைக்கப் புகும்போது நீராடி சுத்த தேகத்தோடு கால்களில் வத்திரம் சுற்றிக் கொண்டு புகுந்து முட்டிக் காலிட்டுக் கொண்டு தூசு துடைக்கச் செய்விக்க வேண்டும்.

விளக்கு வைக்கும் போதும், இவ்வாறே செய்விக்க வேண்டும். பனிரெண்டு வயதிற்குட்பட்ட சிறுவரும் எழுபத்திரண்டு வயதிற்குட்டபட்ட பெரியவரும் பொருள் இடம் போகம் முதலியவற்றில் சிறிதும் இச்சை இல்லாதவர்களாய் தெய்வ நினைப்புள்ளவர்களாய் அன்புடையவர்களாய் இருத்தல் வேண்டும். விளக்கு வைக்கும் போதும் தூசு துடைக்கும் போதும் நம்மவர்களில் நேர்ந்தவர்கள் புறத்தில் நின்று பரிசுத்தராய் மெல்லெனத் துதி செய்தல் வேண்டும். யாவரும் யாதொரு காரியம் குறித்தும் தற்காலம் உள்ளே புகுதல் கூடாது. ஞானசபைத்

திறவுகோல் ஒருவர் கையிலும் வெளிப்பட இருக்கப்படாது. அத்திறவு கோலை வேறொரு பெட்டிக்குள் வைத்து அப்பெட்டியைப் பூட்டி அப்பெட்டியை பொற்சபைக்குள் வைத்து அப்பெட்டித் திறவு கோலை ஆஸ்தானக் காவல் உத்தரவாதியாய் இருக்கின்றவர் கையில் ஒப்புவித்தல் வேண்டும்.

நம் பெருமானார் வகுத்தருளிய விதிகளின்படி சபை சிலகாலம் நடந்தது. சபையை நடத்தி வந்தவர்கள் பின்னும் முறை தவறினர். அடிகளாரால் அதனைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஞான சபையைப் பூட்டித் திறவு கோலைத் தம்முடன் மேட்டுக் குப்பத்திற்கு எடுத்துச் சென்று விட்டனர். சபையில் வழிபாடு நின்று போயிற்று.

(ஆதாரம் வடலூர் வரலாறு பக்கம் 73)

## <u>எச்சரிப்புப் பத்திரிக்கை</u>

எவ்வளவுதான் அறிவுரை கூறியும் பாக்கள் எழுதியும் மக்களுக்குள் கால பேதத்தாலும் மற்ற வகையாலும் சில பல வேறுபாடுகள் உண்டாயின. இன்றும் உண்டாகின்றன. கருத்தில் ஏற்படும் மாறுபாடுகளே இதற்குக் காரணம். இதனால் சச்சரவு மட்டுமின்றி ஒருவருக்கொருவர் விரோத மனப்பான்மையும் கொள்கின்றனர். இதனைக் கண்ட வள்ளலார் 25.11.1872 அன்று சன்மார்க்கச் சங்கத்தாருக்கு ஒழுக்கக் கட்டளை ஒன்று அறிவித்தார். அது வருமாறு.

**சித்தி வளாகத்திலும் தருமச்சாலையிலும் வசிப்பவர்கள் பரஸ்பரம் பழகுவதற்கு எச்சரிப்புப் பத்திரிகை :**

### ஆங்கிரச வருஷம் கார்த்திகை மாதம்

ஆண்டவர் ஒருவர் உள்ளார் என்றும், அவர் பொதுப்பட உலகத்திலுள்ளார் யாவரும் சன்மார்க்கப் பெரும் பயன் பெற்று நித்திய வாழ்வு வாழ்தற் பொருட்டு வெளிப்படக் காரிய்பபடுகின்றனர் என்றும், அது காலையில் நாமும் ஆன்ம லாபத்தைப் பெற்றுக் கொள்ளுவோம் எனவும் நம்பி இங்கே வசிக்கும் யாவரும் வழிபாடு விஷயத்தில் ஒரு தடையும் சொல்லாது ஒத்து இருத்தல் அவசியம். அன்றியும் காலபேதத்தால் அல்லது மற்ற வகையால் அவ்வத் தருணங்களில் நேரிடும் குரோதத்தால் விளையும் துவேஷாதிகள் உண்டாயினாலும் அல்லது உண்டாகிற தாயிருந்தாலும் உடனே ஜாக்கிரதைப்பட்டு அதை முற்றிலும் மறந்துவிடல் வேண்டும். அப்படியிருத்தல் மேல் விளைவையுண்டு பண்ணாதிருக்கும். அப்படி இனிமேல் ஒருவரையொருவர் அதிக்கிரமித்த வார்த்தைகளால் சண்டை விளையத் தக்கதாக வைதாலும் அப்படி வைதவர்களையும் அந்த வைதலைக் கேட்டுச் சகிப்பவர்களோடு மறுபடி அத்துவேஷத்தை ஒருங்கே விட்டு மறந்து மனக்கலப்புடன் மருவுதல் வேண்டுவது. அப்படி மருவாதவர்களையும் உடனே ஒதுக்கிவிட வேண்டுவது, அல்லது குரோதத்தால் விளையும் அக்கிரம அதிக்கிரம வார்த்தைகளைக் கேட்டு தாங்கள் எதிர்த்து வார்த்தையாடாமல் கூட்டத்தாரில் அப்போது இருக்க

வாய்ந்த இரண்டொருவர்க்குத் தெரிவித்தல் வேண்டும். அப்படி தெரிவிக்காதவர்களும் எதிர்த்துச் சண்டை தொடுப்பவர்களும் இங்கிருத்த லனாவசியம். அப்படிப் பட்டவர்களை ஒரு பேச்சுமில்லாமல் இந்த இடம் விட்டுப் போய்விடத் தக்க முயற்சி ஒவ்வொருவரும் செய்தல் வேண்டுவது.

சி. இராமலிங்கம்

இந்த அறிவிப்பை வெளியிட வேண்டிய அவசியம் என்ன? சங்கத்தவர்கள் எதை அடைய வேண்டுமோ அந்த லட்சியத்தை அடைவதற்குப் பாடுபடாமல் ஒருவருக்கு ஒருவர் குரோதம் கொண்டும் சண்டையிட்டும் இருந்தனர். மனம் சலிப்புற்று, வள்ளலார் இவ்வாறு ஓர் அறிக்கையை வெளியிடுகின்றார். சங்கம், சாலை, சபை, ஆகிய நிலையங்களைப் பராமரிக்கத் தகுதியுடைய ஒருவர், வள்ளலார் எதிர்பார்த்த பக்குவ நிலையுடைய ஒருவர், வள்ளலாருக்குக் கிடைக்காததால்தான் இந்த நிலையங்களை அவர் யாரிடமும் ஒப்படைக்க வில்லை போலும்.

## வள்ளலாரின் சமுதாய சீர்திருத்தம்

சாதி மத சமயம் பற்றி வள்ளலார்.

"தத்துவ ஒழுக்கங்கள் பற்றிச் சமயங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. தொழில் ஒழுக்கம் பற்றி ஜாதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. தயவை விருத்தி செய்வதற்குத் தடையாய் இருப்பன சமய ஏற்பாடு, ஜாதி ஏற்பாடு, முதலிய கட்டுப்பாட்டு ஆசாரங்கள். அவையாவன :- ஜாதியாச்சாரம், குல ஆச்சாரம், ஆசிரம ஆச்சாரம், லோகாசாரம், தேசாசாரம், கிரியாச்சாரம், சமயாச்சாரம், மதாச்சாரம், மரபாச்சாரம், கலாச்சாரம், சாதனாச்சாரம், அந்தாச்சாரம், சாஸ்திராச்சாரம், முதலிய ஆச்சாரங்கள். ஆதலால் மேற்கூறிய ஆச்சாரங்கள் ஒழிந்து, சுத்த சிவ சன்மார்க்க சத்திய ஞான ஆசாரத்தை வழங்கிப் பொது நோக்கம் வந்தால், மேற்படி காருண்யம் விருத்தியாகிக் கடவுள் அருளைப் பெற்று அனந்த சித்தி முத்திகளைப் பெறக்கூடுமேயல்லது இல்லாவிடில் கூடாது.

(ஆதாரம் பக்கம் 313 ஊரன் அடிகள் உரைநடை)

**சாதியும் மதமும் சமயமும் பொய்யென**
**ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி** (அகவல்)

சாதி மதம் சமயம் முதலிய அனைத்தும் பொய்யென ஆரம்ப காலத்திலேயே இறைவனால் உணர்த்தப்பட்டேன்.

**சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே**
**சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே**
**ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர் நீவிர்**

**அலைந்து அலைந்து அழிதல் அழகல்லவே**

என்று பாடியுள்ளார்.

**இருட்சாதித் தத்துவச் சாத்திரக்குப்பை**
**இருவாய்ப் புன்செயில் எருவாக்கிப் போட்டு**
**மருட்சாதி சமயங்கள் மதங்கள் ஆச்சிரம**
**வழக்கெல்லாம் குழிகொட்டி மண்மூடிப்போட்டு**

என்பதும் அவரது வாக்கே.

சாதித் தத்துவம் சாத்திரமெல்லாம் குப்பைகளாம். அவற்றைப் புன்செய் நிலத்தில் எருவாகப் போட வேண்டும் என்கின்றார்.

அதேபோல மருட்டுகின்ற சாதி, சமயங்கள் மதங்கள் ஆச்சிரம வழக்கெல்லாம் குழியிலே கொட்டி மண்ணைப் போட்டு மூட வேண்டும் என்கிறார்.

தோல் வண்ணத்தைப் பார்த்து மேல் வருணம் என்ன ஜாதி என்று கூற முடியுமா - முடியாதல்லவா.

சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் சொல்கின்றனவேயன்றி நேத்திரங்கள் போல் காட்ட நேராவே.

வேதங்கள் ஆகமங்கள் என்று வீண் வாதம் ஆடுகின்றீர். அவற்றின் விளைவை அறியமாட்டிர். உண்மையை வெளிப்படையாகச் சொல்லாமல் சூதாகச் சொல்வதால் அவைகளால் மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை என்று போதித்தார்.

கலைகள் மொத்தம் 64 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அவற்றுள் கடைசியாக உள்ள மாயாஜாலம் ஒன்றுதான் ஜால நூல் என்பார்கள். உண்மை அதுவல்ல. எல்லா நூல்களும் ஜாலம் தான். ஏனெனில் உண்மையை மறைத்து சூதாகவே சொல்லியிருக்கிறார்கள். வேதங்கள் முதலியவற்றுள் கூறப்பட்டுள்ள எதனையும் உண்மையென அப்படியே நம்பி விடாதீர்கள். அவற்றில் உண்மை வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை என்று கூறிய வள்ளலார் - இந்து வேதாகம புராண இதிகாசங்களிலுள்ள உண்மைகளை எடுத்துச் சொல்வதில் அதி தீவிர கவனம் செலுத்தினார்.

உயர்ந்த குலம் தாழ்ந்த குலம் என வகுக்கின்றீர்களே இரு குலமும் மாண்டிடக் காண்கின்றீர்களே என்று சாடினார்.

பொறித்த மதம் சமயம் எல்லாம் பொய் பொய்யே அவற்றில் புகுத்தாதீர் என்று அறிவுறுத்துகின்றார்.

சாதிப்பற்று, சமயப்பற்று, மதப்பற்று முதலியவற்றில் எது இருந்தாலும் இறைவனைக் காண முடியாது.

சன்மார்க்கத்திற்கு உரியவர்கள் யார் எனில் சமய மத மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்களே என்பார்.

### மகளிரைப் பற்றி வள்ளலார் கூறுவது :

பெண்களுக்கு யோகம் முதலிய சாதனங்கள் அவசியம் கற்பிக்க வேண்டியது. மேலும் பேதமற்று அபேதமாய் (அதாவது ஆண் பெண் என்ற பேதமில்லாமல்) படிப்பு முதலியவையும் சொல்லிக் கொடுக்க வேண்டியது. தத்துவம் முதலியவற்றின் சொரூப, ரூபாதிகளைத் தெரிவித்துச் சரளமாக்கினால் பின்தடையின்றி நமது துரிய ஆசிரம காலத்தில் ஒத்திருப்பார்கள். தெய்வம் தொழாஅள் எனும் தேவர் குறளால் இதனை அறிக. (உரைநடை பக்கம் 322).

கர்ம காலம் முதலிய பேதங்களால் யார்க்காயினும் தேக ஆனி நேரிட்டால் தகனம் செய்யாமல் சமாதியில் வைக்க வேண்டும். புருடன் இறந்தால் மனைவி தாலி வாங்குதல் வேண்டாம். மனைவி இறந்தால் புருடன் வேறு கலியாணப் பிரயத்தனம் செய்ய வேண்டாம். கர்ம காரியங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். தெரிவிக்கத் தக்கவர்க்குத் தெரிவித்து ஒரு தினத்தில் நேரிட்டவர்க்கு நேரிட்டமட்டில் அன்ன விரயம் செய்ய வேண்டும். (உரைநடை பக்கம் 430).

கணவன் இறந்தால் உடன்கட்டை ஏறி மனைவியும் உயிர் துறக்கும் பழக்கத்தினை வடநாட்டில் ராஜா ராம் மோகன் ராய் ஒழித்தார். தமிழகத்தில் பெண்களுக்கு அமங்கலக் கோலமே கூடாது என்றும் மங்களகரமாகவே இருக்க வள்ளலார் போதித்தார். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு என்று இருந்த கால கட்டத்தில் ஆண்களுக்குச் சமமாகப் பேதமின்றிப் பெண்களுக்கும் படிப்பு முதலியன சொல்லித் தர வேண்டும் என்றார் வள்ளலார். பெண் கல்விக்கு முக்கியத்வம் அளித்த ஒரே அருளாளர் வள்ளலார். அவருடைய சன்மார்க்கத்திற்கு முக்கிய தடைகள் என்ன என்பதையும் முக்கிய லட்சியம் என்ன என்பதையும் அவர் எழுதிய விண்ணப்பத்தில் தெரிவிக்கின்றார்.

## விண்ணப்பம்

எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்னமார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பனவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனதில் பற்றாத வண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும். எல்லாமாகிய தனிப் பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே தேவரீர் திருவருட் பெருங்கருணைக்கு வந்தனம் வந்தனம்.

## புராணங்களின் உண்மை

பெரியபுராணத்தில் குறித்த 63 நாயன்மார்களும் தத்துவங்களே ஒழிய வேறல்ல. அதை அதை விசாரித்து அனுஷ்டித்தால் அது அது ஒவ்வொரு சித்தியைக் கொடுக்கும். கணபதி, சுப்ரமணிய சுவாமிகளும் தத்துவங்களே தவிர வேறல்ல. புராணங்களின் இருதயமெல்லாம் தத்துவ சம்மாரமே இதன் உண்மை சுத்த சன்மார்க்கத்தில் விவரமாய் வெளியாகும்.

மாணிக்கவாசக சுவாமிகளும் 63 நாயன்மார்களும் மனிதரல்லர். தத்துவங்கள், தேவாரம் திருவாசகம் முதலியவைகள் மேற்குறித்தவர்கள் பாடியனவல்ல. சித்தர்கள் சில சித்திகளைக் குறித்து கற்பனையாய்ச் செய்த சரித்திரம். அதற்கு மேற்கோள் வேண்டுவதின் பொருட்டுச் சில பாடலும் செய்து, புராணத்தில் மேற்குறித்தபடி பெயரிட்டு, அவர்கள் செய்ததாகப் பரிச்சயம் செய்ததே தவிர உண்மையல்ல. இவற்றிற்குரிய தாத்பர்யங்களும் உண்மைகளும் சுத்த சன்மார்க்கத்தில் இனி பகிரங்கமாய் வெளிப்படும்.

(உரைநடை பக்கம் 273 ஊரன் அடிகள்)

இந்தக் கருத்தினைப் பல பேர் ஏற்றுக் கொள்வதில்லை. நால்வர் துதி பாடிய வள்ளலார் நால்வரும் மனிதரல்லர் என்று ஏன் சொல்ல வேண்டும்? காரணமில்லாமல், ஆதாரம் இல்லாமல் சொல்வாரா? சரித்திரம் என்பது யார், யார் உண்மையில் வாழ்ந்தார்களோ அவர்களைப் பற்றிக் கூறுவது. புராணம் என்பது கற்பனையாக எழுதப்பட்டது. திருவிளையாடற் புராணத்தில் கூறப்பட்டுள்ள மன்னர்கள் யாவரும் தமிழக வரலாற்றுச் சரித்திரத்தில் இடம் பெறவில்லை. புராணத்தில் வரக்கூடிய சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே தவிர உண்மையல்ல.

வேதம் என்பது பதிநூல்

ஆகமம் என்பது பசுநூல்

புராணம் என்பது பாசநூல்

அதாவது வேதம் இறைவனைப் பற்றி விளக்குவது

ஆகமம் என்பது ஜீவன் சம்பந்தப்பட்டது

புராணம் என்பது இறைவனுக்கும் ஜீவனுக்கும் இருக்க வேண்டிய பாசத்தைக் காட்டுவது. எல்லா நூல்களும் மக்களுக்குப் பயன்படும் பொருட்டாகக் கற்பனையாகச் செய்யப்பட்டவைதான். அதிலுள்ள சம்பவங்களை உண்மையென நம்பாது அச்சம்பவங்களிலுள்ள உண்மைக் கருத்தினை, அறிவுரையைக் காண வேண்டும்.

தோன்றிய வேத ஆகமத்தைச் சாலமென
உரைத்தேம் சொற்பொருளும்
இலக்கியமும் பொய்யெனக் கண்டறியேல்

ஊன்றிய வேதாகமத்தின் உண்மை நினக்காகும்
உலகறி வேதாகமத்தைப் பொய்யெனக்
கண்டுணற்வாய்

என்று கூறிய வள்ளலார் கலையுரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப்போக என்று அருட்பாவில் எழுதி வைத்தார்.

## வள்ளலாரின் சமய சீர்திருத்தம்

வள்ளலார் பாடல்கள் எழுதிக் கொண்டே இருந்தார். அவரது பாக்களை அச்சிட்டுப் புத்தக வடிவில் கொண்டு வர அவரது பக்தர்கள் முயற்சி கொண்டனர். முதலில் அதற்குச் சம்மதியாத வள்ளலா தனது பால்ய நண்பராகிய இறுக்கம் இரத்ன முதலியாரின் உண்ணாவிரதப் போராட்டத்தினால் ஒருவாரு இசைவு தந்தார். தொழுவூர் வேலாயுத முதலியார், இறுக்கம் இரத்ன முதலியார் உள்ளிட்டோர் சென்னையிலிருந்து கருங்குழியில் இருந்தவரை வள்ளலார் பாடிய பாக்களை ஆறு திருமுறைகளாகத் தொகுத்தனர். திருமுறைகள் என வள்ளலார் எழுதவில்லை. அப்பாக்களை ஆறு திருமுறைகளாக வகுத்தவர் அவரது அடியார்களே.

மக்களின் பரிபாகத்தை உணர்ந்த வள்ளலார் முதல் நான்கு திருமுறை மட்டும் வெளியிட்டால் போதும் என்று கூறி விட்டார். சைவ சமயத்தில் தேவாரம் திருவாசகம் முதலியவற்றை 12 திருமுறைகளாக வகுத்தனர். 12வது திருமுறை இறைவனுக்குத் தொண்டு செய்த அடியவர்களது வரலாற்றைக் கூறும், சேக்கிழாரின் பெரிய புராணத்தைக் கடைசியில் வைத்துத் திருமுறை

அமைத்தனர். அதேபோல் நால்வர் துதியை இறுதியில் வைத்து முதல் நான்கு திருமுறை வெளியிடப்பட்டது.

திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பர். திருவருட்பாவிற்கு உருகாதவர் திருவாசகத்திற்கும் உருகார் என்பதே உண்மை. அந்த அளவிற்கு எலும்பையே உருக்கும் அருமையான பாடல்கள் திரு அருட்பா.

**ஊர்பாடுவார் சிலர் ஓயாமல் செல்வம் உதவி செய்வோர்**
**பேர் பாடுவார் சிலர் பிரியா விடை எனும் பெண்கள் குணச்**
**சீர் பாடுவார் சிலர் ஸ்ரீராமலிங்க நற்தேசிகர்போல்**
**ஆர் பாடுவார் கேட்டபோதே புலன்கள் அடங்கிடவே**

(திரு அருட்பாவின் சிறப்பு)

சமயத் தெய்வங்களைப் புகழ்ந்து புகழ்ந்து போற்றிப் போற்றிப் பாடியுள்ளார். பின்னர் இறைவன் எல்லோருக்கும் பொதுவாக ஒருவன் தான் இருக்கிறான். அவனே அருட்பெருஞ்ஜோதி என்றார். வள்ளலார் ஆரம்ப காலத்தில் சைவ சமயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். படிப்படியாக வளர்ந்து சுத்த சன்மார்க்கத்திற்கு வந்தார் என்றே பலரும் பேசுகின்றார்கள். ஆனால் உண்மை என்ன?

இந்த உடம்பில் உயிர் எப்படி ஒன்றுதான் இருக்கின்றதோ அதேபோல் எல்லோருக்கும் இறைவன் ஒன்றுதான். இரண்டு, மூன்று என்றெல்லாம் கடவுளர்கள் இருப்பாரென்றால் உடற்கும் உயிர் இரண்டு மூன்று எனலாமே என்கிறார்.

**உருவினராயும் அருவினராயும் உருஅருவினராயும்**
**ஒருவரே உளார்கடவுள் கண்டறிமினோ உலகுளீர் உணர்வின்றி**
**இருவராம் என்றும் மூவரேயாம் என்றும் இயலும் ஐவர்களென்றும்**
**எருவராய் உரைத்துழல்வதென் உடற்குயிர் இரண்டு மூன்றெனலாமே**

(திரு அருட்பா)

எல்லா உருவங்களும் எல்லாப் பெயர்களும் ஞானிகளின் கற்பனையே. அந்தந்தப் பெயர்களில் அந்தந்த வடிவங்களில் தனித்தனியாகத் தெய்வங்கள் இல்லை.

கற்பனை செய்வதற்கும் ஏதாவது ஓர் ஆதாரம் வேண்டுமே? ஆம். அதுதான் திருச்சிற்றம்பல ஜோதி. அந்த ஒளியை ஆதாரமாக வைத்துத் தவம் செய்யும்போது ஏற்படும் அனுபவத்தை உருவமாக்கி தெய்வ உருவங்களை உருவாக்கினார்கள். பெயர்கள் வைத்தார்கள். சடங்குகளையும் ஏற்படுத்தினார்கள்.

**சைவம் முதலாக நாட்டும் பலசமயங்களெல்லாம்**
**தனித் தனிக் காட்டும்**
**தெய்வம் இது வந்து பாரீர் - திருச்**
**சிற்றம்பலத்தே திருநடஜோதி**
**எம்பொருள் எம்பொருள் என்றே சொல்லும்**
**எல்லாச் சமயத்துள் எல்லார்க்கும் ஒன்றே**
**செம்பொருள் என்பது பாரீர் - திருச்**
**சிற்றம்பலத்தே திருநடஜோதி..**
**இச்சை ஒன்றும் இல்லாதே இருந்த எனக்கிங்கே**
**இயலுறு சன்மார்க்க நிலைக்கு இச்சை உண்டாக்கித்**
**தச்சுறவே பிற முயற்சி செய்யும்தோறும் அவற்றைத்**
**தடையாக்கி உலகறியத் தடை தீர்த்த குருவே**
**எச்சமய முடிபுகளும் திருச்சிற்றம்பலத்தே**
**இருந்த என எனக்கருளி இசைவித்த இறையே**
**முச்சகமும் புகழ மணி மன்றிடத்தே நடிக்கும்**
**முதலரசே என்னுடைய மொழியும் அணிந்தருளே**

இந்தப் பாடலின் திரண்ட கருத்து என்னவெனில் எச்சமய முடிவுகளும் திருச்சிற்றம்பலமே என்பதுதான்.

இது முருகர் பாடல். இது சிவன் பாடல், இது விநாயகர் பாடல் என்று மக்கள் எண்ணுவார்கள். எல்லாப் பாடல்களும் திருசசிற்றம்பலம் ஒன்றினையே குறிக்கின்றது என்பது வள்ளலார் கண்டு கூறிய உண்மை. அந்த உண்மையை மனதில் கொண்டு தான் இத்தனை உருவங்களையும் வள்ளலார் பாடியுள்ளார். இதனை அவரே சொல்லுகின்றார் கவனியுங்கள்.

**வண்ணம் வேறெனினும் வடிவு வேறெனினும்**
**மன்னிய உண்மை ஒன்றென்றே**
**எண்ணியதல்லால் சச்சிதானந்தத்**
**திறையும் வேறெண்ணியதுண்டோ**
**அண்ணனின் பாதமறிய நானறியேன்**
**அஞரினிச் சிறிதுமிங் காற்றேன்**
**திண்ணமே நின்மேலாணை என்றன்னைத்**
**தெளிவித்துக் காப்பதுன்கடனே** (திரு அருட்பா)

எல்லாச் சமயங்களின் முடிபுகளும் திருச்சிற்றம்பலமே என்பதை நன்கு அறிந்த வள்ளலார் அதை மனதில் வைத்தே பாடினேன் என்கிறார்.

சமயத் தெய்வங்கள் அனைத்தும் கற்பனையே என்பதால் அவற்றை வழிபாடு செய்வது அவசியமல்ல என்றும் தெளிவுபடுத்தினார்.

இறைவன் என ஒருவன் இருந்தே தீர வேண்டும் என்பதைச் சைவ சித்தாந்தம் ஒரு வாதத்தை முன்வைத்து நிரூபிக்கின்றது. அதாவது பூமி ஒரு ஜடப்பொருள். எந்த ஒரு ஜடப் பொருளும் தானே இயங்காது. அதனை இயக்க அறிவுள்ள ஒன்று வேண்டும். ஜடப் பொருளாகிய இந்த பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்வதுடன் சூரியனையும் சுற்றி வருகிறது. பூமியாகிய பெரிய ஜடப்பொருளை இயக்க அதனை விடப் பெரிய ஆற்றல் மிக்க ஒன்று இருந்து செயல்படுத்துவதால் மட்டுமே பூமியால் இயங்க முடியும். எனவே இறைவன் இருக்கிறான் என்பது சைவ சித்தாந்தம்.

இதை வள்ளலார் அப்படியே ஏற்றுக் கொள்கிறார். இரவு பகல் தோன்றுகிறது. காலத்தில் மழை பொழிகிறது - விதைகளிலிருந்து பயிர்கள் விளைகின்றன - மரம் முதலியனவும் காண்கிறோம். இவ்வாறு அமானுஷ்யமான செயல்கள் நிறைய நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தச் செயல்பாடுகளைக் கொண்டே இறைவன் இருக்கின்றான் என்று உணரலாமே தவிர இருப்பதாகக் கூறப்பட்ட அந்த இறைவனைக் கண்களால் காண முடியாது என்கிறார். இந்த உடம்பில் உயிர் இருக்கிறது என்கிறோம். உயிர் இருப்பதை உடம்பின் செயல் பாட்டால் உணர்கின்றோமே தவிர உயிரை நேரடியாகக் கண்டோமா - உடம்பின் செயல்பாடு அனைத்தும் நின்று போய் விட்டால் உயிர் போய்விட்டது என்கிறோம். எப்படி உயிரைச் செயல்பாட்டால் உணர்கிறோமோ அவ்வாறே இறைவன் இருப்பதையும் செயல்பாட்டால் அதாவது காரியத்தால் மட்டுமே உணர முடியும்.

**பரமதனோடு உலகுயிர்கள் கற்பனையே யெல்லாம்**
**பகர் சிவமே என உணர்ந்தோம் ஆதலினால் நாமே**
**பிரமமெனப் பிறர்க்குரைத்துப் பொங்கி வழிந்தாங்கே**
**பேசுகின்ற பெரியவர்தம் பெரிய மதம் பிடியேல்**
**உரமிகுபேர் உலகுயிர்கள் பரம் இவை காரியத்தால்**
**உள்ளனவே காரணத்தால் உள்ளன இல்லனவே**
**தரமிகு பேரருளொளியால் சிவமயமே எல்லாம்**
**தாம் எனவே உணர்வது சன்மார்க்க நெறி பிடியே**

கடவுளைப் பற்றி வள்ளலார் தரும் விளக்கம் இதுதான்.

ஆகாசம் அனாதி, அது போல் அதற்குக் காரணமான பரமாகாச சொரூபராகிய கடவுள் அனாதி. அனாதியாகிய ஆகாசத்தில் காற்று அனாதி. அனாதியான வெளியில் காற்று எப்படி அனாதியோ அப்படிக் கடவுளிடத்தில் அருட்சக்தி அனாதியாய் இருக்கின்றது.

(பக்கம் 254 - உரைநடை)

ஆண்டவனின் உருவை பரமாகாச சொரூபம் என்று வள்ளலார் கூறுகிறார். அதாவது மேலான வெளியே கடவுள் என்பது வள்ளலார் தரும் விளக்கம். எல்லாவற்றிற்கும் முதலில் தோன்றியவன் இறைவன். அதேபோல எல்லாம் அழிந்த பின்னும் இருக்கப் போகிறவன் இறைவனே என்கிறார்கள். விஞ்ஞான ஆராய்ச்சியில் முதன் முதலில் வெளி மட்டுமே இருந்தது - பிறகு சூரியனும் அதிலிருந்து மற்ற கிரகங்களும் பூமியும் அதிலுள்ள உயிர்களும் தோன்றின. அவ்வாறே அழியும்போதும் இவைகள் எல்லாம் ஒவ்வொன்றாய் அழிந்து முடிவாக சூரியனும் அழிந்து மீதம் இருக்கப் போவது வெளிதான். எனவே ஆரம்பமும் வெளி - முடிவும் வெளி. வெளி அழியாதது. அதுவே இறைவன். அதனால்தான் கடவுளைப் பரமாகாச சொரூபன் என்றார். இது அண்டத்தில்.

**பிண்டத்தில் வள்ளலார் தரும் விளக்கம்.**

இறைவன் அருட்பெருஞ்ஜோதி. அது ஓர் அனுபவம் என்கிறார். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய கரணங்களும் கடந்த பின்னர் ஏற்படும் அனுபவமே அருட்பெருஞ்ஜோதி என்கிறார்.

**தனுகரணாதிகள் தாம் கடந்து அறியுமோர்**
**அனுபவமாகிய அருட்பெருஞ்ஜோதி** (அகவல்)

தவம் செய்வோர் பரநாத நிலை அனுபவம் பெறுவரேயானால் அச் சமயம் மனமானது செயல்பாடற்று விளங்கும். பாசம் எரிந்து இல்லாமல் போகும். அந்த நிலையில் அண்ட பகிரண்டம் தோன்றாத அளவு பெருஞ்ஜோதி ஒன்று காட்சியாகும். அதன் நடுவே பொன் ஒளி தோன்றும். அப்பொன் ஒளி நடுவே செவ்வொளி ஒன்று தோன்றும். அச்செவ்வொளிதான் உள் ஒளி. அது தான் நடராசர். அதன் அசைவே நடராச நடனம். பேரொளி, பொன் ஒளி, செவ்வொளி ஆகியவற்றையே முச்சுடர் என்கின்றார். ஜோதியுட் ஜோதியுனை ஜோதி என்ற கீர்த்தட்ப் பாடல் இதனையே விளக்குகின்றது. பரநாத நிலையில் பேரொளி தோன்றும் என்பதற்கு ஆதாரம்.

**ஈற்றறியேன் இருந்திருந்து இங்கதிசயிப் பதென்நீ**
**என்கின்றாய் நீ எனைவிட்டேகு தொறும் நான்தான்**
**காற்றறியாத் தீபம்போல் இருந்திடும் அத்தருணம்**
**கண்டபரிசென் புகல்வேன் அண்டபகிர் அண்டம்**
**தோற்றறியாப் பெருஞ்ஜோதி மலை பரநாதத்தே**
**தோன்றியது ஆங்குஅதன் நடுவே தோன்றியது ஒன்றதுதான்**
**மாற்றறியாப் பொன் ஒளியோ அவ்வொளிக்குள் ஆடும்**
**வள்ளல் அருளொளியோ ஈததிசயிக்கும் வகையே** (திரு அருட்பா)

இறைவனைப் புறத்தே பரமாகாச சொரூபன் என்ற வெளி என்றும் அகத்திலே முச்சுடராகத் தோன்றும் ஒளி என்றும் வள்ளலார் கூறுகின்றார்.

வடலூர் தருமச்சாலை நிறுவிய 23.5.1867 அன்று தருமச்சாலையில் இறைவன் எழுந்தருள ஆசனம் ஒன்று அமைத்தார். அதன் அருகே விளக்கை ஏற்றி வைத்தார். இறைவன் வெளி ஆனதால் வெறும் ஆசனம் மட்டும் இட்டு அவ்வாசனத்தின் மேல் ஒன்றும் வைக்காமல் விட்டார். ஆண்டவன் சந்நிதியில் மங்களகரமாக விளக்கை ஏற்றி அதன் அருகே வைத்தார். ஞானசபையிலும் கண்ணாடிக்குப் பின் ஒன்றும் வைக்கவில்லை. விளக்கை ஏற்றி ஞானசபை வாயிற்படி அருகே வைத்து வரும்படிக் கட்டளையிட்டார். ஆக ஞானசபையிலும் வள்ளலார் விளக்கை வழிபடும்படி வைக்கவில்லை.

மேட்டுக்குப்பத்தில் 1873ம் ஆண்டு கார்த்திகைத் திங்களில் பௌர்ணமியன்று விளக்கை வெளியே வைத்து இதனைத் தடைபடாது ஆராதியுங்கள். **தீப முன்னிலையில் கடவுள் விளங்குவதாகப் பாவித்துத்** தெய்வ பாவனையை ஞானசரியை 28 பாடல்களில் கண்டபடி இந்தத் தீபத்தில் செய்யுங்கள் என்றார். **தீப முன்னிலையில் கடவுள் விளங்குவதாகப் பாவித்து** என்ற சொற்றொடரை ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

எல்லா ஆலயங்களிலும் கர்ப்பக்கிருகத்தில் ஆண்டவனின் சிலையும் அதனருகே விளக்கும் இருப்பதைப் பார்க்கலாம். விரிவாகச் சொல்லப் போனால் சிவன் கோயிலில் சிவலிங்க உருவமும் அதனருகே விளக்கும் இருக்கும். முருகன் கோயிலில் முருகன் சிலை அருகே விளக்கு இருக்கும். ஆக ஆலயங்களில் விளக்கின் முன்னேதான் வணங்கப்பட வேண்டிய தெய்வத்தின் சிலைகள் உள்ளன. இந்தத் தெய்வங்கள் அனைத்தும் சமயம் சார்ந்தவை. அவற்றை வழிபட வேண்டிய அவசியம் இல்லை. எனவே அவ்வுருவங்களை அகற்றி விட்டால் அங்கே விளக்கு மட்டும் இருக்கும். இதுவரை விளக்கின் முன்னே தெய்வ உருவச் சிலை இருந்தது. இப்போது அந்த விளக்கின் முன்னே கடவுள் இருப்பதாகப் பாவித்துக் கொள்ளுங்கள் என்றார் வள்ளலார். ஆக இங்கும் இறைவன் தீபத்தின் முன்னே வெளியாகவே இருக்கிறான். வள்ளலார் புறத்தே இறைவனை வெளியாக அதாவது பரமாகாச சொரூபனாகவும் அகத்திலே ஒளி அனுபவமாக முச்சுடராகவும் விளக்கியிருப்பதை நன்கு சிந்தித்து உணர வேண்டும். முடிவாக வள்ளலார் மேட்டுக்குப்பத்தில் கொடிகட்டிச் செய்த பேருபதேசத்தை நன்கு ஆய்வு செய்ய வேண்டும்.

"நாம் நாமும் முன் பார்த்தும் கேட்டும் லட்சியம் வைத்துக் கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் லட்சியம் வைக்க வேண்டாம். ஏனென்றால் அவைகள் ஒன்றிலாவது குழுவுக்குறியன்றித் தெய்வத்தை இன்னபடி என்றும், தெய்வத்தினுடைய உண்மை இன்னதென்றும் கொஞ்சமேனும் புறங்கவியச் சொல்லாமல் மண்ணைப் போட்டு மறைத்து விட்டார்கள் அணுமாத்திரமேனும் தெரிவிக்காமல் பிண்ட லட்சணத்தை அண்டத்தில் காட்டினார்கள். யாதெனில் கைலாசபதி என்றும், வைகுண்டபதி என்றும், சத்தியலோகாதிபதி என்றும் பெயரிட்டு, இடம், வாகனம், ஆயுதம், வடிவம், ரூபம் முதலியவையும் ஒரு மனுஷ்யனுக்கு அமைப்பது போல் அமைத்து உண்மையாக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். தெய்வத்திற்குக் கைகால் முதலியன இருக்குமா என்று கேட்பவர்க்குப் பதில் சொல்லத் தெரியாது விழிக்கின்றார்கள். இஃது உண்மையாய் இருப்பதாகவே முன்னும் பின்னும் உள்ள

பெரியவர்கள் என்று பெயரிட்டுக் கொண்டவர்களும் உண்மையை அறியாது அப்படியே கண்ணை மூடிக்கொண்டு உளறி இருக்கிறார்கள். ஆனால் ஆதியிலே இதை மறைத்தவன் ஓர் வல்லவன். அவன் மறைத்ததை இதுவரைக்கும் ஒருவரும் கண்டபாடில்லை. அவன் பூட்டிய அந்தப் பூட்டை ஒருவரும் திறக்கவில்லை. இதுவரைக்கும் அப்படிப்பட்டவன் பூட்டிய பூட்டை உடைக்க ஒருவரும் வரவில்லை."

வள்ளலார் கூறியது போல் எந்த அருளாளரும் இவ்வாறு வெளிப்படையாகச் சொல்லவில்லை. வள்ளலார் நம்மீது கொண்ட பெருங் கருணையினால் நாம் உண்மை அறிய வேண்டும் என்ற பேரிரக்கத்தால் தெய்வத்தின் உண்மையை நமக்கு எடுத்து உரைக்கின்றார். புரிந்து கொண்டால் நாம் பயனடையலாம்.

நான்கு குருடர்கள் யானையைப் பார்க்கச் சென்றார்கள். அவர்கள் குருடர்கள். கண்ணால் பார்க்க முடியாது. கையால் தடவித்தான் உணர முடியும். யானையின் கால்களைத் தடவிப் பார்த்தவன் யானை ஒரு பாறையைப் போல் உள்ளது என்றானாம். யானையின் கால்களைத் தடவிப் பார்த்த இன்னொருவன் இல்லை இல்லை யானை ஒரு தூண் போல் உள்ளது என்றான். காதுகளைத் தடவிப் பார்த்தவன் நீங்கள் சொல்வது உண்மையல்ல யானை ஒரு முறம்போல்தான் உள்ளது என்றான். நான்காவது ஆள் யானையின் வாலைத் தடவிப் பார்த்துவிட்டு நீங்கள் மூவரும் சொல்வது பொய் உண்மையில் யானை ஒரு கயிறு போல்தான் உள்ளது என்றானாம். இவ்வாறு சமய மதத் தலைவர்கள் ஒன்று கிடக்க ஒன்றை உளருகின்றார்கள். நீங்கள் அவர்கள் கூறும் எதையும் நம்ப வேண்டாம் என்கிறார் வள்ளலார்.

**எவ்வுலகில் எவ்வெவர்க்கும் அரும்பெருஞ்ஜோதியரே**
**இறைவர் என்பதறியாதே இம்மதவாதிகள்தாம்**
**கவ்வைபெறு குருடர்கரி கண்ட கதைபோலே**
**கதைக்கின்றார் சாகாத கல்வி நிலை அறியார்**
**நவ்வி விழிமாதே இவரோ சில புகன்றார் என்றாய்**
**ஞானநடங் கண்டேன்மெய்த் தேனமுதம் உண்டேன்**
**செவ்வை பெறு சமரச சன்மார்க்க சங்கந்தனிலே**
**சேர்ந்தேன் அத்தீமொழியும் தேமொழியாயினவே**

(திரு அருட்பா)

## பிநாகபாணி முதலியார் வருகை

பிரசங்கம் செய்யும்போது ஒரு நாள் நமக்கு அறிவு புகட்ட ஒருவர் வருகிறார் என்று நம் பெருமானார் கூறினார்கள். ஆறு மொழிகளில் வல்லுனரான பிநாகபாணி என்பவர் வள்ளலாரை நான் வெல்லுவேன் என்று சூளுரைத்துவிட்டு வந்து கொண்டிருந்தார். இவர் வரவைத்தான் வள்ளலார் முன்னதாகவே அறிந்து

ஒருவர் வருகிறார் என்று கூறினார். அதே போலப் பிநாகபாணி முதலியார் வள்ளலார் எதிரே வந்து நின்றார். நம் பெருமானார் ஒன்றும் பேசாமல் அருகிலிருந்த தொழுவூர் வேலாயுத முதலியார் மகனான திருநாகேஸ்வரன் என்ற ஐந்து வயதுச் சிறுவனின் கையைப் பிடித்துக் கொண்டு என்ன வேண்டுமானாலும் இவனிடம் கேளுங்கள் என்று பிநாகபாணி அவர்களிடம் வள்ளலார் கூறினார். திருநாகேஸ்வரனும் எனக்கும் ஆறு மொழிகள் தெரியும் எந்த மொழியில் வேண்டுமானாலும் கேள்வி கேட்கலாம் என்று சிறுவன் கூறியதும் பிநாகபாணி ஒன்றும் பேசாது வாயடைத்து நின்றார். ஏன் பேசாமல் இருக்கின்றீர்கள் ஏதாவது பேசுங்கள் என்றார் வள்ளலார். பிநாகபாணி நான் வந்த காலத்தில் சபை எனக்கு இடம் தரவில்லை என்றார். தாங்கள் வந்தது எந்தக் காலம் என்று வள்ளலார் கேட்க அது இறந்த காலம் என்றார் பிநாகபாணி. நிகழ்காலம் இறந்த காலமாக எப்போது ஆகிறது. நிகழ்காலத்தின் அளவு என்ன என்று வள்ளலார் கேட்டார். பதில் சொல்லத் தெரியாது பிநாகபாணி மௌனமாக இருந்தார். ஆயிரம் தாமரை இதழ்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி அதை ஒரு குண்டூசியால் குத்துகின்ற காலமே நிகழ்காலத்தின் அளவு என்று வள்ளலாரே விளக்கம் அளித்தார். மேலும் வள்ளலார் கைபட்டவுடன் ஒரு சிறுவன் இப்படிப் பேசினான் என்றால் வள்ளலார் ஞானம் எவ்வளவு என்று புரிந்து கொண்டு பிநாகபாணி அன்று முதல் வள்ளலாருக்கு அடிமையானார்.

## <u>வள்ளலார் ஏற்படுத்திய மற்ற நிலையங்கள்</u>

வள்ளலாரின் அறிவாற்றலும் செயல் திட்டங்களும் உணர்வோர்க்குப் பெரு வியப்பளிப்பதாய் விளங்குகின்றன.

மக்கள் ஒன்று கூடி உண்மையறிந்து வாழ்க்கையை வளம்பெறச் செய்து கொள்ள ஒரு சங்கம் ஏற்படுத்தினார்.

ஜாதி மத சமய பேதம் எதுவுமின்றி எல்லா மக்களும் ஒன்றுகூடி வழிபாடு செய்யப் பொதுவான வழிபாடுதலம் என சத்திய ஞான சபை அமைத்தார்.

ஆதரவற்ற ஏழை மக்களின் பசியாற்றுதலே, ஜீவகாருண்யமே, தெய்வ வழிபாடு என உணர்த்த சத்திய தருமச்சாலை ஒன்றை நிறுவினார்.

மக்கள் தீய குணங்களிலிருந்து விடுபட்டு நல்ல குணங்களோடு மனிதர்களாக வாழ வழிகாட்டும் வகையில் திருக்குறள் வகுப்பு நடத்தச் செய்தார்.

பால் குடிக்கும் குழந்தை முதல் முதியோர்கள் வரை கல்வி கற்க சன்மார்க்க போதனா சாலை ஒன்று ஏற்படுத்தினார்.

சன்மார்க்கக் கொள்கைகளை நன்கு பயின்று உலகெங்கும் பிரச்சாரம் செய்யச் சன்மார்க்க போதனா சாலை ஏற்படுத்தினார்.

செய்திகளை மக்களுக்கு அறிவிக்க சன்மார்க்க விவேக விருத்தி என்ற பத்திரிக்கை தொடங்கினார். எல்லோரும் பொது அறிவை வளர்த்துக் கொள்ளும் வகையில் சன்மார்க்க வாசகசாலை ஒன்றை நிறுவினார்.

எல்லோரும் நோயற்ற வாழ்வில் வாழ வேண்டும் என்பதற்காக சன்மார்க்க வைத்திய சாலை ஒன்றையும் ஏற்படுத்தினார்.

என்னதான் அறிவுரை கூறினாலும் நல்வழிகளைப் போதித்தாலும் மக்களுக்குள் சச்சரவுகள் ஏற்படும் என்பதை மறவாது அவர்களது வழக்குகளைத் தீர்த்து வைக்கத் தனி நீதிமன்றம் ஒன்றையும் தவறாமல் நிறுவினார். அதன் விசாரணை சபை என்பதாகும்.

வாதியோ, பிரதி வாதியோ, நீதிபதியைப் பொருள் கொடுத்துத் தன் பக்கம் வளைத்துக் கொள்ள முடியாத வகையில் வேட்டவலம் ஜமீன்தார் அப்பாசாமி பண்டாரியாரை அதற்கு அக்ராசனர் (நீதிபதி) என நியமித்தார். அந்த நீதி மன்றத்தில் வந்த வழக்கு ஒன்றினைச் சான்றாகக் காண்போம்.

பிரமாதி வருஷம் தை மாதம் 16ம் தேதி மேற்படி தருமச்சாலையில் மேற்படி கூட்டத்தாரில் கண்ட

வாதி ... வெங்கடேச ஐயர்

பிரதிவாதி ... ச. ஆறுமுக முதலியார் இவர்கள் நீங்கலாக மற்ற பதிமூவரும் செய்த முடிவானது.

மேற்படி தருமச் சாலையைப் பற்றி கட்டிடங்கள் கட்ட வேண்டிய விஷயமாகசெங்கால் ஓடையிலிருந்து கொண்டு வந்த சாமான்கள் ரூ.150/- பெறுமானவைகளை சாலைக்கு உபயோகப்படுத்துவதாக ஆறுமுக முதலியார் தன்னை நம்பச் செய்து அதற்கு வேண்டிய வேலைகளுக்காக ரூ.20/- கொடுக்க வேண்டியதென்று கேட்டுக் கொண்டதால் கொடுபட்டும் ஏற்பாட்டின்படி நடவாமல் சொத்துக்களை அபகரித்துக் கொண்டதாகவும் அதைப் பற்றியோக்கியதா யோக்கியதைக் குறித்து தீர்ப்பு கொடுக்க வேணுமென்று வாதி வெங்கடேசய்யருடைய தாவா

பிரதிவாதியை விசாரிக்கையில் தான் சாலைக்கே ரூ.150/- சொத்துக்களை எண்ணங் கொண்டதும் அதில் மீந்த சொத்துக்களைக் கொண்டு தனக்காக ஒரு கட்டடம் கட்டிக் கொள்ள வேண்டுமென்று மனசாட்சிக்கு விரோதமில்லாமல் ஆதி முதல் அந்த எண்ணமே தனக்கு இரந்ததாகவும் சொல்கிறார். ஆதலால் இதுகளை யோசிக்கையில் இரு திறத்தார் விவாதமும் வாய் மொழியாகவும் சரியான ருஜிக்களும் தற்காலத்துக்கு உபயோகப்படும்படியான சாட்சிகள் இல்லாமையால் இதற்கு முன்னும் இவ்விடத்தில் இருந்தவர்கள்ள ஒருமையினாலே நடத்தப்பட்டு இப்பொழுது நேரிட்டுக்கும் மனஸ்தாபத்தால் இந்தப் பிரஸ்தாபம் நேரிட்டதாய் தெரிய வருகிறபடியால் இந்த தாவர சரியல்லவென்று கூட்டத்தார் அபிப்பிராயப் படுகிறார்கள்.

கையெழுத்து,

அப்பாசாமி பண்டாரியார், அக்ராசனர் சி. தேசிகன், முத்து, குருசாமி, க. சுப்பராய முதலி, சு. நயினா ரெட்டி, கனகசபை பிள்ளை, அ. சபாபதி குருக்கள், வெ.ராமசாமி, நாகப்பிள்ளை, மு.அப்பாசாமி செட்டி, புருஷோத்தம ரெட்டி, சி. அரங்கசாமி.

## இறந்தாரை எழுப்பிவிடவா!

வள்ளலாரோடு மிக மிக நெருங்கிப் பழகியவர் மேட்டுக்குப்பம் மணியக்காரர் முத்தையா என்பவர். வள்ளலார் மேட்டுக் குப்பத்திலிருந்து வெளியூர் சென்றிருந்தார். முத்தையா அவர்கள் இறந்து விட்டார். அவருடைய உடலை உறவினர்கள் இடுகாட்டுக்கு எடுத்துச் சென்று விட்டனர். அந்த நேரத்தில் அடிகளார் மேட்டுக் குப்பம் திரும்பினார். வந்தவுடன் முத்தையா அவர்கள் இறந்த செய்தி கேட்டு வருந்தினார். அவர் மனமானது இரக்கமானதல்லவா. ஒரு கையில் பிரம்பும் மற்றொரு கையில் செம்பில் சிறிது தண்ணீரும் எடுத்துக் கொண்டு இதோ முத்தையாவை எழுப்பிக் கொண்டு வந்து விடுகிறேன் என்று புறப்பட்டார். வாயிற்படி வரை வந்தார். ஆண்டவன் சம்மதம் கிடைக்கவில்லை. மனமுடைந்து செம்பையும் பிரம்பையும் வீசி எறிந்து விட்டு திண்ணை மேல் உட்கார்ந்து விட்டார். (மேட்டுக் குப்பத்தில் அந்தத் திண்ணையை இன்றும் பார்க்கலாம்)

## சுத்த சன்மார்க்கம்

மனிதராய்ப் பிறந்த நீங்கள் அடைய வேண்டிய புருஷார்த்தங்கள் நான்கு

1. ஏமசித்தி
2. சாகாக் கல்வி
3. தத்துவ நிக்கிரகம் செய்தல்
4. கடவுள் நிலையறிந்து அம்மயமாதல்

இந்த அரும்பெரும் புருஷார்த்தங்களைப் பெறுவதற்கு நீங்கள் கைக் கொள்ள வேண்டிய ஒழுக்கங்களும் நான்கு ஆகும். அவையாவன

1. இந்திரிய ஒழுக்கம்
2. கரண ஒழுக்கம்
3. ஜீவ ஒழுக்கம்
4. ஆன்ம ஒழுக்கம்

இவைகளை விளக்கமாக உபதேசித்தார். நித்திய ஒழுக்கம் இவையென வரையறை செய்து அதிலும் பொது விதி சிறப்பு விதி என்று எடுத்துக் கொடுத்தார். சமயத்தெய்வங்கள் அனைத்தும் கற்பனையே என்று நன்றாகப் புரியும்படி விளக்கினார். கண்மூடித்தனமான சடங்குகளைச் சாடினார். இந்து வேத ஆகம புராணங்களிலுள்ள உண்மைகளை எடுத்துக் கூறுவதில் அதிக கவனம் செலுத்தினார். ஜாதி மதம் சமயம் பொய்யென்று எடுத்துக் காட்டினார். ஆன்ம நேயம் கொண்டு அனைவரும் பழக வேண்டும் என்று போதித்தார். ஜீவகாருண்யமே தெய்வ வழிபாடு என்பதை ஆனித்தரமாக வலியுறுத்தினார். இந்த மனித தேகம் போய் விட்டால் அடுத்த பிறவியில் எந்த தேகம் வருமோ என்ன வருமோ சொல்ல முடியாது. எனவே இந்த உடம்பையே அழியாத உடம்பாக மாற்றிக் கொள்ளுங்கள் என அதற்குரிய ஞான வழிகளைப் போதித்தார். இந்த உடம்பா அழியாமல் இருக்கும் என்று சந்தேகிப்போர்க்கும் வாதிடுவோர்க்கும் இந்தமல உடம்பு தான் அழியாத நிலை பெறும் என்று உறுதியாகவும் தெளிவாகவும் பதில் கூறினார்.

**பொத்திய்மலப் பிணிப் புழுக் குரம்பைதான்**
**சித்தியல் சுத்தசன்மார்க்கச் சேர்ப்பினால்**
**நித்திய மாகியே நிகழும் என்பது**
**சத்தியம் சத்தியம் ஜகத்துளீர்களே**

எப்படி வாழ்ந்தால் மரணமிலாப் பெருவாழ்வு அடையலாம் என்று எடுத்துக் காட்டியதுடன் இதைப் புனைந்துரைக்கும் கட்டுக்கதை என்றோ, பொய்யான கருத்து என்றோ நினைத்து விடாதீர்கள். நான் சத்தியமாகச் சொல்கிறேன் என்று மக்கள் மீது கொண்ட இரக்கத்தினால் சத்தியமாக வலிந்து கூறினார்.

**நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து**
**நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து**
**ஊற்றெழும் கண்ணீரதனால் உடம்பு**

**நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே ஞான**
**நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று**

**வனைந்து வனைந்து ஏத்துதும் நாம் வம்மின்**
**உலகியலீர் மரணமிலாப் பெருவாழ்வில்**
**வாழ்ந்திடலாங்கண்டீ ர்.**

**புனைந்துரையேன் பொய் புகலேன் சத்தியஞ் சொல்**
**கின்றேன் பொற்சபையில் சிற்சபையில்**
**புகுந்தருணமிதுவே.**

அவர் காட்டிய சுத்த சன்மார்க்கத்திற்கு மூன்று படிகளை உண்டாக்கினார்.

1. சமய சன்மார்க்கம்
2. மத சன்மார்க்கம்
3. சுத்த சன்மார்க்கம்

சமய மத சன்மார்க்கங்கள் சுத்த சன்மார்க்கத்திற்குச் செல்லக் கீழ்ப்படி களாதலால் என்று வள்ளலார் கூறுவதிலிருந்து சமய மத சன்மார்க்க நெறி பயிலாது சுத்த சன்மார்க்கம் அடைய முடியாது எனத் திட்டமாக உணர்ந்து கொள்ள வேண்டும். சமய சன்மார்க்கம் என்பது நாம் சாதாரணமாக எண்ணுவது போலச் சிவன், சக்தி, கணபதி, முருகன், விஷ்ணு போன்ற சமயத் தெய்வங்களை வழிபடு கடவுளாகக் கொண்டு இன்று விளங்கும் சைவம், சாக்தம், காணாபத்யம், கௌமாரம் வைணவம் போன்றவையல்ல. வள்ளலாருடைய பாட்டுக்கோ, உரைநடை வசனத்திற்கோ நாமே பொருள் காண்பதைவிட அவர் எந்தக் கருத்தில் கூறினார் என்று விளங்கிக் கொண்டாலொழிய அவரது கருத்தைத் தெளிவாக அறிய முடியாது.

## சுத்த சன்மார்க்கத்தின் மூன்று படிகள்

### 1) சமய சன்மார்க்கம் :-

சமய சன்மார்க்கம் என்பது சத்துவ குண சம்பந்தமுடையது. சத்துவ குண இயல்பாவது 1. கொல்லாமை, 2. பொறுமை 3. சாந்தம் 4. அடக்கம் 5. இந்திரிய நிக்கிரகம் 6. ஆன்ம இயற்கைக் குணமாகிய ஜீவகாருண்யம். இந்த ஆறு குணங்களை நன்கு உணர்ந்து வாச்சியார்த்தமாகிச் சொரூபானுபவமானால் அவனே சமய சன்மார்க்கி.

வள்ளலார் கூறிய சமய சன்மார்க்கியாக நாம் விளங்குவதே எவ்வளவு சிரமம் என்பதை நன்கு உணருவோமாக.

### 2) மத சன்மார்க்கம் :-

மத சன்மார்க்கம் என்பது சத்துவ குண நிர்க்குண லட்சியமுடையது அதாவது விருப்பு வெறுப்பு, வேண்டுதல் வேண்டாமை, ஏங்கல் சலித்தல், தாங்கல் விடுதல், போன்ற எந்தச் சார்பும் இன்றி எல்லாம் அவன் செயலாகத்தன் இச்சை எதுவும் இன்றி நிற்றல் இந்த அநுபவம்தான் ஞானத்தில் யோகம் செய்கின்ற 15ம்படி நிலைக்கு உயர்த்துகிறது. தாயுமானவரை ஒருவாறு மத சன்மார்க்கி என்று எடுத்துக் காட்டினார்.

### 3) சுத்த சன்மார்க்கம் :-

மேற்கூறிய சமய சன்மார்க்கம், மத சன் மார்க்கம் ஆகிய இரண்டையும் கடந்தவர் மட்டுமே சுத்த சன்மார்க்க அனுபவம் பெற முடியும். சுத்த

சன்மார்க்கத்தில் சாதகர், சாத்தியர் என்ற இரண்டு பிரிவுகள் உண்டு. சுத்த சன்மார்க்கத்தின் ஆரம்பத்தில் சாதனை ஒரு குரு மூலம் பெற்றுக் கொண்டு, பயின்று, அதிலே முழுமை பெற வேண்டும். வேகாக்கால் போன்ற சாகாக் கலானுபவப் பயிற்சியை சற்குணர்க்கு மட்டுமே போதித்தார் வள்ளலார். சாதகர்கள் சாதனை முற்றிச் சாத்தியரானால் எந்த சாதனமும் அவர்கட்கு வேண்டியதில்லை. அவர்கள் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிஷ்டை கூடல் ஆகிய நான்கையுங் கடந்து ஆரூடனாக நிற்பதால் சாதனம் ஒன்றும் அவர்கட்கு வேண்டியதில்லை என்றார். சமய மதானுபவங்கள் சுத்த சன்மார்க்கத்திற்கு அல்லாதனவேயன்றி இல்லாதன வல்ல என்று கூறினார்.

இம்மூன்று படிகளையும் அதி தீவிர விருப்ப முயற்சியுடையோர் மட்டுமே அடைவர் என்று எடுத்துக் காட்டினார்.

ஜாதி, மதம், சமயம், மொழி, இனம், தேசம் முதலிய எந்தப் பேதமுமின்றி அனைத்துலக மக்களும் ஆன்ம நேயம் கொண்டு ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமைச் சகோதர சகோதரிகளாய் வாழ வேண்டும் என்று போதித்த வள்ளலார் மக்களை இருவகையாகப் பிரித்தார்.

1. புலாலுண்ணும் புறவினத்தார்
2. புலால் மறுத்த அக வினத்தார்

கொலை புலை தவிர்க்காதவர்களை மனித இனமே அல்ல அவர் பிற இனம் என ஒதுக்கினார். அக வினத்தாரை வள்ளலார் மேலும் இரண்டாகப் பிரித்தார், அதாவது அகப் பணிபுரிவோர் புறப்பணிபுரிவோர் என்று. வள்ளலார் ஏற்படுத்திய சமரச சுத்த சன்மார்க்கச் சங்கத்தில் சேரத் தகுதியுடையோர் யாவரெனில் எந்த நிபந்தனையுமின்றி யாவருமாவர்.

சங்கத்தின் அங்கதினரான பின்னர் கொலை புலை தவிர்த்து, காமக் குரோதம் ஏற்படுங்கால் ஞான அறிவினால் தடுத்துக் கொண்டு இறைவனின் உண்மையை அறிந்து, ஜீவகாருண்யம் ஒன்றினால் மட்டுமே இறை அருளைப் பெற முடியும் எனத் தெளிவாக உறுதியாக அறிந்தோர் சாலைக்குரிய அகவினத்தாராவர். அவ்வக வினாத்தாரில் தக்கதோர் குருவினைக் கொண்டு நெற்றிக் கண்ணைத் திறக்கப் பெற்றுக் கொண்டு ஜீவகாருண்யம் என்ற திறவுகோலைப் பெற்று ஞான சாதனம் புரிவோர் சபைக்குரிய அகப்பணி செய்வோர் ஆவர். இவர்களே சுத்த சன்மார்க்க சாத்திய அனுபவம் பெற்று தான் பெற்ற நிலை அடைவர் எனக் காட்டினார்.

## பிரசாதம்

மேட்டுக் குப்பத்தில் வள்ளலார் இருந்த அறைக்குப் பக்கத்தில் மூன்று பெரிய பானைகளில் பிரசாதம் வைத்திருந்து வழங்கப்பட்டது. சமீப காலம் வரை அந்தப் பானைகளில் உடைந்து போன ஒன்று அந்த அறையில் இருந்ததைப் பலர் கண்டனர். பிரசாத சாமான் வாங்கி வர ரூ ஏழு கொடுத்து திரு ஐயாசாமி

பிள்ளை அவர்களை சந்தைக்கு வள்ளலார் அனுப்பியுள்ளார். அன்பர் திரு. கா. ஐயாசாமி பிள்ளை அவர்கள் இது தொடர்பாக திரு. அப்பாசாமி செட்டியார் அவர்கட்கு எழுதிய கடிதம் ஒன்று கிடைத்தது. அந்தக் கடிதம் இது தான் :-

கூடலூர் ஸ்ரீ அய்யாசாமி பிள்ளை அவர்கள் கூடலூர் ஸ்ரீ அப்பாசாமி செட்டியார் அவர்கட்கு எழுதிய கடிதம் இது.

உ

திருச்சிற்றம்பலம்

என் நண்பராம் எந்தனந்தங்கட்கு வந்தனம்.

சந்நிதானம் நேத்திய தினம் ரூபாய் ஏழு கொடுத்து பஞசாமுர்தம் செய்ய சாமான் வாங்கி வர சந்தைக்கு அனுப்பியிருக்கிறார்கள். சந்நிதானம் சாலைக்கு எழுந்தருளும் அதி சமீபம் விரைவில் வந்து சேர வேண்டியது. அண்ணா அவர்கள் உத்தரவுப்படிக்கு.

திங்கட்கிழமை கா. அய்யாசாமி

தங்களைக் காலைச் சுற்றிய பாம்பு என்று சந்நிதானம் கட்டளையிட்டது. இந்த வார்த்தை உங்களுக்கு விசேஷ நன்மை உண்டு பண்ணுமென்று தோன்றுகின்றது.

கா. அ.

(உரைநடை பக்கம் 492)

வள்ளலார் அவர்கள் பஞ்சாமிர்தம் செய்து வழங்கியிருக்கின்றார்கள் என்பது புலனாகின்றது. மேட்டுக் குப்பத்தில் வள்ளலார் திருக்காப்பிட்டுக் கொண்ட அறைக்கு அடுத்த அறையில் மண்ணாலான பெரிய பிரசாத பாத்திரம் (உடைந்து போனது) பல காலம் இருந்தது. தற்போது அது காணப்படவில்லை. பிரசாதம் தருவது உடன்பாடே, தரலாம்.

## சன்மார்க்கக் கொடி : பேருபதேசம்

22.10.1873 புதன் கிழமை காலை 8 மணிக்கு மேட்டுக் குப்பம் சித்திவளாகத்தில் சன்மார்க்கக் கொடிகட்டிப் பேருபதேசம் செய்தார்கள்.

நீங்கள் இதுவரை இருந்தது போல் இனியும் வீண் காலம் கழித்துக் கொண்டிராதீர்கள். நம்முடைய நிலை எப்படிப்பட்டது? நம்மை அதிஉஷ்டிக்கின்ற தெய்வத்தின் நிலை எப்படிப்பட்டது என்று விசாரணை செய்யுங்கள். நம்முடைய ஆன்ம அறிவை மூடிக்கொண்டிருக்கிற அனந்தத் திரைகளில் மிக அழுத்தமாயிருக்கின்ற பச்சைத் திரையை முதலில் நீக்கிக் கொள்ளுங்கள்.

மலை முழை காடு முதலிய இடங்களில் போய் நூறு ஆயிரம் வருஷம் தவம் செய்து உண்டு பண்ணிக் கொள்ளுகிற உஷ்ணத்தைக் காட்டிலும் கோடிப் பங்கு பத்து கோடிப் பங்கு அதிகமான உஷ்ணத்தைத் தெய்வத்தைத் தோத்திரம் செய்கின்றதிலும், நினைக்கின்றதிலும் உண்டு பண்ணிக் கொள்ளலாம். ஒரு ஜாம நேரம் இக விசாரமில்லாமல் ஆன்ம நெகிழ்ச்சியோடு தெய்வத்தை ஸ்தோத்திரம் செய்தால் நாம் பெற வேண்டியதைப் பெற்றுக் கொள்ளலாம். சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும் வேதாந்தம் சித்தாந்தம் முதலிய மதங்களிலும் லட்சியம் வைக்க வேண்டாம். ஏனெனில் அவ்வச் சமயங்களிலும், வேதாந்தம், சித்தாந்தம் முதலிய மதங்களிலும் தெய்வத்தைப் பற்றிக் குழூஉக் குறியாகக் குறித்திருக்கின்றதேயன்றி புறங்கவியச் சொல்லவில்லை. தெய்வத்தின் உண்மையைப் புறமுகமாகச் சொல்லாமல் மண்ணைப் போட்டு மறைத்து விட்டார்கள். அணுமாத்திரமேனும் தெரிவிக்காமல் பிண்ட லட்சணத்தை அண்டத்தில் காட்டினார்கள். யாதெனில் கைலாசபதி என்றும், சத்திய லோகாதிபதி என்றும் பெயரிட்டு, இடம், வாகனம், ஆயுதம், வடிவம், ரூபம் முதலியனவும் ஒரு மனுஷ்யனுக்கு அமைப்பது போல் அமைத்து உண்மையாக இருப்பதாகவே சொல்லியிருக்கிறார்கள். முன்னும் பின்னும் உள்ள பெரியவர்கள் என்று பெயரிட்டுக் கொண்டிருந்தவர்களும் உண்மையை அறியாது அப்படியே இருப்பதாக நம்பி ஏமாந்து கண்ணை மூடிக் கொண்டு உளறிக் கொட்டியிருக்கிறார்கள். ஆதியிலே இதை மறைத்தவன் ஓர் வல்லவன். அவன் பூட்டிய அந்தப் பூட்டை ஒருவரும் திறக்கவில்லை. சமய மதங்களில் லட்சியம் வைக்க வேண்டாம். சமயத் தெய்வங்களை வழிபாடு செய்வது அவசியமல்ல.

நமக்கு முன் சாதனம் கருணையானதினாலே ஆண்டவர் முதன் சாதனமாக

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

என்னும் மகாமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக் கொண்டார். மேலும் இப்பிண்டத்தில் நாம் யார்? நம்முடைய தேகத்தில் கண், புருவம், கைம்மூலம் முதலிய இடங்களில் உரோமம் உண்டாவதேன்? நெற்றி முதலிய இடங்களில் அது தோன்றாதிருப்பதேன்? அண்டத்தில் சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் இவைகள் எப்படிப்பட்டன. இவைகளினுடைய சொரூப ரூப சுபாவம் என்ன? இப்படி அண்ட விசாரமும் பிண்ட விசாரமும் செய்யுங்கள். காதில் இரண்டு பெரிய பொத்தல் செய்து வர விடுத்தவர் ஆணுக்குக் கடுக்கனிடுதலும் பெண்ணுக்கு மூக்குத்தி முதலியவை போடுதலும் தமக்குச் சம்மதமானால் காதிலும் மூக்கிலும் அதற்கு வேண்டிய பொத்தலிட்டு வரவிட்டிருக்க மாட்டாரா என்று விசாரித்துத் தெரிந்து கொள்ளுகிற பட்சத்தில் காதில் கடுக்கனிடவும் மூக்கு முதலியவற்றில் நகை இடவும் சம்மதம் வருமா! இப்படி விசாரித்துப் பிரபஞ்ச போகத்தினிகண் அலட்சியம் தோன்றினால் நிராசை உண்டாகும். ஆதலால் சரியை கிரியை யோகம் ஞானம் என்கிற நான்கில் மூன்றாவது படியாகிய ஞானத்தில் யோகம் செய்கிற பலனாகிய நிராசை என்னும் 15ம் படி உண்டாகிறது.

இக்காலமே சன்மார்க்க காலம். இதற்குச் சாட்சியாக இப்போதுதான் சன்மார்க்கக் கொடி கட்டிக் கொண்டது. இக்கொடி உண்மையில் யாதெனில் நமது நாபி முதல் புருவ மத்தி ஈறாக ஒரு நாடி இருக்கின்றது. அந்த நாடி நுனியில் புருவ மத்தியின் உட்புறத்தில் ஓர் சவ்வு தொங்குகின்றது. அதன் அடிப்புறம் வெள்ளை வர்ணம். மேற்புறம் மஞ்சள் வர்ணம். அச்சவ்வின் கீழ் ஒரு நரம்பு ஏறவும் இறங்கவும் இருக்கின்றது. இந்தக் கொடி நம் அனுபவத்தின் கண் விளங்கும்.

உண்மைப் பெரு நெறி ஒழுக்கம் யாதெனில் கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சியே பெறுக என்றது தான். என்னை ஏறா நிலை மிசை ஏற்றிவிட்டது யாதெனில் தயவு. தயவு என்னும் கருணை தான் என்னைத் தூக்கி விட்டது. அந்தத் தயவிற்கு ஒருமை வர வேண்டும். அந்த ஒருமை இருந்தால் தான் தயவு வரும். தயவு வந்தால் தான் பெரிய நிலை மேல் ஏறலாம். இப்போது என்னுடைய அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடந்திருக்கிறது. அது அந்த ஒருமையினாலே தான் வந்தது. **என்னிடத்தில் ஒருவன் வசப்படாத முரட்டுத்தனமாக எப்படி இருந்தாலும் அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லுவேன். மிரட்டிச் சொல்லுவேன். தெண்டன் விழுந்து சொல்லுவேன் அல்லது பொருளைக் கொடுத்து வசப்படுத்துவேன். அல்லது ஆண்டவரை நினைத்துப் பிரார்த்தனை செய்வேன். இப்படி எந்தவிதத்திலேயாவது நல்ல வழிக்கு வரச் செய்து விடுவேன்.** நீங்கள் எல்லாரும் இப்படியே செய்ய வேண்டும். இராத்திரிகூட, நான் இல்லாமல் இந்த ஜனங்கள் க்ஷண நேரம் இருக்க மாட்டார்களே என்று ஆண்டவரிடத்தில் விண்ணப்பித்துக் கொண்டேன். இப்போது நீங்கள் இது வரைக்கும் ஒழுக்கத்திற்கு வராமல் எவ்வளவு தாழ்ந்த மனுஷ்யர்களாக இருந்தாலும் இது தொடங்கி சுத்த சன்மார்க்கத்திற்கு வாருங்கள் பெற வேண்டியதைப் பெற்றுக் கொள்ளலாம். நீங்கள் நல்லொழுக்கத்திற்கு வருவதோடு மற்றவர்களையும் நமது ஒழுக்கத்திற்கு வரும்படி எவ்விதத் தந்திரமாவது செய்து நம்மவர்களாக்கிக் கொள்ள வேண்டியது. சில காலம் நீங்கள் அப்படிச் செய்து கொண்டிருங்கள். நானும் **ஆண்டவரிடத்தில் இவ்வுலகத்திலுள்ள எல்லா ஜீவர்களும் நன்மையடையப் பிரார்த்தித்தும் ஆண்டவரிடத்தில் கேட்டுக் கொண்டும் வருகின்றேன்.** ஆதலால் நீங்கள் அப்படிச் செய்து கொண்டிருங்கள். இவ்வாறு வள்ளலார் பேசிக் கொண்டிருந்தபோது மக்கள் கூட்டத்தின் ஒரு பகுதியில் சில சைவர்களும் புலவர்களும் கூச்சல் எழுப்பிக் குழப்பத்தை உண்டாக்கினார்கள். சைவத்தின் மீது அவர்கள் கொண்டிருந்த பற்றுதல்தான் காரணம் என்பதால் சைவத்தின் மீது தான் கொண்ட பற்றுதல் அளவிட முடியாதது என்றும், தாம் பாடிய பாடல்களே அதற்குச் சாட்சி என்றும் கூறி எல்லாச் சமயங்களும் ஒரே செம்பொருளைத் தான் சுட்டுகின்றது என்ற விளக்கமின்றி ஒரு குறிப்பிட்ட சமயத்தின் மீது மட்டும் பற்றுதல் வைத்துக் கொண்டிருப்பது அற்ப அறிவே ஆகும் என்று கூறி சமயப் பற்று கூடாதென்று போதித்தார்.

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

## பேருபதேசம்

ஸ்ரீமுக வருஷம், ஐப்பசி மாதம், 7ம் தேதி புதவாரம், பகல் எட்டு மணிக்கு, மேட்டுக்குப்பம் என்னும் சித்திவளாகத் திருமாளிகையில் முதல் முதல் கொடி கட்டினவுடனே நடந்த விவகாரத்தின் குறிப்பு.

இங்குள்ள நீங்கள் எல்லவரும் இதுவரைக்கும் இருந்தது போல் இனியும் வீண்காலம் கழித்துக் கொண்டிராதீர்கள். இதுமுதல் சாலைக்கு ஆண்டவர் போகிற--பத்துத் தினமாகிய கொஞ்சக் காலம்--வரையில், நீங்கள் எல்லவரும் நல்ல விசாரணையில் இருந்து கொண்டிருங்கள். அந்த விசாரணை எதுவென்றால் நம் நம்முடைய நிலை எப்படிப்பட்டது? நமக்கு மேல் நம்மை அதிஷ்டிக்கின்ற தெய்வத்தினுடைய நிலை எப்படிப்பட்டது? என்று விசாரிக்க வேண்டியது. அதற்குத் தக்கபடி, நீங்கள் ஒருமித்தாவது, அல்லது தனித்தனியாகவாவது, உங்களறிவிற்கும் ஒழுக்கத்துக்கும் ஒத்தவர்களுடன் கூடியாவது, அல்லது--வேலாயுத முதலியாரைக் கேட்டால் மனுஷ்யதரத்தில் போதுமான வரையில் சொல்லுவார்--அவரிடம் அப்படிக் கேட்டாவது நல்ல விசாரணையிலிருங்கள். அல்லது, தனியாகவும் விசாரிக்கலாம். இவ்விசாரணை முகத்திலிருந்தால், நமது ஆன்ம அறிவை விளக்கமின்றி மூடிக் கொண்டிருக்கின்ற அனந்தத் திரைகளில் அழுத்தமாயிருக்கின்ற முதல் திரையாகிய பச்சைத் திரை முதலில் நீங்கி விடும். அது நீங்கினால், மற்றத் திரைகள் அதிக விரைவில் நீங்கிப் போய் விடும், அந்தப் பசுமை வர்ணம் எப்படிப்பட்டதென்றால், கருமைக்கு முதல் வர்ணமாக பசுமையாக இருக்கின்றது. இப்படிப்பட்ட அழுத்தமான திரை நீங்க வேண்டுமென ஸ்தோத்திரித்தும், தெய்வத்தை நினைத்தும், நமது குறையை ஊன்றியும்--இவ்வண்ணமாக, இருக்கின்றபோதும் படுக்கின்ற போதும் இடைவிடாது இவ்விசாரத்தோடு ஆண்டவர் நமக்குண்மை தெரிவிக்க வேண்டு மென்கின்ற முயற்சியுடனிருந்தால், தெரிய வேண்டியதைத் தெரிந்து கொள்ளலாம்.

அவ்விசாரம் பரம் அபரம் என்று இரண்டு வகையா யிருக்கின்றது இவற்றிற் பரம் பரலோக விசாரம், அபரம் இகலோக விசாரம். இவ்விரண்டில் இகலோக விசாரம் விசாரமல்ல. சாதாரணமாக ஒருவன் விசாரம் செய்து கொண்டிருக் கின்றானேயென்றால், அவ்விசாரம் விசாரமாகாது, உண்மை விசாரமுமல்ல. ஏனெனில் விசார மென்கின்றதற்குப் பொருள் : வி - சாரம் என்பதில் வி சாதாரண உலக விசாரத்தை மறுக்க வந்தது ; அது மேலும் பரலோக விசாரத்தையே குறிக்கும் பொருட்டு வந்தது. ஜலத்திலிருக்கின்ற பாசியை நீக்குவதுபோல், நமது ஆன்மாவைத் தெரியவொட்டாமல் மூடியிருக்கின்ற பச்சைத் திரையாகிய ராகாதிகளை விசார அதியுஷ்ணத்தா லல்லது, மற்ற உஷ்ணங்களால் நீக்க முடியாது. அந்த உஷ்ணம் யோகியினுடைய அனுபவத்தில் தெரியும். அதை மனுஷ்ய தரத்தில் உண்டு பண்ணுவதற்குத் தெரியாது. அந்த விசாரத்தைவிட ஆண்டவரை ஸ்தோத்திரம் செய்கின்றதிலும் தெய்வத்தை நினைக்கின்றதிலும் அதிக உஷ்ணம் உண்டாகும். யோகிகள் வனம் மலை முழை முதலியவற்றிற்குப்போய், நூறு ஆயிரம் முதலிய வருஷ காலம் தவஞ் செய்து

இவ் உஷ்ணத்தை உண்டு பண்ணிக் கொள்ளுகிறார்கள். இப்படித் தவம் செய்து உஷ்ணத்தை உண்டு பண்ணிக் கொள்ளுகிறதைப் பார்க்கிலும், தெய்வத்தை ஸ்தோத்திரம் செய்கின்றதிலும் நினைக்கின்றதிலும்--இதை விடக்--கோடிப்பங்கு, பத்து கோடிப் பங்கு அதிகமாக உஷ்ணம் உண்டு பண்ணிக் கொள்ளலாம். எவ்வாறெனில் : ஒரு ஜாம நேரம், மனத்தில் இக விசாரமின்றிப் பரவிசாரிப்புடன் ஆன்ம நெகிழ்ச்சியோடு தெய்வத்தைச் சிந்தித்துக் கொண்டாவது அல்லது ஸ்தோத்திரம் செய்து கொண்டாவ திருந்தால், நாம் பெற வேண்டியதைப் பெற்றுக் கொள்ளலாம், ஆதலால், இவ்வுலகத்தில் வி-சார மென்கின்ற உண்மை தெரியாது, விசாரமென்று வழங்கி, அதைத் துக்கமென்றே சொல்லுவார்கள். நாம் அப்படி அர்த்தம் பண்ணக் கூடாது. அவர்கள் பண்ணுகின்றது - துக்கமே விசாரமென்கின்றது-அது தப்பு ; அவ்வர்த்தமு மன்று. சார மென்கின்றது துக்கம், விசாரமென்கின்றது துக்க நிவர்த்தி. வி உபசர்க்கம். சாரமென்கின்ற துக்கத்தை நிவர்த்தித்தது வி. ஆதலால், விசாரமென்கின்றது முன் சொன்னபடி பரலோக விசாரத்தையே குறிக்கின்றது. ஆதலால் இடைவிடாது நாம் விசார வசத்தரா யிருக்க வேண்டியது. மேலும் வி - சாரமென்பது வி விபத்து ; சாரம் நீக்குதல், நடத்தல், ஆதலால் இடைவிடாது நன் முயற்சியின் கண் பயிலுதல் வேண்டும்.

மேலும், சிலர் " இது ஆண்டவர் வருகின்ற தருணமாக இருக்கின்றதே! இத்தருணத்தில் முயற்சி செய்வானேன்? ஆண்டவர் வந்தவுடனே பெற வேண்டியதை நாம் பெற்றுக் கொள்ளப்படாதோ?" என்று வினவலாம். ஆம், இஃது - தாம் வினவியது நலந்தான். ஆண்டவர் வரப்போகின்றது சத்தியந்தான். நம்மவர்களின் திரை நீங்கப் போகின்றதும் சத்தியந்தான். நீங்களெல்லவரும் பெற வேண்டியதைப் பெற்றுக் கொள்ளுகின்றதுஞ் சத்தியந்தான். ஆனால், முன் சொன்ன ராக சம்பந்தமான பச்சைத்திரை இரண்டு கூறாக இருக்கின்றது. யாவெனில் : அசுத்த மாயாதிரை சுத்த மாயாதிரையென்னும் இரண்டுமாம். இவை கீழ்ப்பாகத்திலொரு கூறும் மேற்பாகத்திலொரு கூறுமாக இருக்கும். கீழ்ப்பாகத்திலுள்ளது அசுத்த மாயாதிரை. மேற் பாகத்தில் சுத்த மாயாதிரை இருக்கும். இவற்றில் அசுத்த மாயாதிரை இகலோகபோக லக்ஷிய முடையது. சுத்த மாயாதிரை பரலோக சாத்தியத்தையுடையது. இவற்றில் ஆண்டவர் வந்து அனுக்கிரகஞ் செய்கின்றபோது, முயற்சியில்லாத சாதாரண மனுஷ்யர்களுடைய கீழ்ப்பாகத்திலிருக்கிற அசுத்தமாயை யென்னும் பச்சைத் திரையை மாத்திரம் நீக்குவார். ஆதலால், அக்காலத்தில் நாம் அத்திரை நீங்கியவுடன் கூடிய வரையில் சுத்தமாய்ப் புனிதர்களாக இருக்கலாமேயல்லது, பெற வேண்டியதைப் பெற்றுக் கொள்ளுகிறதற்குக் கூடாது. மேலும், பஞ்சகிருத்திய விபவங்களும் இதர சித்தி முதலியவையும் ஆன்மானுபவத்தையும் செய்யவும் பெறவும் கூடாது. பின்னும் நன்முயற்சி செய்தே மேலேற வேண்டும்.

மேலும், இத்தருணம் இங்கு உண்டாகும் கூச்சல் முதலியவையும் அடுத்தவர்களுக்குப் பக்குவம் வருவிக்கவும் பாவிகளை விலக்கவும் உண்டாயின. ஆதலால் நாம் எல்லவரும் இத்தருணம் இப்போதே விசேஷ நன்முயற்சியுடனே இருந்தால், ஆண்டவர் வருகிறபோது, நம் கீழ்ப் பாகத்திலுள்ள அசுத்த மாயாதிரையோடு கூடி மேற்பாகத்திலிருக்கிற சுத்த மாயையினுடைய பச்சைத்திரையும் நீங்கிப் போய்விடும். கருமையிற் பச்சை வண்ண முடையது அசுத்த மாயாதிரை. பொன்மையிற் பச்சை வண்ண முடையது சுத்த மாயாதிரை.

கருமையிற் பச்சை வண்ணமுடைய அசுத்த மாயாதிரை நீங்கின பிறகு, மற்ற எட்டுத் திரைகளும் அதிக விரைவில் நீங்கிப் போய்விடும். (இத்திரைகளின் விவரத்தைத் திருவருட்பெருஞ்ஜோதி அகவலில் கண்டுணர்க.) மேலும், இது நீங்கினவுடனே ஒருவன் பஞ்சகிருத்திய முதலானவையுஞ் செய்வான். ஆதலால், ஒவ்வொருவரும் முயற்சியுடனே இருந்தால், அதற்குத் தக்க லாபத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதற்கு மேற்பட, நாம் நாமும் முன் பார்த்தும் கேட்டும் லக்ஷியம் வைத்துக் கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் லக்ஷியம் வைக்க வேண்டாம். ஏனென்றால், அவைகளில் ஒன்றிலாவது குழூஉக்குறி யன்றித் தெய்வத்தை இன்னபடி என்றும், தெய்வத்தினுடைய உண்மை இன்னதென்றும், கொஞ்ச மேலும் புறங்கவியச் சொல்லாமல், மண்ணைப் போட்டு மறைத்து விட்டார்கள். அணுமாத்திரமேனுந் தெரிவிக்காமல், பிண்ட லக்ஷணத்தை அண்டத்தில் காட்டினார்கள். யாதெனில் : கைலாசபதி என்றும் வைகுண்டபதி என்றும் சத்தியலோகாதிபதியென்றும் பெயரிட்டு, இடம், வாகனம், ஆயுதம், வடிவம், ரூபம், முதலியவையும் மனுஷ்யனுக்கு அமைப்பதுபோல் அமைத்து, உண்மையாக இருப்பதாகச் சொல்லியிருக்கின் றார்கள். "தெய்வத்துக்குக் கை கால் முதலியன இருக்குமா?" என்று கேட்பவர்க்குப் பதில் சொல்லத் தெரியாது விழிக்கின்றார்கள். இஃது உண்மையாக இருப்பதாகவே முன்னும் பின்னும் உள்ள பெரியவர்களென்று பெயரிட்டுக் கொண்டிருந்தவர்களும் உண்மையை அறியாது, அப்படியே கண்ணை மூடிக் கொண்டு உளறியிருக்கிறார்கள். ஆனால், ஆதியிலே இதை மறைத்தவன் ஓர் வல்லவன். அவன் மறைத்ததை இதுவரைக்கும் ஒருவரும் கண்டபாடில்லை. அவன் பூட்டிய அந்தப் பூட்டை ஒருவரும் திறக்கவில்லை. இதுவரைக்கும் அப்படிப்பட்டவன் பூட்டிய பூட்டை உடைக்க ஒருவரும் வரவில்லை. அவைகளில் ஏகதேச கர்ம சித்திகளைக் கற்பனைகளாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதற்காக ஒவ்வொரு சித்திக்குப் பத்து வருஷம் எட்டு வருஷம் பிரயாசை எடுத்துக் கொண்டால், அற்ப சித்திகளையடையலாம். அதற்காக அவற்றில் லக்ஷியம் வைத்தால் ஆண்டவரிடத்தில் வைத்துக் கொண்டிருக்கிற லக்ஷியம் போய்விடும். ஆண்டவரிடத்தில் வைத்த லக்ஷியம் போய்விட்டால், நீங்கள் அடையப்போகிற பெரிய பிரயோஜனம் போய்விடும்., அல்லது, அதில் முயற்சி செய்து, அவ்வளவு காலம் உழைத்து, அந்த அற்பப் பிரயோஜனத்தைத் தெரிந்து கொண்டு, அதனால் ஒரு லாபத்தை ஏகதேசம் அடைந்தால், முக்கிய லாபம் போய்விடும். ஆகையால், அவைகளில் லக்ஷியம் வைக்காமல், ஆண்டவரிடத் திலேயே லக்ஷியம் வைக்க வேண்டியது. முன் சொன்ன ஏகதேசசித்தி கற்பனையென்கின்றது வாசகப்பெரு விண்ணப்பத்தாலும் இயல் வேதாகமங்கள் புராணங்கள் என்ற அருள்விளக்கமாலைப் பாசுரத்தாலுமுணர்க,

**இயல்வேதா கமங்கள்புரா ணங்கள் இதிகாசம்**

**இவைமுதலாஇந்திரசாலங்கடையாஉரைப்பார்**

**மயல் ஒரு நூல் மாத்திரந்தான் சாலம் என அறிந்தார்**

**மகனே நீ நூலனைத்தும் சாலம் என அறிக**

**செயல்அனைத்தும் அருளொளியால் நாண்க என எனக்கே**

**திருவுளம்பற்றிய ஞான தேசிக மாமணியே**

**அயல் அறியாஅறிவுடையார் எல்லாரும் போற்ற**

**ஆடுகின்றஅரசேஎன் அலங்கல் அணிந்தருளே**

-- திரு அருட்பா 4176

மேலும் அதிற்கண்ட குறிப்பையுந் தெரிந்து கொள்ளுங்கள்.

இதுபோல் வியாகரணம், தொல்காப்பியம், பாணிநீயம் முதலியவைகளில் சொல்லியிருக்கின்ற இலக்கணங்கள் முழுவதும் குற்றமே. அவைகளில் குற்றமே சொல்லியிருக்கின்றார்கள். எவ்வாறெனில் தொண்ணூறு தொள்ளாயிரம் என்கிற கணிதத்தின் உண்மை நான் சொன்ன பிறகு தெரிந்து கொண் டீ ர்களல்லவா? இப்படியே ஒன்று, இரண்டு, முதல் நூறு முதலான இலக்கங்களுக்கும் உகர இறுதி வருவானேன்? ஒருவாறு சித்தர்கள் காரணப் பெயராக இட்டிருக்கிறார்கள். தொல்-நூறு தொண்ணூறென்றும், தொல்-ஆயிரம் தொள்ளாயிரமென்றும் வழங்கு கின்றன. தொல் என்பது ஒன்று குறையத்தொக்கியது. தொன்மை தொல் லெனப் பிரிந்தது. வழக்கத்தில் தொள்ளாயிரம் தொண்ணூறு என மருவியது. இதற்குப் பத்திடத்திற்கு ஓரிடம் குறைந்த முன் ஆயிரமென்றும், ஒன்று குறைந்த பத்தென்றும் ஒருவாறு கொள்க. இப்படி நான் சொன்னதுபோல் சொன்னால், சிறு குழந்தைகள் கூட அறிந்து கொள்ளும்.

இதுபோல், சைவம் வைணவம் முதலிய சமயங்களிலும் வேதாந்தம் சித்தாந்தம் முதலிய மதங்களிலும் லக்ஷியம் வைக்க வேண்டாம். அவற்றில் தெய்வத்தைப் பற்றிக் குழுஉக் குறியாகக் குறித்திருக்கிறதே யன்றிப் புறங்கவியச் சொல்லவில்லை. அவ்வாறு பயிலுவோமேயானால் நமக்குக் காலமில்லை. ஆதலால் அவற்றில் லக்ஷியம் வைக்க வேண்டாம். ஏனெனில், அவைகளிலும்--அவ்வச்சமய மதங்களிலும்--அற்பப் பிரயோஜனம் பெற்றுக் கொள்ளக்கூடுமேயல்லது, ஒப்பற்ற பெரிய வாழ்வாகிய இயற்கை யுண்மை என்னும் ஆன்மானுபவத்தைப் பெற்றுக் கொள்கின்றதற்கு முடியாது. ஏனெனில் நமக்குக் காலமில்லை. மேலும், இவைகளுக்கெல்லாம் சாக்ஷி நானேயிருக்கின்றேன். நான் முதலில் சைவ சமயத்தில் லக்ஷியம் வைத்துக் கொண்டிருந்தது இவ்வளவென்று அளவு சொல்ல முடியாது. அது பட்டணத்துச் சுவாமிகளுக்கும் வேலாயுத முதலியாருக்கும் இன்னும் சிலருக்கும் தெரியும். அந்த லக்ஷியம் இப்போது எப்படிப் போய் விட்டது. பார்த்தீர்களா! அப்படி லக்ஷியம் வைத்ததற்குச் சாக்ஷி வேறே வேண்டியதில்லை. நான் சொல்லியிருக்கிற--திருவருட்பாவில் அடங்கியிருக்கிற--ஸ்தோத்திரங்களே போதும். அந்த ஸ்தோத்திரங்களையும் மற்றவர்களுடைய ஸ்தோத்திரங்களையும் சபைக்குக் கொண்டு வந்தால், அவைகளே சாக்ஷி சொல்லிவிடும்.. ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு

அப்போதிருந்த தென்றால், அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது.

இப்போது ஆண்டவர் என்னை ஏறாத நிலைமே லேற்றியிருக்கின்றார். இப்போது எல்லாவற்றையும் விட்டு விட்டதினால் வந்த லாபம் இது. ஆதலால் நீங்களும் விட்டு விட் டீர்களானால், என்னைப் போல் பெரிய லாபத்தைப் பெறுவீர்கள். இதுவரைக்கும் விடாமல் வைத்துக் கொண்டிருந்தவர்கள் ஏதாவது லாபத்தைப் பெற்றுக் கொண்டார்களா? பெற்றுக் கொள்ளவில்லை. நான் அப்படி அந்தச் சமயத்தில் வைத்திருந்த லக்ஷியமே என்னை இந்த நிலையில் தூக்கி விட்டதென்றாலோ, அந்த லக்ஷியம் தூக்கிவிடவில்லை. என்னை இந்த இடத்துக்குத் தூக்கிவிட்டது யாதெனில், அக்காலத்திலேயே எனக்குத் தெரிவிக்க வேண்டியதைத் தெரிவித்தாரென்று வாசகப் பெரு விண்ணப்பத் தினும், "எத்தேவரையும் நின் சாயையாய்ப் பார்த்ததேயன்றித் தலைவ வேறெண்ணியதுண்டோ

**மாயையாற் கலங்கி வருந்திய போதும்**
**வள்ளல் உன் தன்னையே மதித்துன்**
**சாயையாப் பிறரைப் பார்த்ததே அல்லால்**
**தலைவவே றெண்ணிய துண்டோ**
**தூயபொற் பாதம் அறியா நான் அறியேன்**
**துயர் இனிச் சிறிதும் இங் காற்றேன்ீ**
**நாயகா எனது மயக்கெலாம் தவிர்த்தே**
**நன்றருள் புரிவதுன் கடனே.**

திரு அருட்பா 3635

என, "தேடியதுண்டு நினது ருவுண்மை" என்னும் தொடக்கமுடைய பதிகத்திலும் விண்ணப்பித்திருக்கின்றேன். மேலும் அவர் தெரிவித்த உண்மைப் பெருநெறி ஒழுக்கம் யாதெனில். "கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக"

**கருணையும் சிவமே பொருள் எனக் காணும்**
**காட்சியும் பெறுகமற் றெல்லாம்**
**மருள்நெறி என நீ எனக்கறி வித்த**
**வண்ணமே பெற்றிருக் கின்றேன்**
**இருள்நெறி மாயை வினைகளால் கலக்கம்**
**எய்திய தென் செய்வேன் எந்தாய்**
**தெருள்நிலை இன்றிக் கலங்கினேன் எனினும்**
**சிறுநெறி பிடித்ததொன்றிலையே**

திருஅருட்பா 3503

என்றது தான். என்னை யேறாநிலை மிசையேற்றி விட்டது யாதெனில் தயவு. தயவு என்னுங் கருணைதான் என்னைத் தூக்கி விட்டது.

அந்தத் தயவுக்கு ஒருமை வர வேண்டும். அந்த ஒருமை இருந்தால் தான் தயவு வரும். தயவு வந்தால் தான் பெரிய நிலை மேல் ஏறலாம். இப்போது என்னுடைய அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடந்திருக்கிறது. அது அந்த ஒருமையினாலேதான் வந்தது. நீங்களும் என்னைப்போல் ஒருமையுட னிருங்கள். என்னிடத்தில் ஒருவன் வசப்படாத முரட்டுத்தனமாய் எப்படி யிருந்தாலும், அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லுவேன், மிரட்டிச் சொல்லுவேன், தெண்டன் விழுந்து சொல்லுவேன், அல்லது பொருளைக் கொடுத்து வசப்படுத்துவேன், அல்லது ஆண்டவரை நினைத்துப் பிரார்த்தனை செய்வேன். இப்படி எந்த விதத்திலேயாவது நல்வழிக்கு வரச்செய்து விடுவேன். நீங்கள் எல்லவரும் இப்படியே செய்தல் வேண்டும். இராத்திரிகூட "நான் இல்லாமல் இந்த ஜனங்கள் க்ஷண நேரம் இருக்க மாட்டார்களே என்று... "ஆண்டவனிடத்தில் விண்ணப்பித்துக் கொண்டேன். அது இங்கே இருக்கிற ஜனங்கள் மட்டில் மாத்திர மல்ல, உலகத்திலிருக்கிற எல்லா ஜனங்களையும் குறித்தே விண்ப்பித்துக் கொண்டேன். ஏன் அப்படி ஆண்டவரிடத்தில் விண்ணப்பித்துக் கொண்டேன் என்றால், எல்லவரும் சகோதரர்களாதலாலும், இயற்கையுண்மை யேகதேசங்க ளாதலாலும், நான் அங்ஙனம் ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை வைத்துக் கொண்டிருக்கிறேன்.

இப்போது நீங்கள்--இதுவரைக்கும் ஒழுக்கத்துக்கு வராமல் எவ்வளவு தாழ்ந்த மனுஷ்யர்களாயிருந்தாலும்--சாலைக்குப் போகக் கொஞ்ச தினமிருக் கின்றது--அதற்குள்ளாக நீங்கள் நீங்களும் நல்லொழுக்கத்திற்கு வருவதோடு கூட, மற்றவர்களையும் நமது ஒழுக்கத்திற்கு வரும்படி எவ்விதத் தந்திரமாவது செய்து நம்மவர்களாக்கிக் கொள்ள வேண்டியது. நீங்கள் கொஞ்ச தினத்துக்கு அப்படிச் செய்து கொண்டிருங்கள். **நானும் ஆண்டவரிடத்தில் இவ்வுலக த்திலுள்ள எல்லா ஜீவர்களும் நன்மையடையப் பிரார்த்தித் தும், ஆண்டவரிடத்தில் கேட்டுக் கொண்டும் வருகின்றேன்.** ஆதலால், நீங்கள் அப்படிச் செய்து கொண்டிருங்கள்.

சமயந் தவிர மதங்களில் உள்ள வேதாந்தி சித்தாந்தி யென்று பெயரிட்டுக் கொண்ட பெரியவர்களும் உண்மையறியாது, சமயவாதிகளைப் போலவே ஒன்று கிடக்க ஒன்றை உளறுகிறார்கள். ஆதலால் நீங்கள் அ∴து ஒன்றையும் நம்ப வேண்டாம் எவைகளிலும் தெய்வத்தைப் புறமுகமாகப் புலப்படச் சொல்லவில்லை. "தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாததினாலேயல்லவா நம்மைச் சுற்றுகிறார்கள்!" என்று நான் உள்ளும் புறமும் பரிதாபப்பட்டுக் கொண்டே இருந்தேன், இருக்கின்றேன், இருப்பேன். தெய்வத்தை ஏன் தெரிந்து கொள்ளவில்லை யென்றால் ஒரு பதார்த்தத்தை அனுபவித்தா லல்லது அந்தப் பதார்த் தத்தினுடைய ருசி தெரியாது. ருசி தெரியாத பதார்த்தத்தின் மேல் இச்சை போகாது. அதுபோல், தெய்வத்தை யுள்ளபடி அனுபவித்தா லல்லது, தெய்வத்தினிடத்தில் பிரியம் வராது. ஆதலால், தெய்வத்தைத் தெரிந்து விசாரஞ் செய்து கொண்டிருங்கள்.

அந்த விசாரம் செய்வது எப்படியென்றால் அண்டத்தில் சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் - இவைகள் எப்படிப்பட்டன? இவைகளினுடைய சொரூப ரூப சுபாவம் என்ன? இவை முதலான அண்ட விசாரமும், பிண்டத்தில் நாம் யார்? இத் தேகத்தின்கண் புருவம் கைம்மூலம் - இவைகளிலும் இவை போன்ற மற்ற இடங்களிலும் உரோமம் உண்டாவானேன்? நெற்றி முதலான இடங்களில் அது தோன்றாதிருப்ப தென்ன? கால் கைகளிலுள்ள விரல்களில் நகம் முளைத்தலும் அந்நகம் வளர்தலும்--இவைபோன்ற மற்றத் தத்துவங்களினது சொரூப ரூப சுபாவங்களும் என்னவென்னும் பிண்ட விசாரமுஞ் செய்து கொண்டிருங்கள். இப்படி இடைவிடாது விசாரஞ் செய்து கொண்டிருந்தால், இவ்வுலகத்தின் கணுள்ள ஜனங்கள் அதைக் குறித்து ஏளனமாகச் சொல்லுவார்கள். அப்படிச் சொல்லுவது அவர்களுக்குச் சுபாவம், ஏனெனில், அவர்களுக்கு உண்மை தெரியாது. ஆதலால் நீங்கள் அதை லக்ஷியம் செய்யக் கூடாது.

இப்படியே "காதில் இரண்டு பெரிய பொத்தல் செய்து வர விடுத்தவர்--ஆணுக்குக் கடுக்கனிடுதலும் பெண்ணுக்கு மூக்குத்தி முதலியவை போடுதலும் தமக்குச் சம்மதமானால்--காதிலும் மூக்கிலும் அதற்கு வேண்டிய பொத்தல்களிட்டு வரவிட்டிருக்க மாட்டாரா" என்று விசாரித்துத் தெரிந்து கொள்ளுகிற பக்ஷத்தில், காதில் கடுக்கனிடவும் மூக்கு முதலியவற்றில் நகையிடவும் சம்மதம் வருமா? இப்படி விசாரித்துப் பிரபஞ்ச போகத்தின்கண் அலக்ஷியம் தோன்றினால், நிராசை உண்டாம், ஆதலால், சரியை முதலிய சாதகம் நான்கில், நான்காவது ஞானத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கின்ற நான்கில், மூன்றாவது படியாகிய ஞானத்தில் யோகம் செய்கின்ற பலனாகிய நிராசையென்னும்படி உண்டாகின்றது. ஆகையினாலே, இந்த விசாரத்திலிருந்து கொண்டிருங்கள்.

இவ் விசாரஞ் செய்து கொண்டிருந்தால், ஆண்டவர் வந்தவுடனே, கண்டமாக உங்களுக்குத் தெரிவிக்க வேண்டியதைத் தெரிவிப்பார். மறுபடியும் உங்களுக்கு உரிமை வந்தவுடனே அகண்டமாகத் தெரிவிப்பார். ஆதலால் நீங்கள் இந்த முயற்சியிலிருங்கள். இரண்டரை வருஷமாக நான் சொல்லிக் கொண்டு வந்தேன். இனிச்சொல்பவர்கள் சில நாள் தடைப்பட்டிருப்பார்கள். இனி நீங்கள் இது வரைக்கும் இருந்தது போல் இராதீர்கள். இது கடைசி வார்த்தை, இது முதல்-கொஞ்ச காலம் - சாலைக்குப் போகின்ற வரைக்கும் ஜாக்கிரதையாக மேற்சொன்ன பிரகாரம் விசாரஞ் செய்து கொண்டிருங்கள்.

மேலும், சமய மதங்களில் தெய்வத்தினது உண்மையைக் குழூஉக்குறியால் குறித்து, அக்குறிப்பையும் வெளிப்படையாகக் காட்டாது சிவாயநம என்றும், நமசிவாய என்றும், இது போன்ற அனந்த வர்ணங்களை சேர்த்து, ஒன்று இரண்டு மூன்று ஐந்து ஆறு எட்டு பத்து பதின்மூன்று பதினைந்து பதினாறு இருபத்து நான்கு முதலிய சங்கையில் மந்திரங்களாய் அமைத்து வழங்கி வருவிக்கவிட்டு நடந்து வருகின்றது. அவ்வவ் மந்திரங்களின் அர்த்தம் பலவாக விரியும் ஆதலால்... நாம் அடைய வேண்டுவது முடிவான ஆன்ம லாப மாகிய சிவானுபவமே யன்றி வேறில்லை. இங்குள்ள எல்லார்க்கும் சுவர்க்க நரச விசாரமில்லை. சுவர்க்க நரக விசாரமுள்ளவர்கள் தங்கள் கருத்தின்படி பலவகைச் சாதனங்களைச் செய்து அற்ப பிரயோஜனத்தைப் பெற்று, முடிவில்

தடைப்பட்டுத் திருவருட்டுணையால் கருணை நன் முயற்சி யெடுத்துக் கொண்டு, பின் முடிவான சித்தி இன்பத்தைப் பெறுவார்கள். அ∴து அருமை.

இத் தருணம் ஆண்டவர் எல்லாவற்றையும் நீக்கி எல்லோரும் மேலான இன்பத்தை அடையும் பொருட்டு முடிவான இன்பானுபவத்திற்குச் சாதக சகாயமான திருவருள் மகாவாக்கியத் திருமந்திரத்தை--தமது உண்மையை வெளிப்படக் காட்டும் மகாமந்திர வாக்கியத்தை--எனக்கு வெளியிட்ட அவ்வண்ணம், எனது மெய்யறிவின்கண் அனுபவித்தெழுந்த--உண்மையறி வனுபவானந்த இன்பத்தை நீங்கள் எல்லவரும் என்போல் ஐயம் திரிபு மயக்கம் இன்றி அடைய என்னுள்ளே எழுந்து பொங்கிய ஆன்ம நேய உரிமைப்பாட்டுரிமையைப் பற்றிக் குறிப்பித்தேன், குறிப்பிடுகின்றேன், குறிப்பிப்பேன். நமது ஆண்டவர் கட்டளையிட்டது யாதெனில் : நமக்கு முன் சாதனம் கருணையான தினாலே, ஆண்டவர் முதற் சாதனமாக

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி

என்னும் திருமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக் கொண்டார். தயவு, கருணை, அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும். ஆதலால் பெரிய தயவுடைய பேரறிவேயாம். இ∴து வாச்சியார்த்தம். இவ்வண்ணம் சாதனம் முதிர்ந்தால், முடிவான இன்பானுபவம் பெறுவதற்குத் தடையில்லை. "சந்ததமும் வேத மொழி யாதொன்று பற்றின் அதுதான் வந்து முற்றும்" என்னும் பிரமாணத்தால் உணர்க.

மேலும், இதுகாறும் தெய்வத்தின் உண்மையைத் தெரியவொட்டாது, அசுத்த மாயா காரிகளாகிய சித்தர்கள் மறைத்து விட்டார்கள். சுத்தமாயா காரியாகிய தெரிந்த பெரியோரும் இல்லை. சன்மார்க்கமும் இல்லை. சன்மார்க்கம் இருந்தால், அனுபவித்தறியாத அனுபவமும் கேட்டறியாத கேள்வியும் நாம் கேட்டிருப்போம். மேலும் இறந்தவர்கள் மீளவும் எழுந்து வந்திருப்பார்கள். ஆதலால், கேட்டறியாத கேள்விகளைக் கேட்கும்படி ஆண்டவர் செய்தது இத்தருணமே. ஆதலால் இத்தருணம் இக்காலமே சன்மார்க்கக் காலம்.

இதற்குச் சாக்ஷியாக இப்போதுதான் சன்மார்க்கக்கொடி கட்டிக் கொண்டது. ஆக்கொடி உண்மையில் யாதெனில் : நமது நாபி முதல் புருவமத்தி ஈறாக ஒரு நாடி யிருக்கின்றது, அந்த நாடி நுனியில் புருவமத்தியின் உட்புறத்தில் ஓர் சவ்வு தொங்குகின்றது, அதன் அடிப்புறம் வெள்ளை வர்ணம், மேற்புறம் மஞ்சள் வர்ணம், அச் சவ்வின் கீழ் ஓர் நரம்பு ஏறவும் இறங்கவும் இருக்கின்றது, இக்கொடி நம் அனுபவத்தின்கண் விளங்கும். இவ் அடையாளக் குறிப்பாகவே இன்றைய தினம் வெளி முகத்தில் அடையாள வர்ணமான கொடி கட்டியது. இனி எல்லவர்க்கும் நல்ல அனுபவம் அறிவின்கண் தோன்றும்.

உண்மை சொல்ல வந்தனனே என்று உண்மை சொல்லப் புகுந்தாலும் தெரிந்து கொள்வாரில்லை. கொடி கட்டிக் கொண்டபடியால், இனி எல்லோரும் உண்மையை அறிந்து கொள்வார்கள். முன் உள்ளவர்கள் உண்மையைத் தெரியவொட்டாது மண்ணைப் போட்டு மறைத்து விட்டார்கள். இத்தருணம்

ஆண்டவரும் தெரிவித்தார், தெரிவிக்கின்றார், தெரிவிப்பார். நீங்கள் எல்லவரும் உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள். இப்போது நான் சொல்லி வந்த பிரகாரம் ஜாக்கிரதையுடன் உண்மையறிவாய் விசாரம் செய்து கொண்டிருங்கள். அவசியம் இதற்குக் காரணமான தயவிருக்க வேண்டியது. அந்தத் தயவு வருவதற்கு ஏதுவான உரிமையும் கூட இருக்க வேண்டும். இப்படி இருந்து கொண்டிருந்தால் ஆண்டவர் வந்தவுடனே எல்லா நன்மையையும் பெற்றுக் கொள்வீர்கள். இது சத்தியம், சத்தியம், சத்தியம். இஃது ஆண்டவர் கட்டளை.

எல்லோர்க்கும் தாய் தந்தை அண்ணன் தம்பி முதலான ஆப்தர்கள் செய்யப்பட்ட உதவி எவ்வளவோ, அதற்குக் கோடி கோடிப் பங்கு அதிகமாக உதவி கொடுக்கும்படியான இடம் இந்த இடம். இது ஆண்டவர் கட்டளை.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருச்சிற்றம்பலம்

## அற்புதமா இல்லை

பேருற்ற உலகிலுறு என்ற நடராசபதி மாலையைச் சற்று கூர்ந்து நோக்கினால் ஓர் உண்மை புரியும். சுத்த சன்மார்க்க நெறி காட்டி மெய்ப் பொருளை உணர்த்தி எல்லாம் ஏருற்ற சுக நிலை அடைந்திடப் புரிதி நீ என்று தான் ஆண்டவன் வள்ளலாருக்குக் கட்டளையிட்டான். சுத்த சன்மார்க்க நெறி காட்டுதலும், மெய்ப் பொருளே உணர்த்துதலும் மட்டுமே வள்ளலார் செய்ய வேண்டிய பணி.. அதே போல சுத்த சன்மார்க்க நெறி என்ன என்பதையும் இறைவனின் மெய்ப் பொருளையும் திருஅருட்பாப் பாடல்கள் மூலமும் உரைநடையாகவும் பிரசங்கங்கள் பல செய்ததின் மூலமும் மக்களுக்கு நன்கு காட்டி விட்டார்கள். மக்கள் யாராயினும் முயற்சி செய்தே மேலேற வேண்டும் என்றும் நன்கு விளக்கி விட்டார். ஆண்டவரது கட்டளைப் படித்தான் வள்ளலார் எதுவும் செய்வார்.

இறந்தாரை எழுப்பும் வள்ளலாரின் ஆற்றல் மக்களிடையே வெகு வேகமாகப் பரவவே அந்தக் கிராமத்து மக்கள் மட்டுமின்றி மற்ற கிராமத்து மக்களும் இறந்து போன சுற்றத்தாரின் பிணங்களை மேட்டுக்குப்பத்திற்கு கொண்டு வந்து எழுப்பித் தரும்படி வேண்டி வள்ளலாரைத் தொந்தரவு செய்யத் தொடங்கினர். மரணமிலாப் பெருவாழ்வு என்பது வரப் பிரசாதம் அன்று. அவரவர் முயற்சி செய்தே பெற வேண்டியது என்பதைப் புரிந்து கொள்ளாது எந்த ஒழுக்கமும் இல்லாதவர்களையும் உறவினர் என்ற ஒரே காரணத்திற்காக எழுப்பித் தருமாறு பிணங்களை எடுத்து வந்து செய்த தொந்தரவிற்கு எல்லையே இல்லை. ஆண்டவர் இட்ட கட்டளைப்படியும் இவர்கள் தொல்லை தாளாமலும் இவர்கள் கண்களுக்குத் தோன்றாது இருக்க முடிவு செய்தார்.

தான் தோன்றிய புரட்டாசி மாதத்திலேயே மறையத் திருவுளங் கொண்டார் போலும். எப்படியோ செய்தி பரவி அந்த அற்புதத்தைக் காண மக்கள் வெள்ளம் மேட்டுக் குப்பம் கிராமத்தில் திரண்டது. ஆட்மபரமும் விளம்பரமும் விரும்பாத வள்ளலார் இந்த மக்களுக்கு ஓர் அறிக்கை வெளியிட்டார். 8.9.1873 அன்று வள்ளலார் வெளியிட்ட அறிக்கை இதுதான்.

"ஞானசித்திபுரம் என்றும் உத்தர ஞான சிதம்பரம் என்றும் பிரமாணிக்கப் படுகின்ற வடலூர் சத்திய ஞான சபைக்கு முக்கிய சம்மந்தமுடையதாகி அடுத்த கருங்குழியெல்லை மேட்டுக் குப்பத்தில் வழிபடப்படுகின்ற சித்தி வளாகத்தில் வந்திருக்கின்றவர்களும், வருகின்றவர்களும், வருபவர்களுமாகிய ஜனங்கட்கு அறிவிப்பது.

மேல் குறித்த இடத்தில் இந்த மாதத்திற்கடுத்த புரட்டாசி மாதம் ஐந்தாம் தேதியில் அற்புத விளக்கம் நேரிடுவதாய் ஓம் வதந்தி வழங்கப்படுகின்றது. அது கேள்விப்பட்டு நம்புதலோடு நீங்கள் நீர்களும் பொருள் வகையாலும் தேக வகையாலும் உழைப்பெடுத்துக் கொண்டு பின்பு நிட்டூரப்பட்டுக் கொள்ள வேண்டாம். அந்தக் கேள்வி உண்மையல்ல. இவ்விடத்தில் அற்புதம் விளங்குவது மெய்யோ பொய்யோ, இந்தக் காலமோ, எந்தக் காலமோ, ஆதலில், இந்த அறிவிப்பினால் ஜாக்கிரதையோடு உங்களுக்கடுத்த காரியங்கள் எவையோ அவைகளைச் செய்வீர்களாக.

இந்த அறிவிற்பிக்குப் பின் நம் பெருமானார் மீண்டும் மக்களுக்கு அறிவுரை பல கூறினார்.

## <u>தீப முன்னிலையில் கடவுள் விளங்குகிறார்</u>

எவ்வளவு சொல்லியும் எப்படிப் பாடியும் அவருடன் இருந்தவர்கள் அவர் கருத்தை உணர்ந்தாரல்லர். ஏற்றார் அல்லர். பின்பற்றினார் அல்லர். அவர்கள் வள்ளலாரைத் தெய்வமெனப் போற்றுவதிலும் அவருக்குப் பணிவிடை செய்வதிலும் குறைவற்றிருந்தனர். தன்போல் தாய் வயிற்றில் கருவாயிருந்து மண்ணில் தோன்றித் தூல உடம்புடன் வாழ்ந்த அடிகளார் தங்கள் கண்ணெதிரேயே சுத்த தேகம், பிரணவ தேகம், ஞான தேகம் ஆகிய முத்தேக சித்திகளைப் பெற்று, கடவுள் நிலையறிந்து அம்மயமாதல் என்ற அந்த நிலையும் பெற்று, இறைவன் போல எல்லாம் வல்லவராயும், என்றும் இருப்பவராயும் அழியாத நிலைபெற்று விளங்குவதை நேரில் கண்டும் நாம் ஏன் அந்நிலை பெற முயற்சி செய்யக் கூடாது என்ற முயற்சி இல்லாத மக்களை அந்த உண்மையை உணர்த்துவதற்காகவே "என்னைத் தெய்வமென்று வணங்காதீர்கள் என்னை உங்களில் ஒருவனாய்க் கொள்ளுங்கள்" என்று போதித்தார். நம்மில் ஒருவன் இந்த நிலை பெற முடியுமானால் நாம் ஏன் பெற முடியாது என்று அவர்கள் உணர்ந்து முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று கருதிய வள்ளலார் தன்னை வணங்க வேண்டாம் என்றார்கள். என்ன சொல்லியும் என்ன பயன்? அவரைச் சுற்றியிருந்த அந்த மக்கள் அவர் ஏதாவது அற்புதம் செய்வாரா, தங்கம் செய்யும் வித்தையை நமக்குச் சொல்லித் தர மாட்டாரா என்று தான்

விரும்பினார்களே தவிர அவரைப் போல முயற்சி செய்ய முனைந்தார் யாருமிலர். தொட்டாலும் தோடமுறும் விட்டாலும் கதியில்லை என்று கூறிய வள்ளலார் இந்த மக்களை எப்படித்தான் திருத்துவது என ஆலோசித்து முடிவிற்கு வந்தார். என் பேச்சைக் கேட்காத இந்த மக்கள் உள்ளத்திலே உடம்பிலே ஏன் நாமே புகுந்து அவர்களுக்கு உறுதி வருமாறு செய்யக் கூடாது என்று கருதினார். மக்கள் மீது அவர் கொண்டிருந்த அளவற்ற கருணை செயல்படத் தொடங்கியது. ஸ்ரீமுக வருடம் கார்த்திகை மாதம் பௌர்ணமியன்று தான் அறையில் வைத்திருந்த தீபத்தை எடுத்து வெளியில் வைத்தார். மக்களை நோக்கிக் கூறினார்--

"இந்த தீபத்தைத் தடைபடாது ஆராதியுங்கள். இந்தக் கதவைச் சாத்திவிடப் போகிறேன். இனி கொஞ்ச காலம் எல்லோரும் ஆண்டவர் இப்போது தீப முன்னிலையில் விளங்குகிறபடியால் உங்களுடைய காலத்தை வீணில் கழிக்காமல் நினைந்து நினைந்து என்னும் தொடக்கமுடைய 28 பாசுரங்கள் அடங்கிய பாடலிற் கண்டபடி தெய்வ பாவனையை இந்தத் தீபத்தில் செய்யுங்கள். நானிப்போது இந்த உடம்பிலிருக்கிறேன். இனி எல்லா உடம்பிலும் புகுந்து கொள்வேன்" என்று திருவாய் மலர்ந்தருளினார்கள். தீபத்தை வெளியே வைத்து விட்டு சித்தி வளாகத்தில் தன் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டார்கள். அவர் தீர்மானித்தபடி வள்ளலார் நம்முடைய உடம்புகளிலே புகுந்திருப்பாரேயானால் நாம் அத்தனை பேரும் வள்ளலார் பெற்ற எல்லாப் பேறுகளையும் பெற்றிருப்போம். நம்முடைய துரதிருஷ்டம் அதுவும் ஆண்டவனுக்குச் சம்மதமில்லைபோலும். கார்த்திகை மாதம் அறைக்குள்ளே நுழைந்த வள்ளலார் மார்கழி மாதம் மீண்டும் வெளியே வந்து மக்களுக்கு வேண்டிய கருத்துக்களை ஓதி வந்தார்.

## என்னைக் காட்டிக் கொடார்

எவ்வளவு கூறியும் ஜாதிப்பற்று, சமயப் பற்று முதலியவை அன்பர்களிடத்திலேயே ஒழியாது குடி கொண்டிருப்பதைக் கண்டு மனஞ்சலித்துப் போனார் வள்ளலார். சுத்த சன்மார்க்கப் பயிர்களாகிய சன்மார்க்கிகளே வாடிப் போய்க் கொண்டிருப்பதைக் கண்டு வாடினார். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்றும் பாடினார்.

மரணமிலாப் பெருவாழ்வு பெறக் காயகல்பம் செய்து தரும்படி வள்ளலாரைச் சில அன்பர்கள் வேண்டினார்கள். இன்று மாலை வரை இந்தச் செடிகளின் இலைகளை ஆடு மாடு மேயாமல் பார்த்துக் கொள்ளுங்கள் மாலை வந்தவுடன் நீங்கள் விரும்பிய காயகல்பம் தருகிறேன் என்று கூறினார். ஆனால் அந்த மக்களின் அஜாக்கிரதையினால் அன்றைய தினம் ஆடு அந்தச் செடிகளிலிருந்த இலைகளை மேய்ந்ததைக் காணாமல் விட்டார்கள்.

இப்படிப்பட்ட மக்கள் சுத்த சன்மார்க்க நிலை பெற இன்னும் சிறிது காலம் ஆகும். அதுவே இயற்கை நியதி என்று கண்ட வள்ளலார் தன்னை நேரில் கண்டு, பேசி, மகிழ்ந்த மக்கள் தன் நிலையை உணராதது கண்டு வருந்தினார். இனி வரும் மக்களாவது தன் நிலையை உணர வேண்டும் என்று

கருதிய அடிகளார் தன்னைப் பற்றிய பல உண்மைகளைப் பாட்டின் மூலம் எழுதி வைத்தார். மக்கள் திருஅருட்பாவை நன்கு உணர்ந்து அதில் கண்டுள்ள நெறிகளைப் பின்பற்றி வாழத் தொடங்கும்போது வந்து கண்டு மகிழ எண்ணங் கொண்டார். அதுவரை இவர்கள் கண்களுக்குத் தோன்றாமல் இருக்க முடிவு செய்தார். அதன்படி ஸ்ரீமுக ஆண்டு அதாவது 1874 ஜனவரி 30ம் நாள் வெள்ளிக்கிழமை புனர்பூசமும் பூசமும் கூடிய தினத்தன்று நடுநிசி சரியாகப் பன்னிரெண்டு மணிக்கு சித்தி வளாகத் திருமாளிகையில் அன்பர்களை அழைத்துப் பின்வருமாறு கூறினார்.

> "நான் உள்ளே பத்துப் பதினைந்து தினம் இருக்கப் போகிறேன். பார்த்து அவநம்பிக்கை அடையாதீர்கள். ஒருகால் பார்க்க நேர்ந்து பார்த்தால் யாருக்கும் தோன்றாது வெறு வீடாகத்தான் இருக்கும்படி ஆண்டவர் செய்விப்பார். என்னைக் காட்டிக் கொடார்".

சித்தி வளாகத்தின் வெளிக் கதவைப் பூட்டிக் கொள்ளச் சொன்னார். அன்பர்களும் அவ்வாறே செய்ய அடிகளார் அறையினுள் நுழைந்து உள் கதவைச் சாத்திவிட்டார்.

பின்னர் அரசாங்கத்தார் திறந்து பார்த்தபோது வள்ளலார் கூறியது போலவே அது வெறும் அறையாகக் காணப்பட்டது.

## வள்ளலார் என்ன ஆனார்?

5.10.1823 ஞாயிற்றுக் கிழமை மாலை சுமார் 5.50 மணியளவில் மருதூர் இராமையா பிள்ளை சின்னம்மை தம்பதியர்கட்கு ஐந்தாவது குழந்தையாக தூல உடல் தாங்கி அடிகளார் பிறந்தார்.

எல்லாக் கலை ஞானங்களும் ஓதாமலே உணரப் பெற்றவர்.

ஐந்தாவது வயதிலேயே அவருக்கு ஒரு வேளை உணவே போதுமானதாய் இருந்தது.

ஒன்பதாவது வயதிலேயே இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு அவன் மீது பாக்கள் பாடும் திறம்பெற்றிருந்தார்.

தமது பன்னிரண்டாம் வயதில் ஞான வாழ்க்கை தொடங்கினார்.

சோமு செட்டியார் வீட்டில் பிரசங்கம் செய்தபோது அவர்கள் தந்த பணத்தைக் கேணியிலும் குளத்திலும் எறியும் அளவிற்குப் பொருளாசை யற்றவராய் விளங்கினார்.

பாலுண்ணுங் காலையிலேயே எனக்கு அருவருப்பு உண்டு என்று கூறும் வள்ளலார் பெண்களே வலிய வந்தும் சிற்றின்ப நாட்டங் கொண்டாரிலர். மனைவியிருந்தும் பெண்ணாசையற்ற வராய் விளங்கினார்.

அவரது பக்தி நிகரற்றது.

திருஒற்றியூர் நிர்வாண சந்யாசி ஓர் உத்தம மனிதன் என்று வள்ளலாரை மட்டும் அடையாளங் காட்டி அவரது உயர்ந்து விளங்கும் பண்பாடுகளை குண நலன்களை எடுத்துக் காட்டுகிறார்

80 காணி நிலம் தானமாக மக்களால் கொடுக்கப்பட்டிருந்தும் அதை லட்சியம் செய்யாது மேட்டுக்குப்பம் சென்றது அவர் மண்ணாசையற்றவர் என்பதை வெளிப்படுத்துகிறது.

பன்னிரண்டாண்டில் அவர் மேற்கொண்ட ஞான வாழ்வு வடலூரில் அவரது 44வது வயதிலே நிறைவுற்றது வடலூரிலே சுத்த தேகம் பெற்று விட்டார்.

மேட்டுக் குப்பத்திலே பிரணவதேகம் ஞான தேகம் ஆகிய இரண்டையும் பெற்று விட்டார்.

ஞானதேகத்தின் தன்மை தோன்றியும் தோன்றாமலும் இருக்கும் 26.10.1870 அன்று வள்ளலார் வெளியிட்ட அறிக்கையும், தொழுவூர் வேலாயுத முதலியார் அடையாறு பிரும்ம ஞான சமாஜத்தாருக்கு அளித்த வாக்குமூலமும் வள்ளலார் பலமுறை தோன்றாமலும் பின்னர் தோன்றியும் இருந்தார் என்பதற்குச் சான்று.

நில்லாவுடம்பை நிலை என்றே நேசிக்கும் பொல்லாத நெஞ்சப் புலையனேன் எனப் பாடிய இராமலிங்கர் ஆடுகின்ற சேவடிக்கே ஆளானேன் மாளாதயாக்கை பெற்றேன் என்று பாடுகின்றார்.

வருகணத்து வாழ்ந்திடுமோ விழுமோ இந்த மலக்கூடு என்று பாடிய அதே வள்ளலார் காற்றாலே புவியாலே ககனமதனாலே கனலாலே புனலாலே கதிராதியாலே கூற்றாலே பிணியாலே கொலைக் கருவியாலே கோளாலே பிறவியற்றுங் கொடுஞ் செயல்களாலே வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும் மெய்யளிக்க வேண்டும் என்றேன் விரைந்தளித்தான் எனக்கே என்று பாடுகின்றார்.

வள்ளலார் அடிக்கடி பிறர் கண்களுக்குத் தோன்றாமல் மறைந்து விடுவார். பிறகு சில நாட்கள் கழித்து வெளிப்பட்டார். ஏப்ரல் 1870ல் முதலில் அப்படி மறைந்து பின்னர் அக்டோபர் 1870ல் வெளிப்பட்டார். அவ்வாறே பிறகும் அடிக்கடி மறைந்து விடுவார். பிறகு சில நாட்கள் கழித்து வெளிப்பட்டார். (தொ.வே. வாக்குமூலம்)

1874ல் மீண்டும் மறைந்திருக்கிறார். அரசாங்கத்தார் வெளியிட்ட அறிக்கை. 1880ல் சிதம்பரம் தாசில்தார் வெளியிட்ட அறிக்கை கடந்த ஏழு ஆண்டுகளாக இராமலிங்கம் பிள்ளை பகிரங்கத்தில் நமூது இல்லை என்று தான் கூறுகிறது. தேவஸ்தான தருமஸ்தான ஸ்தாபகராகிய சிதம்பரம் இராமலிங்க பிள்ளை என்பவர் ஏழு வருட காலமாய் பகிரங்கத்தில் நமூது இல்லாமல் இருப்பதினாலே கிராம நவுக்கர்கள் சொல்வண்ணம் பார்வதிபுரம் தருமச்சாலை ஏஜெண்டு 1. ச. ஆறுமுக முதலியார், 2.வக்கீல் வெங்கடேசய்யர், 3. ஆ.ச. நயினா ரெட்டியார், 4. ஆ. சபாபதி குருக்கள் என்று பெயர் போட்டு மேற்படி

இராமலிங்கம் பிள்ளை அவர்கள் பேராலிருந்த பட்டாவை ஏஜெண்டுகள் பேரால் மாற்றி விட்டார்கள் (ஆதாரம் வடலூர் வரலாறு பக்கம் 125)

தமது பன்னிரண்டாம் வயதில் தவம் இயற்றத் தொடங்கினார் என்பதும் தருமச்சாலையிலே தவத்தின் பயனாகிய பெரும் விளைவையெலாம் பெற்றார் என்பதும் முன்னமேயே கூறப்பட்டுள்ளது. சுத்த தேகம் பிரணவ தேகம் ஞான தேகம் ஆகிய முத்தேக சித்தியை வள்ளலார் பெற்று விட்டார்.

முத்தேகங்களின் விவரம் வள்ளலாரே அடியிற் கண்டவாறு அருளியுள்ளார்.

## சுத்தமாதி தேகங்கள்

சுத்தமாதி மூன்று தேக விவரம் : சுவர்ணதேகம், பிரணவதேகம், ஞானதேகம்.

| சுவர்ண தேகம் | பிரணவ தேகம் | ஞான தேகம் |
|---|---|---|
| காரிய ரூபம் | காரிய காரண ரூபம் | காரண ரூபம் |
| பரதேகம் | பரம்பர தேகம் | எங்கும் பூரண வியாபகம் |
| பர உணர்ச்சி | பரம்பர உணர்ச்சி | |
| பர அறிவு | பரம்பர அறிவு | பராபர அறிவு |
| பரத்துவம் | பரம்பர தத்துவம் | பராபர தத்துவம் |
| பொன் வண்ணம் அபரஞ்சி மாற்று | 16 முதல் 108 வரையில் மாற்று, உரைபடாதது | அளவு கடந்த மாற்று |
| 12 வயது பருவம் | 5 முதல் 8 வயது | சப்த மய தரிசனம் |
| நரை, திரை, பிணி, மூப்பு, மலம், ஜலம், வியர்வை, ஆகாரம், நித்திரை, தாகம், சாயை முதலியன இல்லாமை ரோம வளர்ச்சி, தாழ்ச்சி இல்லாமை | தேகம் தோற்றும் பிடிபடாது | உருவம் தோற்றியும் தோற்றாமலும் இருக்கும் |
| கர்மசித்தி | சர்வ சித்தி | சர்வ மகா சக்தி, சர்வ சுதந்தரம் |
| கல்ப தேகி | பிராண கல்பதேகி | காலாதீதன் |
| அபரமார்க்கி | பர அபர மார்க்கம் | |

பொன் செய்யும் ஆற்றல் பெற்றதைச் சோதித்துப் பார்க்கவே பொன் உரைகல் ஒன்றினைத் தமது ஆப்த நண்பர் ஸ்ரீ இரத்ன முதலியார் அவர்களிடம் கேட்டுப் பெற்றுத் தங்கத்தின் மாற்று எவ்வளவு என்று சோதித்திருக்கிறார்.

அதே போல் ஞான தேகம் பெற்றவுடன் தன்னால் பிறர் கண்களுக்குத் தோன்றாமல் இருக்க முடியுமா என 1870ம் ஆண்டும் பிறகு அடிக்கடியும் மறைந்து மறைந்து மீண்டும் மீண்டும் தோன்றியிருக்கிறார்.

அவரது தலை மாணாக்கர் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள் சென்னை அடையாறு பிரம்ம ஞான சங்கத்தார்க்கு அளித்த வாக்குமூலத்தில் கூறியிருப்பது--

"எங்கள் குருநாதர் பிறர் கண்களுக்குத் தோன்றாமல் அடிக்கடி மறைந்து விடுவதுண்டு. அந்த நேரங்களில் அவர் என்ன ஆனார்? எங்கு போனார்? என்பது ஒருவருக்கும் தெரியாது."

ஞானதேகம் தோன்றியும் தோன்றாமலும் இருக்கும்.

முன்பு அடிக்கடி மறைந்தவர் சீக்கிரம் சீக்கிரம் வெளி வந்தார். மறைந்து மறைந்து வெளி வந்த வள்ளலாருக்கு இப்போதும் வர எண்ணினால் ஏன் வர முடியாது.

1870ம் ஆண்டிலேயே வள்ளலார் ஞான தேகம் பெற்று விட்டார். பிறர் கண்களுக்குத் தோன்றியும் இருக்கும். அவர் விரும்பினால் தோன்றாமலும் இருக்கும். தேகம் இருக்கும். பிறர் கண்களுக்கு தோன்றாது. அவ்வளவுதான்.

அவர் திருக்காப்பிட்டுக் கொள்ளு முன் அந்த அறையின் ஒரு கதவைத் திறந்து கொண்டு அங்கே நின்று தான் பேசினார். அப்போது அங்கிருந்தோர் கண்களுக்குத் தோன்றினார். அறைக்குள் சென்றார். அரசாங்க அதிகாரிகள் அந்தஅறையைத் திறந்து பார்த்த போது அவர் அந்த அறையில் தான் இருந்தார். ஆனால் அந்த அதிகாரிகளின் கண்களுக்கு மட்டும் தோன்றவில்லை. அதுதான் ஞானதேகம். அரசாங்கத்தார் திறந்து பார்க்க அக்ஞூபிக்கில் ஆண்டவர் அருள் செய்வார் என்னைக் காட்டிக் கொடார் என்று கூறினார் அல்லவா. என்னைக் காட்டிக் கொடார் என்றதற்கு என்ன பொருள்? நான் அங்கே தான் இருப்பேன். என்னை மற்றவர்களால் பார்க்க முடியாது என்பதே அதன் பொருள். இந்த வார்த்தைகளை நன்கு சிந்திக்க வேண்டும்..

ஒருவர் இறந்து போனால் இந்திய அரசியல் சட்டப்படி அவரது சொத்தை வாரிசுதாரர்கட்கு உடனே மாற்றலாம். அதே சமயம் ஒருவர் காணாமல் போய்விட்டால் அவரது சொத்தை அவரது வாரிசுதாரர்களால் உடனே அனுபவிக்க முடியாது. அவர் காணாமல் போன நாளிலிருந்து ஏழு ஆண்டுகள் கழிந்த பின்னர் தான் மாற்ற முடியும். இந்தச் சட்டம் இந்திய அரசியல் சட்டமாகும்.

வள்ளலார் 1874ம் ஆண்டு ஜனவரி 30ம் நாள் காணாமல் போய் விட்டார். 1880ம் ஆண்டு அக்டோபர்மாதம் சிதம்பரம் தாசில்தார் ஓர் அறிக்கை வெளியிடுகின்றார். அந்த அறிக்கையில் கூறியிருப்பது.

கடந்த ஆறு ஆண்டுகளாக சிதம்பரம் இராமலிங்க பரதேசி என்பவர் பகிரங்கத்தில் காணப்படாமையால் அவர் பேரில் தஸ்தாவேஜி செய்யப்பட்டுள்ள பார்வதிபுரம் நிலங்கட்கு கிஸ்தி கட்ட அடியிற் குறித்த நால்வரை ஏஜெண்டுகளாக நியமிக்க அரசு உத்தேசித்திருக்கிறது ஆட்சேபணை உள்ளவர்கள் தெரிவிக்கலாம்."

வள்ளலார் பிறர் கண்களுக்குத் தோன்றாமல் மறைந்திருந்ததை இந்த அரசாங்க அறிக்கை நிரூபிக்கிறது இந்த அறிக்கைக்கு ஆட்சேபணை நியமிக்கப்பட இருந்த நால்வர்தான் செய்தனர். எங்கள் குருநாதர் திரும்பி வருவேன் என்று சொல்லித்தான் போயிருக்கிறார். எனவே தருமச் சாலையை ஏஜண்ட்டாக நியமித்துக் கொள்ளுங்கள் என்றனர். ஆனால் அவர்களுக்கு நிலையத்தை ஏஜெண்ட்டாக நியமிக்க சட்டம் இடம் கொடாததால் இவர்கள் ஆட்சேபணையைத் தள்ளுபடி செய்து

1) ஆறுமுக முதலியார், 2) வக்கீல் வெங்கடேச ஐயர், 3) நயினா ரெட்டியார், 4) சபாபதி குருக்கள் ஆகிய நால்வரையும் ஏழு ஆண்டுகள் முடிந்த பின் 1881 மார்ச் மாதம் ஏஜெண்டுகளாக அரசு நியமித்தது. வள்ளலார் காணாமல் தான்போனார் என அரசாங்கமே சட்டத்தின் மூலம் நிரூபித்து விட்டது.

அவருடைய தேகம் மண்ணில் கொண்டு யாராலும் சமாதி செய்யப்பட வில்லை. அவர் தேகம் வேறு யாராலும் தீயிட்டு எரிக்கப்படவில்லை எனவே தேகம் எப்போதும் சிதையாத வண்ணம் இருக்கப் பெற்றவர் அவருடைய தேகத்துடனேயே இருக்கின்றார். அது ஞான தேகமானதால் நமது கண்களுக்குத் தோன்றவில்லை.

வாழி என் தோழி என் வார்த்தை கேள் என்றும் மரணமில்லா வரம் நான் பெற்றுக் கொண்டேன் என்ற அவருடைய பாடல் அவர் மரணமடையாது உடலோடு இருக்கிறார் என்பதற்குச் சான்று. இன்னொரு பாடலில் நான் பெற்ற நிலையை வேறு யாரேனும் எந்த உலகத்திலேயாயினும் பெற்றதுண்டா என்று இறைவனையே வினவுகின்றார்.

"நோவாது நோன்பு எனைப் போல் தோற்றவரும் எஞ்ஞான்றும்
சாவா வரம் எனைப் போல் சார்ந்தவரும் நின்
பேரருளை என்போலப் பெற்றவரும் இவ்வுலகில்
யாருளர் நீ சற்றே அறை (அருட்பா)

எஞ்ஞான்றும் சாவா வரம் பெற்ற வள்ளலார் இன்றும் வாழ்ந்து கொண்டு நம்பும் அடியார்க்குத் துணையாய் இருந்து கொர்ண்டிருக்கிறார். நம்முடைய கண்களுக்குத் தோன்றாமல் ஆனால் தனது தேகத்துடன் இருக்கிறார். நமக்கு அவர் தோன்றவில்லை.

## வள்ளலார் எப்போது தோன்றுவார்

22.10.1873 புதனன்று மேட்டுக் குப்பம் சித்தி வளாகத்தில் கொடி கட்டிப் பேருபதேசம் செய்த போது நான் உங்களுக்காக ஆண்டவரிடத்தில் பிரார்த்தித்தும் கேட்டுக் கொண்டும் வருகின்றேன். அதுவரையில் நீங்கள், நீங்கள் நல்லொழுக்கத்திற்கு வருவதுடன் மற்றவர்களையும் எவ்விதத் தந்திரத்திலாவது நம்மவர்களாக்கிக் கொள்ளுங்கள். நீங்கள் கொஞ்ச காலம் அப்படிச் செய்து கொண்டிருங்கள். என்று, மீண்டும் தான் வருவதைக் குறிப்பால் உணர்த்தியுள்ளார்கள்.

அவரது அருட்பாவைக் கூர்ந்து நோக்கின் எல்லா இச்சைகளையும் பூர்த்தி செய்து கொண்ட வள்ளலாருக்கு ஒரே ஓர் இச்சை மட்டும் இன்னும் பூர்த்தியாகாமல் இருப்பது தெரிகிறது. அதாவது

தங்கமே யனையார் கூடிய ஞான சமரச சுத்த சன்மார்க்க
சங்கமே கண்டு களிக்கவும் சங்கஞ்சார் திருக்கோயில் கண்டிடவும்
துங்கமே பெறும் சற்சங்கம் நீடூழி துலங்கவும்
சங்கத்தி லடியேன் அங்கமே குளிர நின்றனைப்பாடி ஆடவும்
இச்சை காணெந்தாய்

இந்த அவரது ஆசை இன்னும் கைகூடவில்லை. எனவே நாம் தங்கமே யனையராக முதற்கண் மாறுவோம். ஞான சமரச சுத்த சன்மார்க்க சங்கம் காண்போம். அதைச் சார்ந்து ஒரு திருக்கோயில் இருக்க வேண்டும்.

நீடூழி வாழ்கின்ற அச்சங்கத்திலே அங்கமே குளிர இறைவனைப் பாடி ஆட வள்ளலார் வருவார் நாமும் காண்போம் நல்வாழ்வு பெறுவோம்

திருவருட்பிரகாச வள்ளலார்

திருவடிகளே சரணம்

## வள்ளலாருக்கு ஆண்டவன் இட்ட கட்டளைகள்

1. மக்களுக்குச் சுத்த சன்மார்க்க நெறி காட்டி மெய்ப் பொருளினை உணர்த்துக.

(ஆதாரம் பேருற்ற உலகிலுறு நடராசபதி மாலை பாடல்)
செய்தாரா - செய்தார்

2. நல் யோகம் ஞானம் புரியாமல் நலிந்து போகாதே எழுந்தே ஈட்டுக
(ஆதாரம் வாட்டமொடு சிறியனேன் நடராசபதி மாலை)
செய்தாரா - செய்தார்

3. மக்களுக்கெல்லாம் நீயே துணையாய் இரு
(ஆதாரம்
எல்லார்க்ககும் கடையாய் இருந்தேனுக்கருள்புரிந்து
எல்லார்க்கும் துணையாய் இருக்க வைத்தா எம்பெருமான்
(துணையாய் இருக்கிறாரா ஆம்)

4, உலகத்தில் உயிர்கள் படும்
இடையூறுகளை யெல்லாம் நீ
அடைந்து விலக்குக மகிழ்க
(ஆதாரம் அகவல் வரி 1589-90)
செய்கிறாரா - ஆம்.

தேகம் எப்போதும் சிதையாது என்றென்னும் இறைவன் போல் எல்லா ஆற்றலும் பெற்று இறைவனாகவே விளங்கும் நம்பெருமானர் இராமலிங்கர் நமக்குத் துணையாய் ஆண்டவன் இட்ட பணியைத் தவறாது செய்து கொண்டிருக்கிறார். நமக்கு இடையூறுகள் ஏற்படும்போது நாம் அவரிடம் முறையிட்டோமானால் ஆண்டவன் கட்டளைப்படி அவ்விடையூறுகளை அகற்றி நம்மை மகிழ்விப்பார்.

**வாராத வல்வினை நோய் வந்தாலும் வன்மையொடு**
**சேராத பாவமெல்லாம் சேர்ந்தாலும்**
**தீராதென்றார் சொன்னார் எங்களருட் பிரகாசப் பெருமான்**
**பேர் சொன்னால் போமே பிணி**

## ரத்ன ஓதுவார்

வள்ளலாரிடம் மிகவும் அன்பு கொண்ட ஒருவர் தானும் தன் வம்சமும் வள்ளலாருக்கு அடிமை என்று பத்திரம் எழுதி அதைப் பதிவு செய்து வள்ளலாரிடம் கொடுத்தார். அவரது மகனை அழைத்து உன் பெயர் என்ன என்று வள்ளலார் கேட்டார். அண்ணாமலை என்று அந்தச் சிறுவன் தன் பெயரைக் கூறினான். இனி உன் பெயர் அண்ணாமலை அல்ல. இரத்தினம் என்றார் வள்ளலார். அது தொடங்கி அச்சிறுவனின் பெயர் இரத்தினம் என்றே வழங்கப்பட்டது.

அந்த இரத்தினத்தைத்தான் முதன் முதலில் ஞானசபையில் வழிபாடு செய்ய நியமித்தார்கள். தான் எவ்வாறு ஞானசபையில் வழிபாடு செய்து வந்தார் என்பதை அவர் பிற்காலத்தில் கூறியுள்ளார். அது வருமாறு :

நான் சுவாமியோடு கூடவே இருந்து அவருக்கு அடிமை செய்து வந்தேன். பிரசோற்பத்தி வருஷம் தை மாதம் (25.01.1872) வடலூருக்கடுத்த உத்தரஞான சிதம்பரத்தில் ஞானசபைப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதில் அன்று தொடங்கி பூஜை, தாது வருஷம் வைகாசி மாதம் வரை செய்து வந்தேன். சில சமயம் அவ்விடமிருந்த திருநெல்வேலி மழைசாமியும் செய்வதுண்டு. வேறு யாரும் செய்ததில்லை. எங்களை இப்படி நியமித்தது சுவாமிகளின் உத்திரவுபடி தொழுவூர் வேலாயுத முதலியாரும், இராமசாமி முதலியாரும் ஏற்பாடு செய்தார்கள்.

### பூஜை முறை என்னவெனில் :

காலையில் ஸ்நானம் செய்து 8 மணிக்குச் சபைக்குப் போகும்போது எனக்கென்று பிரத்யேகமாய் கொடுத்திருக்கும் பீரோவில் வைத்திருக்கும் பட்டு அரைஞாண் கயிறு, பட்டு கௌபீனம், பட்டு வாய்க்கட்டு, கால்களுக்குச் சுற்றிக் கொள்ளும் பட்டு (இவைகள் எல்லாம் வெள்ளைப் பட்டு) இவைகளை தரித்துக்

கொண்டு உள்ளே போய், தென்னங் குருத்து ஈர்க்கினால் அமைத்த திருவலகினால் இரத்தினச் சமுக்காளம் விரித்திருக்கும் ஏழு பிரகாரங்களையும் சுத்தி செய்து விட்டு, ஏழு திரைகளுக்கு வெளிவந்து கற்பூர ஆராத்தி செய்து எல்லோருக்கும் விபூதி கொடுப்பது வழக்கம். இதே வழக்கம் தான் தைப்பூசத்திய தினமும், ஆனால் அன்றைய தினம் பகல் 2 மணிக்கு நடக்கும். மற்றைய தினம் சாயந்திரம் ஐந்து மணிக்கு. எக்காலத்தும் திரையைத் திறந்து உள்ளே இருக்கும் தீபதெரிசனம் செய்விப்பது கிடையாது. ஜனங்கள் சேவிப்பது திரைக்கு வெளியில் இருக்கும் கற்பூர தெரிசனம்தான். தீபாரதனை காலத்து எல்லோரும் அருட்பா பாராயணம் கும்பலாய் செய்வார்கள்.

என்னையும் மழைசாமியையும் பூஜைக்கு நியமித்தது என்னவென்றால் எனக்கு அப்போது 10 (அல்லது) 11 வயது இருக்கும். மழை சுவாமிக்கு 70 அல்லது 72 இருக்கும் ஆகவே சிற்றின்ப விசாரமில்லாதவரைக் கொண்டு பூஜை நடத்த வேண்டியது என்பது சுவாமியின் கருத்து என்று தெரிகிறது.

ஆடூர் அழகு குருக்கள் என்னும் சபாபதி குருக்கள் அப்போது சுவாமிகளிடம் இருந்த தொண்டர்களில் ஒருவர். அவர் சுவாமிக்கு அடிமையாக இருந்த காலத்தில் அவருக்கு யக்யோவீதம் இல்லை. பிராமணீயம் இல்லை. எங்களோடு கூட சமரசமாய் சாப்பிடுவது உண்டு. நான் என் முறையில் சுவாமிக்கு தினசரி அமுதளிக்கும் போது ஸ்வாமி சாப்பிட்ட சேஷம் எல்லோருக்கும் வினியோகம் செய்வது வழக்கம். அதை சாதி பேதமின்றி சமரச சன்மார்க்க லட்சணமாய் பிரசாதமாக வாங்கி உட்கொள்வது வழக்கம். அழகு குருக்களும் வக்கீல் வெங்கிடேச ஐயர் முதலிய பிராமணர்களும் அப்படியே வாங்கிக் கொள்வது வழக்கம். நான் தாது வருஷம் (1877) வைகாசி மாதம் அவ்விடமிருந்து வந்த பிறகு தான் சபாபதி குருக்கள் என்ற அழகு குருக்கள் சபையில் பூஜை செய்ய ஆரம்பித்தார்.

ஆதாரம் இரத்தினம் அவர்கள் ஸ்டேட்மெண்ட் இந்து சமய அறநிலைய பாதுகாப்புத்துறை அலுவலகத்தில் உள்ளது.

குறிப்பு :- ஞானசபையை முறை தவறி மக்கள் நடந்ததால் வள்ளலாரே பூட்டி விட்டார். இரத்ன ஓதுவார் 1877 வரை தான் பூஜை செய்ததாகச் சொல்கிறார். அவர் அப்போது 10 வயது சிறுவன் என்பதாலும், இந்த வாக்குமூலம் பல ஆண்டுகள் கழிந்த பின்னரே தந்திருப்பதாலும் அவர் பூஜை தாது வருடம் வரை செய்திருப்பதாகச் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்வதற்கில்லை.

ஆடூர் சபாபதி குருக்களும் அவ்வாறே கூறுகிறார்.

பூஜை : காலையில் ஸ்நானம் செய்து 8 மணிக்குச் சபைக்குப் போகும் போது எனக்கென்று பிரத்யேகமாய் கொடுத்திருக்கும் பீரோவில் வைத்திருக்கும் பட்டு அரைஞாண் கயிறு, பட்டு கௌபீனம், பட்டு வாய்க்கட்டு கைகால்களுக்குச் சுற்றிக் கொள்ளும் பட்டு (இவையெல்லாம் வெண்பட்டு) இவைகளைத் தரித்துக் கொண்டு உள்ளே போய்த் தென்னங் குருத்து ஈர்க்கினால் அமைந்த திருவலகினால் இரத்னச் சமுக்காளம் விரித்திருக்கும் பிரகாரங்களையும் சுத்தி

செய்து விட்டு வந்து விட வேண்டியது. இது போல சாயந்திரம் ஸ்நானம் செய்து பட்டு தரித்து உள்போய் மெழுகு வர்த்தி விளக்கை ஏற்றி விட்டு 7 திரைக்கு வெளி வந்து கற்பூர ஆர்த்தி செய்து எல்லோருக்கும் விபூதி கொடுப்பது வழக்கம். இதே வழக்கம் தான் தை பூச தினமும். ஆனால் அன்றைய தீபாராதனை பகல் 2-மணிக்கு நடக்கும். மற்றைய தினம் மாலை 5-மணிக்கு எக்காலத்தும் திரையைத் திறந்து உள்ளிருக்கும் தீப தெரிசனம் செய்விப்பது கிடையாது. ஜனங்கள் சேவிப்பது திரைக்கு வெளியில் செய்யும் கற்பூர தரிசனம் தான். தீபாரதனை காலத்தில் அருட்பா பாராயணம் எல்லாரும் கும்பலாய் செய்வார்கள்.

## ஞானசபையின் தற்போதைய நிலை

சித்திவளாகத்தில் ஓர் இரும்புப் பெட்டி வைக்கப்பட்டிருந்தது. அதற்குப் பிரதி தினமும் தோத்திரங்களோடு வலம் வந்து தீபாரதனை செய்வதுண்டு. தன் தந்தையைச்சமாதி செய்து விட்டுக் குடும்ப சமேதராய் வந்த சபாபதி குருக்கள் தனக்கு ஜாதி சமய பேதமங்கள் இல்லை என்றும் தான் பிரதி தினமும் மேற்படி பெட்டிக்கு தீபாரதனை செய்வதாய் விண்ணப்பித்துக் கொண்டார். அப்படியிருந்தால் செய்யலாம் என்று வள்ளலார் கூறினார். அச்சமயம் இவர் தன் ஆசாரங்களை விட்டு பூனூல் முதலியதை நிவர்த்தி செய்து, பிரதி தினமும் சாயந்திரம் பார்வதிபுரத்திலிருந்து வள்ளலார் இருப்பிடமாகிய மேட்டுக்குப்பத்திற்குப் போய், தீபாரதனை செய்துவிட்டு பார்வதிபுரத்திலிருந்த தன் இருப்பிடத்திற்கு உடனே போய் விடுவார்.

(ஆதாரம் வடலூர் வரலாறு பக்கம் 136)

வள்ளலார் ஞான சபை கட்டிய போது சிற்சபை, பொற்சபை ஆகிய இரண்டும் காலி அறையாகவே இருந்தன. சிற்சபையில் ஞானசபையில் பூஜை செய்ய வரும் (12 வயதிற்குட்பட்ட சிறுவர் அல்லது 72 வயதுக்கு மேற்பட்ட பெரியவர்) அதிகாரம் பெற்றவர் சிற்சபையில் தனது உடைகளைக் களைந்து விட்டு அவருக்காக அங்கே வைக்கப்பட்டிருக்கும் பட்டு அரைநாண் கயிறு, பட்டு கௌபீனம், பட்டு துண்டு, பட்டு வாய்க்கட்டு இவற்றை அணிந்து கொண்டு ஞான சபையில் பூஜை செய்ய வேண்டும்.

பூஜை முடிந்த பிறகு ஞான சபையைப் பூட்டி அதன் சாவியை ஒரு பெட்டியில் வைத்து அந்தப் பெட்டியைப் பொற்சபையில் வைத்து பொற் சபையைப் பூட்டி அதன் சாவியை காவலாளியிடம் ஒப்படைக்க வேண்டும். இதுவே வள்ளலார் வகுத்தது.

சபாபதி சிவாச்சாரியார் வள்ளலாரிடம் சேர்நத போது பூணுல் முதலியவற்றை நீக்கிப் பிராமணீயம் இல்லாமல் மேட்டுக் குப்பத்திலிருந்த இரண்டு பெட்டிகளுள் ஒன்றினுக்கு வள்ளலாரின் உத்தரவு பெற்று கற்பூர தீபாராதனை செய்து வந்தார். வள்ளலார் திருக்காப்பிட்டுக் கொண்டு பின்பு அவரது மகள் வடிவுடை நாயகியின் திருமணத்தில் தடை ஏற்பட்டது. அவரது

உறவினர்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே அவர் மீண்டும் பிராமணீயம் எடுத்துக் கொள்ளத் துணிந்து அவரைச் சார்ந்தவர்கள் கூறியபடி இராமேஸ்வரம் சென்று கடலில் நீராடி இதுவரை பிராமணீயம் இல்லாதிருந்ததற்குப் பிராயச் சித்தம் செய்து மீண்டும் பூணுல் முதலியவை அணிந்து கொண்டார்.

ஞானசபையைச் சுற்றி வள்ளலார் போட்டிருந்த சங்கிலியை முன் பக்கம் அறுத்துவிட்டு வேதகோஷம் செய்யவும் தேவதாசிப் பெண்கள் நர்த்தனம் ஆடவும் மண்டபம் கட்டினார். (தற்போதைய அகவல் மண்டபம்) யாகம் வளர்த்தி வேதம் ஓத வைத்தார். ஞானசபயில் சிவலிங்கம் ஒன்றினைப் பெட்டியில் வைத்து பாவண பீடத்தில் அப்பெட்டியை வைத்து சிவலிங்க பூஜை ஆரம்பித்தார்.

ஆனந்த நடராசர் ஆலயம் என்றும் தனிப்பெருங்கருணா நாயகி சமேத அருட்பெருஞ்ஜோதீஸ்வரர் ஆலயம் என்றும் பெயர் மாற்றம் செய்தார். மேட்டுக் குப்பத்தில் இருந்த இரண்டு இரும்பு பெட்டிகளையும் யாருக்கும் தெரியாமல் 6.12.1884 அன்று மாட்டு வண்டியில் ஏற்றி வெளியே கொண்டு போனார். இதை அறிந்த ஊர் மக்கள் வண்டியை வழியில் மடக்கி அந்த இரண்டு பெட்டிகளையும்ஞான சபைக்குக் கொண்டு வந்து சிறசபையில் ஒன்றும் பொற்சபையில் ஒன்றுமாக வைத்து விட்டனர். பின்னர் 3.6.1890 நாளன்று அந்த இரண்டு பெட்டிகளையும் வேறு யாரும் திருடி விடக் கூடாது என்று சிமெண்ட் போட்டுத் தரையில் பதித்து விட்டார்கள். தொடர்ச்சி ஞான சபையின் தற்போதைய நிலை என்ற தலைப்பில் காண்க.

வள்ளலார் எதிர்பார்த்தவாறு ஞானசபை நடத்தப் பெறாததால் ஞானசபையைப் பூட்டி விட்டார். வள்ளலார் திருக்காப்பிட்டுக் கொண்ட பிறகும் ஞானசபை மூடியே இருந்தது. பின்னர் 19.01.1881ல் அடியிற் குறிக்கப்பட்டுள்ள எழுவரும் தங்களுக்குள் ஒரு தீர்மானம் செய்து கொண்டு ஞானசபையைத் திறந்து வழிபாடு ஆரம்பிக்கின்றனர். அதன் விவரம் வருமாறு.

வள்ளற் பெருமானுடைய அணுக்கத் தொண்டர்கள் கூடி வள்ளலார்

கொள்கைக்கு மாறாக ஞானசபை வழிபாட்டு முறைகளை மாற்றத்

தீர்மானிக்கின்றனர் :

19-01-1881 விக்ரம தை 8 (தீர்மான விபரம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | சுக்கர வாரந்தோறும் திருவகண்டம் | .. | 1 |
| | சௌமிகுத்து விளக்கு | .. | 2 |
| | பாவனா பீடத்தில் குத்து விளக்கு | .. | 2 |
| | ஷேட் | .. | 2 |

இந்த தீப அலங்காரத்துடன் ஞானசபைக்கு முன் இருக்கிற சித்ர படத்தைக் கீழ்புரம் விலக்கி உபசாரத்துடன் தூபகற்பூர ஆராதனை செய்ய வேண்டியது.

2. பிரதி மாதமும் வருகிற பூச நட்சத்திரத்தில் மேற்கண்ட நித்ய நைமித்யங்களுக்கு ஏற்பட்ட தீபங்களுடன் உற்சவக்காரர்கள் அனுப்பிச் சொல்லும் கட்டளைக்குத் தக்கபடி சிலவு செய்து மிகுதியை லஸ்டர் முதலிய தீபங்கள் வைக்கலாம்.

3. வருடந்தோறும் தை மாதம் வருகிற மகாபுஷ்யத்தில் விசேட தீப அலங்காரங்களுடன் அன்ன வினியோகங்களுடனும் ஸ்தோத்திர உருவமாக ஷட்காலங்களிலும் ஆடம்பரம் இல்லாமல் பூர்வாசாரபடி பஞ்சதிரைகளை நீக்கி சிற்பாராதனை செய்ய வேண்டியது.

4. பிரதி மாதம் வருகிற புஷ்ய உற்சவக்காரர்களுக்கு கடிதம் எழுதி தெரிவிக்க குருக்கள் சுவாமியையும். சு. நயினா ரெட்டியார் அவர்களையும் கூட்டத்தார் நியமித்து இருக்கிறார்கள்.

5. தை புஷ்யதினத்தில் திரை நீக்க வேண்டியது புருஷோத்தம ரெட்டியார் நியமிக்கப்பட்டார். அவருக்கு அசந்தர்ப்பப்பட்டால் இந்தக் கூட்டத்தாருள் ஒருவர் செய்ய வேண்டியது. வேறு ஒருவரும் செய்யப்படாது. உள்ளே சுத்தி செய்வது முதலானவைகளுக்கு வேண்டிய ஜலம் முதலிய சாமான் கொண்டு வருவது தவிர மற்றவை கூட்டத்தாரே செய்ய வேண்டியது. இவர்களும் கணபதி, ஷண்முகம் தவிர மற்றவர்கள் பிரவேசிப்பதைத் தடுக்க குருக்கள் சுவாமியாரும், சு.நயினா ரெட்டியாரும் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள்.

6. சத்திய ஞானசபையில் திருவாயிற்படி புறத்தில் அன்னந்தவிர மற்றவை நீவேதிக்கலாம்.

7. பாவனாஸ் தானந்தவிர மற்ற இடங்களில் புஷ்ப அலங்காரம் கூடாது.

8. சத்திய ஞானசபையிலும், சத்திய தருமச்சாலையிலும், சித்திவளாகத்திலும், தேங்காய் உடைத்து நைவேத்தியம் செய்யலாகாது.

9. சத்திய ஞானசபையில் நித்ய நைமித்ய விசேஷ ஆராதனை காலங்கள் தவிர மற்ற காலங்களில் ஆராதனை செய்யலாகாது வேடிக்கை பார்க்கவாவது இடம் கொடுக்கப்படாது.

10. தை பூசத்திலாவது, மற்ற எந்த பூசத்திலாவது சமயத்திற்குத் தக்க பீடம் முதலிய மங்கலக் குறிகள் வைக்கப்படாது. ஆராதனை வேளையில் கற்பூர கிளை தட்டு தவிர மற்றதில் கற்பூரம் ஏற்றப்படாது. ஆராதனை காலத்தில் எவ்வித விசேஷ கோஷமும் கூடாது. ஆனால் ஜனங்களுக்கு அறிவிப்பு நிமித்யம் பிரமதானம் எதிரொலி, பேரிகை உபயோகப்படுத்தலாம்.

11. கொடி சீலை உபயோகப்படுத்தலாம்.

12. உற்சவங்களில் நம்பி செய்யப்படும் சிலவுகளுக்கு உற்சவக்காரர்களே உத்திரவாதிகள்.

13. தை புஷ்யம், வைகாசி 11ந் தேதி வருஷப் பிறப்புக்கு பலரால் கொடுக்கப்படும் சாமாராதனைக்குரிய சாமான்கள் ஒவ்வொன்றும் தருமச்சாலையிலேயே காரியம் பார்க்கும் புருஷோத்தம ரெட்டியாரிடம் ஒப்புவிக்க வேண்டியது. அந்தப்படி கூட்டத்தார் ஏற்படுத்திக் கொண்டது.

கையெழுத்து

1. சி. தேசிகன்
2. மு. அப்பாசாமி செட்டி
3. புருஷோத்தம ரெட்டி
4. ஆ. சபாபதி குருக்கள்
5. கனகசபாபதி பிள்ளை
6. ச. ஆறுமுக முதலி
7. சு. நயினா ரெட்டியார்

இது மெட்ராஸ் H.R. & C.E. டிபார்ட்மெண்டிடம் உள்ளதின் நகல்

## தெய்வ நிலையங்கள் பற்றி

இந்து அறநிலையத் துறை உத்தரவு எண் 691 நாள் 2.12.1930ன் பத்தி இரண்டில் கண்டபடி ஆனந்த நடராசர் ஆலயம் எனும் சத்திய ஞானசபை, மற்றும் அதன் தொடர்புடைய மற்ற நிறுவனங்கள் ஆகியவற்றை நிர்வகிக்கும் ஓர் ஏற்பாட்டைப் பற்றிப் பரிசீலிக்க நேர்முக விசாரணை ஒன்றுக்கு அழைக்கப்பட்டது. அந்த நேர்முக விசாரணைக்கு 27.2.1931 என நாள் குறிக்கப்பட்டது. அன்றைய தினம் ஞானசபைக்காக பாலசுப்ரமணிய சிவாச்சாரியாரும், தர்மசாலைச் சார்பாக சுப்பராய சுவாமிகளும் மேட்டுக்குப்பம் சித்தி வளாகத்தின் பொருட்டு திரு நளச் சக்ரவர்த்தி அவர்களும் நேரில் ஆஜரானார்கள். இந்த நிலையங்களின் மீது அக்கறை கொண்ட மற்றும் சிலரும் அந்த மூவருடன் வந்திருந்தனர். இந்த மூவரும் அவர்களுடன் வந்திருந்த மற்றவர்களும் இந்த மூன்று நிலையங்களும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதற்கு ஒப்புக் கொண்டனர்.

ஓர் ஏற்பாட்டை வகுப்பதற்குத் தேவைப்பட்ட விவரங்களைச் சேகரிக்க முற்பட்டு அவ்வேலை முடியு முன்னர் திரு. சுப்பராய சுவாமிகள் இறந்து விட்டார். இடைக்கால ஏற்பாடு ஒன்று செய்வதற்குள் 6.6.1933 அன்று கிராம முன்சீப் திரு. கிருஷ்ணசாமி படையாச்சி என்பவர் வக்கீல் திரு. ப. முத்தையா செட்டியார் அவர்கள் மூலமாக எழுத்து மூலம் எதிர்ப்பு மனு ஒன்று கொடுத்தார். அவருக்கு ஆதரவாக ஏழு நபர்களின் பெயரை அவர் கொடுத்திருந்தார். அனைவரையும் நேரில் வரும்படி ஆணை பிறப்பித்தது. அந்த ஏழுவரில் திருவாளர்கள் முருகேசன் பிள்ளை, அருணாச்சலம் செட்டியார், மற்றும் சுவாமிநாத செட்டியார் ஆகிய மூவரும் சட்ட வல்லுநர் திரு. குஞ்சிதபாதம் ஐயர் அவர்கள் மூலமாக எழுத்து மூலம் மனு ஒன்று அளித்தனர். அடுத்து திருமேனி செட்டியார் என்பவரும் வேலாயுத செட்டியார் என்பவரும் வக்கீல் குஞ்சிதபாதம் ஐயர்

மூலமாகவே நேரில் வந்தார்கள். அவர்கள் எழுத்து மூலம் ஒன்றும் தரவில்லை. தருமச்சாலை நிர்வாகத்தில் இந்து அறநிலையத்துறை அதிகாரம் செலுத்தவோ தலையிடவோ கூடாது. ஏனெனில் தருமச்சாலை இந்து அறநிலையத் துறையின் வரம்பிற்குட்பட்டதல்ல, என்பதே அவர்கள் வாதம்.

இந்த வாதம் சரியா என்பதைத் தீர்மானிக்க இந்து அறநிலையத் துறை ஆணயைர்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட ஆவணங்கள்.

1. பிப்ரவரி 1867ம் ஆண்டில் வெளிவந்த புத்தகம் திரு அருட்பா நான்கு திருமுறைகள்.

2. 25.4.1867 அன்று வெளியிடப்பட்ட தருமச்சாலை திறப்பு விழா அழைப்பிதழ் அப்பாசாமி செட்டியார் கையெழுத்திடப்பட்டது

3. ஜூன் 1867ல் மக்கள் இனாமாக நிலம் தானம் செய்த பட்டா மாற்றல் ராஜினாமா

4. தருமச்சாலைக்கு எண்ணெய் தருவதற்கு சதாசிவ செட்டியாருடன் செய்து கொண்ட 15.5.1868 நாளிட்ட ஒப்பந்தம்

5. 1880 ஆண்டு தொடங்கி 1915ம் ஆண்டு வரை சங்க நடவடிக்கைகளின் தீர்மானங்கள்

இந்த மூன்று நிலையங்களும் ஒரே நிர்வாகத்தின் கீழ் இருப்பதே சரி எனத் தீர்மானிக்கப்பட்டது.

சுப்பராய சுவாமிகள் கூறியதாவது :-

"நான் இதுவரையில் வடலூர் சத்திய தருமச்சாலையில் செய்து வரும் தூங்கா விளக்கு கைங்கர்யமும், உச்சி கால நிவேதனமும், யாத்திரைவாசிகளாக வரும் சாதுக்களுக்கு அன்னதானமும், தைப்பூச நாளில் வருஷம் பிரதி வருஷம் நடந்து வரும் குரு பூஜை சந்தர்ப்பணை முதலாகிய தரும கைங்கர்யங்களும்."

இவையன்றி குருவார கட்டளை, தூங்கா விளக்கு கட்டளை முதலியவற்றையும் ஆதாரமாக எடுத்துக் கொண்டோம். மேலும் இந்நிலை யங்களைத் தோற்றியவரே (இராமலிங்க அடிகளார்) குருவார பூஜை திருஞானசம்பந்தர் வழிபாடு, முதலியவையும் ஒன்றுக்கொன்று உள்ள தொடர்பை நிரூபிக்கின்றன.

கிருஷ்ணசாமி படையாச்சி என்பவரின் மறுப்புக்கு ஆதரவாக எந்த ஆணவமும் இல்லை. தருமச்சாலையைப் புதுப்பிக்க பாலாலயம் ஒன்று ரூ.6,000/- செலவில் அமைக்கப்பட்டதை கிருஷ்ணசாமி படையாச்சியே சுட்டிக் காட்டி யுள்ளார். தருமச்சாலை ஓர் ஆலயம் என்பதற்கு இதுவே போதுமானதாகும். எனவே தருமச்சாலையைத் தனியே பிரித்து யாரிடமும் ஒப்படைக்க இயலாது.

வடலூர் கிராம வாசிகள் தானமாகக் கொடுத்த நிலங்களின் பட்டா மாற்றல் ராஜினாமா 1867ல் அப்பாசாமி செட்டியார் வகையறா என்று இருந்தாலும்

வள்ளலாருக்கே முழு உரிமை அளிக்கப்பட்டது. 1880ம் ஆண்டு வரையில் அவர் பெயரிலேயே இருந்தது. அவர் 1874ம் ஆண்டு திருக்காப்பிட்டுக் கொண்டு அதாவது மேட்டுக்குப்பத்தில் அவர் வசித்து வந்த குடிசையின் அறைக்குள் நுழைந்து காணாமல் போய்விட்டார். சட்டப்படி ஏழாண்டுகள் பொறுத்திருந்து அதுவரையிலும் அவர் எங்கும் காணப்படாததால் 11.10.1880ல் நால்வரை அவரின் ஏஜெண்டாக நியமிக்க அரசு தீர்மானித்து ஓர் அறிக்கை வெளியிட்டது. அந்த நால்வரும் 19.3.1881 அன்று தங்கள் மீது பட்டா மாற்றம் செய்ய வேண்டாம் என்றும் தருமச்சாலை மீது மாற்றம் செய்ய வேண்டும் என்றும் மனு கொடுத்தனர். ஆனால் இதனைத் தள்ளுபடி செய்து 1) ஆறுமுக முதலியார், 2) வக்கீல் வெங்கடேச ஐயர், 3) ஆ. சபாபதி குருக்கள் 4) க. நயினா ரெட்டியார் ஆகிய நால்வர் பேரிலும் பதிவு செய்தது.

ஆறுமுக முதலியார் காலமான பிறகு 26.1.1883ல் மற்ற மூவரும் அப்பாசாமி பண்டாரியாரைச் சங்கம் தருமகர்த்தாவாக நியமித்திருப்பதால் பட்டா மாற்றம் அவர் பேரில் செய்ய வேண்டும் என்று விண்ணப்பித்தனர். அவ்வாறே அப்பாசாமி பண்டாரியார் பேரில் மாற்றம் செய்யப்பட்டு அவர் தருமகர்த்தா ஆனார். அவர் அருணாசல வசந்த கிருஷ்ண வாணாதரய அப்பாசாமி பண்டாரியார் பேருக்கு மாற்றினார். இந்த பண்டாரியார் 5.3.1883ல் காலமானார். இவருக்குப் பிள்ளை இல்லாததால் இவரது தம்பி அருணாசல வசந்த கிருஷ்ண வாணாதரய சக்கரையா பண்டாரியார் ஜமீன்தார் ஆனார். இவர் ஆறு ஆண்டு காலம் வரி செலுத்தி வந்தார். பின்னர் இவர் 19.8.1889ல் டிரான்ஸ்பர் ஆப் டிரஸ்ட் மூலம் சபாபதி குருக்களுக்கு மாற்றினார்.

சபாபதி சிவாச்சாரியாருக்கு உடல் நலம் குன்றியதால் 13.11.1903 அன்று தனது டிரஸ்டி அதிகாரத்தை தனது மகன் சபா நடேச சிவாச்சாரியாருக்கும் மருமகன் பஞ்சாபகேச சிவாச்சாரியார் பேரிலும் மாற்றினார். 1917ல் பஞ்சாபகேச சிவாச்சாரியாரும் 1918ல் சபா நடேச சிவாச்சாரியாரும் காலமானார்கள். சபா நடேச சிவாச்சாரியாருக்குப் பிள்ளை இல்லாமல் போனதால் சபாபதி குருக்களின் மருமகனான பஞ்சாபகேச சிவாச்சாரியாரின் மகன் பாலசுப்ரமணிய சிவாச்சாரியார் டிரஸ்டி ஆனார். அவருக்குப் பின் அவரது மகன் சித்சபேச சிவாச்சாரியார் டிரஸ்டியாக ஆனார். ஞானசபை ஆடூர் சபாபதி சிவாச்சாரியார் காலம் தொடங்கி இன்று வரை அவர்கள் வம்சத்தாரே நடத்தி வருகின்றனர். தருமச்சாலைக்கும் குருக்கள் வம்சத்தாருக்கும் எப்போதும் தொடர்பே இல்லை.

தருமச்சாலை சங்கத்தார் வசமே இருந்தது. அப்பாசாமி செட்டியார் உட்பட பலர் சாலையை நடத்தி வந்தனர். 6.2.1902லிருந்து சுப்பராய பரதேசியும் 21.1.1908லிருந்து நாராயண ரெட்டியும் சாலைப் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தனர். 12.5.1938ல் போர்டு உத்தரவு எண் 951(c) Scheme வகுக்கப்பட்டு நிலையங்கள் அறநிலையத்துறையின் ஆட்சிக்குக் கொண்டு வரப்பட்டன.

## சன்மார்க்க சங்கம் :

வள்ளலார் தோற்றிய சன்மார்க்க சங்கம் வடலூர் தருமச் சாலையில் தான் இயங்கி வந்தது. அதற்கெனத்தனிக் கட்டிடம் ஒன்று இல்லை. அந்தச் சங்கத்தையும் தருமச்சாலையையும் சுப்பராய பரதேசி என்பவர் கடைசியாக நிருவகித்து வந்தார். அவருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டவுடன் வேறு

யாரிடமாவது ஒப்படைக்கும் நோக்கத்துடன் சங்கத்தைக் கட்டினார். அன்பர்கள் கூடவில்லை. மூன்று முறை கூட்டியும் வரவேண்டிய அளவு (corum) அன்பர்கள் வராததால் வேறு வழியின்றி சங்கத்தை நிலையங்களுடன் தமிழக அரசிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்தார். சங்கம் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. சாலையில் சந்தா வசூல் செய்யப்பட்டு வந்தது. சங்கம் செயல்பாடே இல்லாமல் போய்விட்டது.

## தருமச்சாலை :

வள்ளலார் சொத்து எதுவும் வைக்க ஏற்பாடு செய்யவில்லை. தருமச் சாலையில் அன்னதானப் பணி தொடர்ந்து நடைபெற்று வந்தது. தி டீரென ரூ.2500 வைப்புத் தொகையாக வைத்தால், அன்னாருடைய பெயரில் அவர் விரும்பும் நாளில் ஒரு வேளை அன்னதானம் செய்யப்படும் என்று அறிக்கை வெளியிட்டனர். அதன்படி பலர் ரூ.2500/- தருமச் சாலையில் செலுத்தி வருகின்றனர். அவரவர் பெயரால் அன்னதானமும் நடைபெற்று வருகின்றது.

## ஞானசபை :

ஞானசபை முன்பே குறிப்பிட்டது போல் குருக்கள் பரம்பரையினரே ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். வள்ளலார் செய்கைக்கு விரோதமாக ஜோதி தரிசனம் மாதா மாதம் பூச நட்சத்திரன்று ஐந்து திரை நீக்கியும் தைப்பூசத் தினத்தன்று ஆறு வேளைகளில் ஆறு திரைகளை நீக்கியும் காட்டப்பட்டு வருகின்றது. பாவனா பீடத்தில் சிறியதாக ஒரு சிவலிங்கத்தை ஒரு பெட்டியில் மறைவாக வைத்து ரகசியமாக பூஜை செய்யப்படுகிறது. பிரதோஷ நாளன்று அந்தச் சிவலிங்கம் வெளியே எடுக்கப்பட்டு பன்னீர் அபிடேகம் முதலியவற்றோடு ஆராதனை செய்யப்பட்டு வருகின்றது. தைப்பூசம் கழிந்த மூன்றாம் நாள் ஒரு பல்லக்கில் வினோதமாக ஒரு உருவம் அமைத்து ஞானசபையிலிருந்து புறப்பட்டு தருமச்சாலை வழியாக மேட்டுக் குப்பத்திற்கு எடுத்துச் சென்று வள்ளலார் திருக்காப்பிட்டுக் கொண்ட அறைக்கு முன் வைத்து திரும்ப எடுத்து வருகின்றனர். இது என்ன என்று கேட்போருக்கு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் ஞானசபையிலிருந்து புறப்பட்டு மேட்டுக் குப்பம் போய் வள்ளலாருக்குக் காட்சி அளித்து விட்டு வருகிறார் என்கிறார்கள். அன்று இரவு ஞான சபையில் ஜோதி தரிசனத்தை சூத்திரர்கள் பார்த்து விட்டதால் தீட்டு ஏற்பட்டு விட்டதென்று தீட்டுக் கழிக்கிறார்கள். தைப் பூசத்திற்கு முதல் நாளும் ஒரு பொம்மையை (வைக்கோல் பொம்மை) எரித்து ஞானசபையில் இழுத்து வருகிறார்கள்.

சமயத் தெய்வ உருவம் எதையும் வைக்க வேண்டாம் என்ற வள்ளலாருடைய ஞானசபை இந்த நிலைக்கு ஆளாகி உள்ளது. தீட்டுக் கழிப்பது எந்த அளவில் முறையானது. ஆனந்த நடராசர் ஆலயம் என்ற பெயரில்தான் வடலூர் ஞானசபை இந்து அறநிலயத் துறையால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிகிறது. அப்படியானால் வள்ளலாரின் ஞானசபை எங்கே?

வள்ளலார் நிறுவிய ஞானசபையை அவர் காட்டிய முறையில் மாற்றி அமைக்க யாருக்குத் துணிவு வருமோ தெரியவில்லை. வள்ளற் பெருமானே இது என்ன நியாயம்?